
இந்திய இலக்கியச் சிற்பிகள்

# சி. இலக்குவனார்

மறைமலை இலக்குவனார்



சி. இலக்குவனார்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்சுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி : தேசிய அருங்காட்சியகம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# சி. இலக்குவனார்

*மறைமலை இலக்குவனார்*

சாகித்திய அகாதெமி

*Si. Ilakuvanar - Monograph in Tamil* by Maraimalai
Sahitya Akademi. New Delhi. 2007. Rs. 25

© சாகித்திய அகாதெமி
முதல் வெளியீடு : 2007
ISBN 81-260-2371-6

**சாகித்திய அகாதெமி**

தலைமை அலுவலகம் :
இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110 001

**விற்பனை**

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டடம்,
டாக்டர் அம்பேத்கர் வீதி, பெங்களூர் 560 001

குணா காம்ளக்ஸ், மெயின் பில்டிங், 443, (பழைய எண்.304),
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி, டைமண்ட் ஹார்பர் சாலை,
கல்கத்தா 700 053

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014

**விலை : ரூ.25**

கணிப்பொறி அச்சு : ஸ்ரீ ஸ்ரீநிவாசா டிசைன்ஸ், சென்னை 600 034
**அச்சிட்டோர் : ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ், சென்னை–83.**

# முன்னுரை

“மறைமலை அடிகளாரின் துணிவும் நாவலர் பாரதியாரின் உரமும் தமதெனக் கொண்டு எத்தகு இன்னலையும் துச்சமென ஏற்று, தமிழே தமது மூச்சென உயிர்த்து வாழும் செம்மல்” என்று பேராசிரியர் சி. இலக்குவனாரின் சிறப்புரைப்பார் பேராசிரியர் க.அன்பழகனார்

“தமிழுக்கெனத் தோன்றிய அரிய பிறவிகளில் இலக்குவனாரும் ஒருவர். அவர்தம் தமிழ்ப்பற்றும் தமிழ்வீரமும் தமிழ்நெஞ்சமும் நம் வணக்கத்துக்கு உரியவை. யார் முன்னும் அஞ்சாது தமிழ் பற்றிய கருத்துக்களை மேடை மீது பொழிந்த தமிழ்முகில். தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் இரு கண்களாகக் கொண்டவர். தமிழுக்காகத் துன்பத்தில் வளர்ந்து துன்பத்தையே தாங்கித் துன்பத்திலே கண்ணயர்ந்தவர்” என்பது இலக்குவனாரைப் பற்றிய, டாக்டர் வ.சுப. மாணிக்கனாரின் மதிப்பீடு ஆகும்.

தமிழகப் புலவர் குழுவின் நிறுவுநர் கி.ஆ.பெ.விசுவநாதம், இலக்குவனாரின் தனித்தன்மையைக் குறிப்பிடுங்காலை, “தமிழாசிரியர்களில் அவர் தப்பிப் பிறந்தவர் எனலாம் காரணம், அவர் தமிழால் வாழாமல் தமிழுக்காகவே வாழ்ந்து தமிழுக்காகவே சிறையும் சென்றவர் என்பதே” என்று வியந்துரைப்பார்.

“இலக்குவனாரின் தமிழறிவும், ஆற்றலும், துணிவும், திறமையும், அஞ்சாநெஞ்சமும், அன்புள்ளமும், விடாமுயற்சியும், தொண்டு புரியும் சிறப்பும், தமிழுக்காகவும் தமிழர்க்காகவும் பாடுபடும் தன்மையும் பாராட்டிப் போற்றத்தக்கனவாகும்” என்பது நாவலர் இரா நெடுஞ்செழியன் கருத்தாகும்.

இலக்குவனார் “தாய்மொழியாகிய தமிழின் வாயிலாகவே பல்கலைக்கழகக் கல்வி அமைய வேண்டும் என்பதில் தணியாத வேட்கை கொண்டவர்” என்று டாக்டர் மு.வரதராசன் குறிப்பிட்டுள்ளார்.

"முனைவுக்கேற்ற மூதறிவாண்மையும் பழுத்த தமிழ்ப் புலமையும் வாய்ந்தவர்" என்று மறைமலைஅடிகளாரின் திருமகனார் மறை. திருநாவுக்கரசு அவர்களும், "பைந்தமிழைப் பழுதறப் படித்தவர். நல்ல ஆராய்ச்சி அறிஞர்; செந்தமிழ்நலம் பேணும் செல்வர்" என்று டாக்டர் மா.இராசமாணிக்கனாரும் இலக்குவனாரின் ஆளுமைநலனை எடுத்துரைப்பர்.

"நன்னிலை தன்னில் எந்தமிழ்வாழ நாளும் உழைப்பவர்" என்று கவி கா.மு.செரீபு அவர்களும், "தன்மானத்தைப் பொன்னெனக் காத்த நுண்மாண் புலவர்" என்று கவியோகி சுத்தானந்த பாரதியாரும் இலக்குவனாரின் சிறப்பியல்பைப் பாட்டில் வடித்துள்ளனர்.

இலக்குவனாருடைய "எழுச்சியும் ஆற்றலும் புலமையும் வியக்கத்தக்கவை" என்று கி.வா.சகந்நாதன் பாராட்டியுரைத்துள்ளார்.

"தமிழைக் காக்க இலக்குவன் ஒருவனால்தான் முடியும்; வாழ்வையே தமிழுக்கு ஆக்கிக் கொண்டவன் அவன்" என்று நட்புரிமையுடன் இலக்குவனார் திறம் போற்றுவார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். பாரதிதாசன் கவிதைகளைத் திறனாய்வு செய்து முதன்முதலாக ஆய்வுநூல் வெளியிட்ட புலவர் ந. இராமநாதன் "பேராசிரியர் இலக்குவனார் இந்நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க பெரும்புலவர் ஆவார்" என்று கருத்துரைத்துள்ளார்.

"இலக்குவனார் ஒரு தனிமனிதர் அல்லர்; ஓர் இயக்கம்; எந்நேரமும் எந்நாளும் தமிழ்நலனுக்கே உழைத்த தனிப்பெரும் இயக்கமாகவே அவர் திகழ்ந்தார்" என்பது கல்வியாளர் டாக்டர் கி.வேங்கடசுப்பிரமணியனின் மதிப்பீடு.

"கால்டுவெல் தொல்காப்பியம் உணர்ந்திருப்பாரானால் இன்றைய தமிழியக்கம் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே உலக இயக்கமாக உருவெடுத்திருக்கும். தொல்காப்பியம் ஆங்கிலத் தேர் உலாவரப் பேராசிரியர் இலக்குவனார் வரவேண்டியிருந்தது. அவர் அதை மொழிபெயர்த்தார். அதன் வழியாகத் தமிழியக்கத்தை அவர் உலக இயக்கமாக மாற்றினார் எனல் வேண்டும்" என்பது டாக்டர் தி.முருகுரத்தினத்தின் துணிபு. இங்ஙனம் பல்வேறு பேராசிரியர்களும் கவிஞர்களும் எழுத்தாளர்களும் போற்றிக் கொண்டாடிய இலக்குவனார் யார்? அவர் ஆற்றிய தமிழ்ப் பணிகள் யாவை? படைத்த நூல்கள் எத்திறத்தன? எனச் சுருக்கமாக ஆய்வதே இந்நூலின் நோக்கம் ஆகும்.

# 1
# இளமையும் கல்வியும்

அன்றைய தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் (இன்றைய நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரணியம் வட்டத்தில்) வாய்மேடு என்னும் சிற்றூரில் கீழக்காடு என்னும் பகுதியில் சிங்காரவேலர் - இரத்தினத்தாச்சி வாழ்விணையரின் மூன்றாவது மகனாக 17-11-1909இல் (திருவள்ளுவராண்டு 1940 கார்த்திகை முதல்நாள்) பிறந்தார் இலக்குவனார். கல்வி நிறுவனங்களிலும் பின்னர் அலுவலக ஆவணங்களிலும் இவர் பிறந்த ஆண்டு 1910 என்றே பதிவாகியுள்ளது.

"என் தந்தை மளிகைக்கடை ஒன்று வைத்திருந்தார். பத்து மா நிலங்களுக்கு உரியவராக இருந்தார். கறவை மாடுகளும் உழவுமாடுகளும் பெற்றிருந்தார். படிப்படியாக உயர்வு பெற்று வருவதாக மக்கள் கருதும் நிலையில் வாழ்ந்துவந்தார்." (என் வாழ்க்கைப்போர் - பக்கம். 13)

எனப் பேராசிரியர் இலக்குவனார் தமது தந்தையாரின் பொருளியல்நிலையைப் பற்றிக் கூறியுள்ளார். இலக்குவனாரின் பாட்டனார் அம்பலவாணரும் அவருக்கு முந்தையோரும் செல்வச்செழுமையுடன் சிறப்புற வாழ்ந்து வந்ததாகவும் அம்பலவாணர் காலத்தில் பொருளாதார நிலையில் வீழ்ச்சி நேரிட்டதாகவும் தமது தந்தையார் அச்சரிவிலிருந்து மீண்டு படிப்படியாக உயர்வு பெற்று வந்த வேளையில் திடுமென வயிற்றுப் போக்கால் இறந்து விட்டதாகவும் இலக்குவனார் தெரிவிக்கிறார் (பக்.16-17).

## 'தந்தையொடு கல்வி போம்'

இலக்குவனார் அக்கால வழக்கப்படித் திண்ணைப் பள்ளியில் சேர்ந்து பயின்று கொண்டிருந்தபொழுது, தமது ஏழாவது வயதில் தந்தையை இழந்தார். சிங்காரவேலரிடம் மளிகைக்கடையில் பொருள்களைக் கடனாகப் பெற்றிருந்தோரில் பெரும்பகுதியினர் கடனைத் திருப்பித் தராமல்

அவரது பிள்ளைகளை (இலக்குவனாரையும், அவரது தமையனாரையும்) ஏமாற்றிவிட்டனர். சிங்காரவேலர் குடும்பம் பெரும்பகுதி நிலங்களை விற்றுக் கடனை அடைக்க நேரிட்டது.

இலக்குவனாரின் தமையனார் திரு.நல்லபெருமாள், குடும்பப் பொறுப்பு என்னும் பெருஞ்சுமையைத் தமது மிக்கிளமைப் பருவத்திலேயே ஏற்க நேரிட்டது. திடுமென ஏற்பட்ட வறுமைச்சூழல் இலக்குவனாரின் படிப்பு தொடர்வதைக் கேள்விக்குறியாக்கியது. அன்புமிக்க தமது அன்னையார் காட்டிய பரிவினால் நான்காம், ஐந்தாம் வகுப்புகளுக்குச் சென்று தொடக்கக் கல்வியை நிறைவு செய்ய முடிந்தது. ஆயின் வெளியூர் சென்று உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் பெறும் வாய்ப்பு கேள்விக்குறியாகியது. வகுப்புகளில் முதல் மாணாக்கனாகத் திகழ்ந்து ஆசிரியர்களின் பாராட்டையும் உடன்பயில்வோரின் நன்மதிப்பையும் பெற்றிருந்த இலக்குவனார், தமையனார்க்கு உதவியாக வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டிய சூழலும் படிப்பைப் பற்றிக் கனவுகாண முடியாத துயர்நிலையும் ஏற்பட்டது.

"யான் வீட்டிலிருந்து கொண்டு சும்மா இருப்பதில் பயனில்லை என்று ஆகிவிட்டது. மாடு மேய்த்துக் கொண்டிருந்த பண்ணையாள் மகனை நிறுத்திவிட்டோம். ஆதலின் மாடு மேய்க்கும் பணி எனக்கு விடப்பட்டது. மாடுகளை ஓட்டிக் கொண்டு மேய்க்கத் தொடங்கினேன். கோடை நாட்களில் மாடுகளை அறுவடையான வயல்களில் மேயவிட்டுவிட்டு மரநிழலில் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருப்பது வழக்கம்" (எ.வா.போ. பக். 28-29) என்று இச்சூழலை விளக்குகிறார் இலக்குவனார்.

தமது ஆசிரியப்பணியால், புகழ்பெற்ற கல்வியாளர்களையும், பாவலர்களையும், அரசியல் தலைவர்களையும் அரசு அதிகாரிகளையும் உருவாக்கிய இலக்குவனார் தமது பிள்ளைப் பருவத்தில் பள்ளிக்குச் செல்ல முடியாமல் மாடு மேய்க்க வேண்டிய நிலை ஏற்பட்டமை நம் நெஞ்சுருகச் செய்கின்றதல்லவா?

"இவ்வாறு மாடுமேய்த்துக் கொண்டிருக்கும் நிலையில் யாரேனும் என்னைக் கண்டால் "ஐந்தாம் வகுப்பு முடித்துவிட்டு மாடு மேய்க்கின்றாயே" என்று இரக்கப்படுவர். "தந்தையிருந்தால் இப்படியாகுமா" என்பர். "தந்தையொடு கல்விபோம்" என்பது உண்மைதான் என்பர்."

என்னும் இலக்குவனார் கூற்று (எ.வா.போ பக்.29) பொருள்வளம் இல்லாதவர்களுக்குப் பள்ளிக் கல்வியும் எட்டாக்கனியாக இருந்த அக்காலச் சமூகநிலைமைக்குச் சான்றுபகர்கின்றது பொருளுதவி செய்யும் ஆற்றல் பெறாவிடினும் தமது மகன் தொடர்ந்து கல்வி பெற வேண்டும் என்பதில் இலக்குவனாரின் தாயார் திருமதி. இரத்தினத்தாச்சி காட்டிய ஆர்வமும் பரிவுணர்வுமே அவரது முயற்சிகளுக்கு ஊக்க ஊற்றாக விளங்கின.

## சரபோசியின் கல்விக்கொடை

பொருளியல்நிலையில் பின்தங்கிய மாணாக்கர்கள் கல்வி வாய்ப்பு பெறும் வகையில் தஞ்சை மாவட்டத்தில் அரசர்மடம் (இராசாமடம்), உரத்தநாடு என்னும் ஊர்களில் உணவும் உறையுளும் அளித்துப் படிக்க வைத்தனர். முன்னர்த் தஞ்சையை ஆண்டுவந்த மன்னர் சரபோசி நிறுவிய அறக்கட்டளையே இங்ஙனம் மாணாக்கர் கல்வி பெறுதற்கு வழிவகுத்தது.

தமது தாய்வழி உறவினராக விளங்கிய திரு சதாசிவம் பிள்ளை என்னும் தொடக்கப்பள்ளி ஆசிரியர் மூலம் அரசர்மடத்தில் இருந்த பள்ளிக்கு விண்ணப்பித்த இலக்குவனார்க்கு ஐந்தாம் வகுப்பில் இடம் கிடைத்தது. ஏற்கெனவே ஐந்தாம்வகுப்புப் படித்திருந்தபோதிலும் மீண்டும் ஐந்தாம் வகுப்பில்தான் சேர்த்துக் கொள்ள முடியும் எனக் கூறப்பட்டுவிட்டது. ஒருவகையில் இதுவும் நன்மையாகவே அமைந்தது. இலக்குவனார் இவ்வகுப்பிலிருந்து பள்ளியிறுதி முடியும் வரை வகுப்பில் முதன்மைபெற்று ஆசிரியர்கள் அனைவரின் பாராட்டையும் பெறுதற்கு இதுவே வழிவகுத்தது எனலாம். தமது பதினான்காம் வயதில் ஐந்தாம்வகுப்பில் பெரும்போராட்டத்திற்குப்பின் சேர்ந்த இலக்குவனார் அரசர் மடத்தில் மூன்றாம் படிவம் வரையில் கல்வி வழங்கப்பட்டமையால் அங்கு மூன்றாம்படிவம் வரை படித்து நான்காம்படிவம் பயில உரத்தநாடு பள்ளிக்கு அனுப்பப்பட்டார். அங்குப் பள்ளியிறுதி வகுப்பு வரை பயின்ற இலக்குவனார் வகுப்பில் முதன்மை பெறுவதைப் போலப் பள்ளியில் முதன்மை பெற்றுத் தேர்ச்சி அடையலாம் என எதிர்பார்த்திருந்தார் ஆயின் அவர் ஐம்பத்தொரு விழுக்காடு (51%) மதிப்பெண்களே பெற்றிருந்தார். தமது கையெழுத்து தெளிவுடன் அமையாமல்போனதே மதிப்பெண் குறைந்ததன் காரணம் என இலக்குவனார் குறிப்பிடுகிறார்.

**'சாகும்வரை படிப்பதா?'**

பள்ளியிறுதி வகுப்புத் தேர்ச்சி பெற்றமையால் தொடக்கப் பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெறா ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அப்பணியில் நீண்டநாட்கள் நீடிக்க முடியாவண்ணம் பள்ளித்துணை ஆய்வாளர் குறிப்பு அனுப்பிவிட்டமையால் பணியை இழந்தார்.

திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் (வித்துவான்) வகுப்பில் சேரவிழைந்தார். வீட்டுக்கு உதவியாகப் பொருளீட்ட வேண்டும் எனவும் படித்தது போதும் எனவும் தமது தாயாரும் தமையனாரும் கூறியபோதிலும் திருவையாறு சென்று புலவர் படிப்பில் சேரும் முயற்சியை இலக்குவனார் கைவிடவில்லை. மேலும் தொடர்ந்து படிப்பதற்கு வீட்டிலிருந்து எவ்வித உதவியும் கிடைக்காது என்பது தெளிவாயிற்று. அப்போதுதான் திருமணம் முடிந்து வந்திருந்த அவரது சகோதரி பாலாமிருதம் தனக்கு வந்த மொய்ப்பணத்திலிருந்து கொடுத்துதவிய மூன்று ரூபாயை வழிச்செலவுக்கு வைத்துக் கொண்டு திருவையாறு கிளம்பிவிட்டார். "சாகும்வரை படித்துக்கொண்டே இருப்பதா?" என ஊரில் அவரது உறவினர் வினவினர்.

**புலவர் படிப்பு**

திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் புகுமுக வகுப்பில் சேர்ந்த பின்னர் "பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சியடைந்த இவன் இங்கே ஏன் வந்தான்?" என வியப்பும் திகைப்பும் மேலிடத் தன்னை வினவியதாக இலக்குவனார் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கல்லூரியிலேயே பள்ளியிறுதி தேர்ச்சி பெற்றுப் புலவர் படிப்பில் சேர்ந்த மாணாக்கர் அவர் ஒருவர் மட்டுமே என்பதால்தான் இந்தத் திகைப்பும் வியப்பும் பொருளியல் பற்றாக்குறை வருத்திய குடும்பச் சூழலில் வேறு அலுவல்கள் தேடும் முயற்சியில் முனையாமல் புலவர் கல்லூரியை இலக்குவனார் நாடிவந்தமைக்குக் காரணம் பள்ளிப் பருவத்திலேயே இத்தகையதொரு விழைவு அவர் உள்ளத்தில் விதைக்கப்பட்டிருந்தமையே ஆகும்.

அரசர் மடத்தில் நடுநிலைப்பள்ளியில் அவர் படித்துக் கொண்டிருந்தபோது, சாமி.சிதம்பரனார், தமிழியக்க வீறுணர்வையும் தன்மதிப்பு இயக்க எழுச்சியையும் அவர் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றச் செய்துவிட்டார்.

"இலட்சுமணன்" என்று பெற்றோர் வைத்திருந்த பெயரைத் தமிழ்ப்படுத்தி "இலக்குவன்" என்று மாற்றிக் கொள்ளச் செய்தவரும் சாமி.சிதம்பரனாரேயாவர். பின்னர் உரத்த நாட்டுக்கு உயர்நிலைப் பள்ளியில் பயில இலக்குவனார் சென்றபோதும் அங்கு மாற்றலாகிச் சென்ற சாமி. சிதம்பரனார் இலக்குவனாரைப் பெரியாரின் கொள்கை-களிலும் தமிழியக்க உணர்விலும் மாறா உறுதியுடையவராகச் செய்துவிட்டார். மாணவர் கழகம் நடத்திய சொற்போர் அரங்குகளில் சிறப்பாகப் பேசியும் பாடல்கள் இயற்றியும் அனைவரின் கவனத்தையும் கவர்ந்த இலக்குவனார் திருவையாறு சென்று புலவர் படிப்புப் படிக்க வேண்டும் என்று பொன்னண்ணாக்களத்தில் வென்றார் நெறிப்படுத்தி-யுள்ளார். ந.மு.கோவிந்தராயநாட்டார், சாமி.வேலாயுதம் பிள்ளை ஆகியோரும் இலக்குவனார்க்குப் புலவர் ஆக வேண்டும் என்னும் பேருள்ளல் தோன்றக் காரணமாக விளங்கினர். எனவே தாம் விரும்பிய கல்வியை முயன்று பெற்ற இலக்குவனார் கல்வியில் முதன்மை பெற்று விளங்கினார்.

**பரிசும் பாராட்டும்**

அரசர் கல்லூரியில் திருவள்ளுவர் மாணவர் கழகத்தின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமது மாணவ நண்பர்களிடம் தன்மதிப்புணர்வும் தமிழியக்க எழுச்சியும் பரவப் பெரிதும் உழைத்தார். அக்கால இலக்கிய இதழ்களில் இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள் எழுதினார். தமது நண்பர்கள் அன்பு. கணபதி, அ.கிருட்டிணமூர்த்தி, முருக.இலக்குவன் ஆகியோருடன் இணைந்து சிற்றூர்களுக்குச் சென்று தமிழ்ப்பொழிவுகள் நிகழ்த்தினார்.

புலவர் வகுப்பில் சிறந்த மாணவர் என்று அவரது ஆசிரியர்கள் கருதியமையால் அவர் புதுக்கோட்டை மன்னர் நடத்திய ஒன்பான்விழா (நவராத்திரி)வுக்கு அனுப்பப்பட்டார். அங்கு ஆண்டுதோறும் தமிழ்ப்புலவர்களுக்கும் வடமொழிப் புலவர்களுக்கும் தேர்வுகள் நடத்தப்பட்டுச் சிறப்பாக விடையளித்தோருக்குப் பட்டமும் பரிசும் வழங்கப்படுவது வழக்கமாம். அவ்வகையில் இலக்குவனார் அனுப்பப்பட்டு அவர் அங்குக் கேட்கப்பட்ட வினாக்களுக்குத் திறம்பட விடையளித்தமையால் பண்டிதர் என்ற பட்டமும் அத்தேர்வின் பேரெல்லைப் பரிசாகிய முப்பது உருபா பரிசும் வழங்கப்பட்டார்

இங்ஙனம் புலவர் வகுப்பில் பயிலும்போதே பொழிவுகள நிகழ்த்தியும் இதழ்களில் எழுதியும் புலமைப் போட்டிகளில் கலந்து கொண்டும் தமது கல்வித்திறத்தைச் சிறந்தமுறையில் வெளிப்படுத்தி அனைவராலும் பாராட்டப் பெற்ற இலக்குவனார் புலவர் பட்டத்துக்கான தேர்விலும் மாநில முதன்மை பெறுவார் என்றே அவரது ஆசிரியர்கள் எதிர்பார்த்தனர். புலவர் தேர்வில் மாநிலமுதன்மை பெறும் மாணவருக்குத் திருப்பனந்தாள் மடம் அறக்கட்டளை ஆயிரம் ரூபாய்ப் பரிசு வழங்கும். அப்பரிசு இலக்குவனார்க்கே கிடைக்கும் என்று கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை உள்ளிட்ட அவரது ஆசிரியர்கள் கருதியிருந்தனர்.

## தேர்வு முடிவும் கொள்கைமுடிவும்

"தேர்வு முடிவு வெளிவந்தது. யான் மாநிலத்தில் முதல்வனாக வந்திலேன். கல்லூரி முதல்வனாகத்தான் தேர்ச்சி பெற்றேன்" (எ.வா.போ.பக்.90) என்கிறார் இலக்குவனார்.

மாநில முதல்வராகத் தேர்ச்சி பெற்றவர் ஏற்கெனவே இதேபோன்ற - இதனைவிடக் கடினமான - தேர்வை எழுதிப் 'பண்டிதர்' பட்டம் பெற்றவர். மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வில் முதல்வராகத் தேர்வு பெற்றவர். எடுத்துக்காட்டாக (இன்று), மதுரைப் பல்கலைக்கழகம் நடத்திய பி.ஏ. பட்டத் தேர்வில் முதன்மை பெற்ற ஒருவர் மீண்டும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ பட்டத் தேர்வை எழுதினால் முதன்மை பெறுவதில் வியப்பு இருக்க முடியுமா? இரண்டும் ஒரே தகுதிதானே. இரண்டுமுறை எதற்காகத் தேர்வு எழுத வேண்டும் என்னும் கேள்வி எழலாம். ஆயிரம் ரூபாய்ப் பரிசு கிடைக்கின்றதல்லவா?

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பண்டிதர் பட்டத் தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று அதன்பின் ஆசிரியப் பணியிலும் சேர்ந்து பல்லாண்டுகள் சென்னைப் பல்கலைக்கழகத் தேர்வுக்கு ஆயத்தம் செய்து தமது நாற்பது வயதில் தனித்தேர்வராகத் தேர்வு எழுதிய ஒருவர் புலவர் நிறைநிலைத் தேர்வுக்காகக் கல்லூரியில் இரண்டே ஆண்டுகள் பயின்ற இளைஞரோடு போட்டியிடுதல் முறையோ?

சமன்மை அற்ற இப்போட்டியில் இலக்குவனார் வெற்றியடையாமல் போனதில் வியப்பேதும் இல்லை.

எனினும் அனைத்து ஆசிரியர்களும் இதுகுறித்து வருத்தமடைந்தது இலக்குவனாரின் கல்வித்திறத்துக்குத் தக்க சான்று எனலாம். கடுமையாக உழைத்துப் படித்துத் தேர்வு எழுதியும் உரிய சிறப்புக் கிடைக்கவில்லையே என இலக்குவனார் வருத்தப்படவில்லை.

திருவையாறு அரசர் கல்லூரியில் படித்தபொழுது - தமிழின் தனித்தன்மையையும் தொன்மையையும் குறைத்து மதிப்பிடுபவர் தமது கல்லூரி முதல்வரேயாயினும் அவருடன் எதிர்வாதம் நிகழ்த்தும் - துணிவும் தமிழ்ப்பற்றும் ஒருங்கேபெற்று விளங்கிய இலக்குவனார் ஒரு குறிக்கோள் முனைப்புடனேயே புலவர் படிப்பை விரும்பி ஏற்றார். ஆசிரியப்பணி ஏற்றுச் சம்பளம் பெற்றுக் குடும்பம் செழிக்க வாழும் நோக்கின்றித் தமிழின் நலன் தழைக்கப் பாடுபட வேண்டும் என்னும் உயரிய குறிக்கோளே அந்த இளமைப்பருவத்தில் அவர் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது.

"புலவர் (வித்துவான்) பட்டத்துக்குப் படித்ததனால் தமிழின் தொன்மையைப் பற்றியும் தமிழிலக்கிய வளமையைப் பற்றியும் அறியமுடிந்தது. பண்டைத் தமிழகத்தின் சிறப்பும் தமிழர் வாழ்வின் மேன்மையும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் உலகமொழி-களின் தாயாகவும் இருத்தல் கூடும் என்று எண்ணச் செய்தது.... தமிழ்ப்போரே எனது வாழ்க்கைப்போர் எனக் குறிக்கோளை வாழ்வின் உயிராக ஏற்றுக் கொண்டேன். புலவர் படிப்பால் பெற்ற பெரும்பயன் இஃதேயாகும்." (எ.வா.போ.பக்.91) எனப் பெருமிதத்துடன் இலக்குவனார் கூறும் கூற்று அவரது கொள்கை சார்ந்த வாழ்வைத் தெளிவுற எடுத்துரைக்கிறது.

இத்தகைய கொள்கைவழிப்பட்ட வாழ்க்கைமுறையே அவர் பணிக்குச் சென்ற பல நிறுவனங்களில் அவர் வேலையை இழக்கக் காரணமானது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

> "சலுகை போனால் போகட்டும் – என்
> அலுவல் போனால் போகட்டும்
> தலைமுறை ஒரு கோடி கண்ட – என்
> தமிழ் விடுதலையாகட்டும்"

என்னும் பாரதிதாசன் பாடல் கூறும் கொள்கைவீறு இலக்குவனார் வாழ்க்கையின் உயிர்நாடியாகத் திகழ்ந்தது.

# 2
# கல்விப் பணி

புலவர் (வித்துவான்) பட்டம் பெற்று, அதற்குரிய ஆசிரியப் பயிற்சியும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பெற்ற இலக்குவனார், தஞ்சாவூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் (District Board High Schools) தமிழாசிரியராகப் பணியமர்த்தம் பெற்றார். குடவாசல், திருவாரூர், நன்னிலம் முதலான ஊர்களில் அவர் சிறப்பாகப் பணியாற்றினார். திருவாரூரில் அவர் பணியாற்றியபொழுது அவரிடம் பயின்ற மாணவர்களுள் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். பள்ளி மாணவராக இருந்தபொழுதே பொதுவாழ்வில் ஈடுபாடு காட்டிய கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு இலக்குவனாரின் தமிழுணர்வும் தன்மதிப்பியக்கச் சார்பும் பெரிதும் ஊக்கமூட்டின. "இலக்குவனார் அவர்கள் தமிழ் இனத்துக்குத் தேவையான சுயமரியாதையை எனக்குக் கற்றுக் கொடுத்தார்" என்று பெருமிதம் பொங்கத் தம் ஆசிரியரைப் பாராட்டியுள்ளார் கலைஞர் மு.கருணாநிதி. எனினும் இலக்குவனாரின் கல்விப்பணிக்கும் பொதுவாழ்வுக்கும் குடும்ப வாழ்வுக்கும் திருப்பு மையமாக அமைந்தது அடுத்து அவர் பணியாற்றிய நன்னிலம் எனல் மிகையன்று.

## நன்னிலத்தில் இலக்கியப்பயிர்

நன்னிலத்துக்கு அவர் மாற்றலாகி வந்தபின்னர், தம்மைப் போலவே ஆசிரியப்பணி புரிந்துவந்த, முற்போக்குணர்வும் தமது தமிழ்ப்பணிக்கு உரமூட்டும் பண்பும் கொண்ட செல்வி. பட்டம்மாள் என்பவரைத் திருமணம் புரிந்தார். மாணவர் உள்ளங்களில் தமிழ்ப்பற்றும் தனித்தமிழ் நாட்டமும் தழைக்க இலக்குவனார் பெரிதும் பாடுபட்டார். எனினும் அவரது கடமையுணர்வும் தமிழ்க்காதலும் அவருக்குப் பல பகைவர்களை உருவாக்கிவிட்டன. தனித்தமிழ் ஆர்வம் அரசியல் பார்வையுடனேயே அக்காலத்தில் இணைத்து

நோக்கப்பட்டது. "நமஸ்காரம்" என்று கூறாமல் "வணக்கம்" என்று கூறினால் "நீங்கள் சூனாமானாவா" (சுயமரியாதை இயக்கத்தவரா), என்று கேள்வி கேட்கும் காலம் அந்தக் காலம்.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே" என்றும் "யாமறிந்த மொழிகளிலேயே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றும் பாடிய புலவர் பாரதியார் தேசிய இயக்கத்தவர்தானே? தனித்தமிழில் கட்டுரை எழுதுவோர்க்குப் பரிசு அறிவித்து ஊக்கப்படுத்திய சுப்பிரமணிய சிவா, தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உழைத்த வ.உ.சி., திரு.வி.க., முதலான சான்றோர்களும் தேசிய இயக்கத் தலைவர்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆயினும் தனித்தமிழில் எழுதுவோரும் பேசுவோரும் சுயமரியாதை இயக்கச் சார்பினர் என்றே அக்காலத்தில் கருதப்பட்டனர். உண்மையாகவே இலக்குவனார் சுயமரியாதை இயக்கச் சார்பினர் என்றாலும் தமது பணியை அவர் மிகுந்த கடமையுணர்வுடனேயே ஆற்றிவந்தார். அவருடைய அரசியற்சார்பைப் பள்ளியில் அவர் எப்போதும் வெளிப்படுத்தியதில்லை.

## தொல்காப்பியர் திருநாள்

தமது மாணவர்கள் ஆழ்ந்த தமிழறிவு பெறும் வகையில் பள்ளியில் அவர் பல விழாக்கள் நடத்தினார். அவற்றுள் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கது அவர் "தொல்காப்பியர் திருநாள்" நடத்திய செய்தி ஆகும். தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களில் முதன்முதலாகத் தொல்காப்பியர் திருநாள் கொண்டாடிய சிறப்பு இலக்குவனாரின் ஆழ்ந்த தமிழ்ப்பற்று, கட்சிச் சிமிழுக்குள் அடங்கிவிடும் ஒன்றன்று என்பதைத் தெளிவுறுத்துகின்றது.

1938ஆம் ஆண்டில் தொல்காப்பியரைப் பற்றி வயதில் மூத்தவர்களே அறியாதிருந்த அந்தக் காலத்தில் பள்ளிப் பிள்ளைகள் அவரை அறிந்து கொள்ளும் வகையில் தொல்காப்பியர் திருநாள் நடத்திய இலக்குவனாரின் தொலைநோக்குணர்வும் இளம் வயதில் தெளிந்த அறிவைப் பெறும் வகையில் மாணவர்களை உருவாக்கும் திறமும் பெரிதும் பாராட்டப்பட வேண்டியன அல்லவா? இன்றைக்குக்கூடத் தொல்காப்பியர் திருநாள் கொண்டாடும் கல்வி நிறுவனத்தைச் சுட்டிக்காட்ட இயலாது. வகுப்புகள் எடுப்பதோடு தமது கடமை நிறைவுற்றுவிட்டதாக

இலக்குவனார் எந்தக் காலத்திலும் கருதியதில்லை. பல்வேறு இலக்கிய விழாக்கள் நடத்தியும் கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் நடத்தியும் மாணவர்களைச் செம்மையாக வழிநடத்துவதில் இலக்குவனார் காட்டிய ஆர்வம் அவருடன் பணிபுரிந்த ஆசிரியப் பெருமக்கள் பலரால் பாராட்டப்படவில்லை. பள்ளிக்கு வெளியிலும் திருக்குறள் வகுப்புகள், தனித்தமிழ்ப் பொழிவுகள் நிகழ்த்திப் பொதுமக்களிடையே தமிழ் எழுச்சி ஊட்டிய இலக்குவனாரின் தமிழ்ப்பணியைக் கண்டு பொறாமையால் மனம் புழுங்கிய பலர் மொட்டைக் கடிதங்களை எழுதி இலக்குவனாரின் பதவியைப் பறித்திட முனைந்தனர். இலக்குவனார் கருஞ்சட்டை இயக்கத்தில் பெரிதும் ஈடுபாடு காட்டுவதாக அவர்கள் சுமத்திய குற்றச்சாட்டுக்கு எத்தகைய ஆதாரமும் காட்டப்படாததால் அரசு இலக்குவனார்மேல் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## துணைவியின் மறைவு

இதற்கிடையில் இலக்குவனாரின் துணைவியார் திருமதி. பட்டம்மாள் நோய்வாய்ப்பட்டார். தமது மகப்பேற்றுக் காலத்தில், நிறைமாதமாக இருந்தவேளையில் வலிப்பு நோயின் கொடுமை இரண்டு உயிர்களைப் பலி வாங்கி-விட்டது. அந்தோ! அறிவார்ந்த வாழ்க்கைத் துணைவியாகவும் இலக்குவனாரின் தமிழ்ப்பணிக்கு உறுதுணைபுரியும் தோழியாகவும் விளங்கிய திருமதி. பட்டம்மாள் குழந்தையைப் பெற்று மகிழவும் கணவரையும் ஏனைய உறவினரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தவும் வேண்டிய நேரத்தில் கூற்றுக்கு இரையான கொடுமை சொற்களால் வெளிப்படுத்தத்-தக்கதோ? இலக்குவனாரின் நண்பர்களும் தமிழ் ஆர்வலர்களும் இச்செய்தி கேட்டுப் பெருந்துயருற்றனர்.

இன்னுயிர்த் துணைவியின் பிரிவாற்றாமையால் உளம்வருந்தி இலக்குவனார் இயற்றிய "அறிந்துளோர் சொல்மினோ" என்னும் கையறுநிலைப் பாடலும் திருமதி. பட்டம்மாள் மறைவு குறித்து வருந்தியும், அன்னாரின் அரும்பெரும்பண்புகளைச் சிறப்பாக நினைவுகூர்ந்து இலக்குவனாருக்கு ஆறுதல் தெரிவித்தும், பல்வேறு அறிஞர்கள் அனுப்பிய இரங்கற் செய்திகள், கவிதைகள் முதலியனவும் ஒரு நூலாகத் தொகுக்கப் பெற்று அவர்தம் நினைவுநாளில் வெளியிடப்பட்டது. நீதிக்கட்சித் தலைவர்-

களில் ஒருவராகிய சர் ஏ.டி பன்னீர்செல்வம் இலக்குவனார் நடத்திய இந்நினைவுநாளில் கலந்து கொண்டார்

## நண்பர்மீதும் தாக்குதல்

எவ்வித ஆதாரமுமின்றி இலக்குவனார்மேல் குற்றங்கூறிக் கொண்டிருந்த தமிழ் வெறுப்பாளர்களுக்கு இச்செய்தி வெறும் வாயை மென்று கொண்டிருந்தவர்களுக்குக் கிடைத்த அவல் போலாயிற்று மீண்டும் இலக்குவனார்மேல் குற்றஞ்சுமத்திப் பல மடல்கள் அரசினர்க்குப் பறந்தன இம்முறை இலக்குவனார் மீது மட்டுமின்றி இலக்குவனாரின் இனிய நண்பர்களுள் ஒருவரான கங்காதரக்கோனார் என்பவர் மீதும் அவர் கருஞ்சட்டைப் படையினர் என்றும் இலக்குவனாருடன் சேர்ந்து கொண்டு அரசுக்கு எதிராகச்செயற்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டுகள் அனுப்பப்பட்டன

துணைவியை இழந்து வருந்திய இலக்குவனார்க்கு ஆறுதலும் மனமாறுதலும் அளிக்கும் வகையில் கங்காதரக் கோனார், தமது இல்லத்தின் ஒரு பகுதியில் அவரைக் குடியமர்த்தித் தமது பணிநேரம் முடிந்த பின்னர் இலக்குவனாருடன் உரையாடி அவரது மனத்துயரை ஓரளவாவது தணிவிக்க முயன்று வந்தார். தனிமைத் துயரில் உழன்று வருந்திக் கொண்டிருந்த இலக்குவனார்க்கு இனிய உசாத்துணையாக விளங்கிய கங்காதரக்கோனார் மீது தமிழ் வெறுப்பாளர் கூறிய பொய்க் குற்றச்சாட்டுகள் இலக்குவனார் உள்ளத்தைப் பெரிதும் வருத்தின. தம்மால் தமது நண்பர்க்குத் துன்பம் நேர வேண்டாம் என்று கருதிய இலக்குவனார் தமது குடியிருப்பை மாற்றிக் கொண்டார். இலக்குவனாரின் நண்பர்கள் அவர் மறுமணம் புரிந்து கொள்ளும் வகையில் தக்க மணமகளைத் தேடும் முயற்சியில் முனைந்தனர்.

## திருப்புமையம்

இலக்குவனாரின் கல்லூரித் தோழர் புலவர் அன்புகணபதி அம்முயற்சியில் வெற்றி பெற்றார். அப்போது அரக்கோணத்தில் அரசினர் மருத்துவமனையில் ஆங்கில மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருந்த டாக்டர் திருவேங்கடம் என்பவரின் மகள் செல்வி. மலர்க்கொடி இலக்குவனார்க்கு ஏற்ற துணைவியாக விளங்குவார் எனப்

பரிந்துரைத்தார். டாக்டர் திருவேங்கடம் நீதிக்கட்சியில் பெரிதும் ஈடுபாடுடையவர்; பெரியார்பால் பேரன்பினர்; எனவே இலக்குவனார் சீர்திருத்தத் திருமணம் புரிந்து கொள்ளத் தடையில்லை; இலக்குவனாரின் தமிழ்ப்பணிகளில் மலர்க்கொடி துணைநிற்பார் என்று அன்புகணபதி தெரிவித்தார்; நீதிக்கட்சித் தலைவர்களுள் ஒருவராகிய செ.தெ.நாயகம் அவர்களின் தலைமையில் திருமணம் நன்முறையில் நடைபெற்றது.

இல்லறவாழ்வில் இப்படி எதிர்பாராத ஒரு திருப்பு மையத்தைச் சந்தித்த இலக்குவனார் தமது ஓய்வு நேரங்களில் தேர்வுகளுக்கு ஆயத்தம் செய்து கொண்டு பி.ஓ.எல். தேர்வு எழுதிப் பட்டம் பெற்றார். பி.ஓ.எல். பட்டம் பெற்றதன் தொடர்ச்சியாக எம்.ஏ. பட்டமும் பெற்றார். இதனை அவரது கல்விப்பணியில் ஒரு திருப்புமையம் எனலாம்.

திருவையாறு அரசர் கல்லூரியில் பணிபுரிந்து வந்த கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை ஓய்வு பெற்றதனால் ஏற்பட்ட பணியிடம் குறித்து அறிந்து அதற்கு முறையாக விண்ணப்பம் செய்து முயன்றார் இலக்குவனார். அக்கல்லூரியில் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தபோது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை என்று அவர் குறிப்பிடுகிறார். ஊதியத்தைப் பொருத்தவரையில் எவ்வித வேறுபாடும் இல்லை. அரசர் கல்லூரி என அழைக்கப்பட்டாலும் அக்கல்லூரி விரிவுரையாளர் ஊதியம் பள்ளித் தமிழாசிரியர் பெறும் ஊதியமேயாகும். நம்நாடு விடுதலை அடைந்தபின்பும் நெடுநாட்கள் இந்நிலை நீடித்தது.

## புலவர் கல்லூரியில் விரிவுரையாளர்

ஊதியத்தில் எவ்வித உயர்வும் இல்லை எனினும் பயிற்றுவிக்கும் நிலையில் பெரிய வேறுபாடு இருந்தது. அங்கே பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடம் நடத்திய இலக்குவனார் இங்கே (புலவர் கல்லூரியில்) தமிழாசிரியராகப் பணிபுரியச் செல்பவர்களுக்குப் பாடம் நடத்தும் இனிய பணியை மகிழ்வுடன் ஏற்றார். தமிழ் இலக்கியப் பரப்பில் பல்வேறு இலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் கற்று ஆராய்ந்து புலவர் வகுப்பு மாணாக்கர்களுக்கு ஆய்வு நுட்பத்துடன் நடத்தும் இப்பணி பள்ளித் தமிழாசிரியர் பணியைக் காட்டிலும் கல்வி நிலையில் உயர்வான ஒன்று என்பதில் ஐயமில்லை. எனவே ஊதியவிகிதத்தில் உயர்வு

இல்லாதது இலக்குவன்ார்க்குப் பெரிய குறையாகத் தெரியவில்லை. மேலும் தாம் பயின்ற கல்லூரியிலேயே ஆசிரியப் பணி புரியும் வாய்ப்பைப் பெற்றது அளவற்ற மகிழ்ச்சி வழங்கியதாகத் தமது வாழ்க்கை வரலாற்றில் இலக்குவனார் குறிப்பிட்டுள்ளார். அவருக்குக் கல்வி பயிற்றிய அவரது ஆசிரியப் பெருமக்களாகிய புருடோத்தம நாயுடு, இராம.கோவிந்தசாமி பிள்ளை ஆகியோருடன் பணிபுரிந்த காலத்தைத் தாமடைந்த பேறுகளில் ஒன்றாகவே இலக்குவனார் கருதினார்.

அரசர் கல்லூரிப் பேராசிரியர் என்னும் முறையில் பல்வேறு இலக்கிய அமைப்புகள் இலக்குவனாரைச் சொற்பொழிவாற்றுதற்கு அழைத்தன. எனினும் தனித்தமிழ்ப் பெயர் தாங்கிய அமைப்புகளின் அழைப்பை மட்டுமே ஏற்பது என முடிவெடுத்து அங்ஙனமே செய்தார். துணிவும் கொள்கையுரமும் கொண்டு அனைவராலும் போற்றப்பட்டு வந்த நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் தலைமையில் இரு கூட்டங்களில் பேசும் வாய்ப்பு பெற்றார். இதன் விளைவாக அப்பெரியாரின் நட்பைப் பெறும் நல்வாய்ப்புக் கிடைத்தது. தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கம் நடத்திய கலைமகள் விழாவில் கலந்து கொண்டு பத்துப்பாட்டில் மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படையே காலத்தால் மூத்த இலக்கியம் என்னும் கருத்தை ஆதாரங்களுடன் நிறுவிச் சொற்பொழி வாற்றினார்.

## இருவேறு அணுகுமுறைகள்

இலக்குவனார் திராவிட இயக்கச் சார்பினராக இருந்த போதிலும், கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று அப்போது தலைவர்கள் கூறிவந்த கருத்துக்கு உடன்பட்டிலர். கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற இலக்கியங்கள் மூடநம்பிக்கைகளைப் பரப்புவது உண்மையெனினும் அவற்றை இனங்கண்டு புறக்கணிக்கும் ஆய்வுநெறியைப் பின்பற்றுவதை விடுத்து அவற்றைக் கொளுத்தமுனைதல் தேவையற்றது என இலக்குவனார் கருதினார். எனவே 'தீ பரவட்டும்' எனப் பேசிவந்த அறிஞர் அண்ணாவுக்குப் பல வினாக்களைத் தொடுத்து ஒரு மடல் வரைந்தார். இம்மடலுக்கு முதன்மையளித்து அறிஞர் அண்ணா அவர்கள் தமது 'திராவிட நாடு' இதழில் தொடர்ந்து நான்கு வாரங்களுக்கு "நன்னிலம் நண்பர்க்கு" என்னும் தலைப்பில் விடை எழுதினார்.

## நாயகம் அவர்களின் நலமிகு துணை

இங்ஙனம் தமது கல்லூரி விரிவுரையாளர்ப் பணியின் மூலம் மாணவரிடையே தமிழ் மறுமலர்ச்சியுணர்வு தழைக்கச் செய்தலை நோக்கமாகக் கொண்டு பணியாற்றிய இலக்குவனார் தனித்தமிழ் அமைப்புகளுக்குச் சென்று பொழிவுகள் ஆற்றியும் இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் எழுதியும் தமிழ்ப்பணியாற்றினார். எனினும் கல்லூரிப் பேராசிரியர்களிடையே ஒற்றுமையின்மையும் மாணவரிடையே சாதியுணர்வும் நிலவியமையால் இக்கல்லூரியை விடுத்து வேறேதெனும் கல்லூரிக்குச் செல்லலாமா என இலக்குவனார் எண்ணிக் கொண்டிருந்தார். இச்சூழலில் திராவிட இயக்கத் தலைவர் செ.தெ.நாயகம் குலசேகரப்பட்டினத்தில் ஒரு தமிழ்க் கல்லூரி தொடங்கவிருக்கிறார் என்னும் செய்தியறிந்து விண்ணப்பித்தார் இலக்குவனார். இலக்குவனாரின் திருமணத்திற்குத் தலைமை தாங்கி நடத்தியவரும் அவரது முற்போக்குப் பார்வையையும் தமிழ்ப் புலமையையும் நன்கறிந்திருந்தவருமாகிய செ.தெ.நாயகம் அவரைத் தமது கல்லூரிக்கு முதல்வராகப் பெருமகிழ்வோடு பணியமர்த்தினார்.

குலசேரப்பட்டினம் திருச்செந்தூர் தொடர் வண்டி நிலையத்திலிருந்து எட்டுக்கல் (மைல்) தொலைவில் உள்ளது. இவ்வூரில் செ.தெ.நாயகம் அவர்கள் ஏற்கெனவே ஒரு பெண்கள் பள்ளியும், பெண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்விக்கூடம் ஒன்றும் நடத்தி வந்தார். இலக்குவனார் பணிபுரியச் சென்றது "இராமநாதன் கல்விக்கூடம்" என்னும் பெயரைத் தாங்கிய கல்வி நிறுவனம் ஆகும். இக்கல்விக்கூடத்தின் பணி, இடை நிலை வகுப்புக்கான (Intermediate class) நுழைவுத்தேர்வுக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்தல் ஆகும். இந்நுழைவுத் தேர்வில் வெற்றி பெறுவோர் இடைநிலை வகுப்பில் சேர்ந்து மூன்றாம் பகுதியில் தமிழை விருப்பப் பாடமாகப் பயிலலாம். அங்ஙனம் பயின்று இடைநிலை வகுப்பில் தேர்ச்சி அடைவோர் பி.ஓ.எல். வகுப்பிலோ தமிழைச் சிறப்புப் பாடமாகக் கொண்ட பி.ஏ. வகுப்பிலோ சேரலாம். மேலும் இந்நிறுவனத்தில் புலவர் முன்னிலை வகுப்புக்கும் பாடம் நடத்தப்பட்டது.

உளநிறைவோடு பணியாற்றி மாணாக்கர்களைத் தேர்வுக்கு ஆயத்தம் செய்த இலக்குவனார், கல்விக்கூடம்

நடத்துதற்குப் போதிய பொருள்வளம் இன்றித்தலைவர் செ.தெ நாயகம் இடர்ப்படுவதைக் கண்டார் அக்கல்லூரி விழா ஒன்றிற்கு வந்துசென்ற நெல்லையப்பபிள்ளை என்பவர் திருநெல்வேலி ம.தி.தா இந்துக் கல்லூரியின் ஆட்சிக்குழுத் தலைவர் தமது கல்லூரித் தமிழ்த்துறையில் ஒரு விரிவுரையாளர் பதவிக்கான வெற்றிடம் இருப்பதாகவும் இலக்குவனார் விரும்பினால் அப்பணியை ஏற்கலாம் எனவும் வேறொரு நண்பர் மூலம் இலக்குவனார்க்குத் தெரிவித்தார் அப்பணியை ஏற்பதன் மூலம் தமது அன்புக்குரிய தலைவர் செ தெ நாயகம் அவர்களுக்கும் இக்கட்டான நிலையைத் தவிர்க்கலாம் என்று இலக்குவனார் கருதினார் மீண்டும் எப்போது அழைத்தாலும் பணியில் வந்து சேர்வதாக உறுதி எழுதிக் கொடுத்துவிட்டுச் செல்லுமாறு செ.தெ நாயகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவ்வாறு எழுதிக் கொடுத்துவிட்டுப் பணியிலிருந்து விலகினார்

"பின்னர் அவர் என்னை அழைக்கவே இல்லை. உடல்நலம் சீர்படாமல் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் அக்கல்விக்கூடமும் பின்னர் தொடர்ந்து நடத்தப் பெறவில்லை. தமிழர்க்காகவும் தமிழ்மொழிக்காகவும் அயராது உழைத்த சீரிய தலைவர் சென்றதனால் உண்டான துயர் இன்றும் என்னை வாட்டுகிறது. அவர் அங்கு அழைக்கவில்லையானால் கலைக்கல்லூரிகளை எட்டிப் பார்த்திருப்பேனா என்பது ஐயமே. அவர் அன்பான அழைப்பே என் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது என்று கூறலாம்" என்று நன்றியுணர்வுடனும் நெகிழ்ச்சியுடனும் (எ.வா.போ.பக்.142) இலக்குவனார் குறிப்பிடுகிறார்.

"இன் தமிழ்க்காவலர், இனிய எளிய தலைவர், கொள்கையில் மாறாத குணக்குன்று, பெரியாரின் பேரன்புக்குரியவர், தமிழர்களால் - என்னால் - என்றும் நினைவில் கொண்டு போற்றத்தக்கவர் செ.தெ.நாயகம்" என்னும் இலக்குவனாரின் குறிப்பு செ.தெ.நாயகம் அவர்களை இன்றைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் நோக்கம் கொண்டது.

## நெல்லையில்

நெல்லை ம.தி.தா. இந்துக்கல்லூரி என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக்

கல்லூரியும் போதிய பொருள்வருவாய் இன்றியே நடந்துவந்தது. அந்தக் காலநிலைமை அவ்வாறு இருந்தது. இக்காலத்தில் கல்லூரியில் சேர விரும்புகிற மாணவர்க்குத் தகுதியும் வசதியும் இருந்தாலும் இடம் கிடைக்கும் என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. “அக்காலத்தில் முதல்வரும் பேராசிரியர்களும் வீடுகள் தோறும் சென்று மாணவர்களை வருக வருக என அழைத்தும் வகுப்புகட்குப் போதிய மாணவர் சேர்ந்திலர். ஆகவே கல்லூரியை நடத்துவது என்பது அக்காலத்தில் மிகவும் இடர்ப்பாடு மிக்கதாகவே இருந்தது.” (எ.வா.போ.பக்.143) என்னும் இலக்குவனாரின் குறிப்பு அக்காலச்சூழலை நாம் உணர்ந்து கொள்ளத் துணைபுரியும்.

இந்துக்கல்லூரி என்று பெயரிடப்பட்டிருந்தாலும் அலெக்சாண்டர் ஞானமுத்து என்னும் கிறித்துவப் பேராசிரியர் அக்கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றியமை அக்காலச் சமயநல்லிணக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு என இலக்குவனார் குறிப்பிடுகிறார். (எ.வா.போ.பக்.145) மாணவர் மனங்கவரும் ஆங்கிலப் பேராசிரியராக விளங்கிய அலெக்சாண்டர் ஞானமுத்து ஆட்சித்திறன் மிக்க முதல்வராக அக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டார். அவரது தலைமையில் பணியாற்றும் வாய்ப்பு இலக்குவனார்க்கு இனிய அனுபவமாகவே இருந்தது.

செ.தெ.நாயகம் அவர்கள் தமது இராமநாதன் கல்விக்கூடம் எனும் நிறுவனத்திற்கு இலக்குவனாரை முதல்வராகப் பணியமர்த்தி மாதம் நூற்றிருபது ரூபா (ரூ.120) மாத ஊதியம் வழங்கி வந்தார். ஆயின் ம.தி.தா. இந்துக் கல்லூரியில் மாத ஊதியமாக அறுபத்தைந்து ரூபாயே வழங்கப்பட்டது. அங்குப் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் விரிவுரையளர்கட்கும் அதே ஊதியம்தான் வழங்கப்-பட்டது. மேலும் அக்கல்லூரி ஒரு முதல்நிலைக் கல்லூரி. அங்குப் பணியாற்றும் அனுபவம் கிடைப்பது சிறப்புமிக்கது. உருபாவுக்கு எட்டுப்படி அரிசி விற்ற காலம் என்பதால் இவ்வூதியத்தை ஏற்க விசைந்து பணியில் சேர்ந்தார்.

அப்போது தமிழ்த்துறைத் தலைவராகவிருந்த கு. அருணாசலக்கவுண்டர் போர்முனைக்குப் பணியாற்றச் சென்றுவிட்டமையால் ஆ.முத்துசிவன் துறைப் பொறுப்பை ஏற்றிருந்தார். திரு.சகநாதன் என்பவரும் விரிவுரையாளராக-விருந்தார். ஆ.முத்துசிவன், சகநாதன், இலக்குவனார் ஆகிய

மூவரும் பட்டவகுப்புகளுக்கும் இடைநிலை வகுப்புக்கும் தமிழ் பயிற்றினர். இடைநிலை வகுப்பில் மூன்றாம் பிரிவில் தமிழ் சிறப்புப் பாடமாக இருந்தது. மூன்றாம் பிரிவில் ஏனைய பாடங்களைப் பயின்றோர்க்கும் இரண்டாம் பிரிவில் தமிழ் பாடமாக இருந்தது.

## புகழ் சேர்த்த மாணவர்கள்

இடைநிலை வகுப்பில் இரண்டாம் பிரிவில் இலக்குவனாரிடம் தமிழ் பயின்ற மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள், புதுவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றிய கல்வியாளர் முனைவர் கி.வேங்கடசுப்பிரமணியம், மாநிலக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய பொருளியர் பேராசிரியர் முனைவர் வேங்கடசாமி, சென்னைப் பிரிவு பிரிட்டிசு கவுன்சில் ஆங்கிலச் சிறப்பு அலுவலராகப் பணியாற்றிய திரு. பிரபு, சென்னை இந்துச்தான் தெலிபிரிண்டர்சுப் பொது மேலாளராகப் பணியாற்றிய திரு.அருணாசலம் முதலியோர் ஆவர்.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் தமிழ்மாநிலச் செயலாளராகப் பல்லாண்டுக்காலம் பணிபுரிந்த திரு.இரா.நல்லகண்ணு பி.ஓ.எல். வகுப்பில் இரண்டு ஆண்டுக்காலம் பயின்றபோது தனித்தமிழ் நலம் மிளிர இலக்குவனார் தமக்கு வகுப்பு நடத்திய திறத்தைப் போற்றிப் பாராட்டியுள்ளார்.

## தமிழாசிரியர்களின் ஆங்கிலக் காதல்

அக்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியதால் ஆங்கிலத்தில் பேசுதல் தமக்குச் சிறப்பளிக்கும் என்று படித்தவர்கள் அனைவரும் கருதினர். ஏனையோர் கருதியது போலவே தமிழாசிரியர்களும் கருத முற்பட்டனர். தமிழில் பாடம் நடத்துவதும் தமிழைப் பாடமாக நடத்துவதும் தமது கடமை என்பதையும் தமிழாசிரியர்கள் மறந்துவிட்டனர்.

நெல்லை இந்துக் கல்லூரியில் நிலவிய சூழலை இலக்குவனார் வாயிலாகவே காண்போம் :

“அங்குத் தமிழ்த்துறையாசிரியர்கள் தூய தமிழைப் போற்றும் கொள்கையை வெறுத்துள்ளனர். வேற்றுமொழிச் சொற்களைக் கலந்து பேசுதலே தமிழில் புதுமலர்ச்சி என்று முழங்கி வந்தனர். ஏன் தமிழ்ப் பாடங்களை - பாட்டுக்களை - ஆங்கிலத்தில் விளக்குவதைப் பெருமையாகக் கருதினர். தமிழ்

வகுப்பில் ஆங்கிலம் கலவாது உரையாடுதலே அவர்கட்கு இழுக்கெனக் கருதி வந்தனர். ஆங்கில ஆசிரியர்களுடன் போட்டியிடுவது போன்று ஆங்கிலத்தை அவாவிப் பேசிவந்தனர். ஆங்கிலம் அறியாத புலவர்களை 'ஒன்றும் அறியாத கட்டுப்பெட்டிகள்' என மாணவரை நம்பவைத்தனர்." (எ.வா.போ.பக்.147).

## இலக்குவனாரின் தமிழ் முழக்கம்

இடைநிலை வகுப்பில் நூற்றுக்கு மேற்பட்டவர்களும், இளங்கலை வகுப்பில் எண்பது பேருக்குக் குறையாமலும் மாணவர்கள் இருந்தமையால் சொல்வன்மையும் புலமை நலனும் உடைய ஆசிரியர்களுக்கே மாணவர் கட்டுப்பட்டு அமைதியாகப் பாடம் கேட்பர். ஆழமான இலக்கணப் புலமையும் அகன்று விரிந்த இலக்கியப் பயிற்சியும் கேளாரும் வேட்பமொழியும் நாவன்மையும் கொண்ட இலக்குவனார்க்கு மாணவர்களைக் கட்டுப்படுத்துதல் ஒரு சிக்கலாக அமையவில்லை. இலக்குவனாரின் இனிய தமிழ்ப் பொழிவு மாணவர்களைப் பெரிதும் கவர்ந்தது. தமிழ் வகுப்பில் ஆங்கிலம் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போயிருந்த மாணவர்களுக்குத் தூய தமிழ் தேனாகக் காதில் பாய்ந்தது. மாணவர்களும் தூய தமிழிலேயே உரையாடத் தொடங்கினர். அதுவரை தமிழ் வகுப்புகளில் ஆங்கிலத்தில் வருகைப் பதிவு கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் ஆங்கிலச் சொல்லைத் தவிர்த்து, "உளேன் ஐயா" எனத் தமிழில் கொடுக்கத் தொடங்கியது இங்கேதான். பின்னர் இப்பழக்கம் தென்மாவட்டங்களில் பரவித் தமிழகமெங்கும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. இங்ஙனம் தமிழில் வருகைப்பதிவு கொடுப்பது தங்களை அவமதிப்பது போன்றது எனப் பிற பேராசிரியர்கள் கருதினர். கல்லூரி முதல்வரிடம் சென்று முறையிட்டனர். ஆங்கிலப் பேராசிரியராகிய கல்லூரி முதல்வர் ஆங்கிலத்தில் வருகைப்பதிவு வழங்க வேண்டும் என்னும் தங்கள் வேண்டுகோளுக்குச் செவிசாய்ப்பார் எனக் கருதினர். ஆனால் நடுநிலை தவறாத அப்பெருமகனார் மாணவர் தமது விருப்பம் போல் கூறலாம் எனவும் இதில் தாம் தலையிடுவதற்கில்லை எனவும் கூறிவிட்டார்.

மாணவர் எங்கும் தமிழ்ச்சொல்லையே பயன்படுத்த விழைந்தனர். பூப்பந்து விளையாடுமிடத்தில் "லவ் ஆல்" என்று ஆங்கிலத்தில் கூறுதற்கு மாறாக "அன்பே கடவுள்"

என்று கூறத் தொடங்கிவிட்டனர். விளையாட்டுத்துறையினர் இலக்குவனாரிடம் வந்து, "உங்கள் தமிழைத் தமிழ் வகுப்புகளில் மட்டும் வைத்துக் கொள்ளச் சொல்லுங்கள் வேறு வகுப்புகளில் வேண்டாம்" என்று மன்றாடும் அளவு மாணவரிடையே தமிழ்ப்பற்று தழைத்தது. இந்துக் கல்லூரி ஆட்சிக்குழுவினரால் நடத்தப்பட்ட உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வந்த புலவர்கள் ந.சேதுரகுநாதன், குருசு அந்தோணி ஆகியோர்இந்நிலை கண்டு மகிழ்ந்ததாகவும் ஆயின் கல்லூரியில் இதுவரை ஆங்கிலக் கலப்புத் தமிழையே பயன்படுத்தி வந்த் - சில நேரங்களில் ஆங்கிலத்திலேயே வகுப்பு எடுத்து வந்த தமிழ் விரிவுரையாளர்களுக்கு இந்நிலை பெரிதும் மனக்கலக்கத்தையளித்ததாகவும் இலக்குவனார் குறிப்பிடுகிறார். (எ.வா.போ.பக்.149-150).

## ஏடும் மேடையும்

இங்ஙனம் கல்லூரியில் தமிழ்ப்பற்று தழைக்கும் வகையில் பணியாற்றிய இலக்குவனார் நெல்லைநகரிலும் தமிழ்மணம் கமழ்ந்திடப் பலவழிகளில் உழைத்தார். சங்க இலக்கியத்தின் சிறப்பைப் பொதுமக்களும் உணர்ந்து போற்றும் வகையில் 'சங்க இலக்கியம்' என்னும் வார இதழ் நடத்தினார். (இதன் விவரம் இதழாசிரியர் என்னும் இயலில் விரிவாகக் காணலாம்).

தருமையருள்பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகம் என்னும் அமைப்போடு தம்மையும் தொடர்புப்படுத்திக் கொண்டு பல விழாக்கள் நடத்தினார்.

இங்ஙனம் அயராது தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்ட இலக்குவனார் ஓய்வுநேரங்களில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டார். எம்.ஓ.எல். பட்டத்திற்கு "தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்" ("Origin and Growth of Tamil language") என்னும் தலைப்பில் (ஆங்கிலத்தில்) ஆய்வேடு வழங்கி எம்.ஓ.எல். பட்டம் பெற்றார். ("A Brief study of Tamil words") "தமிழ்ச் சொற்கள் பற்றிய ஒரு சிற்றாய்வு" என்னும் நூலும் ("The Making of Tamil grammar") "தமிழ்மொழியின் இலக்கண உருவாக்கம்" என்னும் நூலும் எழுதி வெளியிட்டார். இவ்விரு நூல்களுள் பிந்தைய நூலுக்கு அறிஞர் மு.சி.பூர்ணலிங்கம் பிள்ளை அணிந்துரை வழங்கிச் சிறப்பித்தார்.

## தமிழ்த்துறைத் தலைவர்

நாட்டு விடுதலையை ஒட்டிப் புதிய கல்லூரிகள் தொடங்கச் சென்னைப் பல்கலைக்கழகம் வாய்ப்பு வழங்கியது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஒரேநாளில் (15/8/1947) தென் மாவட்டங்களில் மூன்று கல்லூரிகள் தொடங்கப்பட்டன. அவற்றுள் ஒன்றாகிய விருதுநகர் செந்திற்குமாரநாடார் கல்லூரிக்குத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றும் வாய்ப்பு இலக்குவனர்க்குக் கிடைத்தது. கல்லூரித் தொடக்க-வாண்டில் இடைநிலை முதலாண்டுக்கும் இளங்கலை முதலாண்டுக்கும் இரண்டாம் பிரிவுத் தமிழ் பயிற்றுவித்தலே பணியாக இருந்தது. இளங்கலையில் சிறப்புப் பாடங்களாகப் பொருளியல், வரலாறு, கணிதம் ஆகியவை விளங்கின. அடுத்த ஆண்டில் இளங்கலைக்குரிய சிறப்புப் பாடங்களுள் ஒன்றாகத் தமிழும் இடம்பெற்றது. இதன் விளைவாக இலக்குவனார்க்குப் பேராசிரியர்க்குரிய ஊதியவிகிதமாக அக்காலத்தில் வரையறை செய்யப்பட்டிருந்த 250-500 என்னும் ஊதியவிகிதத்தில் சம்பளம் வழங்கப்பட்டது.

சிறப்புத் தமிழ் இளங்கலை அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக இலக்குவனார் நெல்லையில் தமது தமிழ்ப்-பணிகளுக்கு உறுதுணை புரிந்த புலவர் ந.சேதுரகுநாதன், திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவராகிய அன்பழகன் அவர்களின் தம்பி புலவர் க. திருமாறன் ஆகியோரைத் தமது துறையில் பணியமர்த்திக் கொண்டார். பேராசிரியர்களுள் பட்டறிவில் மூத்த இலக்குவனார்க்குத் துணை முதல்வர் பதவி வழங்கப்பட்டிருக்க வேண்டும். அங்ஙனம் செய்யவிரும்பாத கல்லூரி ஆட்சிக்குழு முதல்வர் ஊரில் இல்லாதபோது முதல்வர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்னும் விதியை மட்டும் ஏற்படுத்தியது.

## தமிழ் விழாக்கள்

செய்வன திருந்தச் செய்யும் செப்பம் மிக்க இலக்குவனார் தமிழ் வகுப்புகளில் மாணவரிடையே தமிழுணர்வும் இலக்கிய ஈடுபாடும் தழைத்தோங்கும் வகையில் சிறப்பாகப் பணியாற்றினார். கல்லூரி மாணவர் தமிழ்மன்றம் சார்பில் ஆண்டுதோறும் ஐந்து விழாக்கள் நடத்திட நிலையான ஏற்பாட்டை உருவாக்கினார். தொல்காப்பியர் திருநாள், திருவள்ளுவர் திருநாள், இளங்கோவடிகள் திருநாள்,

ஔவையார் திருநாள், தமிழ் மறுமலர்ச்சி நாள் என்பனவே அந்த ஐந்து விழாக்கள். இவ்விழாக்கள் மாணவர் உள்ளங்களில் எழுச்சியும் தமிழுணர்ச்சியும் ஏற்படுத்திய துடன் அவர்தம் தமிழ் இலக்கிய அறிவையும் விரிவுபடுத்தின.

## இலவச வகுப்பும் இதழியற்பணியும்

இங்ஙனம் வகுப்புகளின் மூலமாகவும் விழாக்களின் மூலமாகவும் கல்லூரியில் இலக்கியக் கல்வி தழைக்கப் பாடுபட்ட இலக்குவனார் தமது ஓய்வு நேரங்களில் மாலைநேர இலவச வகுப்புகளின் மூலம் இடைநிலை வகுப்புக்கான புகுமுக வகுப்புத் தேர்வுக்குப் பலரை ஆயத்தம் செய்தார். இங்ஙனம் இவரால் பயிற்சியடைந்த பலர் புகுமுக வகுப்பில் தேர்ச்சியடைந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இடைநிலை வகுப்பில் சேர்ந்து பின்னர் பி.ஏ. ஆனர்சு வகுப்புக்கும் சென்று பட்டம் பெற்று அரசினர் கல்லூரிகளில் பேராசிரியர் பதவியும் பெற்றுச் சிறந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நெல்லையில் ‘சங்க இலக்கியம்’ என்னும் இதழை நடத்தியதைப்போலவே இங்கு (விருதுநகரில்) ‘இலக்கியம்’ என்னும் இதழை நடத்தினார். தமது துணைவியார் திருமதி.மலர்க்கொடி உடல்நலிவுற்று வருந்திய வேளையில் அவரது வற்புறுத்தலால் அவரது தங்கை நீலகண்டேசுவரி அவர்களைத் திருமணம் புரிந்து கொண்டார். ‘இலக்கியம்’ இதழின் அமைச்சர் (மேலாளர்) பொறுப்பு வகித்தும் இதழ்களில் சிறுகதைகளை எழுதியும் திருமதி. நீலகண்டேசுவரி அவர்கள் இதழ் நடத்தும் பணியில் இலக்குவனார்க்குத் துணைபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் அமைச்சியல் கருத்துக்களைத் தொகுத்து வள்ளுவர் வகுத்த அமைச்சியல் நெறி இக்காலத்துக்கும் பொருந்துவதாக அமைந்துள்ள திறத்தை விளக்கும் வகையில் ‘அமைச்சர் யார்’ என்னும் தலைப்பில் நூல் ஒன்றும் வெளியிட்டார்.

## கல்விக்குழுவில்

கல்லூரிப் பேராசிரியர்கள் சார்பாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்விக்குழுவின் (அகெடமிக் கௌன்சில்) உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டார். எங்கும் தமிழ் சிறக்க வேண்டும் என்பதையே தமது குறிக்கோளாகக் கொண்ட இலக்குவனார் கல்லூரிக்

கல்வியிலும் தமிழ் சிறக்க விழைந்தார். அந்நோக்கில் சில தீர்மானங்களை முன்மொழிந்தார். அவையாவன.:

1. தமிழ்நாட்டுக் கல்லூரி முதல்வர்கள் குறைந்த அளவேனும் தமிழ்ப்புலமை பெற்றிருக்க வேண்டும். அதன் அறிகுறியாக வித்துவான் முன்னிலை வகுப்புத் தேர்விலாவது வெற்றி பெற்றிருக்க வேண்டும்.
2. கல்லூரிப் பாடத்திட்டத்தில் தமிழே முதற்பாக மொழியாகவும் ஏனைய மொழிகள் இரண்டாம் பாகமொழியாகவும் அமைதல் வேண்டும்.
3. தமிழ்ப் பாடத் தேர்வில் திருக்குறளுக்கெனத் தனிக் கேள்வித்தாள் ஒன்று அமைதல் வேண்டும்.

இத்தீர்மானங்கள் இலக்குவனாரின் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்துவதுடன் அக்காலச் சமூகச்சூழலையும் எடுத்துக்காட்டுகின்றன.

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் (1950-இல்) தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத, தமிழறிவு அற்ற பலர் கல்லூரி முதல்வர்களாக விளங்கினர். இத்தகையோரால் மாணவர்களுடன் கலந்துறவாடி அவர்களது உள்ளக்கிடக்கையை அறிந்து கொள்ள இயலாது என இலக்குவனார் கருதினார். எனவே முதல் தீர்மானம் கல்லூரியில் கட்டுப்பாடும் ஒழுங்கும் நிலவ வேண்டும் என்னும் எண்ணத்துடனேயே இலக்குவனாரால் முன்மொழியப்பட்டது.

தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வி பயின்று பட்டம் பெறுபவர்கள் தமிழறிவு சிறிதுமின்றி - தமிழே தெரியாமல் - பட்டம் பெறுவது தவிர்க்கப்பட வேண்டும் என்னும் எண்ணத்துடனேயே இரண்டாம் தீர்மானம் முன்மொழியப்பட்டது.

ஆங்கிலம் பயில்பவர்கள் 'சேக்சுபியர்' என்னும் தனித்தாள் ஒன்று எழுதித் தேர்ச்சி பெற வேண்டும். இதுபோலவே தமிழ் பயில்பவர்கள் திருக்குறள் என்னும் தனித்தாள் ஒன்று எழுதித் தேர்ச்சி பெறுதல் சிறப்புடையது எனக் கருதியமையே மூன்றாம் தீர்மானத்திற்குக் காரணமாகியது. இத்தீர்மானங்கள் பல்கலைக்கழகத்தில் நிறைவேறினவா? இலக்குவனாரே கூறுகிறார்:

"துணைவேந்தர் அவர்கள் தமிழ்ப்பற்றற்றோர் நகையாடும் வகையில் சில மொழிந்து என் முடிவுகளை

ஆய்வுக்கெடுக்காமல் ஒதுக்கித் தள்ளிவிட்டனர். ஆனால் சிலர் இவை ஒரு காலத்தில் நடைமுறைக்கு வரக்கூடியவையே என்று உரைத்துக் கொண்டனர். இருபத்திரண்டு ஆண்டுகட்கு (1950) முன்னர் நிகழ்ந்தவை அவர்கள் உரைத்தவாறு இப்பொழுது (1972) இரண்டு நிகழ்ந்துவிட்டன. தமிழ்ப் புலமை பெற்றோர் கல்லூரி முதல்வர்களாக உள்ளனர். தமிழ் முதற்பாக மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் மட்டுமே முதற்பாகமொழி என்னும் நிலை இல்லை. தமிழை ஒதுக்குவதற்கு இப்போதும் வாய்ப்பு உள்ளது. தமிழைப் பயிலாமலே பட்டம் பெறுவதற்குத் தமிழ்நாட்டில் வாய்ப்பு இருப்பது இரங்கத்தக்கது. திருக்குறளுக்கு இன்னும் முதன்மை கொடுக்கப்படவில்லை. திருக்குறள் அடிப்படையில் கல்வித்திட்டத்தை அமைக்கும் நாளே நாட்டின் நற்காலம் - பொற்காலம் தோன்றும் நாளாகும்.” (எ.வா.போ.பக்.176-177).

பல்கலைக்கழகக் கல்விக்குழுவில் உறுப்பினர் பதவி பெற்றமையே போதும் எனக் கருதி வாளாவிருக்காமல் அப்பதவியின் மூலம் தமிழ் வளர்ச்சிக்கும் கல்வி உயர்வுக்கும் தம்மால் ஆவன செய்ய வேண்டும் என்னும் செயல் துடிப்புடன் இலக்குவனார் செயலாற்றிய திறம் அவரது ஆளுமைத்திறத்திற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

## முதல் பொதுத்தேர்தலில்

இந்தியா குடியரசாக மலர்ந்து 1952-இல் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. செந்திற்குமாரநாடார் கல்லூரியின் தாளாளர் வே.வ.இராமசாமி சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். அச்சட்டமன்றம் அடங்கிய பாராளுமன்றத் தொகுதியில் அறிஞர் கோ.து.நாயுடு போட்டியிட்டார். இத்தொகுதியில் போட்டியிட்ட தலைவர் காமராசர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு முதல்வராக வரவேண்டும் என்றும் அறிவியலறிஞர் கோ.து.நாயுடு பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும் இலக்குவனார் கருதினார் வே.வ.ரா தலைமையேற்று நடத்திய விருதைத் தமிழ்ச் சங்கத்திற்கு இலக்குவனார் செயலாளராக இருந்தார் இருவரும் இணைந்து பல தமிழ்ப்பணியாற்றி வந்த சூழலில் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் வே வ.ரா போட்டியிட்டதும் இலக்குவனாரைத் தேர்தலில் வே.வ ராவுக்கு ஆதரவாக வினையாற்றக் காரணமாக அமைந்தன. சட்டமன்ற

வேட்பாளர் வே.வ.ரா.வும் பாராளுமன்ற வேட்பாளர் கோ.து.நாயுடுவும் கூட்டணி அமைத்துச் செயலாற்றியதால் இலக்குவனார் கோ.து.நாயுடுவுக்கு ஆதரவாகப் பொழிவு ஆற்றினார். ஆயின் காமராசர் மேல் அவருக்கு எத்தகைய வெறுப்பும் இல்லை. தேர்தலில் சட்டமன்றத்திற்கு வே.வ.ரா.தேர்வு பெற்றார். பாராளுமன்றத் தேர்தலில் கோ.து.நாயுடு தோற்றார். காமராசர் வென்றார்.

## முறையற்ற பணிநீக்கம்

தலைவர் காமராசருக்கு எதிராகத் தேர்தல் வேலை செய்தமையால் இலக்குவனார் பதவி விலக வேண்டுமெனச் செந்திற்குமாரநாடார் கல்லூரி ஆட்சிக்குழுவைச் சேர்ந்த பலர் கூறத்தொடங்கிவிட்டனர். அவர்களது கருத்தே தமது கருத்துமாகுமென வே.வ.ரா. இலக்குவனாரிடம் தெரிவித்தார். கல்லூரிப் பணியில் ஏதேனும் தம்மிடம். குறையிருந்தால் மட்டுமே தம்மீது நடவடிக்கை எடுக்கக் கல்லூரி ஆட்சிக் குழுவுக்கு அதிகாரம் உண்டு எனவும் கல்லூரிக்கு வெளியே ஒரு குடிமகன் என்னும் முறையில் தாம் ஈடுபட்ட செயல்களுக்காகத் தம்மீது நடவடிக்கை எடுத்தல் முறையன்று என இலக்குவனார் தெரிவித்தும் வே.வ.ரா. அதனைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. இலக்குவனார் பணியினின்று நீக்கப்பட்டார். இதற்கு முன்னதாக அரசாங்கமே இலக்குவனாரைப் பணியினின்று நீக்க வேண்டும் என்று வற்புறுத்தியபோது கல்லூரி ஆட்சிக்குழுவினர் உறுதியாக மறுத்துவிட்டனர் என்பதை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். பெரியாரின் அழைப்பின் பேரில் அவர் நடத்திய திருக்குறள் மாநாட்டிற்கு இலக்குவனார் சென்று கலந்து கொண்டார் என்பதும் பெரியார் நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாட்டில் இலக்குவனார் கலந்து கொண்டார் என்பதும் ஒரு சிலருக்கு வெறுப்பையும் காழ்ப்புணர்ச்சியையும் ஏற்படுத்தின. இலக்குவனார் மேல் குற்றஞ்சாட்டும் மடல்கள் அரசுக்குப் பறந்தன. திராவிடர் கழகத்தின் கைப்பாவையாக இலக்குவனார் செயற்பட்டு வருகிறார் என்பதால் உடனே அன்றைய பொதுக்கல்வி இயக்குனர் "இலக்குவனார் கருஞ்சட்டை இயக்கத்தில் தீவிர ஈடுபாடு காட்டி வருகிறார். எனவே அவர் பணியில் நீடிப்பது ஆபத்து" என்று கல்லூரி ஆட்சிக்குழுவுக்குக் குறிப்பாணை அனுப்பினார். ஆனால் கல்லூரி ஆட்சிக்குழு "கல்லூரியில் இலக்குவனார்

கடமையைச் செவ்வனே ஆற்றிவருகிறார். ஓய்வு நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் அவர் செய்யும் செயல்களுக்காக அவர்மீது நடவடிக்கை எடுக்க முடியாது" எனக் கூறிவிட்டனர். ஆனால் இன்று பல்வேறு காரணங்களால் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. "தம்மீது எந்தக் குற்றமும் இல்லாதபோது தம்மைப் பணிநீக்கம் செய்தது தவறு' என இலக்குவனார் வழக்குத் தொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

## அயரா உழைப்பு

தந்தைவழிச் சொத்தாகத் தமக்கிருந்த சிறிதளவு நிலத்தை விற்றுத் தஞ்சாவூரில் ஓர் அச்சகம் நிறுவினார். "திராவிடக் கூட்டரசு" என்று தமிழிலும் "DRAVIDIAN FEDERATION" என்று ஆங்கிலத்திலும் இதழ்களை நடத்தினார். 'பெரியார் தனிப்பயிற்சிக் கல்லூரி' என்னும் ஒரு தனிப்பயிற்சிக் கல்லூரியையும் நடத்தினார். எனினும் போதிய வருவாய் கிட்டவில்லை.

திருச்சிக்கு அருகில் திருவெறும்பூரில் 'முக்குலத்தோர் உயர்நிலைப்பள்ளி' என்னும் பள்ளி சரிவர நடைபெறவில்லை என்பதறிந்து அதனைச் செம்மையுற நடத்தும் பொறுப்பை மேற்கொண்டார். இவருக்குக் கல்வியியலில் பட்டப்படிப்பு (எல்.டி.) இல்லை என்பதால் முதல்வர் (Principal) என்னும் பதவி வழங்கப் பெற்றது. கல்லூரிப் பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராகவும் பணியாற்றினோமே இப்போது பள்ளியில் எப்படிப் பணியாற்றுவது எனச் சோர்ந்து போய்விடாமல் பள்ளி மாணவர்களுக்குச் சிறந்த ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவை விளங்குதற்கு அயராது பாடுபட்டார். முதற்படிவம் முதல் ஐந்தாம் படிவம் (ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை) மட்டுமே அப்பள்ளியில் இருந்தன. இலக்குவனார் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அப்பள்ளியில் ஆறாம் படிவம் (பதினோராம் வகுப்பு) தொடங்குவதற்கு ஒப்பளிப்புப் பெற்றார். எனினும் பள்ளியிறுதி வகுப்பு இருக்கும் காரணத்தால் எல்.டி. பட்டம் பெற்ற ஆசிரியர் ஒருவரைப் பணியமர்த்தம் செய்ய வேண்டும் எனப் பொதுக் கல்வி இயக்குநர் ஆணை பிறப்பித்தமையால் இலக்குவனார் தாமே முன்வந்து தமது பணியினின்று விலகினார். மீண்டும் எங்கே செல்வது என்னும் சிந்தனை; ஓர் அன்பர் திருவரங்கத்தில் வீடு பார்த்துக் கொடுத்தார்.

தனிப்பயிற்சிக் கல்லூரி தொடங்கித் தஞ்சையில் போதிய மாணாக்கர்கள் சேராமையால் இடருற்றதால் இம்முறை ஒரு பலசரக்குக்கடை தொடங்கினார். வந்து வாங்கியோ-ரெல்லாம் பொருள் நலிவுற்றோர்; கடனாகவே வாங்கினர்; கடனையும் திருப்பித்தரவில்லை. கடையும் மூடப்பட்டது.

## கபிலர்க்குப் பாரி

புதுக்கோட்டையில் தனிப்பயிற்சிக் கல்லூரி ஏதுமில்லை; அங்கே தொடங்கலாம் எனப் பழைய மாணவர் ஒருவர் கூறியதன் பேரில் அங்கு வீடு பார்த்துக் குடியேறினார். அப்போதுதான் அண்ணல் பு.அ.சுப்பிரமணியனார் என்னும் சான்றோரின் நட்பினைப் பெற்றார்.

"அண்ணல் சுப்பிரமணியனார் எனக்கு ஆற்றிய பயன்தூக்கா உதவி மலையினும் மாணப்பெரிதாகும். கபிலர்க்குப் பாரியும் அவ்வைக்கு ஓர் அதியமானும் கம்பருக்குச் சடையப்ப வள்ளலும் கிடைத்தது போல் எனக்கு இவர்கள் கிடைத்தார்கள்" என்னும் இலக்குவனாரின் உணர்வு வரிகள் சுப்பிரமணியனாரின் பெருந்தகைமைக்கும் இலக்குவனாரின் நன்றிமறவா நயத்தக்க நாகரிகத்திற்கும் சான்றாக விளங்குகின்றன.

தனிப்பயிற்சிக் கல்லூரி நடத்துவதோடு அமையாது ஒரு திருக்குறள் கழகம் அண்ணல் சுப்பிரமணியனாரைத் தலைவராகவும் இலக்குவனாரைச் செயலாளராகவும் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை-தோறும் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இலக்குவனாரின் நூல்களை வெளியிடுவதற்காகவே வள்ளுவர் பதிப்பகம் என்னும் நிறுவனம் உருவாக்கப்பட்டது. "துரத்தப்பட்டேன்" "திருக்குறள் - எளிய பொழிப்புரை" "எல்லோரும் இந்நாட்டரசர்" "தொல்காப்பிய ஆராய்ச்சி" "பழந்தமிழ்" "இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்" முதலிய புத்தகங்கள் இப்பதிப்பகத்தின் வாயிலாகவே வெளியிடப்-பட்டன. இவை குறித்து 'நூலாசிரியர்' என்னும் இயலில் விரிவாகக் காணலாம்.

## ஈரோட்டில்

பெரியார் ஈ.வே.ரா. அவர்களின் உறவினர் ஈரோட்டில் நடத்திவந்த சிக்கையா நாயக்கர் மாசனக் கல்லூரி என்னும் கல்லூரியில் பெரியார் அவர்களின் பரிந்துரையினால்

பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. 1954 முதல் 1956 வரையிலான இரண்டு கல்வி ஆண்டுகள் இங்குப் பணியாற்றினார். அங்கு இலக்குவனார் இரண்டு ஆண்டுகள் பணியாற்றியதே காலச்சூழலின் நெருக்கடியால் தான் எனலாம். கல்லூரிப் பணியில் இலக்குவனார் பெற்றுள்ள சிறந்த பட்டறிவின் அடிப்படையில் அவருக்குத் துணைமுதல்வர் பதவி வழங்கலாம் எனக் கல்லூரி ஆட்சிக்குழு கருதியது. ஆயின் கல்லூரி முதல்வர் அதற்கு இசையவில்லை. முதல்வர் ஊரில் இல்லாதபோது பொறுப்பு முதல்வராகப் பணியாற்றலாம் என்னும் குறிப்புடன் அவருக்குப் பேராசிரியர் பணி வழங்கப்பட்டது.

"எந்தப் பொதுக்கூட்டத்துக்கும் சொற்பொழிவு ஆற்றச் செல்லக்கூடாது; ஏனைய கல்லூரிகளில் சொற்பொழிவு ஆற்றச் செல்வதாயினும் முன்கூட்டியே இசைவு பெற்றாக வேண்டும்" என்பது கல்லூரி முதல்வரின் கட்டளை. வகுப்புகளில் விருப்பம்போல் பாடம் நடத்துவதும் கூடாது. அங்கும் முதல்வரின் கெடுபிடிச் சட்டம் பாய்ந்தது. "வகுப்புகளில் தமிழின் பெருமை பற்றியோ தொன்மை பற்றியோ பேசுதல் கூடாது. தமிழ்ப் பற்று உண்டாகுமாறு கற்பித்தல் கூடாது. இதனால் மாணவர்கள் கெட்டுப் போய்விடுகிறார்கள்" என்பது முதல்வர் வைத்த சட்டம். தமிழ் மறுமலர்ச்சி தழைத்தோங்கப் பாடுபடுவதையே தமது உயிர்மூச்சாகக் கருதி வாழ்ந்த இலக்குவனார் இச்சட்டங்களை ஏற்பாரா?

தந்தை பெரியார் அவர்களிடம் இந்தக் கொடிய அடக்குமுறைகள் தெரிவிக்கப்பட்டன. நிலைமையை அறிந்து உளம் வருந்திக் கண்ணீர் வடித்த பெரியார் அவர்கள் கல்லூரிப் பொறுப்பிலிருந்து தமது தொடர்பைத் துண்டித்துக் கொண்டார்கள். அச்சூழலில் அதனைத் தவிர அவர்களால் வேறொன்றும் செய்ய இயலவில்லை.

ஒத்த கருத்துடைய தமிழ்ப் பேராசிரியர் அத்தியப்பன், கணிதப் பேராசிரியர் கருப்பண்ணன் ஆகியோருடன் மாலைநேரங்களில் பூப்பந்து விளையாடுவார் இலக்குவனார். கல்லூரிப் பணி முடிந்த ஓய்வு நேரத்தில் பேராசிரியர்கள் விளையாடுதலும் முதல்வரால் குற்றம் என்றே கருதப்பட்டது. இவர்கள் மாலைநேரங்களில் கூடிப் பேசிச் சதிசெய்கிறார்கள் எனக் கல்லூரி ஆட்சிக்குழுவினருக்குத் தெரிவித்துப்

பிடிவாதமாக அவர்களுக்குப் பணிநீக்க உத்தரவு வழங்கி மகிழ்ச்சி அடைந்தார் முதல்வர்.

## பெருந்துயர்மிக்க பேராசிரிய வாழ்க்கை

அக்காலத்தில் கல்லூரிப் பேராசிரியர்களின் நிலை எத்துணை அவலம் வாய்ந்ததாக இருந்தது என்பதற்குப் பேராசிரியர் இலக்குவனார் அவர்களின் வாழ்க்கையே ஓர் எடுத்துக்காட்டாகும். எந்தக் காரணமும் இன்றி எந்தப் பேராசிரியரையும் எப்போது வேண்டுமானாலும் பணிநீக்கம் செய்யலாம் என்னும் அதிகாரம் பெற்றவர்களாகக் கல்லூரி முதல்வர்களும் கல்லூரி ஆட்சிக் குழுவினரும் விளங்கினர். அடிப்படை மனித உரிமைகளும் இன்றிப் பேராசிரியர்கள் அடக்கிஒடுக்கப்பட்டால் அவர்களால் சிறந்த குடிமக்களை எவ்வாறு உருவாக்க முடியும்?

இலக்குவனாரைப் போல அவர் காலத்தில் வேறு யாரும் இவ்வளவு துன்பத்தைச் சந்திக்கவில்லை. இதற்குக் காரணம், பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் பள்ளிப் பருவத்திலிருந்தே ஈடுபாடு காட்டிவந்த இலக்குவனாரால் யாருக்கும் குற்றவேல் புரியவோ தலையாட்டிப் பதுமையாக அமைந்திடவோ முடியவில்லை. தன்மதிப்புணர்வும் தமிழ் வீறுணர்வும் மிகுந்த இலக்குவனாரை ஒரு புரட்சிக்காரரர் என்று பிறர் குறைகூறுமளவு அக்காலச் சமுதாயம் அடிமை மனப்பான்மையில் ஊறிக் கிடந்தது.

### நாகர்கோயிலில்

அக்காலத்தில் கேரள மாநிலத்துடன் இணைந்திருந்த, இன்றைய குமரி மாவட்டத்தைச் சார்ந்த நாகர்கோயிலில், தென்திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி என்னும் கல்லூரியில், ஒரு தமிழ்ப் பேராசிரியர் பதவிக்குத் தக்கார் தேவை என்று விளம்பரம் செய்திருந்தார்கள் இதற்கு விண்ணப்பித்த இலக்குவனார் அங்கேயே பணியமர்த்தம் பெற்றார் அப்போது அங்குக் கல்லூரி முதல்வராகப் பணிபுரிந்து கொண்டிருந்தவர் புகழ் பெற்ற பொருளியல் வல்லுநர் முனைவர் பா.நடராசன் ஆவர். இவர் ஏற்கனவே இலக்குவனாருக்கு அறிமுகமானவர் என்பதுடன் தமிழில் ஈடுபாடும் மிக்கவர் என்பதால் இலக்குவனாருக்கு அக்கல்லூரிப் பணி, மிக இனிய சூழலில் அமைந்தது. மாணவரிடையே ஒழுங்கும் ஆசிரியரிடையே கட்டுப்பாடும்

வலியுறுத்தி வந்த காரணத்தால் அத்தகைய ஒழுங்கும் கட்டுப்பாடும் போற்றாத சிலருக்குக் கல்லூரி முதல்வர் மேல் அளவற்ற வெறுப்பு இருந்தது. முதல்வருக்கு வேண்டிய பேராசிரியராக இலக்குவனார் இருந்ததால் இலக்குவனார் மீதும் அவர்கள் வெறுப்புக் காட்டினர். எனினும் இலக்குவனார் தமது கடமையைச் சிறப்பாக ஆற்றிவந்தார்.

அப்போது கேரளப் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்றிருந்த அக்கல்லூரியில் தமிழ் முதுகலை வகுப்பு தொடங்கப் பெற்றது. கலைத்தந்தை எனப் போற்றப்பட்ட கருமுத்து தியாகராாசர், இலக்குவனாரால் அழைக்கப் பெற்றிருந்தார். தமிழ் முதுகலை வகுப்பு அவரால் தொடக்கிவைக்கப்பட்டது. மாணவர்கள் பயனுறும் வண்ணம் இலக்குவனாரின் கல்லூரிப் பணி சிறப்பாக அமைந்தது. முனைவர் பா.நடராசன் இந்திய அரசின் பொருளியல் வல்லுநராகப் பணியமர்த்தம் பெற்றுக் கல்லூரி முதல்வர் பொறுப்பிலிருந்து நீங்கினார். அடுத்த முதல்வராக வருதற்குரிய தகுதிபெற்று கல்லூரிப் பேராசிரியர்களிலேயே மூத்த நிலையிலிருந்த இலக்குவனாரை அப்பொறுப்பில் அமர்த்தாமல் வேறு யாரையோ பணியில் அமர்த்தியது கல்லூரி ஆட்சிக்குழு; அவரால் நீடிக்க முடியவில்லை. வேறு வழியின்றி இலக்குவனாரைக் கல்லூரி முதல்வராகப் பொறுப்பில் அமர்த்தினர். நேர்மையும் பொறுப்பும் மிக்க வகையில் கல்லூரி முதல்வராகப் பணியாற்றினார் இலக்குவனார். மாணவர்களுக்குரிய உதவித் தொகையை உடனே அவர்களுக்கு வழங்காமல் வட்டிக்கு விட்டுப் பின்னர் காலந்தாழ்த்துக் கொடுக்கும் முறைகேடுகள் நடக்கவில்லை. அரசினரால் வழங்கப்படும் தொகைகள் உடனடியாக அவ்வச் செலவினங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. மாணவரிடையே கட்டுப்பாடும் ஒழுங்கும் சிறந்தோங்கின. வகுப்புகள் சிறப்பாக நடைபெறுவதைப் போலவே விழாக்களும், அப்போது எழுச்சியான முறையில் நடத்தப்பட்டன எனினும் கல்லூரி ஆட்சிக் குழுவில் நிலவிவந்த அரசியல், இலக்குவனாருக்கு எதிரான திசையில் திரும்பியது. இலக்குவனாரைப் பணியிலிருந்து நீக்கக் கருதிய ஆட்சிக்குழு, இலங்கையில், மெட்ரிக் பள்ளியில் முதல்வராக இருந்த ஓர் அம்மையாரைக் கல்லூரி முதல்வராகப் பணியில் அமர்த்தியது. இத்தகு சூழலில், அக்கல்லூரிப் பணியில் நீடிக்க விரும்பாத இலக்குவனார் வேறு பணிகளுக்கு முயன்றார்.

'சென்னைக்கு வந்துவிடுங்கள். வேறு பணிகளில் அமர்த்த ஆவன செய்கிறேன்' என்று முதலமைச்சர் காமராசர் முன்பொருமுறை கூறியிருந்தமையால் அவரைக் காணச் சென்னை சென்றார் இலக்குவனார். இரண்டு மூன்று முறை மீண்டும் மீண்டும் வருமாறு கூறிய காமராசர் அவர்களால் உடனடியாக எப்பணியையும் வழங்க இயலவில்லை. எனினும் கலைத்தந்தை கருமுத்து தியாகராாசர் தம்மைக் காண விரும்பினார் என்னும் செய்தியறிந்து அவரைக் கண்டார். தியாகராசர் கல்லூரித் தமிழ் முதுகலைத் துறையின் தலைவராகப் பணியமர்த்தம் பெற்றார்.

## ஐந்தாவது தமிழ்ச்சங்கம்

1959ஆம் ஆண்டுக் கல்வியாண்டுத் தொடக்கத்தில் அவர் அங்குச் சென்றபோது ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை அ.கி.பரந்தாமனார் முதலியோரும் அத்துறையை அணி செய்து கொண்டிருந்தனர். தமிழ்ப்பற்றுடன் புலமையும் கொண்டிருந்த தியாகராசர் அவர்களின் மேலாண்மையில் இயங்கி வந்த அக்கல்லூரிச் சூழல் இலக்குவனாருக்கு இனிமையாக அமைந்ததில் வியப்பில்லை. 1959-1960 கல்வியாண்டுத் தொடக்கத்தில் பணியேற்ற இலக்குவனார் 1965இல் பணிநீக்கம் செய்யப்பட்ட காலம் வரையில் இத்தியாகராசர் கல்லூரியில் அனைவரும் பாராட்டும் வகையில் கல்விப் பணியாற்றி வந்தார். பி.எச்.டி., எம்.லிட். ஆகிய ஆய்வுப் பட்டங்களுக்குப் பலர்க்கு ஆய்வுநெறியாளராக விளங்கினார். சென்னைப் பல்கலைக்கழகக் கல்விக் குழு (அகெடமிக் கவுன்சில்), பாடநூற்குழு, ஆட்சிக்குழு (செனெட்டு) முதலான கல்விசார் அமைப்புகளில் சிறப்பான பணியாற்றினார்.

சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் துணைத்தலைவராகவும் தமிழகப் புலவர் குழுவின் செயலாளராகவும் செயலாற்றிக் கல்விநலனுக்கும் தமிழ்நலனுக்கும் உழைத்தார்.

தாமே 'தமிழ்க் காப்புக் கழகம்' என்றொரு தமிழியக்க அமைப்பை நிறுவிப் பல புலவர்களின் கூட்டுறவால் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினார். குறள்நெறி அச்சகம் நிறுவி, "குறள் நெறி" எனத் தமிழிலும் "KURALNERI" என்று ஆங்கிலத்திலும் திங்களிருமுறை இதழ்களை நடத்தினார். இலக்குவனாரின் நாற்பத்தொன்பதாம் ஆண்டு முதல்

ஐம்பத்தைந்து ஆண்டு வரையிலான இக்காலம் அவரது வாழ்வின் செயல்திட்டங்கள் பல ஆற்றப்பட்ட காலமாகவும் தமிழ் மறுமலர்ச்சிக்கு ஒரு பொற்காலமாகவும் விளங்கியது எனல் மிகையன்று.

தியாகராசர் கல்லூரி, ஐந்தாவது தமிழ்ச்சங்கம் எனப் போற்றப்பட்டது. இக்காலத்தில் பயின்று பட்டம் பெற்றோர் தமிழ் இலக்கிய உலகில் ஆழத் தடம் பதித்தனர். கபில பரண நக்கீரர் என்று போற்றத்தக்க அவ்வை சு.துரைசாமி, அ.கி.ப. இலக்குவனார் ஆகிய முப்பெரும் புலவர்களின் கூட்டுறவும் இளைய தலைமுறைப் பேராசிரியர்களின் ஒத்துழைப்பும் உண்மையாகவே அத்தமிழ்த்துறையை ஒரு தமிழ்ச்சங்கமாக, புலவர் கழகமாக மிளிரச் செய்தது. அடுத்த வரிசையில் அமைந்த நா.பாலுசாமி, அ.சங்கரநாராயணன் போன்றோரும் கண.சிற்சபேசன், கதி.சுந்தரம், இராம.பெரியகருப்பன் (தமிழண்ணல்), கதிர்.மகாதேவன், அவ்வை நடராசன் முதலான இளைய தலைமுறையினரும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் துறையின் சிறப்புக்கு மெருகேற்றினர். இதன் விளைவாக அப்போது பயின்ற மீரா, அப்துல்ரகுமான், பீ.மு.அபிபுல்லா, தி.கு.நடராசன், ஆ.ஆரிது, மு.மேத்தா, இன்குலாபு என்று பலர் (விரிவஞ்சி இப்பட்டியல் முழுமையாக வழங்கப் பெறவில்லை) தமிழ்க் கவிதைத் துறையில் புகழ்க்கொடி நாட்டினர். அமெரிக்கா சென்று தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்த திருமதி. இராசம் இராமமூர்த்தி உட்படப் பலர் பல்வேறு கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராகச் சிறப்புடன் பணியாற்றினர். ஈ.வே.மாரியப்பன், மு.மாரியப்பன், ந.மாணிக்கம், வீ.முத்துசாமி முதலியோர் அக்கல்லூரியிலேயே பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றனர். அரசியல்துறையில் பல்வேறு கட்சிகளில் இணைந்து சமூகப்பணியாற்றியோரும் நாவன்மை மிக்க நாவலர்களாக நாடுபோற்றப் புகழ் சிறந்தனர்.

## சிறை வாழ்க்கை

தமிழ்மொழி உரிமைக்காக இலக்குவனார் இருமுறை சிறை சென்றதும் இங்குப் பணியாற்றிய காலத்தில்தான் முதன்முறை சிறை சென்று இரண்டு வாரங்களுக்குள் மீண்டும் பணிபுரியும் வாய்ப்புப் பெற்ற இலக்குவனார், இரண்டாம் முறை, அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழ், பயிற்சி மொழியாக நடைமுறைப்படுத்திட வேண்டும் என்பதை

வலியுறுத்தும் முகத்தான் ஒரு பெருநடைப் பயணத்திற்குத் திட்டமிட்டார். மார்ட்டின் லூதர், அமெரிக்காவில் குடிம உரிமைப் பெருநடைப் பயணம் (CIVIL RIGHTS MARCH) மேற்கொண்டதுபோலவே தாமும் ***தமிழ் உரிமைப் பெருநடைப் பயணம்*** மேற்கொள்ளத் திட்டம் வகுத்தார். ஆனால், இதனை வேறுவிதமாகக் கருதிய அரசு, சட்டம் ஒழுங்கு சீர்குலையும் என்று கூறி அவரை இந்தியப் பாதுகாப்புச் சட்டததின் கீழ்க்கைது செய்தது. அவர் சிறையில் இருந்த காலத்தில் அவரது கல்லூரி ஆட்சிக்குழு அவரை எக்காரணமும் காட்டாமல் வேலைநீக்கம் செய்தது. சிறைக்கொடுமையோடு வேலை நீக்கக் கொடுமையும் அவரது துன்பச்சுமையைப் பெருக்கியது. இரண்டரை மாதச் சிறைவாசத்திற்குப் பிறகு பிணையில் வெளிவந்த இலக்குவனார், அதுவரை திங்களிருமுறை இதழாக வெளி வந்துகொண்டிருந்த குறள்நெறி இதழை நாளேடாக்கினார். இத்துணிவான முயற்சிக்கு மக்கள் உறுதுணை புரிந்தனர். எனினும் ஊர்தோறும் விற்றுக் கொண்டிருந்த விற்பனை-யாளர்கள், விற்பனைத்தொகையை ஒழுங்காக அனுப்பாமல் போனதால், கடன் சுமை மிகுந்து இதழை நிறுத்த வேண்டியதாயிற்று.

அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்த 1967ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலும் வந்தது. தி.மு.க. வெற்றி பெற்று அறிஞர் அண்ணா தலையில் ஆட்சி அமைந்தது. தமிழ் உரிமைப் போரில் கலந்து கொண்டதால் வேலையிழந்த இலக்குவனார்க்கு உரிய பதவியை வழங்க வேண்டும் என்று கொடைக்கானல் முதலான பல்வேறு ஊர்களில் நடந்த மாணவர் மாநாடுகளில் தீர்மானம் இயற்றி அரசின் கவனத்திற்குக் கொணர்ந்தனர்.

### அரசுப்பணியும் அமைச்சர் சீற்றமும்

சென்னை மாநிலக் கல்லூரியின் முதுநிலைப் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் 1967 சூன் திங்களில் கல்வியாண்டுத் தொடக்கத்தில் இலக்குவனார் பொறுப்பேற்றார். அங்கே ஓராண்டுக்காலமே அவர் பணியாற்ற வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால் பல ஆண்டுகள் பணிபுரிந்த பேராசிரியர்களும் செய்யாத பல அரும்பணிகளை-யாற்றினார். தமிழ் முதுகலை வகுப்பு மட்டுமே அங்கு இருந்தது. சிறப்புத் தமிழ் இளங்கலை வகுப்பு அங்கே

அதுவரை இல்லை. தாம் பொறுப்பேற்ற அடுத்தநாளே இதற்குச் சிறப்பு இசைவு வாங்கி அந்த ஆண்டிலேயே மாணவர்களைச் சேர்த்தார். கல்லூரித் தமிழ்மன்றத்தில் பலவிழாக்களை நடத்தினார். திருவள்ளுவர் பெயரால் சுழற்கேடயம் ஒன்று நிறுவன ஆவன செய்தர். ஒருமுறை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் தமிழ்ப் பயிற்சிமொழியை வலியுறுத்திப் பேசியதால் அன்றைய கல்வி அமைச்சரின் கடுஞ்சினத்திற்கு ஆளானார். மீண்டும் பணிநீட்டிப்புத் தருவதாகக் கூறி ஓராண்டுக்காலம் மட்டுமே ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தம் செய்யப் பெற்ற இலக்குவனார்க்கு அவ்வோராண்டுக்காலம் முடிந்ததும் பணிநீட்டிப்பு வழங்கப்படவில்லை. அப்போது ஐதராபாத் உசுமானியப் பல்கலைக்கழகத்திற்குப் பேராசிரியர் தேவை என விளம்பரம் வந்ததால் இலக்குவனார் அங்கே விண்ணப்பித்துப் பணியமர்த்தம் பெற்றார். ஒப்பந்த அடிப்படையில் ஐந்து ஆண்டுகளுக்குப் பணிபுரிய ஆணை வழங்கப்பட்டது.

## பொருள்வயிற்பிரிவு

தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்களில் 1936 முதல் 1968 வரை (இடையிடையே பணிநீக்கம் பெற்று), பணிபுரிந்த இலக்குவனார்க்கு இது ஒரு முற்றிலும் மாறுபட்ட பட்டறிவே. அங்கே தமிழ் முதுகலைபயிலப் போதிய மாணாக்கர் முன்வராததால் துணைவேந்தர் இசைவு பெற்று பணியில் இருப்போர் பயிலும் வண்ணம் வகுப்பு நேரத்தைப் பிற்பகலில் அமைத்துக் கொண்டு சிறப்பாகத் தமிழ்ப்பணி நடத்தினார்.

வருவாயின் பொருட்டுக் குடும்பத்தை விடுத்து உணவகங்களில் கிடைத்ததை உண்டும், சிலநேரங்களில் கட்டண விருந்தாளியாகச் (Paying guest) சிலர் இல்லங்களிலும், சில நேரம் தாமே சமைத்தும் காலத்தை ஓட்டிவந்தார். அறுபதை நெருங்கும் இந்த அகவைக் காலத்தில்தான் இல்லத்தின் பேணல் தேவை. ஆட்சி மாறியும் அவலம் மாறவில்லை. இந்நிலை உணர்ந்து அவரது கெழுதகை நண்பர்களுள் ஒருவரும் பெரியார் அன்பர்களுள் ஒருவருமாகிய திரு.கிருட்டிணப்பிள்ளை அவரை மீண்டும் நாகர்கோயில் தெ.தி.இந்துக் கல்லூரிக்கு முதல்வர் பொறுப்பேற்க வருமாறு வேண்டினார்.

*குடும்பத்தை விட்டு அறுநூறு மைல் தொலைவில் தனிமையில் உழன்று கொண்டிருந்த இலக்குவனார்க்கு இவ்வேண்டுகோள் தேனாய் இனித்திருக்கும். ஆனால் இதிலும் ஒரு சிக்கல்; இங்கே - உசுமானியாவில் பணியாற்றினால் இன்னும் நான்காண்டுக்காலம் பணியில் இருக்கலாம். நாகர்கோயில் கல்லூரி முதல்வர் பதவியில் ஓராண்டு மட்டுமே பணிபுரிய முடியும். ஏனெனில் கல்லூரிப் பணியில் அறுபதாண்டுகளுக்கு மேல் ஓய்வு பெற்றாக வேண்டும். இங்கே ஒப்பந்தம் ஐந்தாண்டுகளுக்கு என்பதால் 1973வரை பணிபுரியலாம். 1968-1969, 1969-1970 என இரு கல்வியாண்டுகள் துன்புற்றது போதும் என இலக்குவனார் கருதினாரா? மதுரையில் துணைவேந்தர் பதவி வாய்ப்பு 1970ஆம் ஆண்டின் இறுதியில் வருகிறது. 'தமிழ் காக்கத் தன்னலனின்றி உழைத்த உங்களுக்கே இவ்வாய்ப்புக் கிட்டும்' என்று நண்பர் கூறியதை அவர் நம்பினாரா? எதுவும் உறுதியாகத் தெரியவில்லை.*

### மீண்டும் நாகர்கோயில்

*இலக்குவனார் உசுமானியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவியைத் துறந்தார். நாகர்கோயில் இந்துக் கல்லூரி முதல்வர் பதவியை 1970-1971 கல்வியாண்டுத் தொடக்கத்தில் ஏற்றார். இலக்குவனார் தமிழ் முதுகலை வகுப்பைத் தொடங்கி வைத்த இந்துக் கல்லூரியில் - முதல்வர் பொறுப்பிலிருந்து எத்தகைய காரணமுமின்றிப் பணிநீக்கம் செய்யப்பட்ட அதே கல்லூரியில் மீண்டும் முதல்வராகக் கல்லூரி ஆட்சிக்குழுவினரால் ஒருமனதாக விரும்பி ஏற்கப்பட்டுப் பொறுப்பேற்றார். அப்போது சிக்கலில் இருந்த கல்லூரி, இலக்குவனாரின் வருகையால், அவரது முயற்சியால், சிக்கலிலிருந்து மீண்டது. இக்கல்லூரியில் இலக்குவனாரின் பணி ஆறு திங்களே நீடித்தது. இலக்குவனார்க்கு அகவை அறுபது நிறைந்தமையால் அவர் அகவை முதிர்வினால் 1970 திசம்பர்த் திங்களில் ஓய்வு பெற்றார்.*

### தமிழன்பர் தவிப்பு

*சனவரி 1971இல் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்குப் பரிந்துரைக்கப்படுவோர் பட்டியலில் முதலிரு பட்டியல்களிலும் அவர் பெயர் இடம் பெற்றிருந்தது. மூன்றாவதாக வெளியிடப்பட்ட அறிவிப்பில்*

வேறொரு பேராசிரியரின் பெயரே இடம் பெற்றது தமிழ்நாடெங்கணுமிருந்து தொலைபேசி வழியாகவும் மடல் வழியாகவும் பேராசிரியருடன் பல்வேறு அன்பர்கள் தொடர்பு கொண்டு தமது அதிர்ச்சியைத் தெரிவித்தனர் இலக்குவனார் எள்ளளவும் மனம் வருந்தவில்லை இப்பதவி பெற்றவரும் ஒரு தமிழ்ப் பேராசிரியரே என்பதால் அரசின் முடிவைக் குறைகூற வேண்டாம் எனவும் தமது தன்னலமற்ற தொண்டு இனியும் தொடரும் எனவும் தெரிவித்தார். தமிழ் வளர்ச்சிக்கான பணிகளில் தம்மோடு ஒத்துழைக்குமாறு அன்பர்களைக் கேட்டுக் கொண்டார்.

## தமிழ்மலை சாய்ந்தது

மதுரைத் தமிழ்ச்சங்கம், விக்டோரியா தனிப்பயிற்சிக் கல்லூரி ஆகிய இடங்களில் தமிழ் இலக்கிய இலக்கண வகுப்புகளை நடத்தினார். ‘தமிழ் முரசு’ நாளிதழின் ஆசிரியராகவும் தமிழ் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிவந்த தலைவராகவும் விளங்கிய தமிழவேள் கோ சாரங்கபாணி அவர்களின் அழைப்பின்பேரில் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று பல்வேறு ஊர்களில் பல்வேறு தமிழ் இலக்கியங்களைப் பற்றிய சொற்பொழிவு நிகழ்த்தினார். நாடு திரும்பியதும் மீண்டும் தமிழ் இலக்கிய இலக்கண வகுப்புகளை நடத்தி வந்தார் உடல்நலக் குறைவால் மருத்துவமனைக்குச் செல்லும்வரை அவரது தமிழ்ப்பணி தளரவில்லை. பேச்சும் மூச்சும் தமிழே எனக்கருதி வாழ்ந்த அந்தப் பெருமகனார் 1973ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் மூன்றாம் நாள் உயிர்நீத்தார்.

## உயர்ந்த நோக்கு

தொகுத்து நோக்கின், இலக்குவனாரின் கல்விப்பணி எந்த நிறுவனத்திலும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகட்கு மேல் நீடிக்கவில்லை. அவர் நீண்டகாலம் பணியாற்றிய நிறுவனம் தியாகராசர் கல்லூரி என்பதும் அங்கும் அவர் ஆறு ஆண்டு-கட்கு மேல் நீடிக்க முடியவில்லை என்பதும் குறிப்பிடத்-தக்கன தொடக்கத்தில் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றியபோதும் அவர் அரசியல் சார்புடன் நடந்து கொள்வதாகக் குறைகள் கூறப்பட்டன. பணிஉயர்வு கருதித் திருவையாறு அரசர் கல்லூரிக்கு விரிவுரையாளராகச் சென்றார். அங்கும் பள்ளித் தமிழாசிரியருக்குரிய ஊதியமே

வழங்கப்படும் என்று அறிந்திருந்தும், தன்னை மேலும் தகுதிப்படுத்திக் கொள்ளவும், ஆய்வுப் பட்டங்கள் பெறவும், நூல்கள் இயற்றவும், அப்பணி உறுதுணை பயக்கும் என்பதால் அப்பணியை நாடிச் சென்றார். அங்கு நிலவிய சாதிப்பூசலில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பாமல் - தன்னுடைய சாதிப் பின்னணி தனக்கு மேலாண்மையைத் தரும் என்று அறிந்திருந்தும் அத்தகைய எண்ணத்தை அறவே தவிர்த்து - வேறொரு இடத்தை விரும்பி செ.தெ.நாயகம் நடத்திய தமிழ்க் கல்லூரிப் பணியை ஏற்றார். அடுத்த திருப்புமையமாக, நெல்லை இந்துக் கல்லூரிப் பணியை ஏற்றவர் அங்குத் தமிழ் மறுமலர்ச்சி பெறக் கல்லூரிக்கு உள்ளேயும் வெளியேயும் உழைத்தார்.

## கல்வி ஒளி பரவக் காலமெல்லாம் உழைப்பு

பதவி நிலையும் பொருளியல் தகுதியும் மேம்பட்டவுடன் வாளா இருந்துவிடாமல் கல்வி அறிவு இருபது விழுக்காட்டுக்கும் குறைவாக இருந்த நாட்டின் நிலை கருதித் தம்மல் இயன்றவரை கல்வி ஒளி பரவ இலவச வகுப்புகள் நடத்திப் பலர் கல்லூரிக் கல்வி பெறப் பாடுபட்டார் என்னும் செய்தி இக்காலப் பேராசிரியர்களுக்கு இலக்குவனாரின் வாழ்க்கை ஒரு சிறப்பு மிக்க முன்மாதிரியாகத் திகழ்வதைக் காட்டுகிறது.

பேராசிரியர்கள் தாம் பெற்ற கல்வியைத் தாம் ஊதியத்திற்குப் பணியாற்றும் கல்லூரியில், மாணவர்களுக்கு வழங்குவதுடன் அமைந்துவிடாது, பொதுமக்களுக்கும் தமது கல்வி பயனளிக்கும் வகையில் உழைக்க வேண்டும். இவ்வுறுதியைப் பேராசிரியர்கள் ஏற்றால் கலையியலும் அறிவியலும் பொறியியலும் தொழில் நுட்பவியலும் மக்கள் அனைவருக்கும் சென்றுசேரும். நெல்லையிலிருந்து பதவிஉயர்வு பெற்றுத் துறைத்தலைவராக விருதுநகர் சென்றவர் அங்கும் இலவச வகுப்புகள் நடத்தியும் தமிழ் மன்றங்கள் வாயிலாகவும் மக்கள் மன்றத்தில் இலக்கியக் கல்வி பரவப் பாடுபட்டார். கல்லூரி ஆட்சிக் குழுவால் பணிநீக்கம் செய்யப்பட்டும் மனம் தளர்ந்துவிடாமல் தனிப்பயிற்சிக் கல்லூரி நடத்தித் தம் ஆசிரியப் பணியையே மீண்டும் ஆற்றவிழைந்தார்.

## எங்குச்சென்றாலும் பணிநீக்கம்

மீண்டும் ஈரோட்டில் பணிபெற்று அங்கும் இரண்டாண்டுகளில் பணிநீக்கம் செய்யப்பட்ட பின்னரும் தனிப்பயிற்சிக் கல்லூரியே நடத்த முற்பட்டார். நாகர்கோயிலில் பட்ட மேற்படிப்புத் துறைத் தலைவர் பதவி பெற்ற பின்னரும் மூன்றாண்டுகளில் பணிநீக்கம் செய்யப்பட்ட அவலம் நேர்ந்தது. அப்போதும் மனந்தளரவில்லை.

மீண்டும் மதுரையில் பட்டமேற்படிப்புத் துறைத் தலைவர் பணியையேற்றுச் சிறப்புறப்பணி புரிந்து வந்த நேரத்திலும் இலவச இலக்கண வகுப்புகள் நடத்திவந்தார். மதுரை நகராட்சி இதற்காக இலவசமாக இடம் கொடுத்தது இங்குக் குறிப்பிடத்தக்கது. பொறாமை கொண்ட சிலர் நகராட்சிக்கு இலக்குவனார் தமது அரசியல் கொள்கைகளைப் பரப்பவே இதனைப் பயன்படுத்திக் கொள்வதாக மொட்டைக் கடிதம் எழுதியனுப்பியபோது நகராட்சி ஆணையர் முறையான உசாவல் நடத்தி அக்குற்றச்சாட்டுகள் பொய் எனக் கண்டறிந்தமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

## துன்பம் கண்டு துவளா நெஞ்சுரம்

மதுரையிலும் மீண்டும் பணிநீக்கம் செய்யப்பட்ட இலக்குவனார் அதற்குப் பிறகும் மனந்தளராது, சிறைக்குச் செல்ல நேர்ந்த பின்னரும் மனஉறுதி குன்றாது, தனிப்பயிற்சிக் கல்லூரி நடத்தவும், பிழையற்ற மொழிநடை போற்றும் நாளிதழ் நடத்தவும் முனைந்தமை, அவரது துன்பம் கண்டு துவளாத நெஞ்சுரத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மீண்டும் மாநிலக் கல்லூரியில் பணியேற்றதும் அங்கும் ஓராண்டில் பணிநீக்கம் செய்யப்பட்டமையும், இலக்குவனாரின் வாழ்வில், துன்பம் ஒரு தொடர்கதையாகவே விளங்கியமையைக் காட்டுகிறது. மீண்டும் மீண்டும் துன்பம், தொல்லை, பணியிழப்பு என்று வாழ்வில் புயல் வீசிய காலத்திலும் சோர்வே அடையாமல் பீடுநடை புரிந்து இலக்குவனார் ஒரு காவியத் தலைவரைப் போலவே எழுச்சியூட்டுகிறார். அவரது வாழ்க்கையை அறிந்தவர்கள் தளரா மனவுறுதிக்கும் விடாமுயற்சிக்கும் - வேறு யாரையும் எடுத்துக்காட்டாகக் கூறாமல் - இலக்குவனாரையே எடுத்துக்காட்டாகக் கூறுவர்.

# 3
# கவிதைப் பணி

இலக்குவனார் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவகையில் பல கவிதைப் படைப்புகளைத் தமிழுலகுக்கு வழங்கியுள்ளார் என்னும் செய்தி இன்றைய தலைமுறையினருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர் இயற்றி வெளியிட்டுள்ள கவிதைப் படைப்புகளும் பல்வேறு இதழ்களிலும் மலர்களிலும் இடம்பெற்ற அவர் கவிதைகளும் தொகுக்கப்பெற்று ஒரு கவிதைத் தொகுப்பாக அவர் காலத்திலோ அவர் மறைவுக்குப் பின்போ வெளிவரவில்லை என்பதே இதற்குரிய காரணமாகும்.

## குறுங்காப்பியம்

பாரதிதாசனின் சமகாலக் கவிஞராகிய இலக்குவனார் 1933இலேயே 'எழிலரசி அல்லது காதலின் வெற்றி' என்னும் தமது குறுங்காப்பியத்தை வெளியிட்டுள்ளார். இதனைப் பற்றி கவிஞர் சுரதா "பாரதிதாசன் ஒரு குறுங்காப்பியத்தை வெளியிடுவதற்கு முன்னரே இலக்குவனார் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தூய தமிழில் இனிமையான நடையில் எளிமையாகப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் எழுத முடியும் என்பதை இலக்குவனார் இப்படைப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். தொடர்ந்து பல கவிதைப் படைப்புகளை எழுதி அவர் வெளியிட்டிருப்பாரேயானால் தமிழுக்கு இன்னொரு பாரதிதாசன் கிடைத்திருப்பார்" என்று கூறியுள்ளார்.

இலக்குவனாரின் நூல்களை ஆய்வு செய்துள்ள ஆய்வாளர்களுள் ஒருவராகிய முனைவர் கா.மாரிமுத்து எழிலரசி என்னும் குறுங்காப்பியத்தின் சிறப்புகளைத் "தமிழ் வளர்ச்சியில் டாக்டர் சி.இலக்குவனாரின் பங்களிப்பு" என்னும் தமது ஆய்வுநூலில் தொகுத்து வழங்கியுள்ளார்.

இலக்குவனாரின் கவிதைகளையே தமது ஆய்வுக்குரிய பொருளாகக் கொண்ட பேராசிரியர் ம.இராமச்சந்திரன்

"இலக்குவனாரின் கவிதைகள் - ஓர் ஆய்வு" என்னும் தமது ஆய்வேட்டில் இக்குறுங்காவியம் குறித்துத் தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித்துறையின் வெளியீடாகிய 'தமிழ்நூல் விவர அட்டவணை'யின் மூலம் அறிந்துகொண்டதாகவும் தெரிவித்துள்ளார். (பக்.29).

இலக்குவனார் தாம் புலவர் வகுப்பின் முதலாமாண்டில் படித்துக் கொண்டிருந்தபோது, தமது இருபத்து மூன்றாம் வயதில் இக்காப்பியத்தை இயற்றியுள்ளார்.

அவர் தமது பள்ளிப் பருவத்திலேயே கவிதைகள் இயற்றித் தமது ஆசிரியர்களால் பாராட்டப்பட்டார் என்பதனை அவரது தன்வரலாற்று நூலாகிய 'என் வாழ்க்கைப் போர்' மூலம் அறிகிறோம். உரத்தநாடு உயர்நிலைப் பள்ளியில் பயின்று கொண்டிருந்தபோது அங்கு மாற்றலாகி வரும் ஆசிரியர்களுக்கு வரவேற்பு வழங்கவும் அங்கிருந்து மாற்றலாகிச் செல்வோர்க்குப் பிரிவுரை வழங்கவும் வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் கவிதைகளை இயற்றிப் படித்ததாகவும் கவிதைகளைத் தமது ஆசிரியர்கள் பாராட்டியதாகவும் குறிப்பிடுகிறார். பள்ளிப் பருவத்திலேயே தொடங்கிய பாப்புனையும் ஆற்றல் புலவர் கல்லூரியில் பயிலும்போது குறுங்காப்பியம் படைக்குமளவு வளர்ச்சி பெற்றது.

'எழிலரசி அல்லது காதலின் வெற்றி' என்னும் இக்குறுங்காப்பியம் இலக்குவனாரின் கவிதையாற்றலுக்கு மட்டுமின்றி அவரது ஆங்கிலப் புலமைக்கும் திராவிட இயக்கத்தில் கொண்ட ஈடுபாட்டுக்கும் சான்றாக விளங்குகிறது எனலாம்.

ஆங்கிலக் கவிஞர் கீட்சு இயற்றிய இசபெல்லா என்னும் கதைபொதி பாடலைப் படித்துச் சுவைத்த இலக்குவனார் அதனைத் தமிழ்நாட்டுச் சூழலுக்கும் பண்பாட்டுக்கும் இயையும் வகையில் மாற்றியமைத்து அதன் தழுவலாக இக்குறுங்காப்பியத்தைப் படைத்து வழங்கியுள்ளார்.

"கீட்சு தம் கவிதை நூலுக்குத் துன்பியல் முடிவு கொடுத்துள்ளார். இலக்குவனார் அம்முடிவை மாற்றி துன்பியலும் இன்பியலும் கலந்த முடிபாக அமைத்துள்ளார்" (த.வ.இ.ப. பக்.11) என்னும் முனைவர் கா.மாரிமுத்துவின் கூற்று இங்குக் குறிப்பிடத்தக்கது

இக்குறுங்காப்பியத்தின் கதைச் சுருக்கத்தைக் காண்போம். இதன் தலைவி எழிலரசி பெருஞ்செல்வமிக்க வணிகனின் மகள். அவளது தந்தை அவளது இளமைப் பருவத்தில் இறந்துவிடுகிறான். தந்தையின் சொத்தில் மகளுக்கும் பங்கு உண்டு என்பதால் அவளுக்குத் திருமணம் செய்து வைத்தால் அவளுக்குரிய பங்கினைக் கொடுக்க வேண்டிவரும். பொருளாசை கொண்ட அவளது மூன்று தமையன்மாரும் அவளது பங்கைக் கொடுக்காமல் ஏமாற்றத் திட்டமிடுகிறார்கள். அவளுக்குத் திருமணம் முடிக்கும் எண்ணத்தைக் கைவிட்டு அவளை வீட்டிலேயே சிறைவைத்துவிடுகின்றனர். இந்நிலையில் அவர்களின் கணக்கனாக அலுவல் பார்க்கும் ஆடலன் என்னும் கலைஞன் மீது காதல் கொண்டு களவொழுக்கத்தில் ஈடுபடுகிறாள்.

இதனை அவளது மூத்த தமையன் அறியநேரிடுகிறது. அவன் ஏனையோரிடம் இதனைத் தெரிவித்தவுடன் ஆடலனைக் கொன்றுவிடலாம் என அவர்கள் முடிவெடுக்கின்றனர். அவனை வேட்டைக்கு அழைத்துச் சென்று காட்டில் யாருமறியாமல் கொன்றுவிடலாம் என்பது அவர்கள் வகுத்த திட்டம். ஆடலன் மீது அவர்கள் எறிந்த கத்தி ஆடலனின் தோழன் மீது பாய்ந்து அவன் தலையைத் துண்டித்துவிடுகிறது. ஆடலன் தப்பி ஓடிவிடுகிறான். காட்டிலிருந்து திரும்பிய தனது தமையன்மாரிடம் எழிலரசி கேட்கும்போதெல்லாம் அலுவலின் பொருட்டு அவனை வெளியூர் அனுப்பியுள்ளதாக அவர்கள் கூறிவிடுகின்றனர். நீண்டநாளாகியும் அவன் திரும்பிவராமையால் ஐயமுற்ற எழிலரசி தன் தோழியின் துணையுடன் காட்டிற்குச் சென்று ஆடலனைத் தேடுகிறாள். அங்கே இரத்தம் தோய்ந்த கைக்குட்டை ஒன்று இருந்ததைப் பார்த்தவள் அது ஆடலனுக்குத் தன்னால் வழங்கப் பெற்ற கைக்குட்டையாக இருப்பதனால் அங்கு இருக்கும் எலும்புக்கூடு ஆடலனுடையதே எனக் கருதி நீதிமன்றம் சென்று முறையிடுகிறாள். தன் தமையன்மார் தன்னுடைய காதலன் ஆடலனைக் கொன்றுவிட்டார்கள் எனத் தொடுத்த அவளது வழக்கை ஏற்ற நடுவர் அவளது தமையன்மாரைக் கைது செய்து அழைத்து வருமாறு அலுவலர்களை அனுப்புகிறார். அந்த அலுவலர்களுக்குப் பணம் கொடுத்துத் தாங்கள் இறந்துவிட்டதாகக் கூறுமாறு கேட்டுக்கொள்ளும் எழிலரசியின் தமையன்மார்கள் கப்பலில் ஏறி வெளிநாடு

சென்று விடுகிறார்கள். கையூட்டுப் பெற்றுக்கொண்ட அலுவலர்களும் நடுவரிடம் அவ்வாறே கூறிவிடுகின்றனர். அவளது தமையன்மார் இறந்துவிட்டதால் அவள் தம்மைக் கணவராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என நடுவர் வற்புறுத்துகிறார். எப்படியோ இந்தத் தொல்லையிலிருந்து மீண்டுவரும் எழிலரசி இத்தனைத் துன்பத்திற்கும் காரணமாகத் திகழ்ந்தது தன் தந்தை சேர்த்து வைத்த பெரும்பொருளே என்பதால் அப்பொருளால் முதியோர், உடற்குறையுடையோர், பொருள்வளமற்றோர் ஆகியோர் பயன்படும் வகையில் ஒரு திட்டம் உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறாள். காட்டில் உயிர்பிழைத்தோடிய ஆடலன் மீண்டும் எழிலரசியின் தமையன்மாரிடம் அகப்பட்டுக் கொள்ளாத வகையில் பெண் வேடம் தாங்கி யாழ் ஒன்றினை மீட்டியவாறே பல்வேறு இடங்களுக்கும் அலைந்து எழிலரசியின் இல்லத்தையும் அடைந்துவிடுகிறான். தன்னால் யாழ் மீட்டப் பயிற்றுவிக்கப்பட்ட ஆடலன் தான் கற்றுக்கொடுத்த பண்ணைப் பாடியவாறு தன் இல்லத்திற்குப் பெண்ணுருத்தாங்கி வந்துள்ளான் என்பதை அறிந்து கொண்ட எழிலரசி அவனோடு சேர்கிறாள். எனினும் ஆடலன் பெண்ணுருவை அகற்றாமல் அவளுடைய தோழி என ஊரார் கருதும் வகையிலே இறுதிவரை தோழியாகவே வாழ்வதாக முடிவு மேற்கொண்டு அவ்வாறே வாழ்வதாகக் கதை முடிகிறது.

## இலக்குவனார் செய்த புதுமைகள்

இக்குறுங்காப்பியத்தில் இலக்குவனார் பல புதுமைகளைப் புகுத்தியுள்ளார் எனலாம். இந்நூலில் தலைவியே முதன்மை வாய்ந்த பாத்திரப்படைப்பாக விளங்குவது ஒரு புதுமை. வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டாலும் தன் கருத்துக்கியைந்த காதலனைத் தேர்ந்து அண்ணன்மார்களின் கொடுமையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழியறிந்து காதலிக்கிறாள். தனது காதலனைக் காட்டுக்கு அழைத்துச் சென்று கொன்றுவிட்டார்கள் என அறிந்ததும் வழக்குமன்றம் செல்கிறாள். அவளது தமையன்மார் இறந்துவிட்டதாக வழக்குமன்ற ஊழியர்கள் வந்து கூறியதும் நடுவர் தம்மைத் திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தும்போது அவரிடமிருந்தும் திறமையாகத் தப்பிவிடுகிறாள்; இத்தனைத் துன்பங்களுக்கும் தன் தந்தை சேர்த்து வைத்த பெரும்பொருளே காரணம் என்பதை அறிந்து

அப்பொருளை வறியோர்க்கும் உடல்நலிவுற்றோர்க்கும் பயன்படும் வகையில் திட்டம் வகுக்கிறாள்; இறுதியில் காதலன் வந்துவிட்டான் என்னும் நிலையிலும் பெண்ணுருத் தாங்கிய அவனை அவ்வேடத்திலேயே வாழுமாறு செய்து தனது தோழியாகவே உடன் ஏற்றுக்கொண்டு வாழ்கிறாள்.

காப்பியத் தலைவியின் ஆளுமையில் கண்ணகி, மணிமேகலை இருவரின் பண்புநலனும் கலந்துவிளங்குவது இங்குக் குறிப்பிடத்தக்கது. கீட்சின் இசபெல்லாவைத் தழுவிப் படைக்கப்பட்டதாயினும் மூலத்திலிருந்து சற்று விலகிச் செல்லும் இக்குறுங்காப்பியத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களில் இலக்குவனாருக்கிருந்த ஈடுபாடே தெளிவுற அமைந்துள்ளது எனலாம்.

## புதினமா? குறுங்காப்பியமா?

இக்குறுங்காப்பியம் படைக்கப்பட்ட காலத்தில் (1933) புதினங்கள் தமிழிலக்கியத்தின் புதுவரவாகப் புகுந்து செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருந்தன. இத்தகைய சூழலில் இலக்குவனார் உரைநடையில் புதினம் எழுத முற்படாது குறுங்காப்பியம் செய்யப் புகுந்தது எதனால் என்பதனை இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய எம்.எம்.தாவூது பின்வருமாறு விளக்குகிறார்.

"எளிய உரைநடையை விரும்பும் இக்காலத்தில் எழிலரசி எனும் இச்சிறுகதையைச் செய்யுள் நடையில் திருவையாறு அரசர் கல்லூரி (Rajah's College of Sanskrit and Tamil Studies) வித்துவான் ஆரம்ப வகுப்பு மாணவர், திரு.சி.இலக்குவன் இயற்றி வெளியிட முன்வந்தது சிலருக்கு வியப்பைத் தரக்கூடும். எனினும் ஒருவர் சென்ற வழியே பிறரும் சென்று உரைநடை எழுதுவதிலேயே எல்லோரும் முயற்சிப்பார்-களானால், இன்னும் சில ஆண்டுகளுக்குள், தமிழிற் செய்யுள்நடை கற்பாரின்றி மறைபடவுங்கூடும். செய்யுளே ஒரு நாட்டு மக்களின் உயிர் என்று கூறுகின்றார் ஒரு ஆங்கிலப் புலவர்." (பக்.10)

ஆற்றொழுக்காக அமைந்த அகவல் நடை இலக்குவனாரின் கவிதைப் படைப்பில் பெரும் பங்கு வகிப்பது எனலாம். 1933இல் தொடங்கிய இப்படைப்பு நெறி 1973ஆம் ஆண்டு அவர் மறையும் வரை பல்வேறு காலச்சூழலில் இயற்றிய கவிதைப் படைப்புகளில் மேலாண்மை பெற்று விளங்குகிறது.

## பெண்ணுரிமை

*பெண்களுக்குச் சொத்துரிமை என்பது நம் நாட்டில் மக்களாட்சி மலர்ந்து நெடுநாட்களுக்குப் பின்னரே வாய்த்த ஒன்று; எனினும் இலக்குவனார் தமது குறுங்காப்பியத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கியுள்ளார்.*

“பெற்றோ ரீட்டிப் பேணிய பொருளை
மைந்தரைப் போலவே மகளிர் தமக்கும்
உரிமை யாக்கும் ஒருவிதி” (வரி.7–9)

*இலக்குவனார் படைத்த சமுதாயத்தில் நிலவியுள்ளது. அவரது இலக்கியப் பணியின் தொடக்கநிலைக் காலத்திலேயே பெண்ணுரிமையில் நாட்டமும், தொலைநோக்கான சிந்தனையும், இலக்குவனாரிடம் சிறப்புற அமைந்து விளங்குவதற்குக்காரணம், பள்ளிப் பருவத்திலிருந்தே அவர் பெரியாரின் தன்மதிப்பு இயக்கத்தில் கொண்ட ஈடுபாடு எனலாம். பொருளாதார ஏற்றத்தாழ்வு, சாதி வேறுபாடு ஆகியவற்றை அழித்தொழிக்கும் ஆற்றல் படைத்தது காதல் என்பதனையும், பொருள்மேல் கொள்ளும் ஆசை பல தீய எண்ணங்களுக்கு ஆட்படுத்தும் என்பதனையும் இந்நூலின் மூலம் ஆசிரியர் தெளிவுற விளக்குகிறார்.*

## திருமூலர் - மணிமேகலை - எழிலரசி

*“ஆசிரியர் படைத்துக் காட்டிய புதுமைப் பெண்ணாகிய எழிலரசி, சாத்தனார் மணிமேகலையில் படைத்துக் காட்டிய காப்பியத் தலைவி மணிமேகலையைப் போலப் பயன்பட வாழ்ந்து பிறரும் வாழ எண்ணிய பாங்கில் தமையன்மார் எடுத்துச் சென்றதுபோக எஞ்சிய செல்வத்தை முழுவதும் ஈந்து தனக்கெனச் சிறிதும் கொள்ளாமல் பசிப்பிணி போக்கி மக்களை வாழ வைத்த மனஉணர்வு பாராட்டற்குரியது” என்கிறார் ஆய்வாளர் கா.மாரிமுத்து. (தமிழ் வளர்ச்சியில் டாக்டர் சி.இலக்குவனாரின் பங்களிப்பு - பக்.17). பசித் துயரத்தைக் களைதல் பேரறம் எனத் திருமூலரும் மணிமேகலையும் கூறும் அறிவுரைகளை எடுத்துக்காட்டும் ஆய்வாளர் அவர்களைக் காட்டிலும் ஒருபடி முன்னேற்றத்தை எழிலரசி பெற்றிருப்பதாகக் கூறுதல் இங்குக் குறிப்பிடத்தக்கது.*

*“திருமூலர் அவர் இவர் என்னாமல் யாவர்க்கும் உணவு வழங்கிடக் கூறுகிறார். மணிமேகலையும் பசிமிக்கோர்*

யாவரும் வருகவென அழைக்கிறாள். ஆனால் எழிலரசி, 'வேலையற்று வீணராய்த் திரிவோர் குறையிருப்பினும், அவர்க்கேற்றவாறு உழைத்தல் வேண்டும். பசி நீங்கின் அங்ஙனம் உழைத்தல் கூடும்' எனக் கருதுகிறாள். அதனால், தன் செல்வம் முழுவதையும் வறியோரைக் காக்கும் உடைமையாக்கிச் 'சேர்ந்து உழைப்போம்' எனவும்,

"உழைப்பின் பயனையும் ஒருங்கே துய்த்து
எஞ்சிய பகுதியை எய்ப்பில் வைப்பாகக்
கொண்டு வாழக் கூடுவீ ராக"

என்று "எல்லோர்க்கும் எல்லாம்" என்ற பொதுவுடைமைக் கருத்தோடு உழைத்து வாழ வேண்டும் என்ற கடமை உணர்வினையும் பிற்காலத்துக்குச் சேமிப்பு வேண்டுமென்ற பொருளியல் கருத்தினையும் விளக்கிடும் முறைமை அறியத்தக்கது. பொதுவுடைமைத் தொண்டுள்ளம் கொண்ட பாத்திரமாக எழிலரசியை ஆசிரியர் படைத்துக் காட்டுவதன் மூலம் நாட்டின் வளர்ச்சியிலும் சமுதாய முன்னேற்றத்திலும் உழைப்பின் உயர்விலும் உள்ள மிகுந்த ஈடுபாடுடைமை தெளிவாகப் புலப்படுகிறது." (த.வ.இ.ப.பக்.19-20).

## இலக்குவனாரின் தொலைநோக்கு

வறியோர்க்கு உணவு, முதியோர்க்கு உணவு, கோயிலில் உணவு என்று பல்வேறு இலவச உணவுத் திட்டங்கள் இன்று நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இவையனைத்தும் பெரும் நிதியையும் கரைக்கும் செலவினங்களாகவே அமைந்துள்ளன. ஆனால் இலக்குவனார் கனவு காணும் திட்டத்தின் மூலம் உணவைப் பெறுவோர் உடல் ஊனமுற்றோரேயாயினும் தம்மால் இயன்ற அளவு உழைக்க வேண்டும். இங்ஙனம் உழைத்துப் பெற்ற விளைவினால் கிடைக்கும் வருவாய் மீண்டும் இத்திட்டத்திலேயே முதலீடு செய்யப்படும். இதன் விளைவாக, செலவினம் ஒருவழிப் போக்குவரத்தாக அமையாமல், வருவாய் வழங்கித் தொடர்ந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்த வழிவகுக்கிறது

இன்றைய சூழலில் நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டங்களுக்கு வழிகாட்டும் வகையில் இலக்குவனாரின் தொலைநோக்கு அமைந்துள்ளதன்றோ?

1933இல் பெண்கள் கல்வி கற்கும் வாய்ப்பு மிகமிக அரிதாக இருந்த காலச்சூழலில் இலக்குவனார் படைத்துக்

காட்டும் காப்பியத் தலைவி அறிவுத்திறம் மிக்கவளாகவும் வீட்டுக்குள்ளே பூட்டி வைக்கும் தமையன்மார்களின் கொடுஞ்செயல்களைத் திறமையோடு எதிர்கொள்ளும் துணிவுகொண்டவளாகவும் அமைந்துள்ளாள். கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகியோரின் படிமுறை வளர்ச்சிநிலையாக (பரிணாம வளர்ச்சிநிலையாக) எழிலரசி திகழ்தல் குறிப்பிடத்தக்கது.

பெண்ணுரிமை, பெண்விடுதலை ஆகிய முற்போக்குச் சிந்தனைகளை முப்பதுகளின் தொடக்கத்திலேயே தமது காப்பியத் தலைவி மூலம் முன்மொழிந்த இலக்குவனார் பெரியார் சிந்தனைகளை ஏற்று இலக்கியங்களின் மூலம் பரப்பிய திராவிட இயக்கக் கவிஞர்களுள் ஒரு முன்னோடிக் கவிஞர் என்று போற்றப்பட வேண்டியவர்.

## தனித்தமிழ்ப் படைப்பு

மறைமலையடிகளாரின் தனித்தமிழியக்கத்தில் ஈடுபாடு கொண்டு பள்ளிப் பருவத்திலேயே தமது பெயரைத் தமிழ்ப்படுத்தி அமைத்த இலக்குவனார் தூய தமிழிலேயே தமது காப்பியத்தைப் படைத்துள்ளார்.

இக்காப்பியத்தின் இனிய எளிய தமிழ்நடைக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் காப்பியத் தலைவி காதலனைப் பிரிந்து வருந்தும்போது சோலையில் நின்று மாமரத்தையும் மாவிலைகளையும் கொக்குகளையும் குயில்களையும் தனக்குத் தூது செல்லுமாறு கூறும் கூற்றைக் காண்போம்.

நிலையாய் நிற்கும் மாந்தருவேயோ
நீ போய்க் கடிதிற் கூறாயேயோ
அலையும் நெஞ்சை அமையும் இலைகாள்
அருளென் தனிமை யறியீரேயோ
இணைந்து நிற்பீர் என்றும் குருகீர்
என்னிலை கண்டு நொடியும் உருகீர்
குலவுங் கிளிகாள் கூவும் குயில்காள்
கூடிச் சென்று கூடச் சொல்வீர்
எனப்பல புகன்று ஏங்கினள் மிகவும் (வரிகள் 307–316)

வடமொழிச் சொல்லாட்சி மிகுதியும் கொண்டு கவிதைகள் படைக்கப்பட்ட அக்காலத்தில் சங்க இலக்கியங்களையும் சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகியவற்றையும் மட்டுமே தமக்கு முன்னோடியாகக்

கொண்டு இலக்குவனார் இக்குறுங்காப்பியத்தைப் படைத்துள்ளமை தெளிவுறப் புலனாகின்றது. தனித்தமிழில் கவிதைப் படைப்பு நெறியை அமைத்துக் கொண்டு இவ்வகையிலும் திராவிட இயக்கக் கவிஞர்களுக்கு முன்னோடியாக அமைந்த இலக்குவனார், மறைமலை யடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோரைத் தமது படைப்பு நெறிக்கு முன்னோடியாகக் கொண்டுள்ளமை புலனாகிறது. அவர்களைப் போலவே மொழித்தூய்மையைப் போற்றியவர், அதேநேரத்தில் புலமைநடையைத் தவிர்த்து எளிமை வாய்ந்த இனிய தமிழ்நடையைப் பயன்படுத்தி யுள்ளார்.

## சமூகச் சிக்கல்களுக்கு முறையான தீர்வுகள்

முற்றிலும் கற்பனையாக ஓர் இலக்கியப் புனைவை வழங்கிவிடாமல், தமது காலச் சமூகச் சிக்கல்களாகிய பெண்ணடிமை, குடும்ப அமைப்பில் ஆண்களின் மேலாண்மை, பெண்கள் தமக்குரிய துணைவரைத் தமது விருப்பம்போல் தேர்ந்து கொள்ளும் உரிமையின்றி வருந்துதல், ஆண்களின் அளவுகடந்த பொருளாசை, சாதி - பொருள்நிலை ஆகியவற்றால் அமைந்த ஏற்றத்தாழ்வு, அதிகாரத்தைப் பயன்படுத்திப் பெண்களை அடிமையாக்கிக் கொள்ள முயலுதல், கையூட்டுப் பெற்றுக்கொண்டு தமது கடமையிலிருந்து பிறழ்ந்து செல்லும் அலுவலர்கள், அதனால் மக்கள் துன்புறல் போன்ற தமது காலச் சிக்கல்களைக் கதைமாந்தர் வாயிலாகவும் கதை நிகழ்ச்சிகளின் மூலமும் எடுத்துக்காட்டி அவற்றிற்குரிய தீர்வுகளையும் இக்குறுங் காப்பியத்தின்வழி நமது சிந்தனைக்கு விருந்தாக்கியுள்ளார்.

## சூழலுக்கேற்ற பழமொழிகள்

காப்பியத்திற்குச் சுவை கூட்டும் வகையில் பல்வேறு இடங்களில் சூழலுக்கேற்பப் பல பழமொழிகளைப் பொருத்தத்துடன் பயன்படுத்தியுள்ளார்.

வெள்ளப் பெருக்கை மெல்லிய நாணற்
புதர்கள் தடுக்கல் பொருந்திய வாறு (அடிகள் 44–45)

பெரும்புயற் காற்றினில் பொருந்திய பஞ்சுபோல் (அடி 91)

இரும்பினைக் கொண்டேயிரும்பை வெட்டும் தன்மைபோல் (அடி 101)

சிறுத்துப் பெருத்துஞ் செல்வமில்லானை (அடி 191)

நோதல் செய்தலும் நொய்யோர் மாட்டே (அடி 414)

பிணத்தைக் கண்ட பெருங்கழுகினம் (அடி 450)

பணமெனிற் பிணமும் பல்லைக் காட்டும் (அடி 494)

கெடுவான் கேடு நினைப்பான் (அடி 524)

இங்ஙனம் பொருட்சுவையும் கருத்துவளமும் மிக்க குறுங்காப்பியத்தை 1933இல் வழங்கிய இலக்குவனாரின் கவிதைப்பணி அவரது வாழ்வில் அடுத்தடுத்து நிகழ்ந்த பல்வேறு சிக்கல்களால் தடைப்பட்டது என்றே கூற வேண்டும்.

## உள்ளமுருக்கும் இரங்கற்பா

"இலக்குவனார் தம் முதல்மனைவி பட்டம்மாள் அவர்கள் இறந்தபொழுது மிகவும் துன்பமடைந்தார். ஆற்றொணா அளவின் உள்ளத்துன்பத்தை வெளிப்படுத்து-முகத்தான் அகவல் ஒன்று பாடியுள்ளார் 'அறிந்துளோர் சொல்மினோ' என்பது அப்பாடலின் தொடக்கமாகும் கையறுநிலையில் பாடப்பெற்றது" என்று இலக்குவனார் கவிதைகளை ஆய்வுசெய்துள்ள ம இராமச்சந்திரன் குறிப்பிடுகிறார். அக்கவிதையைப் படிக்கும் வாய்ப்புப் பெற்ற இலக்குவனாரின் ஆசிரியர் சாமி.சிதம்பரனாரின் துணைவி-யார் திருமதி. சிவகாமி சிதம்பரனார் "படிப்போரைக் கண்ணீர் உருகச் செய்யும் திறம் வாய்ந்தது; அக்கவிதையைப் பலமுறை படித்துக் கண்ணீர் வடித்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவிக்கிறார். (இலக்குவனார் கவிதைகள் - ஓர் ஆய்வு. பக்.29).

இதன்பின் திருநெல்வேலியிலிருந்து தாம் நடத்திய 'சங்க இலக்கியம்' என்னும் வாரஇதழிலும் விருதுநகரிலிருந்து நடத்திய 'இலக்கியம்' என்னும் திங்களிருமுறை இதழிலும் தஞ்சாவூரிலிருந்து நடத்திய 'திராவிடக் கூட்டரசு' என்னும் திங்களிருமுறை இதழிலும் அவ்வப்போது பல கவிதைகளை இலக்குவனார் படைத்தளித்துள்ளார் இவற்றைப் பொங்கல் வாழ்த்துக் கவிதைகள், தலைவர்கள் மேல் பாடப்பட்ட கவிதைகள் என இருவகைப்படுத்தலாம். எனினும் ஒரு நெடுங்கவிதைப் படைப்பாகக் குறிப்பிடத்தக்கது 1954இல் புதுக்கோட்டையிலிருந்து அவர் இயற்றி வெளியிட்ட "துரத்தப்பட்டேன்" என்னும் கவிதை நூலேயாகும்

## 'துரத்தப்பட்டேன்'

இந்நூல் தமிழ்க் கவிதையுலகில் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த நூல் எனல் மிகையாகாது. ஒரு பேராசிரியர் வீண்பழி

சுமத்தப்பட்டுத் தமது பணியினின்றும் நீக்கப்பட்டுப் பொருளியல் சிக்கல்களால் தமது குடும்பத்தைக் காக்க வழியறியாச் சூழலில் தமக்கு இழைக்கப்பட்ட அறமிலாச் செயலைத் தமது காலச் சமுதாயத்திற்கு எடுத்துரைக்கும் வகையில் இந்நூல் இயற்றப்பட்டது. வேலை நீக்கத் துன்பத்தால் வெதும்பிவிடாமல் காலம் போற்றும் இலக்கியம் படைத்தமையால் ஒரு முன்னோடி முயற்சியாக இந்நூல் விளங்குகிறது.

பேராசிரியர் இலக்குவனாரைப் போலப் பணியாற்றிய இடங்களிலெல்லாம் மாறி மாறிப் பணிநீக்கம் செய்யப்பட்டவர்களும் வேறு எவரும் இலர் எனலாம். விருதுநகரில் துணைமுதல்வர் நிலையில் பணியாற்றிக் கொண்டிருந்தபொழுது தமது கடமையைச் செவ்வனே ஆற்றிவந்த வேளையிலும், கல்லூரிக்கு வெளியே இந்தியக் குடியாட்சியமைப்பில், ஒரு வாக்காளன் என்னும் முறையில், அவர் கொண்டிருந்த சார்புநிலைக்காக, இல்லாத குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவர் பணிநீக்கம் செய்யப்பட்டார். அக்காலத்தில் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு - அவர்கள் கல்லூரி முதல்வர்களாக இருப்பினும் - பணிக் காப்பு கிடையாது. எந்த நேரத்தில் கல்லூரித் தாளாளர் (அல்லது ஆட்சிக்குழு) நினைத்தாலும் எந்தக் காரணமும் காட்டாமல் வேலை நீக்கம் செய்துவிடலாம். இரண்டு மாத ஊதியத்திற்கான காசோலையும் ஒரு வேலை நீக்க அறிவித்தலும் பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுவிடும். இங்ஙனம் பதவி பறிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர் என்ற விவரம் நமக்குத் தெரியாது. ஆனால் இவர்கள் யாரும் இத்தகைய தமது அவலநிலையைச் சமுதாயத்திற்கு எடுத்துக் கூறவில்லை. ஒரு கல்லூரிப் பேராசிரியர் வேலைநீக்கம் செய்யப்பட்ட போது மிகப் பெரிய ஊர்வலம் சென்று போராட்டம் நிகழ்த்தப்பட்டது 1952இல் பேராசிரியர் சி.இலக்குவனார் பணிநீக்கம் செய்யப்பட்டபோதுதான்.

**சமூக அங்கதம்**

தமது நாற்பத்திரண்டாவது வயதில் தம்மை நடுத்தெருவில் நிற்கவைத்த கல்லூரி மேலாண்மைக் குழுவின் அறமற்ற செயலை எடுத்துரைக்கும் வகையிலும் சாதியின் கொடுமையை உணர்த்தவும் ஒரு சமூக அங்கதமாக "துரத்தப்பட்டேன்" என்னும் இந்நெடுங்கவிதையை இலக்குவனார் படைத்தளித்தார்.

*"புறநெறியில் சென்று பொல்லாங்கு கூறி என்னைத் துரத்தினர். துரத்தப்பட்டதால் அடைந்துள்ள துயரங்கள் எண்ணற்றன. என் உள்ளக்குமுறலை வெளிப்படுத்தி-னால்தான் என் உளம் அமைதியுறும் போலிருந்தது. என் உள்ளொளி (Inner voice) இம் மறவழிச் செயலை, மக்கள் மன்றில் முறையிடப் பணித்தது. அதன் விளைவே இந்நூல்."*

*என்று இந்நூலின் முன்னுரையில் இலக்குவனார் இந்நூல் உருவானதற்குரிய காரணத்தைக் கூறுகிறார். நூலின் தொடக்கத்தில் இந்தியா குடியரசாக மலர்ந்ததையும் மக்களாட்சியின் எழுச்சியால் பொதுத்தேர்தல் அறிவிக்கப் பட்டதையும் மகிழ்வோடு கூறுகிறார் இலக்குவனார்.*

குடியரசு ஓச்ச குடிமக் கட்கு
உரிமை உண்டென உரைக்கப் பட்டது
"எவர்க்கும் விடுதலை; எங்கும் விடுதலை"
என்ற முழக்கம் எங்கும் ஒலித்தது;
"மக்களுக் காக மக்கள் ஆட்சி
மக்களே நீங்கள் மன்னர் ஆயினீர்
ஆட்சி மன்றம் அமைக்க வருக
இதனை இதனால் இவன்முடிக் குமென்று
அதனை அவன்கண் அளிக்க" என்றனர். (அடிகள் 6–15)

*யார் எந்தச் செயலைச் சிறப்புற ஆற்றுவார்கள் என்று எண்ணிப் பார்த்துச் சிறப்பானவர்களைத் தேரும் செயல்-முறை என்பதால் அதனைத் தேர்தல் என்றார்கள். ஆனால் அங்ஙனம் தேர்ந்து வாக்கு அளிப்பதற்குச் செம்மையான கல்வி கற்றிருக்க வேண்டுமல்லவா? 1952-இல் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது நம் நாட்டில் கற்றோர் தொகை இருபது விழுக்காட்டுக்கும் (20%) குறைவாகவே இருந்தது. இதன் விளைவாக,*

"இராமன் ஆளினும் இராவணன் வீழினும்
நமக்கென்" என்று நாளைப் போக்கி
எல்லாம் விதிப்பயன் என்றே எண்ணி
வறுமையும் இயல்பென மனநிறை வுற்று" (அ.25–28)

*மக்கள் வாழ்ந்ததாக இலக்குவனார் குறிப்பிடுகிறார். இப்படி ஆளாளுக்கு ஒடுங்கிச் சென்றதால் சாதியமைப்புகள் செல்வாக்குப் பெற்றன.*

வன்னியர் வாக்கு அன்னியர்க் கில்லை
அன்னியர் வாக்கு வன்னியர்க் கில்லை

நாடார் வாக்கைப் போடார் பிறர்க்கு
செட்டியார் வாக்குக் கிட்டிடா பிறர்க்கு
தேவர் வாக்கு வேறெவர்க்கு மில்லை
முதலியார் வாக்கு முதலியார் தமக்கே (அ.35-40)

*என்னும் கவிதை வரிகள் போராடிப் பெற்ற சுதந்திரம் இந்தியக் குடிமக்களைச் சாதியின் பெயரால் பிரித்தற்கு வழியமைத்துவிட்ட கொடுமையை நம் நெஞ்சில் அவலத்தைத் தோற்றுவிக்கும் வகையில் எடுத்துரைக்கின்றன.*

*இலக்குவனார் பணியில் இருக்கும்போதே அவரது பதவிக்கு 'ஆள் தேவை' எனக் கல்லூரிக் குழு விளம்பரம் செய்துவிட்டது. இக்கொடுமையை எதிர்த்துத் தட்டிக்கேட்க முற்படாமல் தமிழ் விரிவுரையாளர் பலர் விண்ணப்பங்களை அனுப்பி வைத்தனர். இதனை எண்ணித் துயருறுகின்றார், இலக்குவனார்.*

குற்றச் சாற்றிதழ் கொடுப்பதன் முன்னர்
என்னுறு பணிக்கு ஏற்றோர் பொறுக்க
விண்ணப் பங்கள் வேண்டிப் பெற்றனர்;
பதவி நாடிகள் பறந்து முயன்றனர்
'வள்ளுவர் குறளும் மற்றவர் நூலும்
பிழையறக் கற்பினும் பிறர்க்கெடுத் துரைப்பினும்
செயலில் காட்டும் திறனற் றோரே;
குறுகிய உளமும் கொடுஞ்செயல் நினைவும்
பொறாமைப் போக்கும் புறம் கூறுதலும்
செய்ந்நன் றிமறத்தலும் பொய்ம்மிகப் புனைதலும்
தந்நலம் ஒன்றே தம்நினை வாக்கலும்
அடுத்துக் கெடுக்கும் அறனழி செயலும்
பொய்யாய்ப் புகழ்ந்து புன்னலம் கொள்ளலும்
தமிழ்ப்பணி புரிவோர் தம்மின் இயல்பு
அம்ம கொடிதே" (அ.198-212)

*என்று வருத்தத்தோடு அக்காலத் தமிழாசிரியர்தம் நிலையைக் கூறுகிறார். "ஒரு தமிழ்ப் பேராசிரியர்க்கு வந்த துன்பம் எல்லாத் தமிழ்ப் பேராசிரியர்க்கும் உரியது; இன்றைக்கு இவர் என்றால் நாளைக்கு நமக்கும் அந்நிலை வரலாமே" என்னும் எண்ணத்தோடு அனைவரும் ஒன்றுகூடித் திட்டமிட்டு இலக்குவனார்க்குரிய பதவிக்கு நாம் யாருமே விண்ணப்பிக்க வேண்டாம் என்று முடிவெடுத்திருந்தால் கல்லூரிச் செயற்குழு வேறுவழியின்றி இலக்குவனாரின் பதவிபறிப்பைக்*

கைவிட்டிருக்கும். ஆனால் பலர் அப்பதவிக்கு விண்ணப்பித்திருந்தமை கற்றோரிடையே நிலவிய பதவிவெறிக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது பல்வேறு முற்போக்கு இயக்கங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டாலும் சாதியுணர்வை ஒழித்து அனைவரையும் சமமாய்க் கருதும் ஒற்றுமையுணர்வு இந்நாட்டில் இல்லையே என்னும் ஏக்கம் கவிஞர் நெஞ்சில் தோன்றுகிறது சாதி முறைகள் சாகவேண்டும் என உரத்துக் குரல் கொடுக்கிறார்

> மக்களைப் பிரித்து வன்முறை செழிக்க
> அறநெறி கோடி அல்லது புரியும்
> சாதிமுறைகள் சாகுநாள் என்றோ? (வ.479–481)

எம்.ஏ.எம்.ஓ எல் பட்டங்களைப் பெற்றுப் பதினாறு ஆண்டுக்காலம் ஆசிரியப் பணியில் பட்டறிவும்பெற்று, மாணாக்கரால் சிறந்த பேராசிரியர் என்ற பாராட்டையும் பெற்றுக் காரணம் எதுவுமின்றிப் பதவிநீக்கம் செய்யப்பட்ட தமது அவல நிலையை மக்களுக்கு எடுத்துக் கூறுமுகத்தான் இந்நூலை இயற்றிய இலக்குவனார் தம்மைப் பற்றிய கவலைக்கு முதன்மையளிக்காமல் நாட்டுநிலை குறித்தே கவலைப்படுகிறார்

## புதுக்கவிதையின் முன்னோடி

மொத்தத்தில் இலக்குவனார் இயற்றிய 'துரத்தப்பட்டேன்' என்னும் கவிதை நூல், இந்தியக் குடியரசு மலர்ந்த காலக்கட்டத்தைப் பற்றிய ஒரு சமூக ஆவணம் எனலாம் இந்நூலின் மற்றொரு புரட்சி இதன் படைப்பு நெறியாகும். தொல்காப்பிய வல்லுநர் எனப் போற்றப் பெற்ற இலக்குவனார், தமது இருபத்துமூன்றாம் வயதில் 1933இல் குறுங்காப்பியம் படைத்துப் பாராட்டும் பெற்ற இலக்குவனார், இந்நூலில் யாப்பிலக்கணத்தில்சற்று நெகிழ்நிலை காட்டியுள்ளார். வால்ட்டு விட்மனைப்போல் தளர்நிலைக் கவிதைநடையைப் பின்பற்றியுள்ளார்.

"எனது உள்ளத்துயரை உலகுக்கு வெளிப்படுத்தினாலன்றி உள்ளக்குமுறல் ஓயாதுபோலிருந்தது. ஆதலின் வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அத்துயரம் பாட்டாக உருவாகியது. பாட்டு எல்லோருக்கும் எளிதில் விளங்க வேண்டும் அன்றோ? அது கருதி யாப்பிலக்கண விதிகளைப்புறம்பே நிறுத்திச் சொற்களைப்

*பிரித்தே எழுதி அச்சிட்டுள்ளேன். இப்பதிப்பு பொதுமக்கள் பதிப்பேயாகும்.'' (பதிப்புரை)*

என்று இந்நூலுக்கான பதிப்புரையில் இலக்குவனார் குறிப்பிட்டுள்ளதைக் காணும்போது தமிழில் பின்னர் ஓர் இயக்கமாகத் தோன்றிப் புதுக்கவிதை வளர்ச்சிக்கு வித்திட்ட தளர்நிலைக் கவிதையின் முன்னோடியாக இலக்குவனார் விளங்குவது புலனாகின்றது. ஒரு படைப்பின் வடிவத்தை அதன் உள்ளடக்கமே வரையறை செய்கிறது என்னும் இலக்கியக் கோட்பாட்டுக்குத் 'துரத்தப்பட்டேன்' என்னும் இலக்குவனாரின் நெடுங்கவிதை தகுதிமிக்க எடுத்துக்-காட்டாக விளங்குகிறது. யாப்புவிதிகளைப் புறந்தள்ளிய இந்நூல் பாரதிதாசனார்க்குச் சற்றுசினத்தை ஏற்படுத்தியது எனச் சிலர் கூறுவர். அச்செய்தி தவறாக இருக்கும். ஏனெனில் இலக்குவனாரும் பாரதிதாசனாரும் நல்ல நண்பர்கள்; தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் கற்றுத் துறைபோகிய இலக்குவனாரின் புலமை பற்றிப் பாரதிதாசன் நன்கு அறிவார்; மேலும் பதவிநீக்கப்பட்டு நடுத்தெருவில் நிறுத்தப்பட்ட தமது நண்பர் மேல் பரிவு காட்டாது யாப்பில் குறைகாணும் அளவு பாரதிதாசன் கல்நெஞ்சம் படைத்தவர் அல்லர்.

**'புலவர் சீர் பரவுவார்'**

தமிழ்நாட்டில் தமிழ்ப்புலவர்களுக்குத் திருநாள் கொண்டாடிப் புலவர்களைப் போற்றுவதுடன் அவர்கள் படைத்த இலக்கியங்களின் சிறப்புகளை மக்கள் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிய வைக்க வேண்டும் என்பது இலக்குவனார் விருப்பமாகும். 1936ஆம் ஆண்டில் அவர் தஞ்சை நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியப் பணி ஏற்ற நாளிலிருந்தே இப்பணியை மேற்கொண்டுவிட்டதாகத் தமது தன்வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார். 1936ஆம் ஆண்டிலேயே தொல்காப்பியர் திருநாளைக் கொண்டாடிய இலக்குவனார் இதன் மூலம் தொல்காப்பியரைச் சிறப்பித்ததுடன் தாமும் தனிச்சிறப்புடன் தமிழர் நெஞ்சில் இடம்பெற்றுள்ளார். சென்ற இடமெல்லாம் தாம் பணியாற்றிய கல்வி நிறுவனங்களிலும் மக்கள் மன்றத்திலும் இங்ஙனம் புலவர் சீர் பரவுவாராக விளங்கிய இலக்குவனாரை அவர் காலச் சமுதாயம் இதற்காகப் போற்றியிருக்க வேண்டும். ஆனால் விருதுநகர் செந்திற்குமாரநாடார் கல்லூரி ஆட்சிக்குழுவினர்

இச்செயலில் குற்றம் கண்டுபிடித்தனர். இலக்குவனார் கம்பருக்கும் பாரதியாருக்கும் திருநாள் கொண்டாடவில்லை என்பதே அவர்கள் கூறிய குற்றச்சாட்டு ஆகும். கம்பருக்கும் பாரதியாருக்கும் பல்வேறு இடங்களில் மக்கள் மிகச்சிறப்பாக விழா நடத்திக் கொண்டிருந்த சூழலையே 1947 முதல் 1952 வரையிலான தமிழக வரலாறு தெளிவுறக் காட்டுகிறது. இப்புலவர்களையும் மதிக்கும் இலக்குவனார், விழா கொண்டாடப்படாத புலவர்களுக்கே விழா எடுத்தார். இதனால் கம்பர் மேலும் பாரதியார் மேலும் அவருக்கு வெறுப்பு என்று பொருள் கொள்ள முடியுமா? கம்பராமாயணத்தைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்று தமிழகம் கொந்தளித்தெழுந்தபோது அக்கருத்தைப் பரப்பி வந்த அறிஞர் அண்ணாவைப் பல கேள்விகள் தொடுத்து, தமிழ்ப் புலவரால் இயற்றப்பட்ட ஒரு தமிழ் நூலைக் கொளுத்துமாறு கூறுதல் முறையன்று, என வலியுறுத்திக் கூறியவர் இலக்குவனார் என்பதை எண்ணிப்பாராமல் கம்பர் மேல் இலக்குவனார்க்கு ஏதோ காழ்ப்புணர்ச்சி இருப்பதைப்போல் கல்லூரி ஆட்சிக்குழு குற்றஞ்சாட்டியது.

## இலக்குவனார் கொண்டாடிய ஐந்து விழாக்கள்

ஐந்து விழாக்களைக் கொண்டாடியதன் காரணத்தையும் இலக்குவனார் விரிவாகவும் விளக்கமாகவும் இந்நூலில் தெரிவித்துள்ளார்.

"இலங்குறு இலக்கணம் இயற்றி யளித்த
ஒல்காப் பெரும்புகழ் தொல்காப் பியர்நாள்"

"முத்திறப் பொருளின் மும்மை நெறியில்
மக்கள் சென்று மாண்புறு வாழ்வின்
இன்பம் துய்த்திட இன்னெறி காட்டிய
வாழ்வியல் வல்லுநர் வள்ளுவர் திருநாள்"

"நல்லிசைப் புலமை மெல்லியர் தம்முள்
தலைமக ளாகும் தண்டமிழ்ச் செல்வி
அரசியல் தூது ஆற்றிய . . . . . . . . .
. . . . . . . . . ஔவை நன்னாள்"

"சேரன் இளவல் செந்தமிழ் அரசர்
இளங்கோ அடிகள் இனிய நன்னாள்"

என்று நான்கு பெரும்புலவர்களின் திருநாளைக் கொண்டாடிய இலக்குவனார் அறிவியல், கலையியல்,

*ஆட்சியியல் முதலான அனைத்துத் துறைகளிலும், தமிழ் புதுமைப்பொலிவு பெற்று விளங்க வேண்டும் எனத் தமிழர்க்கு எழுச்சி ஊட்டிடும் வகையில் தமிழ் மறுமலர்ச்சிநாள் என ஒன்றும் கொண்டாடினார். மாணவர் உள்ளங்களில் தமிழுணர்வு தழைக்கவும் இலக்கிய அறிவு மேலோங்கவும் இவ்விழாக்கள் பெரிதும் வழிவகுத்திருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆயினும் இச்செயலும் கல்லூரி ஆட்சிக் குழுவினர் பார்வையில் பிழைமிக்க ஒன்றாகத் தோன்றிற்று. இதனைக் காலச்சூழலின் சீர்கேடு என்றே கொள்ள வேண்டும்.*

## துன்பத்திலும் நிலைதாழாமை

*தாம் எத்தகு குற்றமும் இழைக்காத நிலையில் கல்லூரி ஆட்சிக்குழு தம்மைப் பணிநீக்கம் செய்ததை இலக்குவனார் எடுத்துக்கூறும் பகுதி நம் நெஞ்சை நெக்குருகச் செய்கிறது.*

துரத்தப் பட்டேன் துயர்பின் தொடர
தொடக்கநாள் தொட்டுத் தொண்டு புரியும்
உறவும் எண்ணிலர்; உயர்நிலை எய்த
ஆற்றிய தொண்டும் அறவே மறந்தனர்;
மாணவர் கருத்தும் மதித்திலர்; மற்றவர்
விடுத்த வேண்டுதல் முறையும் வீணே;
எண்ணிரண்டாண்டு நண்ணும் வரிசையில்
ஆசிரியராக மாசிலா வகையில்
தொண்டு புரிந்து கொண்ட உயர்வை
இனி எளிதாக எய்துதல் கூடுமோ?
வயது
நாற்பத்திரண்டாண்டை நண்ணிய பின்னர்
பணி தேடிப்புகல் பணிந்து வேண்டல்
ஒத்த நிலையை உரிமையைப் பெறல்
எவர்க்கும் இனிதோ? எளிதோ? இயலுமோ?

*"நாற்பத்திரண்டு வயதில் பணிநீக்கம் செய்யப்பட்ட ஒருவர் மீண்டும் எங்ஙனம் பணியை அடைய முடியும். அப்படியே யாரேனும் வேலை கொடுத்தாலும் இதுவரை ஆற்றிய தமிழ்த்துறைத் தலைவர் பதவியும் துணை முதல்வர் பணிநிலையும் பெறல் இயலுமோ?" என்னும் இலக்குவனாரின் வினாக்கள் உணர்வு கொந்தளிக்கக்கூடிய சூழலிலும் தருக்கவியல் நெறியியல் சிந்திக்கும் அவரது சிந்தனைச் செம்மைக்குச் சான்று பகர்கின்றன. தமக்குரிய*

துணைமுதல்வர் பதவியை வேறொருவர்க்குக் கொடுக்கும் வஞ்சகநெஞ்சுடன் தமது பதவியைப் பறித்த கொடுமை, ஒரு சிலம்பைத் திருடுவதற்காகக் கோவலனின் உயிரைப் பறித்த பொற்கொல்லனின் பொய்ம்மையைக் காட்டிலும் கொடிது, என்கிறார் இலக்குவனார்.

"நீக்கும் முடிவை நெடிது நினைந்து
காலம் பார்த்துக் கருதிய தாற்றினர்;
கொடிது கொடிது கொலையினும் கொடிது
கோவலன் சிலம்பைக் கொண்டிட நினைத்து
பொற்கொல்லன் புகன்ற பொய்யினும் கொடிது"

மலைபோன்ற துயரிலும் மனங்கலங்காது இலக்கியத்தில் தமது ஈடுபாடு குன்றாமல் இலக்கிய நிகழ்வையே உவமையாகக் கூறித் தாமடைந்த துயரத்தை விளக்கும் இலக்குவனாரின் அஞ்சாநெஞ்சுரம் போற்றத்தக்கது.

## முதல் பொதுத்தேர்தல் பற்றிய சமூக ஆவணம்

இலக்குவனாரின் தன்வரலாற்றின் ஒரு பகுதியாக அவர் விருதுநகர் கல்லூரியில் பணிபுரிந்த வரலாற்றையும், பொதுத் தேர்தலில் தமது கல்லூரித் தாளாளருக்காகத் தேர்தல் பணியாற்றிய சூழலையும், அதன் விளைவாகத் தம்மைக் குற்றம்சாட்டியபோது, அத்தாளாளரே முன்னின்று தம்மைப் பணிநீக்கம் செய்த கொடுமையையும், எடுத்துரைக்கும் இக்கவிதை நூல், தனிமனிதர்கள்மேல் பழிசுமத்தாது சமூக அமைப்பைக் குறைகூறும் பொதுநோக்கு போற்றத்தக்கது.

1952-ஆம் ஆண்டில் நிகழ்ந்த முதல் பொதுத் தேர்தலைப் பற்றிய ஒரு சமூக ஆவணமாகவும் சமூகச் சிக்கல்களைச் சாடும் அங்கதப்படைப்பாகவும் விளங்கும் இந்நூல் தமிழ்க் கவிதை வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்கது.

## மாணவர் ஆற்றுப்படை

சங்ககாலம் முதல் இன்றுவரையிலான இரண்டாயிரம் ஆண்டுகட்கும் மேற்பட்ட காலத்திற்கு நெடிய வாழ்வைப் பெற்ற இலக்கியவகைமை என ஆற்றுப்படை இலக்கியத்தைக் குறிக்கலாம். உலகில் வேறெந்த இலக்கிய வகைமையும் இவ்வளவு நீண்டகாலம் பெருவாழ்வு பெற்று நிலைத்து நிற்பதாகக் கூற முடியாது. சங்க இலக்கியங்களில் ஊறித் திளைத்து, சங்க இலக்கியங்களின் சிறப்பியல்பை மக்களுக்கும் மாணவர்களுக்கும் பரப்புவதையே தமது பணியெனக்

கொண்டுவாழ்ந்த இலக்குவனாரை ஆற்றுப்படை இலக்கியம் கவர்ந்ததில் வியப்பில்லை.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் செல்வச் செழுமை பெறும் வகையில் வரையிலாது வழங்கும் வள்ளல்களைச் சென்றடைவதற்கு முறையாக வழிகாட்டிய சங்ககால ஆற்றுப்படைகளின் சொற்சுவையிலும் பொருட்செறிவிலும் திளைத்த இலக்குவனார் தமது காலத்திற்கேற்ற இலக்கியமாக மாணவர் ஆற்றுப்படையைப் படைத்தார்.

### ஐம்பதுகளில் கல்விநிலை

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகிய ஐம்பதுகளில் இன்றுபோலக் கல்வி நிறுவனங்கள் கிடையா. அரசு மாணவர்களுக்கெனச் சலுகைகளை அறிமுகப்படுத்தியிருந்தபோதிலும் அவை பற்றிய அறிவும் தெளிவும் சிற்றூர்ப்புற மாணவர்களுக்குப் போதிய அளவு இருந்ததாகக் கூற முடியாது. மேலும் கல்விக்குரிய நூல்களை வாங்குதற்குரிய போதிய பொருள்வளம் இல்லா மாணவர்கள் செய்வதறியாது திகைத்த காலம் அக்காலம். ஏனெனில் இன்றுபோல் அன்று நூலகங்கள் மிகுதியாக விளங்கவில்லை. பாடப்புத்தக வங்கிகள் போன்றவை பற்றிய சிந்தனையும் அக்காலத்தில் அரும்பவில்லை.

### அடித்தளத்து மக்களுக்குக் கல்வி

இச்சூழலில் புதுக்கோட்டையில் பு.அ.சுப்பிரமணியனார் என்னும் சான்றோர் தமது வீட்டின் அகன்று பரந்த திண்ணையையும் நடுக்கூடத்தையுமே படிப்பு அரங்கமாக மாற்றி மாணாக்கர்க்குத் தேவையான அனைத்துப் பாடநூல்களையும் வாங்கி வைத்து மாணாக்கர் பயனுறுமாறு செய்தார். எத்தகைய சாதி வேறுபாடும் கருதாது ஏழை மாணாக்கர் உயர்கல்வி கற்றிட அனைத்து உதவிகளும் செய்துவந்தார். மேட்டுக்குடியினரும் உயர்சாதியினரும் மட்டுமே பெற்றுவந்த கல்வி வாய்ப்புகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் அட்டவணை வகுப்பினரும் பெறும் வகையில் உழைத்த அப்பெருந்தகையை 'பிரதர்' என்னும் ஆங்கிலச் சொல்லாலும் 'அண்ணலார்' என்னும் தமிழ்ச் சொல்லாலுமே மக்கள் அழைத்து வந்தனர். அவர் தம் கல்வித் தொண்டைப் பாராட்டும் முகத்தான் இந்நூலை இலக்குவனார் இயற்றினார். அண்ணலார் பு.அ.சுப்பிர-

மணியனார் செய்த உதவிகளால் கல்வி வாய்ப்பினைப் பெற்ற ஒரு மாணவன் கல்வி பயில விரும்பும் வேறொரு மாணவனை அண்ணலாரிடம் ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

“இக்கவிதை எழுதப் பெற்ற காலம் சனவரித் திங்கள் 1959. நூற்றுத் தொண்ணூறு அடிகளை உடைய அகவல் கவிதை இது. ஆசிரியப்பா இனத்தில் நிலைமண்டில ஆசிரியப்பா வகையைச் சார்ந்தது. ஈற்றயலடி நாற்சீர் பெற்றும், ஈற்றடியின் இறுதிச்சீர் ஏகார ஓசையுடனும் முடிந்துள்ளது. ஆற்றொழுக்குப் போல சீரான நடையைக் கொண்டு விளங்குகிறது, இம்மாணவர் ஆற்றுப்படை” என இந்நூலின் அமைப்பை ஆய்வாளர் ம.இராமச்சந்திரன் விளக்கியுள்ளார்.

## ஏழை மாணவர் படும் துயரம்

“இளமையும் ஆர்வமும் ஏங்கிய உள்ளமும்
தளர்ந்த நடையும் தனக்கே உரித்தாய்
வேனிலில் அசைந்திடும் வெறுங்கொம்பேபோல்
வந்திடும்”

சிறுவனைக் கண்டு நூலாசிரியர் அவனது துன்பம் யாது? என வினவுகிறார்.

பள்ளியிறுதிப் படிப்பில் பள்ளியிலேயே முதன்மை பெற்றுத் தேர்ச்சியடைந்துள்ள அச்சிறுவன் உயர்கல்வி கற்க விரும்புவதாகவும் தந்தையை இழந்த அவனுக்கு உதவி செய்வார் யாருமில்லை எனவும் கூறுகிறான்.

“மேடையில் அழகாய் விரிவுரை ஆற்றிடும்
மாந்தரை வேண்டின் மதிப்பதும் செய்திலர்
பிறர்க்கென வாழ்வதாய்ப் பேசிடும் அவர்கள்
கையை விரித்து மெய்ந் நடுக்குற்று
இல்லை என்றே எளிதில் கடிந்தனர்”

என்னும் இம்மாணாக்கனின் கூற்று போலிப் பெரிய மனிதர்களை நயமுடன் சாடுவதாக விளங்குகிறது “அரசினர் வழங்கும் படிப்புக்கான உதவித்தொகையைப் பெறுதற்கு நான் தகுதியுடையவன். எனினும் ஒரு கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்து சில திங்கள் கழிந்த பின்னரே அவ்வுதவித் தொகையைப் பெற இயலும். இந்நிலையில் பொருள்வளம் அற்ற நான் என்ன செய்வது எனத் தெரியவில்லை பொருள்வளமோ சாதிமதப் பின்புலமோ இல்லாமல் எதுவும்

செய்ய இயலாது. கற்கும் திறனும் ஆர்வமும் இருந்தும் கல்லூரிகளில் எனக்கு இடமில்லை. என் துன்பம் போக்குபவரை இவ்வுலகில் எங்குத் தேடுவது?" என்று மனம் வருந்திக் கூறுகிறான் அம்மாணவன்.

## அண்ணலார் பெருமையும் அணுகுமுறையும் அக்காலச் சமூகநிலைமை

இம்மாணவனுக்கு ஆறுதல் மொழி கூறும் கவிஞர் தமது காலச் செல்வர்களுள் பெரும்பாலோர் சமுதாய உணர்வின்றிப் பயனற்ற வாழ்க்கை வாழ்வதை வருத்தத்துடன் எடுத்துரைக்கிறார்.

அழியும் பொருள் ஆகிய செல்வத்தைப் போற்றி வாழும் இச்செல்வர்கள் அழியாப் புகழை அடைதற்குரிய செயல்களில் ஈடுபட விரும்புவதில்லை. அளவில்லாமல் உண்பதே இவர்கள் ஒழுங்காகச் செய்யும் ஒரே செயல். அதன் விளைவாக நோய்களைப் பெருக்கிக் கொண்டு துன்பப்படுவார்கள். மருந்து உட்கொள்வதற்கே தமது வருவாயைச் செலவழிப்பார்கள். தமக்கும் பிறர்க்கும் எவ்விதப் பயனுமின்றித்தமது வாழ்நாளெல்லாம் வீண்நாளாக்குவர்; அறிவை வளர்க்கும் செயல்களில் நாட்டமின்றி மூடநம்பிக்கைகளிலும் பொருந்தாச் சடங்குகளிலும் ஈடுபாடு காட்டிப் பொருளைப் பாழாக்குவர். சுருங்கச் சொல்வதெனில்,

"உழைப்போர் மகிழ ஒன்றும் ஈயார்
விளம்பரம் பெற்றிட வேண்டுவ செய்வார்
ஏழை மாணவர் இன்னல் போக்கிடார்"

இச்சூழலில் புதுக்கோட்டையில் அனைவரும் 'அண்ணன்' என்று போற்றிடும் அண்ணலார் அவர்களை அணுகினால் ஏழை மாணவர் துயரம் எளிதில் நீங்கும்.

அவரை எப்படிக் காண்பது? எங்குக் காண்பது? என்னும் வினாக்களுக்குக் கவிஞர் விளக்கமாக விடை வழங்குகிறார்.

புதுக்கோட்டையை அடைந்து அங்கே "அண்ணன் வீடு எங்குள்ளது?" என எவரைக் கேட்பினும் அன்புடன் அங்கு அழைத்துச் செல்வர். அண்ணலார் தமது வீட்டில் காட்சியளிக்கும் திறத்தைக் கவிஞர் சொல்லோவியமாக வழங்கும் திறம் சங்கநூல்களுள் ஆற்றுப்படையிலக்கியங்களில் வள்ளல்கள் வீற்றிருக்கும் பாங்கினைக் கூறும் பகுதிகளுடன் ஒப்புநோக்கத்தக்கது. அங்ஙனம் ஒப்புநோக்கினால் அக்கால

முடியாட்சியமைப்புக்கும் இக்காலக் குடியாட்சிமுறைக்கும் உள்ள வேறுபாடு மட்டுமின்றிப் பொருட்செல்வத்தை வாரி வழங்கிய அக்கால வள்ளல்களுக்கும் கல்விச் செல்வத்தைக் கனிவுடன் ஊட்டிய அண்ணலாரின் தொண்டுள்ளத்திற்கும் இடையிலான வேறுபாடும் தெளிவாகும்.

"கலைபயில் சிறார்கள் களிப்புடன் அமர்ந்து
செய்தியிதழ்களும் செந்நெறி நூல்களும்
பயின்றிட அண்ணலும் பக்கம் இருந்து
ஐயமும் விளக்கி அறிவுரை பகர்ந்து
கட்டுரை திருத்திடும் காட்சியும் காண்பாய்"

என்னும் வரிகள் மாணவர் புடைசூழ அண்ணலார் அமர்ந்திருக்கும் சிறப்பினையும் அவர்களுக்கு வேண்டிய நூல்களை வாங்கிக் குவிப்பதோடு அவர்கள் எழுதும் கட்டுரைகளைத் திருத்தியளிக்கும் தொண்டுள்ளத்தையும் எடுத்துரைக்கின்றன. தனிப்பயிற்சி பெறும் வாய்ப்புப் பெறாத அட்டவணை வகுப்புச் சிறார்களுக்கு இரவுப் பள்ளி நடத்தியதோடு அங்கே ஆசிரியர் ஒருவரையும் பணியில் அமர்த்திக் கல்விஒளி பரவும் வகை செய்தார்.

இரவுப் பள்ளியில் தனிப்பயிற்சி பெற்ற இம்மாணவர்கள் தமது வகுப்பில் முதன்மை பெற்றுவிளங்கினர். இதன்மூலம் கல்வி எவருடைய தனிச்சொத்தும் இல்லை, வாய்ப்பும் வசதியும் வாய்க்கப் பெற்றால் எவரும் முதன்மை பெறலாம் எனும் உண்மையை உலகுக்கு விளக்கினார். சாதிமதங்களின் பெயராலோ பொருளியல் ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையிலோ யாரும் உயர்வு பெற்றதாகக் கருதுதல் பிழை என்பதைக் கவிஞரின் பின்வரும் அடிகள் தெளிவுறுத்துகின்றன.

"பிறவியில் எவரும் பேதையர் அல்லர்
வாய்ப்பும் வசதியும் வாய்க்கப் பெற்றால்
எவரும் பெரியராய் இனிதே உயரலாம்"

என்னும் அடிகள் சமூகநீதியைச் சால்புடன் எடுத்துரைக்கின்றன.

"அண்ணலாரின் தூய தொண்டுள்ளமும் செயற்கரியவும், செயற்குரியவும் செய்திட்ட திறமும் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகளில் தலையாயவை அதை எல்லாச் செல்வர்களும், வாய்ப்புடையோரும் செய்திட்டால் தமிழகம் உலகிற்கே எடுத்துக்காட்டாய் நிற்கும். இவைகளை இலக்குவனார்

நயம்பட விளக்கியுள்ளமை அறிந்து உணரத்தக்கது" என்னும் முனைவர் கா.மாரிமுத்துவின் கூற்று இங்குக் குறிப்பிடத்தக்கது. இலக்குவனாரின் மாணவராற்றுப்படை ஒரு போற்றி நூலாக அமைந்துவிடாமல் புதிதாக மக்களாட்சி மலர்ந்துள்ள நமது நாட்டில் அனைவர்க்கும் கல்வி வாய்ப்புக் கிடைத்தற்கு அரசை மட்டும் சார்ந்திராமல் வாய்ப்பும் வசதியும் மிக்கவர்கள் தொண்டாற்ற முன்வர வேண்டும் என்று தூண்டும் நூலாகவும் அங்ஙனம் தொண்டாற்றுதற்கு ஒரு முன்மாதிரித் தொண்டரை இனங்காட்டும் வழிகாட்டி-யாகவும் அமைந்துள்ளது எனலாம். அன்னசத்திரம் ஆயிரம் கட்டுதலைவிட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் உடனடித்தேவை என்றுரைத்த பாரதியாரினும் ஒருபடி மேலே சென்றுவிடுகிறார் இலக்குவனார். அவரது 'கல்வித் தொண்டே கடவுள் தொண்டு' எனும்தொடர் உலகெலாம் உலாவர வேண்டிய வைரவரி எனலாம். இலக்குவனார் எடுத்துக்காட்டும் அண்ணலாரைப் போலவே இந்தியத் திருநாட்டில் ஒவ்வொருவரும் 'கல்வித் தொண்டே கடவுள் தொண்டாய்க் கருத்துடன் ஆற்றி ஒழுக்கம் புலமை, உயர் பண்பு' ஆகியவை சிறந்து விளங்கும் இளைஞர்களை உருவாக்க முனைந்தால் குறுகிய காலத்திலேயே நம்நாடு வல்லரசாக உயர்ந்தோங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## அறிஞர் அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து

இந்நெடுங்கவிதை, நூற்று எண்பது அடிகளில் இயற்றப்பட்ட நிலைமண்டில ஆசிரியப்பா ஆகும். 1967ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ஆறாம் நாள் தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அறிஞர் அண்ணா, ஏல் பல்கலைக்கழகத்தின் அழைப்பையேற்று அமெரிக்கா சென்று திரும்பியபோது அவரை வரவேற்கும் வகையிலும், பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்மொழிக்கும் நாட்டுக்கும் தொண்டாற்ற வேண்டும் என வாழ்த்தும் வகையிலும், இக்கவிதை படைத்தளிக்கப்பட்டது.

### நாவன்மையும் ஆளுமைத்திறமும்

சித்திரப் பாவையின் செயலற் றிருக்கக்
கேட்போ ருள்ளம் கிளர்ந்தெழு மாறு
சொலுந்திறன் கொண்டே தோமில் நெறியில்
மக்களைக் கவர்ந்த மாபே ரியக்கம்

அமைத்து முதல்வராய் அரியணை யேறிய
தலைவர் இவர்போல் தரணியில் உண்டோ?

என்னும் வரிகளின் மூலம் அறிஞர் அண்ணா தமது நாவன்மையால் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்து ஓர் இயக்கம் அமைத்துத் தேர்தலில் நின்று ஆட்சியுரிமை பெற்ற அருஞ்செயலைப் பாராட்டுகிறார்.

பகையையும் நட்பாய்ப் பாங்குடன் கருதி
குற்றம் மறந்து சுற்றமாய் ஆக்கிடும்
அன்பில் பெரியார்; அணைத்துச் செல்வதில்
அண்ண னேஇவர்.............

என்று அறிஞர் அண்ணாவின் ஆளுமையைப் புலப்படுத்துகிறார்.

"கருத்து மாறுபடுவோரையும் பிணைக்கும் உயரிய பண்பு உடையவர்; காரல்மார்க்சின் கொள்கையை நடைமுறைப்படுத்தி மக்கள் பயனுறுமாறு செய்த உருசியத் தலைவர் இலெனின் போன்று திருவள்ளுவர் நெறியை நடைமுறைப்படுத்துதற்குப் பாடுபடும் தலைவர்; காட்சிக்கு எளியர்; கடுஞ்சொல் அற்றவர்; பழமை போற்றும் பண்புடையவர்" என்று இந்நெடுங்கவிதையில் அண்ணாவைப் பாராட்டியுரைக்கிறார், இலக்குவனார்.

## இந்தியாவுக்குப் பெருமை

அமெரிக்காவில் உள்ள ஏல் பல்கலைக்கழகத்தில் எண்டன் சப் என்பவர் அமைத்த அறக்கட்டளையில் அரசியல் அறிஞர்களை அழைத்து அங்குப் பயிலும் மாணவர்களுடன் தங்கவைத்துப் பல பொழிவுகள், விவாதங்கள் நடத்தச்செய்வது வழக்கம். அதுவரை அமெரிக்கர்களுக்கே அளிக்கப்பட்டு வந்த வாய்ப்பு அண்ணாவுக்கு - முதன்முறையாக அமெரிக்கர் அல்லாத ஒருவருக்கு - அளிக்கப்பட்டது என்பது இந்தியாவுக்குப் பெருமையளிக்கும் செய்தியாகும். இதனை இலக்குவனார் மகிழ்வுடன் போற்றுகிறார்.

## உலகெல்லாம் தமிழ் பரப்பும் அண்ணா

அண்ணா அமெரிக்காசெல்வதற்கு முன், ஆயிரக்கணக்கானோர் சென்று வந்தனர்; ஆயின் அண்ணா ஒருவரே தமிழின் பெருமையைப் பரப்புதற்குச் சென்றார் எனலாம்.

ஆயிரக் கணக்கில் அமெரிக்கா சென்றுளர்;
தமிழராய்ச் சென்று தமிழ்ப்புகழ் பரப்பியோர்
விரல்விட் டெண்ணும் மிகச்சில ரேயே.
தம்புகழ் அறிந்தோர் – தமிழ்ப்புகழ் அறிந்திட
ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியத் தையும்
உலகப் பொதுமறை உயர்திருக் குறளையும்
நெஞ்சை யள்ளும் நீள்புகழ்ச் சிலம்பையும்
தம்முடன் கொண்டே தமிழ்உரு வெடுத்துச்
செல்வது மானவும் தீந்தமிழ் நாட்டினர்
பண்பெலாம் திரண்டு பருவுடல் கொண்டு

*என்னும் வரிகள் அண்ணாவின் தமிழ்ப்பற்றைச் சிறப்பித்துக் கூறுகின்றன. போப் துரைமகனார் ஆக்கியளித்துள்ள திருக்குறளின் ஆங்கில மொழியாக்கத்தையும் பேராசிரியர் சி.இலக்குவனார் படைத்த தொல்காப்பிய ஆங்கில மொழியாக்கத்தையும் சிலப்பதிகாரத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் தம்முடன் எடுத்துச் சென்று வத்திகன் நகரில் போப்பாண்டவருக்கும் அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கும் அண்ணா வழங்கினார். இதன்மூலம் தமிழின் தொன்மையையும் இலக்கண இலக்கியச் சிறப்பையும் பிறநாட்டார் அறிய வழிவகுத்தார். இவற்றைப் பரப்புவதையே தமது குறிக்கோளாகக் கொண்டு வாழ்நாளெல்லாம் உழைத்த இலக்குவனார் அண்ணாவின் தமிழ் பரப்பும் பணியைப் பாராட்டுவது பொருத்தமேயாகும். வெளிநாடு செல்லும் வாய்ப்புப் பெறும் ஏனைய அரசியல் தலைவர்களும் அண்ணாவின் இச்செயலைப் பின்பற்ற வேண்டும் என்னும் இலக்குவனாரின் உள்ளார்ந்த விழைவு இவ்வடிகளின் மூலம் புலனாகிறது.*

## சங்க இலக்கிய நெறி

மக்கள் நலனே மாண்புறு கடனாய்த்
தக்கன ஆற்றித் தகவில அகற்றி
என்றும் இனியராய் ஏழைகள் தோழராய்
ஆட்சித் தேரை அணியுறச் செலுத்தி
உலகப் புகழ்பெறும் உயர்நலப் பேற்றுடன்
அறுபதாம் ஆண்டை அடையும் அண்ணா
இளைஞர்க்கு இளைஞராய் என்றும் வாழ்க

*என்னும் இலக்குவனாரின் வாழ்த்து சங்க இலக்கிய நெறியில் அமைந்து சமகாலத் தலைவரைப் போற்றுகிறது.*

'அறிஞர் அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து' என்னும் இந்நெடுங் கவிதை புறநானூற்று இயல்நிலை வாழ்த்துப் பாடலைப்போல் அமைந்து அண்ணாவின் ஆளுமைத்திறத்தையும் தமிழ்ப்பற்றையும் இலக்குவனார் அண்ணாவின் மீது கொண்டிருந்த ஆழ்ந்த அன்பினையும் புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

## முற்றுப்பெறா நெடுங்கவிதைகள்

முற்றுப்பெறா நிலையில் சில நெடுங்கவிதைகள் அச்சிலும் கையெழுத்துப் படியாகவும் விளங்குகின்றன. இலக்குவனார் புதுக்கோட்டையில் அண்ணலார் பு.அ.சுப்பிரமணியனாருடன் இணைந்து திருக்குறள் கழகம் நிறுவித் தொண்டாற்றியபின் ஈரோடு சிக்கையநாயக்கர் மாசனக் கல்லூரியில் பணியாற்ற ஈரோடு சென்றுவிட்டார் என முன்பிரிவில் கண்டோம். அங்ஙனம் ஈரோடு சென்றபின் அவர் எழுதிய கட்டுரைகள், தொடர் கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றைத் தாங்கி 'குறள்நெறி' என்னும் பெயரில் (தனிச்சுற்றுக்கு மட்டும்) வெளிவந்து கொண்டிருந்தது. அவ்வெளியீட்டில் "உழைப்பால் உயர்ந்தோன்" என்னும் தலைப்பில் அடைப்புக்குறிக்குள் கதை பொதி பாட்டு எனக் குறிக்கப்பட்டு ஒரு நெடுங்கவிதை வெளிவந்து கொண்டிருந்தது. அஃது முற்றுப்பெறுவதற்குள் அவ்வெளியீடு (இலக்குவனார் அங்கிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டு நாகர்கோயில் சென்றுவிட்டமையால்) நிறுத்தப்பட்டுவிட்டது.

## இரண்டாவது உலகத் தமிழ்மாநாடு பற்றிய கவிதை

'என் வரலாறு' என்னும் தலைப்பில் தமது தன் வரலாற்றைச் செய்யுளில் எழுதத் தொடங்கிய இலக்குவனார் அஃது நிறைவடைவதற்குள் மறைந்துவிட்டார் அவரது கையெழுத்துப்படி, பதின்மூன்று பக்கங்களில் அமைந்துள்ளது. 305 வரிகளைக் கொண்ட அந்நெடுங்கவிதை. இலக்குவனார் 1967இல் மாநிலக் கல்லூரியில் பொறுப்பேற்றது முதல் ஐதராபாத் சென்றது வரையிலான நிகழ்வுகளைத் தொகுத்துரைக்கிறது 1968ஆம் ஆண்டில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளை மிகச் சுருக்கமாகச் செய்யுளில் வடிக்கும் திறத்தைக் குறிப்பிடப் பின்வரும் பாடல்வரிகள் உதவும்.

பண்டைப் பெருமையும் இற்றைப் புதுமையும்
கண்டோர் மருளக் கவினுறு வடிவில்
பல்வகைக் கோலங்கள் பாங்குறத் தாங்கி
ஊர்வலம் வந்திட உலகின் புற்றது.
கடற்கரை வெளியில் கடலெனத் திரண்ட
மக்கள் உவந்திடத் தக்க முறையில்
தலைவர் சாகீர் உசேன்எனும் பெரியர்
வண்தமிழ்ப் பெருமை வழங்கித் தொடங்கினார்.
திருக்குறள் சீர்மை தேர்ந்து வெளிப்பட
ஒன்பது நூறாயிர உருபாயும்
சென்னை அண்ணாமலை மதுரைசார்
பல்கலைக்கழகம் பாங்குடன் பெற்றன
பற்பல நாட்டின் சொல்பல அறிஞர்
எந்தமிழ் போற்றினர்; இன்தமிழ் இறைவராம்
புலவர் பதின்மரின் பொன்னுறு திருவுரு
கடற்கரை அணிசெயக் காட்சி யாக்கினர்.

*இப்பாடல் வரிகள் உலகத் தமிழ்மாநாட்டின் முதல் இரண்டு நாள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குகின்றன. இந்நெடுங் கவிதையில் இதன்பின் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் பல்கலைக்கழக நூற்றாண்டு நினைவு மண்டபத்தில் நடைபெற்ற அறிஞர் கருத்தரங்கு குறித்தும் விரிவாக எடுத்துரைக்கிறார்.*

பல்கலைக்கழக நல்நூற் றாண்டு
மண்டபம் தன்னில் வண்தமிழ் பற்றிய
ஆராய்ச்சியரங்கினை அணியுற நடாத்தினர்
தமிழ்மொழிப் பற்றும் தாங்கிய புலமையும்
இல்லோரெல்லாம் இனிதிடம் பெற்றனர்
எம்போன்றோரை எள்ளியே தள்ளினர்
..........................................
கட்டணம் செலுத்திக் கிட்டினேன் உரிமை
சார்பாளராகச் சார்ந்தேன் அரங்குள்
காலையில் நடைபெறும் கருத்தறி பொதுவில்
இருப்பதும் இன்தமிழ்க் கிழிவு தந்திட
உரைக்கும் கருத்தை ஓங்கி எதிர்ப்பதும்
கடனாக் கொண்டேன் படர்மிகு வினாவால்

*என்னும் வரிகள் தாம் புறக்கணிக்கப்பட்டபோது இலக்குவனார் அடைந்த மனவருத்தத்தையும் பேராளராகப் பதிவு செய்து கொண்டு தமிழ்நலன் காக்கும் பணியை அவர்*

ஆற்றிய திறத்தையும் விளக்குகின்றன இந்நெடுங்கவிதை முற்றுப் பெற்றிருக்குமாயின் அறுபத்தேழுக்குப் பிந்தைய தமிழ்நாட்டு நிலையைப் பற்றிய ஒரு வரலாற்றுக் காவியமாக அது திகழ்ந்திருக்கும் என்பதை இப்பதின்மூன்று பக்கங்களும் (305 அடிகள்) பாங்குற உணர்த்துகின்றன

## வாழ்த்துக் கவிதைகள்

இலக்குவனார் பல்வேறு காலக்கட்டங்களில் தாம் நடத்திய பல்வேறு இதழ்களிலும் ஏனைய இதழ்களிலும் வாழ்த்துக் கவிதைகள் பல இயற்றியுள்ளார் பொங்கல் வாழ்த்துக் கவிதைகள், நாட்டுத் தலைவர்களை வாழ்த்தும் கவிதைகள், தமிழ்ச் சான்றோர்களை வாழ்த்தும் கவிதைகள் என இவற்றை வகைப்படுத்தலாம்.

### அ) பொங்கல் வாழ்த்துக் கவிதைகள்

தாம் நடத்திய 'சங்க இலக்கியம்', 'இலக்கியம்', 'திராவிடக் கூட்டரசு', 'குறள்நெறி' ஆகிய இதழ்களிலும் ஏனைய இலக்கிய இதழ்களிலும் இலக்குவனார் பொங்கல் வாழ்த்துகளைப் படைத்தளித்துள்ளார் தமிழ் உணர்வு தமிழரிடையே தழைக்க வேண்டும் எனவும் வறுமை நீங்கி வளம் பொலிந்து நாடு சிறந்தோங்க வேண்டும் எனவும் இப்பொங்கல் வாழ்த்துக்கள் மூலம் விழைந்துள்ளார். 15.1.1965 அன்று வெளியாகிய 'குறள் நெறி' பொங்கல் மலரில் இலக்குவனார் இயற்றி வெளியிட்ட ஒரு பொங்கல் வாழ்த்துப் பாடலைக் காண்போம்.

'குறள்நெறி' ஓங்கி குடியர சுயர்ந்து
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரந்து வாழியர்
வையகம் வாழ்க; வான்தமிழ் வெல்க;
உழைப்பே உயிரென உலகுக் குணர்த்தும்
பொங்கற் புதுநாள் பொலிவுடன் சிறக்க
எங்கும் இன்பம் இனிதே பொலிகவே

ஏழு வரிகளே கொண்ட இப்பாடலின் மூலம் இலக்குவனார் தமது கோட்பாடுகளைத் தெளிவுற மொழிந்துள்ளார். மக்கள் சமுதாயம் திருக்குறள் உரைக்கும் நெறிகளைப் போற்றி வாழுமாயின், நம் இந்தியக் குடியரசு, உலகில் ஒரு வல்லரசாகத் திகழும் என்னும் கருத்தைத் தமது வாழ்நாள் முழுமையும் இலக்குவனார் வலியுறுத்தி

வந்துள்ளார். அவ்வகையில் 'குறள்நெறி ஓங்கின் குடியரசு உயரும்' என்னும் தொடரைப் படைத்துத் தமது குறள்நெறி இதழின் முகப்புப் பக்கத்தில் இடம் பெறச் செய்து வந்தார். அக்கொள்கையையே தமது பொங்கல் வாழ்த்துப் பாடலிலும் இடம்பெறச் செய்துள்ளார். இந்தியக் குடியரசு உயரவும், தமிழ் துறை தோறும் வெற்றி பெறவும், வையகம் சிறப்புற வாழவும் வாழ்த்தும் இலக்குவனார், பொங்கற்புதுநாள் நமக்கு வழங்கும் செய்தியாக 'உழைப்பே உயிர்' என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

உழவுத் தொழிலின் மேன்மையை உணர்த்தும் அறுவடைத் திருநாளாக, கதிரவனுக்கும் கால்நடைச் செல்வத்திற்கும் நன்றி தெரிவிக்கும் திருநாளாக விளங்கும் பொங்கல்விழா, ஒரு சமயச் சார்பற்ற, சமய நல்லிணக்க விழாவாக விளங்குவதனை இலக்குவனார் இப்பாடலின் மூலம் நயமுற விளக்குகிறார். பல்வேறு காலச்சூழலில் இலக்குவனார் படைத்த பொங்கல் வாழ்த்துக்களைத் தொகுத்து நோக்கும்போது அவ்வக் காலச்சூழலுக்கேற்ற கருத்துகளையும் அறிவுரைகளையும் தமது பொங்கல் வாழ்த்துகளின் மூலம் உணர்த்துதற்கு அவர் முயன்றுள்ளமை புலனாகின்றது.

பெரியார், அண்ணா, திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன் என்று பல்வேறு அரசியல் தலைவர்களையும் இலக்கியச் சான்றோர்களையும் போற்றிப் பாடல்கள் புனைந்துள்ளார் இலக்குவனார். தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாள் விழாவின்போது அவரை வாழ்த்திப் பாடிய பாடலின் ஒரு பகுதியைக் காண்போம்.

"..........................
.............. தூயநற் பெரியார்
தமிழகக் காவலர், தமக்கிணை யில்லார்,
உரையால் எழுத்தால் உள்ளம் கவர்பவர்;
சிந்தனைக் கொள்கலம், சீர்மைப் புகலிடம்;
உழைப்பின் உறைவிடம், ஓய்வின் வெற்றிடம்;
சிக்கன முறையால் செல்வம் சேர்ப்பிடம்;
எவரும் போற்றும் இனிய பண்பிடம்;
தமிழர் வாழ்வின் தனிப்பெருங் காப்பிடம்;
வாழ்க, வாழ்க, வாழ்க;
ஆழ்க ஆழ்க அடிமை வாழ்வே."

(கவிஞர் போற்றும் பெரியார் – பக்.1)

ஆற்றொழுக்கான நடையில் அகவற்பாவில் குறுகிய தொடர்களால் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறம் இப்பாடலில் சிறப்புற விளங்குவதைக் காண்கிறோம். இஃதே இலக்குவனாரின் பாடுநெறி எனலாம்.

## இரங்கற்பாக்கள்

தலைவர்கள், அறிஞர்கள், கலைஞர்களின் மறைவின் போது, இலக்குவனார் மனம்வருந்திப் பாடிய பல கையறுநிலைப்பாக்கள் இலக்கியச் செறிவுமிக்க சமூக ஆவணங்களாக விளங்குகின்றன.

இந்தியத் தலைமையமைச்சராய் ஈடிணையற்றுத் திகழ்ந்த நேரு அவர்களின் மறைவின்போது இலக்குவனார் பாடிய இரங்கற்பா மிகவும் குறிப்பிடத்தக்கது. 'விளக்கினை இழந்த வீட்டவர் ஆனோம்' என்னும் தலைப்பில் அமைந்த இக்கவிதை இலக்குவனார் நடத்திவந்த 'குறள்நெறி' இதழில் (15.6.1964) வெளிவந்தது.

## நேருவுக்கு ஒரு சொற்கோயில்

'புதிய இந்தியாவைப் பொலிவுறச் சமைத்த சிற்பி' எனப் போற்றப்பட்ட நேரு தமது அயரா உழைப்பாலும் ஆற்றல்மிக்க எழுத்தாலும் உள்ளங்கவரும் சொற்பொழிவாலும் சிறையில் நெடுங்காலம் கழித்த தியாக வாழ்வினாலும் அனைவர் உள்ளத்தையும் கவர்ந்த தலைவர் என்பதில் ஐயமில்லை. மூடநம்பிக்கைகளைச் சாடிய அவரது பகுத்தறிவு நோக்கும் சமவுடைமை நாட்டமும் இலக்குவனாரைப் பெரிதும் கவர்ந்தன. இதன் விளைவாக, அந்த ஒப்பற்ற தலைவரின் மறைவால் பெரிதும் வருந்திய இலக்குவனார் தமது கையறுநிலைப் பாடலையே ஓர் அழியா நினைவுச்சின்னமாக, நேருவுக்கு எழுப்பிய சொற்கோயிலாகப் படைத்தார் எனலாம்.

"காந்தியடிகள் காட்டிய நெறியில்
அயலவர் ஆட்சியை அகற்ற முனைந்து
இன்னல் வாழ்வை இனிதாய்க்கொண்ட
விடுதலை வீரர்; நடுநிலைக் கொள்கையர்;
'இன்னாமை இன்பம் எனக் கொளின்
ஆகும் தன் ஒன்னார் விழையும் சிறப்பு'
எனும் தமிழ்மறையின் இன்மொழிக்கேற்ப
எவரும் போற்றும் இனிய தலைவராய்

*நேரு விளங்கினார் என இலக்குவனார் குறிக்குமிடத்து வள்ளுவர் வான்மறையை நேருவின் வாழ்வோடு பொருத்திக் காட்டும் திறம் போற்றத்தக்கதாகும். தமது வாழ்வில் பெரும்பகுதியைச் சிறையில் கழித்த நேரு பெரு மகனார்க்காகவே இக்குறள் இயற்றப்பட்டதுபோலத் தோன்றுகிறது. விடுதலை பெற்றபின் பாரதம் சிறந்து திகழ நேரு ஆற்றிய செயல்களையும் மிகச் சிறப்பாகத் தொகுத்து வழங்குகிறார் இலக்குவனார்.*

உரிமை பெற்ற உயர்பா ரதத்தில்
பசியும் பிணியும் பகையும் நீக்கி
வசியும் வளனும் வாழ்வும் சிறக்க
திட்டம் தீட்டிய செம்மனச் சீர்மையர்
அறிவியல் நெறியே ஆக்கம் தருமென
மூடக் கொள்கைகள் முழுதும் வெறுத்தவர்
தொழிலியல் வளர்ச்சியும் தூயநல் அறிவியல்
ஏற்றமும் கொண்ட இனிய சமநிலை
மன்பதை காண மடிதனைத் தற்றி
உழைக்கும் பெற்றியை ஓயா துரைத்தவர்;

*திட்டங்கள் தீட்டி ஆட்சியை மாட்சிமைப்படுத்திய நேருவின் பண்புநலன்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறுகிறார்.*

உழைப்பில் இன்பம் கண்டே உயர்ந்தவர்
'இன்றைய சிறுவரே நாளைய தலைவர்'
ஆதலின் அவர்பால் அளப்பரும் காதலர்;
நானிலம் சுற்றிய நற்பேரறிஞர்;
சொலல்வல்லர்; சோர்விலர்; அஞ்சார்; சொல்லுறு
கலைகள் போற்றும் காவலர்; கட்டுரை வன்மையர்;
பகைவரும் நண்பராய்ப் பண்புடன் பொருந்த
அமைதி நாடிய அரசியல் அறிஞர்;
உள்ளத் தூய்மையர்; உணர்ச்சிப் பெருக்கினர்;

*பண்பில் இமயம் எனப் பார்புகழ வாழ்ந்த நேருவின் சிறப்புகளை இவ்வளவு சீர்மையுடன் இத்துணைச் சுருக்கமான சொற்களில் விளக்கமாக எடுத்துரைத்த கவிஞர் வேறு யாரும் இலர் எனலாம். அத்தகு சிறப்பு வாய்ந்த நேருவின் பிரிவு தம்மை எவ்வாறு பாதித்தது என்பதையும் தெளிவுறக் கூறுகிறார்.*

எவரும் போற்றும் இனிய தலைவராய்
ஆசிய சோதியாய் ஆட்சி புரிந்த
தலைமை யமைச்சர் சவகர்லால் நேரு
பிரிந்தனர் அந்தோ பேதுற்றனமே
விளக்கினை இழந்த வீட்டவர் ஆனோம்;
அளப்பருந் துயர்க்கடல் ஆழ்ந்துவிட்டோமே

இத்தகைய துன்பத்தில் ஆழ்ந்த நாம் செயத்தக்கது என்ன என்பது குறித்தும் தவறாது சுட்டுகிறார்.

உரிமை சிறக்கவும் உண்மை ஓங்கவும்
அவர்வழி நின்று ஆற்றுவோம் தொண்டென
உறுதி பூண்போம் உழைப்போம்
மறுவில் உலகை மாண்புறப் படைக்கவே

இக்கவிதை நேருவின் அனைத்துப் பண்புகளையும் சிறப்புகளையும் எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது. நேருவைப் பற்றி ஒரு தனிநூல் எழுத முனைவோர் கூற வேண்டிய அனைத்துச் செய்திகளையும் இக்கவிதை எடுத்தியம்புகிறது. 'மடிதனைத் தற்றி' எனும் வரியில் இடம்பெறும் தற்றி என்னும் சொல்லும் 'பேதுற்றனமே' என்னும் சொல்லுமே அருஞ்சொற்களாக விளங்குகின்றன. "குடிசெய்வல் என்னும் ஒருவதற்குத் தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்" என்னும் குறளில் (1023) இடம் பெறும் சொல்லையே மடிதனைத்தற்றி எனப் பயன்படுத்தியுள்ளார்.

## நாவலர் மறைவும் அண்ணா பிரிவும்

இலக்குவனார் இயற்றிய இரங்கற்கவிதைகள் அனைத்தையும் இங்கு விளக்கிக்கூறல் நமது நோக்கமன்று. எனினும் இன்னும் இரண்டு பாக்களை இங்குச் சுட்டிக் காட்டல் இன்றியமையாதது. தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உழைத்த நாவலர் சோமசுந்தர பாரதியார் மறைவின்போது இலக்குவனார் பாடிய கையறுநிலைப் பாடல்,

"செஞ்சொற் புலவ; செழுந்தமிழின் காவல;
துஞ்சினையோ! தூய தமிழ்ப்பகையை – எஞ்சாது
வெல்லும் துணிவோடு வேறுலகம் சென்றனையோ?
அல்லல் எமக்கே அளித்து" என்பதாகும்.

எளிய தமிழ்நடையில் உள்ளமுருகப் பாடிய இக்கையறு-நிலை இலக்குவனார் நாவலர் சோமசுந்தர பாரதியார் மீது

கொண்டிருந்த மதிப்பை வெளிப்படுத்துவதுடன் இலக்குவனார் சான்றோர்களைப் போற்றிய பாங்கினையும் புலப்படுத்துகிறது. தமக்குத் தக்க வழிகாட்டியாகவும் தமிழ்ப் புலவர்க்கெல்லாம் உறுதுணை புரிந்த புரவலராகவும் விளங்கிய தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை மறைவின்போது இலக்குவனார் 'துன்பமாலை' என்னும் தலைப்பில் பாடிய கையறு நிலைப்பா அறுசீர் ஆசிரிய விருத்த யாப்பில் நான்குவிருத்தங்களைக் கொண்டமைந்திருந்தது.

இப்பாடல் பாரியைப் பிரிந்த மகளிர் பாடலுடனும் பாரியின் நண்பர் கபிலர் பாடலுடனும் ஒப்புநோக்கத்தக்கது என்று இலக்குவனார் கவிதைகளை ஆய்ந்த ம.இராமச்சந்திரன் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. அறிஞர் அண்ணாவின் மறைவின் போது இலக்குவனார் பாடிய இரங்கற்பா உள்ளமுருக்கும் அவலஇலக்கியமாகத் திகழ்கிறது. 'கருதுவோம் என்றுமே' என்னும் தலைப்பில் அமைந்த இக்கவிதை அண்ணாவின் மறைவால் பிரிந்து வருந்தும் கவிஞரின் துன்பத்தை மட்டுமின்றித் தமிழர் அனைவரின் துயர்நிலையையும் விளக்கும் வகையில் படைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

"அண்ணா அண்ணா அரும்பெறல் மணியே
கண்ணா கண்ணா கைவிட் டாயே
நாவல பாவல நற்பே ரறிஞரே
காவலர் ஏறே கருதுவோம் என்றுமே"

என்னும் இப்பாடலின் நிறைவுப்பகுதியைக் கூறலாம்.

**பகடியம்**

முன்னோர் மொழிந்த கவிதைகளின் வடிவத்தை அவ்வாறே ஏற்றுக்கொண்டு ஒரு சில சொற்களை மாற்றியமைப்பதன் மூலமோ அனைத்துச் சொற்களையும் மாற்றியமைப்பதன் மூலமோ முற்றிலும் புதிய பொருளைப் புலப்படுத்துவதைப் பகடியம் என்பர். பெரும்பாலும் எள்ளல், நகைச்சுவை ஆகியவற்றின் மூலம் அங்கதக் கவிதை படைத்தற்கு இவ்வுத்தி பயன்படுத்தப்படுகிறது.

பிசிராந்தையார் பாடிய ஒரு புறநானூற்றுப் பாட்டலை முற்றிலும் மாற்றியமைத்துத் தமது காலச் சமூகச் சூழலைப் புலப்படுத்த முயல்கிறார், இலக்குவனார்.

"யாண்டு பலவாக நரையிலவாகுதல் / யாங்காகியர் என வினவுதிர் ஆயின்" எனத் தொடங்கும் பிசிராந்தையார் பாடல், வயது முதிர்ந்த பின்னும் நரைதிரை தோன்றாமல் இளமையுடன் காட்சியளிப்பதற்கு, அப்புலவரின் சமகாலச் சூழலே - அரசும் மக்களும் சிறப்புற விளங்குதலே - காரணம் என விளக்குகிறது. இலக்குவனாரை அவரது நண்பர்கள் மிக இளமையான வயதிலேயே தலைநரைத்துவிட்டதற்கு என்ன காரணம் என வினவுவதாகவும் மக்கள் தாய்மொழியை மறந்துவிட்டு அயல்மொழிக்கு அடிமைகளாக விளங்கு வதாலும் தாய்மொழியாகிய தமிழ்மொழியை மறந்து பிறமொழிக் கல்விக்கே முதன்மை வழங்குவதாலும் இத்தகைய சமூகச்சூழல் மனநிறைவளிப்பதாக இல்லாமையால் சிறிய வயதிலேயே தலை நரைத்துவிட்டது என விடை வழங்குவதாகவும் இப்பாடல் அமைந்துள்ளது.

யாண்டு பலவின்றியும் நரையுளவாகுதல்
யாங்காகியர் என வினவுதிராயின்
ஆண்ட நம் மக்கள் அடிமைகளாயினர்
பூண்ட நம் பண்பு போலியதாகின்று
நற்றமிழ் மறந்தனர் நானிலமதனில்
பிறமொழிப் பற்றில் பெரியோராயினர்
தமிழகத் தெருவில் தமிழ்தான் இல்லை
ஊரும் பேரும் உயர்மொழிவழக்கும்
அயல்மொழி தன்னில் அமைந்திடக் கண்டோம்
தமிழைக் கற்றோர் தாழ்நிலை யுறுவதால்
தமிழைப் பயிலத் தமிழரே வந்திலர்
அல்லவை பெருகவும் நல்லவை குறையவும்
மக்கள் வாழ்வில் மகிழ்ச்சிதான் இன்றே

என்னும் இப்பாடல் சமுதாய அங்கதமாக விளங்குவதைக் காணலாம்.

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து" எனத் தொடங்கும் அப்பர் பாடல் சைவத்தின் மாண்பினையும் சிவநெறிச் செல்வரைப் போற்ற வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் பாடலாகும். இப்பாடலின் யாப்பையும் சந்தத்தையும் அப்படியே ஏற்றுக்கொண்டு சொற்றொடர்களை முற்றிலும் மாற்றித் தமிழின் பெருமையையும் தமிழன்பரைப் போற்ற வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் வகையில் பாடல் படைத்துள்ளார்.

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்பேம் அல்லேம்
மா தமிழுக்கே அன்பர் அல்லராகில்
எங்குமுள இடமெலாம் சுற்றி ஓடி
இரந்துண்ணும் இழிவாழ்க்கை உடையரேனும்
தங்குபுகழ் செந்தமிழ்க்கோர் அன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே.

என்னும் இப்பாடல் இலக்குவனார் தமிழன்பரை மதித்துப் போற்றும் மாண்பினை எடுத்துரைப்பதுடன் மக்களையும் இந்நெறி போற்றுமாறு நெறிப்படுத்துகிறது. எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாத வாழ்க்கை வாழ்ந்த இலக்குவனார், தமிழ்ப் பற்றுக் கொண்ட ஒருவர் தமக்கு ஏதேனும் தீங்கு இழைத்து விட்டாலும் பொறுத்துக் கொள்வார். தம்மிடம் புத்தகங்களை வாங்கிச் சென்று விலைக்கு விற்பனை செய்தபின் பணத்தைத் தராமல் ஏமாற்றிச் சென்றாலும் 'தமிழ்ப் பற்று உடையவன்; சாப்பிட்டுப் போகிறான்; விடுங்கள்' எனப் பெருந்தன்மையுடன் விட்டுவிடுவார். அவரது வாழ்க்கை நெறியை இப்பாடல் எதிரொலிக்கிறது எனலாம்.

இங்ஙனம் மக்கள் நெஞ்சில் பதிந்துள்ள புகழ்பெற்ற பாடல்களைப் பின்பற்றிப் பகடியமாகப் பாடல் படைப்பதும் இலக்குவனாரின்படைப்பு நெறிகளுள் ஒன்று எனலாம்.

## இசைப்பாடல்கள்

அரசர் அண்ணாமலைச்செட்டியார், இராசாசி, இசையரசு தண்டபாணி தேசிகர், கல்கி இரா.கிருட்டிணமூர்த்தி, கல்கி சதாசிவம், இசையரசி எம்.எசு. சுப்புலட்சுமி ஆகியோர் அணிதிரண்டு தமிழிசையைப் போற்றி வளர்த்த பொற்காலம் இலக்குவனார் போன்ற பாவலர்களையும் இசைப்பாடல்கள் (கீர்த்தனைகள்) படைக்கத் தூண்டுகோலாக விளங்கியது. இசைப் புலவர்கள் சிலர் இலக்குவனாரின் நண்பர்களாக விளங்கினமையால் இசைப் பாடல்கள் படைத்தளித்தல் இன்னுமெளிய பணியாகியது. இலக்குவனார் இயற்றிய இசைப்பாடல்கள் திருநெல்வேலியில் அவர் நடத்திவந்த 'சங்க இலக்கியம்' என்னும் ஏட்டில் வெளிவந்தன. அவரது நண்பரும் இசைப் புலவருமாகிய இசைமணி சங்கரனார் அப்பாடல்களுக்கு இசை அமைத்திருந்தார்.

“இப்பாடல்களில் சிலவற்றைத் திருச்சி வானொலி நிலையத்தில் பாடுவதற்கு இசைமணி முயன்றார். திருச்சி வானொலி நிலையத்தார் புதிய பாடல்களுக்கு இடமில்லை என்றனர். புதிய பாடல்கள் பழைய பாடல்களாவது எப்போது? இவ்வாறு அறிமுகம் செய்தாலன்றோ புதியனவும் பழையனவாகும் என்று இசைமணி வழக்கிட்டார். இப்பாடல்களை ஏற்கவில்லையென்றால் எனக்குப் பாடும் வாய்ப்பும் அங்கு வேண்டாம் எனத் தனக்குக் கிடைத்த வானொலியில் பாடும் வாய்ப்பையும் தள்ளிவிட்டார்.” (எ.வா.போ பக்.156) என்று இலக்குவனார் தெரிவிக்கும் செய்தி அக்காலத்தில் (1945-46) தமிழிசைக்காக நடந்த போராட்டத்தையும் வெளிப்படுத்துகிறது.

“திரு. இரா. கனகசபாபதியும் என்னுடைய இசைப்பாடல்களை அவ்வப்பொழுது பாடுவார்கள். இசைப் பாடல்கள் எழுதுவதற்குத் தூண்டியவரும் இவரே. வெளியூர் ஒன்றுக்குச் சொற்பொழிவு நிமித்தம் சென்றுவிட்டு மாட்டுவண்டியில் இருவரும் வந்துகொண்டிருந்தோம். அப்பொழுது அவர் மெட்டு அமைத்துக் கொடுக்க யான் பாடல் இயற்ற, அவர் பாடிப்பார்க்க, இசைப்பாடல் இரண்டு அமைந்துவிட்டன. பின்னர் அவரே இசையரங்குகளில் பாடினார். இசைமணி சங்கரனாரும் பிறரும் இசையரங்குகளில் பாடும் பெருமையை அடைந்தன அப்பாடல்கள்.” (எ.வா.போ.பக்.156-157) எனும் செய்தியும் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாகச் ‘சங்க இலக்கியம்’ இதழில் வெளியிடப்பெற்ற இலக்குவனாரின் இசைப்பாடல் ஒன்றைக் காண்போம்.

முதல்நிலை

கற்றதனால் பயன் என்ன – கலைபல
நற்றமிழ்ச் செல்வர்காள் (கற்ற)

இடைநிலை

பெற்ற கல்வியின் பயன் பேரிறைவன் தாளை
உற்றவர் அன்புடன் உறுதியாய்த் தொழுவதே (கற்ற)

இறுதிநிலை

இருவினை இடும்பைகள் என்றுமே அடையா
கருவினில் வருவதும், கவலையும் இலையாம்
இருநில மிசைதனில் என்றுமே வாழ்வாம்
அருள்மிகு இறைவனை அன்புடன் தொழாவிடில் (கற்ற)

இப்பாடலின் தொடக்கத்தில்,

நட்டபண் இயற்றியவர் : சி. இலக்குவனார்

தாளம் : ஆதி இசை வகுத்தவர் : தமிழிசை மணி சங்கரனார்

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாடலின் அடியில் சுரக்குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

"நட்டபண் என்பது பண்டைய தமிழர் வழங்கி வந்தது. இப்போது பந்துவராளி என்று வழங்கிவருகிறது" என்று அடிக்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இங்கே பல்லவி என்பது முதல்நிலை என்றும் அனுபல்லவி என்பது இடைநிலை என்றும் சரணம் என்பது இறுதிநிலை என்றும் இனிய தமிழில் ஆக்கியளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்-தக்கது.

இலக்குவனாரின் கவிதைப் பணியை மேலும் விரிவாகக் கூற முற்பட்டால், தனி ஒரு நூலாகவே அமைந்துவிடும். பள்ளிப் பருவத்திலிருந்தே கவிதைப் படைப்பில் ஈடுபட்டுப் பல்வேறு வடிவங்களில் பன்முகப் பாங்கான உள்ளடக்கங்களில் கவிதைகளை அவர் ஆக்கியளித்துள்ளார். பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் 'தமிழின் வெற்றி' என்னும் தலைப்பில் ஒரு காப்பியம் படைக்க முனைந்தார். சில பக்கங்கள் எழுதிய பின்னர் உடல்நலக் குறைவுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் புகழுடல் எய்தினார். "தமிழின் வெற்றி" என்னும் காப்பியத்தைத் தமிழுலகு பெற முடியாமல் போய்விட்டது. இலக்குவனாரின் கொள்கைகள் பின்பற்றப்படுமாயின் தமிழின் வெற்றியை உலகு போற்றும் என்பது உறுதி.

# 4
# இதழாசிரியர்

"எழுதுதற்கு ஏடும் பேசுதற்கு மேடையும் எப்போதும் வேண்டும் தமிழ் பரப்ப" என்பது இலக்குவனார் அடிக்கடி கூறிவரும் முழக்கமாகும் தமிழ் மொழியின் சிறப்பையும் இலக்கியப்பரப்பையும் தமிழர்க்கு ஏடுகளின் (இதழ்களின்) வாயிலாகப் பரப்புவதும் மேடைகளில் பொழிவுகளின் மூலம் எடுத்துரைப்பதுமே தமிழர் உள்ளத்தில் தமிழின் மீது ஈடுபாட்டையும் தமிழ் இலக்கியத்தில் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் என்று இலக்குவனார் உறுதியாக நம்பினார் தமது பள்ளிப்பருவத்திலேயே திருக்குறள் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். திருவையாறு புலவர் கல்லூரி மாணாக்கனாக இருந்தபோதே பெரியார் நடத்திவந்த 'குடியரசு' இதழில் கட்டுரைகள் எழுதியுள்ளார். ஆங்கிரச வருடம் ஐப்பசி மாதம் ஏழாம் நாளிட்ட (22-10-1932) 'குடியரசு' இதழில் "தொழிலாளர்களே தூங்காதீர்கள்" என்னும் தலைப்பில் உணர்வு செறிந்த கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். 'தோழர் சி. இலக்குவன்' என்னும் பெயரில் அக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. 'இந்துநேசன்', 'தமிழ்ப்பொழில்' முதலான பல இலக்கிய இதழ்களில் அவர் இலக்கியக்கட்டுரைகள் எழுதியுள்ளார்

## 'சங்க இலக்கியம்' - வார இதழ்

இதழ்களில் எழுதிவந்த இலக்குவனார், இதழாசிரியராக மாறியது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வு ஏற்பட்டமையாலேயே எனலாம். திருநெல்வேலி ம.தி.தா. இந்துக்கல்லூரியில் இலக்குவனார் பணிபுரிந்து வந்தபோது அந்தக் குறிப்பிடத்தக்க திருப்பம் ஏற்பட்டது. நெல்லை, பேட்டையில் இலக்கியக்கூட்டங்கள் நடப்பது வழக்கம். ஒருமுறை வட்டத்தொட்டிக் குழுவினர் கூட்டம் நடத்தியபோது வழக்கமாக அவர்கள் முழங்கும் முழக்கமாகிய "கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்" என்னும் முழக்கத்தை

எழுப்பினர். அதன்பின் புதியதாக வேறொரு முழக்கம் ஒன்றும் அவர்களால் முழங்கப்பட்டது. அதுதான் "சங்க இலக்கியத்தைத் தூக்கி வங்கக் கடலில் எறிவோம்" என்னும் முழக்கம். கூட்டத்தில் கூடியிருந்த மக்களும் இம்முழக்கத்தின் பொருந்தாமையை அறியாது இதனையும் முழங்கிவிட்டனர். அக்கூட்டத்தில் டாக்டர் திரிமூர்த்தி என்பவரும் இலக்குவனாருடன் பணிபுரிந்துவந்த பேராசிரியர் ஆ.முத்துசிவன் என்பவரும் சொற்பொழிவு ஆற்றினர்.

தமிழரின் தொன்மையான நாகரிகச்சிறப்புக்கும், பண்பாட்டுச் செழுமைக்கும், இன்றியமையாத சான்றாக விளங்கும், சங்க இலக்கியத்தின் பெருமையை அறியாது இம்முழக்கம் எழுப்பட்டுவிட்டதே எனப் பேராசிரியர் இலக்குவனார் பெரிதும் மனம் பதைத்தார். அவர் பெற்ற உணர்வுக்குமுறலை அவரது சொற்களாலேயே காண்போம்.

"இயற்கையையும் மக்கள் வாழ்வையும் அடிப்படையாகக் கொண்டு விளங்கும் சங்க இலக்கியமாம் தமிழர் கருவூலத்தைக் கடலில் கொட்டவேண்டுமென்று சிலர் கூறுதலும் அதனைத் தமிழர்களே வரவேற்றலும் என்ன பேதைமை? சங்க இலக்கியத்தைப் பற்றி மக்கள் அறியுமாறு செய்தலே என் கடனாகும் என்று கருதினேன். கம்பரின் அன்பர்கள் "கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்" என்ற முழக்கத்தைக் கொண்டிருந்தனர். "சங்கத் தமிழ் பாடித் தமிழர் புகழ் வளர்ப்போம்" என்ற முழக்கத்தை யான் மேற்கொண்டேன். 'சங்க இலக்கியம்' என்னும் பெயருடன் வார ஏடு ஒன்று தொடங்கினேன். சங்க இலக்கியப்பாடல்களுக்கு விளக்கமும் சங்ககாலத் தமிழ்மக்களின் வரலாற்றுச் செய்திகளும் தாங்கிவெளிவந்தது. மாணவர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் தமிழ் எழுச்சி உண்டாக அவ்வேடு பெரிதும் துணைபுரிந்தது. சங்க இலக்கியம் பற்றி ஏனைய இதழ் ஆசிரியர்களும் கற்றவர்களும் எண்ணத் தொடங்கினர். புலவர்கட்கு மட்டும் அறிமுகமாயிருந்த சங்க இலக்கியம் பொதுமக்கள் முன்னிலையிலும் வரத்தொடங்கியது. 'இரும்புக்கடலை' என இகழப்பட்ட பாடல், இன்சுவை அமுதாகக் கருதப்பட்டது." (எ.வா.போ.பக்.)

மேற்கண்டவாறு தமது தன்வரலாற்றுநூலில் குறிப்பிடும் இலக்குவனார் 'சங்க இலக்கியம்' எனும் வார ஏட்டைத் தொடங்கிய காலத்தைக் கூறவில்லை. அவ் வார ஏட்டின்

இதழ்கள் அனைத்தும் கிடைக்கப்பெற்றில. எனினும் கிடைத்துள்ள இதழ்களின் அடிப்படையில் நோக்கும்போது 1945-ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி அல்லது 1946-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இவ்விதழ் தொடங்கப் பெற்றிருத்தல் வேண்டும். இவ்விதழ் குறித்த விளம்பரம் புதுமையான முறையில் இவ்விதழிலேயே பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

---

**இலக்கியங்களில் சிறந்தது சங்க இலக்கியமே**

ஆசிரியர் உதவியின்றி அஞ்சல் வழியாகப் படிக்கலாம்.
வாரம் ஒரு பாட்டு. இனிய எளிய முறையில் கற்கலாம்.

அஞ்சல் செலவு உட்பட ஆண்டுக்கட்டணம் ரூ.6–0–0
விவரங்கட்கு இரண்டணாத் தபால் தலையுடன் எழுதுக.

வித்துவான் சி. இலக்குவன், எம்.ஓ.எல்.
தமிழ் விரிவுரையாளர்,
இந்துக்கல்லூரி, திருநெல்வேலி.

---

**சங்க இலக்கியம் - அஞ்சல்வழிக் கல்வி**

இந்த விளம்பரம் பல உண்மைகளைத் தெளிவுறப் புலப்படுத்துகிறது. இன்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னால், அஞ்சல்வழிக் கல்வித்திட்டம் அரும்பாத காலத்தில், இலக்குவனார் அத்தகைய கல்விமுறையின் தேவையை உணர்ந்துள்ளார். இவ்விளம்பரத்தில் தமது வீட்டுமுகவரியை வழங்காமல், கல்லூரி முகவரியையே அளித்துள்ளதால், தமது இதழ் முயற்சி தமது கல்விப் பணியின் ஒரு பகுதி என்றே இலக்குவனார் கருதியுள்ளார். எனவே எத்தகைய வணிகநோக்கமும் அவருக்கு இல்லை என்பதும் தெளிவாகிறது. சங்க இலக்கியத்தை அஞ்சல்வழிக் கற்பிக்க முனைந்த முதல் முயற்சி இலக்குவனாரின் முயற்சியே என்பதும் வரலாற்றேட்டில் பதிந்துவைக்கப்பட வேண்டிய ஒன்று. அடிப்படைக் கல்வித்தகுதி, பாடத்திட்டம், குறிப்பிட்ட கால எல்லை ஆகிய முறைசார்ந்த கல்வியைக் கல்லூரியில் வழங்கியவர் முறைசாராக்கல்வியின் தேவையை உணர்ந்து எத்தகைய ஊதியமும் கருதாமல் ஒரு திறந்தவெளிக் கல்விநிறுவனம் போலத் தமது இதழ்ப்பணியை நடத்தியுள்ளார் என்பது தமிழர் நன்றியுணர்வுடன் எண்ணிப்பாராட்ட வேண்டிய ஒன்றாகும்

## சங்க இலக்கியச் சொல்லோவியங்கள்

'சங்க இலக்கியம்' வாரவெளியீடாக வாரம் தோறும் வெளிவந்ததெனினும் இதழாகப் பதிவுபெறவில்லை. ஏட்டின் முகப்பில் தமிழ் உணர்ச்சியூட்டும் முழக்கங்கள் அமைந்தன. மாமூலனாரின் முப்பது பாடல்களையும், இதழுக்கு ஒரு பாடல் வீதம் வெளியிட்டு, அப்பாடலின் அரும்பதவுரை, பொழிப்புரை ஆகியவையும் வழங்கப்பட்டு பாடலின் திரண்ட பொருள் அவ்வாறே வழங்கப்படாமல் நாடகமாக அல்லது சிறுகதைவடிவில் வழங்கப்பட்டது. ஒவ்வொரு பாடலுக்கும் ஆராய்ச்சிக்குறிப்பும் வழங்கப்பட்டது. எடுத்துக்காட்டுக்கு 21-ஆம் பாடலைக் காண்போம். "சில நாள் பொறுத்திருப்பாய்" என்னும் தலைப்பிலமைந்த இப்பாடலைப் பின்வருமாறு விளக்குகிறார்.

தொடக்கத்தில் பாடலின் சூழலமைவை விளக்கி-விடுகிறார். அதன்பின் தலைவிக்கும் தோழிக்கும் உரையாடல் நடப்பதாக அமைத்துள்ளார்.

தலைவி : தோழி, நம் காதலர் இப்பொழுது இங்கு வரவில்லையே?

தோழி : எவ்விதம் வருதல் கூடும்? நம் அன்னைதான் அவர் வருகையை எவ்விதமோ அறிந்துவிட்டாள் போலிருக்கிறதே.

தலைவி : அப்படித்தான் தோன்றுகிறது. தலைவர்க்கும் இதைக் குறிப்பால் உணர்த்தினேன்.

தோழி : அவர் என்ன கூறினார்?

தலைவி : அவர் கூறுவது என்ன? 'இங்கிருந்து இனி வருந்தவேண்டாம்.' நான் அழைத்துக்கொண்டு போய்விடுகிறேன். என்றார்.

தோழி : அப்படியானால் புறப்பட்டுப் போய்விட வேண்டியதுதானே?

தலைவி : நாணம்-உயிரினும் சிறந்த நாணம்-தடை செய்கின்றது.

தோழி : நாணினும் குற்றமற்ற கற்புச் சிறந்தது என்பதை அறியமாட்டாயா?

இவ்வாறு, இந்த உரையாடல் தொடர்கிறது. எளிய தொடர்களால், நாடகநிகழ்ச்சி போன்று பாடலை

வழங்குவதால் ஓரளவு எழுத்தறிவு உடையோரும் சங்க இலக்கியத்தைச் சுவைத்து மகிழமுடிகிறது புலவர்களுக்கு மட்டுமே உரியதாகத் திகழ்ந்த சங்க இலக்கியத்தைப் பொதுமக்களுக்கு உரியதாக முதன்முதலில் வழங்கிய சிறப்பு இலக்குவனார்க்கே உரிய ஒன்று என்பதை அவரது 'சங்க இலக்கியம்' எனும் வாரவெளியீடு புலப்படுத்துகிறது. சங்க இலக்கியங்களை ஏட்டுச் சுவடிகளிலிருந்து அச்சுப் பதிப்பாக்கி அனைவர்க்கும் வழங்கிய பெருமை சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாதையர் முதலிய அறிஞர்களுக்கு உரியது. அவற்றைப் புலவரிடமிருந்து பொதுமக்களுக்கு இதழ் மூலம் அறிமுகப்படுத்திய அருஞ்செயல் இலக்குவனார்க்கு உரிய ஒன்று.

## 'இலக்கியம்' - திங்களிருமுறை இதழ்

1947-ஆம் ஆண்டு ஆகச்டுத் திங்கள் நெல்லையிலிருந்து விருதுநகருக்குத் தமிழ்த் துறைத்தலைவர் பொறுப்பேற்கச் சென்றுவிட்ட இலக்குவனார். "இலக்கியம்" என்னும் பெயரில் பதிவு செய்துகொண்டு திங்களிருமுறை இதழ் நடத்தினார். இவ்விதழில் நாவலர் ச.சோமசுந்தரபாரதியார் அவர்களின் தன்வரலாறு தொடர்கட்டுரையாக வெளியிடப் பெற்றது. தமிழிலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு, குறுக்கெழுத்துப் போட்டி நடத்தியது இவ்விதழின் மற்றொரு சிறப்பு எனலாம்.

சங்க இலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவை பற்றிய சுவைமிக்க விளக்கக் கட்டுரைகள் இதழ்தோறும் வெளிவந்தன. கலைவாணர், எம்.கே.தியாகராச பாகவதர் ஆகியோர் கைது செய்யப்பட்டபோது அக் கலைஞர்களை ஐயத்தின்பேரில் கைது செய்யலாகாது என அரசுக்கு அறிவுறுத்தித் தலையங்கம் வெளிவந்தது. 'சபாபதி' என்னும் திரைப்படத்தில் தமிழாசிரியர் கோமாளியைப் போலக் காட்டப்பட்டதையும் 'இலக்கியம்' கடுமையாகக் கண்டித்துத் தலையங்கம் எழுதியது பாகவதர் சிறையிலிருந்து விடுதலை பெற்றபின் சொந்தமாக எடுத்த திரைப்படத்திற்கு 'ராஜமுக்தி' என்று வடமொழிப்பெயர் வைத்ததையும் 'இலக்கியம்' கடுமையாகக் கண்டித்து எழுதியது. சுருக்கமாகச் சொன்னால் "கெடல் எங்கே தமிழின் நலம் அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க' என்பதே 'இலக்கியம்' இதழின் பணியாக இருந்தது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மட்டுமின்றி,

இலக்கிய ஆர்வலர் அனைவர்க்கும், ஒரு சுவைமிக்க இலக்கியவிருந்தாக, 'இலக்கியம்' திங்களிருமுறை இதழ் திகழ்ந்தது எனலாம்.

## 'திராவிடக் கூட்டரசு'

இலக்குவனார் 1952 பொதுத் தேர்தலுக்குப்பின் விருதுநகர் கல்லூரியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டுத் தஞ்சைக்குக் குடிபெயர்ந்தார். தஞ்சையிலிருந்து "திராவிடக் கூட்டரசு" எனும் பெயரில் தமிழில் திங்களிருமுறை இதழும் 'Dravidian Federation' என்னும் பெயரில் ஆங்கிலத்தில் திங்களிருமுறை இதழும் நடத்தினார். 'சங்க இலக்கியம்', 'இலக்கியம்' ஆகிய இரு இதழ்களும் புத்தகவடிவில் (டெம்மி 1/8) வெளிவந்தன. ஆனால் 'திராவிடக் கூட்டரசு' மலர் அளவில் (டெம்மி 1/4) வெளிவந்தது.

மாத ஊதியம் பெறும் பதவியேதும் பெறாத நிலையிலும் தமக்கென்று வழங்கப்பட்ட சொற்ப அளவிலான நிலத்தை விற்றுத்தான் தஞ்சையில் இந்த இதழ்களை இலக்குவனார் நடத்தினார் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. தமிழின் நலத்தையே தமது வாழ்வும் வளமுமாக இலக்குவனார் கருதினார் என்பதற்கு மேலும் ஒரு சான்றாக இதனைக் குறிப்பிடலாம்.

## 'குறள்நெறி'

இலக்குவனார் புதுக்கோட்டை சென்று அண்ணலார் பு.அ.சுப்பிரமணியனாருடன் இணைந்து திருக்குறள் கழகம் அமைத்தார் எனப் பார்த்தோம். அக்கழகத்தின் சார்பில் 'குறள்நெறி' என்னும் மாதவெளியீடு புத்தகவடிவில் வெளிவந்தது. திருக்குளுக்குப் புதிய விளக்கங்கள், திருக்குறள் குறித்த தவறான கருத்துகளுக்கு மறுப்பு ஆகிய அனைத்தும் இவ்வெளியீட்டில் இடம் பெற்றன. இவை அனைத்தும் இலக்குவனாரின் கைவண்ணமே.

இவைபோக 'உழைப்பால் உயர்ந்தோன்' என்னும் நெடுங்கவிதை 'கதைபொதி பாட்டு' என்னும் குறிப்பைத் தாங்கித் தொடராக வெளிவந்தது. திருவள்ளுவர் அர்த்த-சாத்திரம் முதலான வடமொழி நூல்களிலிருந்து பெற்றுக் கொண்ட கருத்துகளையே குறளில் வழங்கியுள்ளார் என்னும் வையாபுரிப்பிள்ளையின் கருத்தை மறுத்து "பொய்யா மொழியாரும் பொய்யாபுரியாரும்" என்னும் தலைப்பில்

மறுப்புக்கட்டுரை இலக்குவனாரால் எழுதப்பட்டுக் கட்டுரைத் தொடராக வெளிவந்தது. இலக்குவனார் புதுக்கோட்டையிலிருந்து ஈரோடு சென்றபின்னும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடந்த இவ்விதழ் அவர் அங்கிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டு நாகர்கோயிலுக்குச் சென்றமையால் அதன்பின் வெளியிடப்படவில்லை. 1959-இல் இலக்குவனார் நாகர்கோயிலிலிருந்தும் பணிநீக்கம் செய்யப்பட்டு மதுரை வந்துசேர்ந்தார்.

மதுரையிலிருந்து, 1963-ஆம் ஆண்டு முதல், குறள்நெறி திங்களிருமுறை இதழாகப் பதிவு செய்யப்பட்டு வெளிவந்தது. சங்க இலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றைப் பரப்புவதுடன் வேறொரு குறிக்கோளையும் இந்தக் குறள்நெறி கொண்டிருந்தது. 1965-ஆம் ஆண்டு முதல் இந்தி இந்தியாவின் ஒரே ஆட்சிமொழியாகப் பிரகடனப்படுத்தப்படப் போகிறது என்பதைத் தமிழர்க்கு உணர்த்தி அனைத்து மொழிகளுக்கும் சமநிலை வழங்குமாறு அரசை வலியுறுத்துவதும் இந்தக் குறள்நெறியின் மற்றொரு குறிக்கோளாக இருந்தது.

"குறள்நெறியில் மக்கள் வாழ்ந்தால், அரசியல் நடந்தால், ஆட்சி செய்தால், மக்களின் அனைத்துத் துன்பங்களும் அகன்று விடும். மக்களைக் குறள்நெறியில் வாழச் செய்து தமிழைப் போற்றிடத் தூண்டுவதே குறள்நெறியின் நோக்கமாகக் கொள்ளப்பட்டது" (எ.வா.போ.பக்.238) என்று இலக்குவனார் தமது தன்வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் குறள்நெறி வெளியீட்டைத் தொடங்கிவைத்தார். "பேராசிரியர் இலக்குவனார் இரண்டு அரிய தொண்டுகள் செய்துள்ளார்; ஒன்று தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகுக்கு அளித்தது; இரண்டு குறள்நெறியைப் பரப்பவும் தமிழைக் காக்கவும் இக்குறள்நெறி இதழைத் தொடங்குவது; இவற்றால் இவர் பிறவிப் பயன் பெற்றுவிட்டார்." என்று வெளியீட்டுவிழாவில் கி.ஆ.பெ பேசினார்.

தமிழ்நாட்டின் முன்னணிக் கவிஞர்கள், பேராசிரியர்கள் அனைவரும் குறள்நெறியில் கவிதைகளையும் கட்டுரை-களையும் எழுதினர். மேடை வலசு சி. சிதம்பரனார் மொழியியல் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றினைத் தொடர் கட்டுரையாக எழுதிவந்தார். இலக்குவனாருடன் தியாகராசர் கல்லூரியில் பணிபுரிந்துவந்த ஆங்கிலப் பேராசிரியர் வீ.ஒப்பிலி 'திருக்குறளில் உருவகங்கள்' எனும் தலைப்பிலும்

பின்னர் ‘திருவள்ளுவரும் சேக்சுபியரும்’ என்னும் தலைப்பிலும் தொடர்கட்டுரை வழங்கிவந்தார். பேராசிரியர் தமிழண்ணல் ‘முருகன் என்னும் தொன்மம்’ குறித்துக் குறள்நெறியில் எழுதிவந்த தொடர்கட்டுரை பலரால் பாராட்டப்பட்டது பேராசிரியர் மு. வரதராசனார் இத்தொடர் கட்டுரையைப் பாராட்டி மடல் விடுத்திருந்தார். பேராசிரியர் அ. சங்கரநாராயணன் ‘அறிஞர் அண்ணாவுக்கு நெஞ்சுவிடுதூது’ என்னும் தூது இலக்கியத்தைப் படைத்துக் குறள்நெறியில் தொடர்கவிதையாக வெளியிட்டார். சுவையும் பயனும் மிக்க விவாத அரங்கங்கள் குறள்நெறியில் வெளிவந்து அனைவர் கவனத்தையும் கவர்ந்தன. அவற்றுள் ஒன்று, ‘இந்தியால் தமிழ் கெடுமா?’ என்பதாகும். எவ்வித அரசியல் சார்பும் அற்ற அன்பர் பலர் இவ்விவாத அரங்கில் தமது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர். திருவள்ளுவர் கூறிய அரசியல் கருத்துகள் ‘அன்றைய முடியாட்சிக்கே பொருந்தும்’ எனவும் ‘இன்றைய குடியாட்சிக்கும் பொருந்தும்’ எனவும் இருவேறுபட்ட கோணங்களில் பலர் தமது கருத்துகளைத் தெரிவித்தனர். அன்பர்களை ஆற்றுப்படுத்தும் சில இயக்கங்களும் குறள்நெறியின் மூலம் நடத்தப்பட்டன. “வாழ்வின் எல்லா நிலைகளிலும் வள்ளுவர் வகுத்த குறள்நெறியையே பின்பற்றுவேன்” என உறுதிகூறிக் கையொப்பமிட்டனுப்புபவர்கள் குறள்நெறி இயக்கத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு அவர்களது பெயர்கள் குறள்நெறி இதழில் வெளியிடப்பட்டன. ‘பிறமொழிச் சொற்களைக் கலவாது தூய தமிழிலேயே பேசுவேன்’ என உறுதி கூறுபவர்கள் தமிழ்க் காப்புத் தொண்டர் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவர்களது பெயர்கள் முகவரிகளுடன் குறள்நெறி இதழில் வெளியிடப்பட்டன. புலவர்மணி இளங்குமரன் ‘சிதைந்த வாழ்வு’ என்னும் தலைப்பில் தொடர்கதை எழுதினார். இலக்குவனாரின் மாணவமணிகள் சிவக்கண்ணன், நா. காமராசு, கா. காளிமுத்து, வீ.முத்துச்சாமி, பீ.மு.அபிபுல்லா, ச. நவநீதகிருட்டிணன், இ. மறைமலை (இந்நூலாசிரியர்) என ஓர் இளம் எழுத்தாளர் அணியே குறள்நெறியைத் தமது சிந்தனைகளின் அரங்கேற்று மேடையாக்கிக் கொண்டது.

## குறள்நெறி-தமிழன்பர் கையேடு

*1963-ஆம் ஆண்டிலிருந்து வெளியாகிய குறள்நெறி,* **தமிழ்** *படித்த, படிக்கும் அனைவரின் கையேடு எனக் கருதும்* **நிலை**

உருவாயிற்று. 1965-ஆம் ஆண்டு நடந்த மொழிப்போரில் இலக்குவனார் கைது செய்யப்பட்டுப் பின் விடுதலையாகிய காலக்கட்டத்தில் குறள்நெறி முழுமையும் மொழிப்போர் குறித்த ஏடாக விளங்கியது. வாசகர் கடிதத்தில் ஓர் அன்பர் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

"ஐயா, காந்தியடிகள் அக்காலத்தில் நடத்திவந்த 'அரிசன்' என்னும் இதழில் அரிசனங்களைப் பற்றிய செய்திகள் இடம் பெறுவதினும் காங்கிரசுக்கட்சியின் போராட்டங்களைப் பற்றிய செய்திகளே மிகுந்திருக்கும் என்று கூறப்படுவதுண்டு. நம் குறள்நெறியிலும் திருக்குறளைப் பற்றிய செய்திகளைக் காட்டிலும் மொழிப்போர் பற்றிய எழுத்துகளே மிகுந்துள்ளன. இதனைத் தங்கள் கவனத்திற்குக் கொணரவிரும்புகிறேன்."

தமிழ் வழிக் கல்விக்காகப் பெருநடைப்பயணம் ஒன்று இலக்குவனாரால் திட்டமிடப்பட்டு பயணம் தொடங்குவதற்கு முன்னரே இலக்குவனார் கைது செய்யப்பட்ட செய்தியைச் சென்ற இயலில் குறிப்பிட்டிருந்தோம். இரண்டரை மாதங்கள் இலக்குவனார் சிறையில் இருந்தபோது அவருடைய மைத்துனர் திரு தி.உமையருள்செல்வன், புதல்வர்கள் ஆகியோர் இதழையும் அச்சகத்தையும் கவனித்துக் கொண்டனர். இலக்குவனாருடைய மாணவர்கள் பலரும் அவ்வப்பொழுது வந்து தமது ஒத்துழைப்பைத் தெரிவித்து ஊக்கமூட்டினர் புலவர்மணி இரா. இளங்குமரன், அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரியர்கள் வீ.ப.கா.சுந்தரம், பொன். தினகரன் ஆகியோரும், உளவுத்துறை இத்தகையோரைக் கவனிப்பதறிந்தும் அஞ்சாது 'குறள்நெறி' அச்சகத்திற்கு வந்துசென்றனர்.

## குறள்நெறி-நாளிதழ்

இலக்குவனார் சிறையிலிருந்து மீண்டதும் முன்னிலும் முனைப்பாக இதழைக் கவனித்துக்கொண்டார். அவரது 55-ஆம் பிறந்தநாள் மதுரைத் தமுக்கம் திடலில் மாணவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அறிஞர் அண்ணா வந்திருந்து மாணவர்கள் அன்புடன் திரட்டித் தந்த நிதியாக உருபா பத்தாயிரம் கொண்ட பணமுடிப்பை வழங்கினார். இந்தத் தொகை பேராசிரியரின் பத்துமாதச் சம்பளத் தொகையினும் குறைவாக உள்ளதே என அண்ணா அப்போது கவலையுடன் கூறினார். பேராசிரியர் இத்-

தொகையைத் தமது குடும்பச் செலவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மேலும் சில அச்சுப்பொறிகளை வாங்கி இன்னும் பெரிய இடத்தை வாடகைக்குப் பெற்று குறள்நெறியை நாளிதழாக நடத்தினார். இந்திய வரலாற்றில் ஒரு மொழிப் பேராசிரியர் மொழிநலன் கருதி நாளிதழ் நடத்தினார் என்றால் அந்தப் பெருமை இலக்குவனாரையே சாரும். ஆங்கில நாளிதழ் படித்தால் மாணவர்கள் பிழையற ஆங்கிலத்தை எழுதலாம் எனும் நிலையிருப்பதைப் போல் தமிழ் நாளிதழ் படித்தால் தமிழைப் பிழையற எழுதும் திறன் கைகூடவேண்டும் என்று இலக்குவனார் கருதினார்.

## பேராசிரியர் செய்த பெரும்புரட்சி

தொடக்கத்தில் தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் நாளிதழ்கள் நடத்தலாம் எனத் திட்டமிட்டார். 29-5-1966 ஆம் நாளில் தமிழ் நாளிதழைக் கலைஞர் மு.கருணாநிதி அவர்களைக் கொண்டு வெளியிடுவதெனவும் ஆங்கில நாளிதழை அறிஞர் அண்ணா அவர்களைக் கொண்டு வெளியிடுவது எனவும் கருதியிருந்தார். ஒரே நேரத்தில் இரண்டு நாளிதழ்களை நடத்துதல் எத்தகைய பொருளாதாரப் பின்புலமும் அற்ற தம்மால் இயலாது என்பதை உணர்ந்த நிலையில் ஆங்கில நாளிதழை வெளியிடும் திட்டத்தைக் கைவிட்டார். எனினும் ஒரு தமிழ்ப் பேராசிரியர் ஆங்கிலத்தில் நாளிதழ் வெளியிடத் திட்டமிட்டதே பெரும்புரட்சி என்று பலர் எண்ணினர்.

---

**"குறள் நெறி"**

தெருவெல்லாம் செந்தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யவும்,
தீந்தமிழ்ப்பெருமைகளைத் திக்கெட்டும் பரப்பவும் உள்நாட்டுச்
செய்திகளையும் அயல்நாட்டுச் செய்திகளையும் தாங்கி நாளிதழ்கள்
தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவருகின்றன.

தொடக்கநாள்
வைகாசி கசு (29–5–66)

தொடங்கி வைப்பவர்.
தமிழ் : கலைஞர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ.

ஆங்கிலம் : அறிஞர் அண்ணா எம்.ஏ.;எம்.பி

வாழ்த்துரை வழங்குகின்றவர்கள்;
திரு. கே.ஏ. மதியழகன் எம்.எல்.ஏ.

பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ; எம்.எல்.சி

தமிழ், ஆங்கிலம் ஒவ்வொன்றும்
தனி இதழ் 5 காசு

ஒவ்வொன்றுக்கும்
திங்கள் கட்டணம் உ ரூ.2.50

ஊர்கள் தோறும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் வேண்டப்படுகின்றனர். தமிழியக்கத்தின் சார்பில் வெளியிடப்படும் இவ்விதழ்கள் தமிழர் அனைவருக்கும் உரியன.

விவரங்கட்கு : டாக்டர் சி. இலக்குவனார் "குறள்நெறி" மதுரை 5.

---

மேற்கண்ட விளம்பரம் 1-5-1966 நாளிட்ட குறள்நெறி இதழின் பின் அட்டையில் வெளிவந்தது ஆனால் 1-6-1966 நாளிட்ட குறள்நெறி இதழில் தமிழ் நாளிதழ் வெளி-வருவதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. தொடங்கி வைப்பவர் என்று திரு. மு. கருணாநிதியின் பெயர் மட்டுமே இடம் பெற்றுள்ளது. 15-6-1966-ஆம் நாளிட்ட குறள்நெறி இதழில் 19-6-1966-ஆம் நாள் வெளியீட்டுவிழா நடைபெறு-வதாகவும் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் தலைமையில் திரு.மு.கருணாநிதி வெளியிடுவதாகவும் தி.மு.க. இந்தியப் பொதுவுடைமைக்கட்சி, இந்தியப் பொதுவு-டைமைக்கட்சி (மார்க்சிச்டு), சுதந்திராக் கட்சி, சோசலிச்டுக் கட்சி, பார்வார்டு பிளாக்கு, முசுலிம் லீகு, தமிழரசுக் கழகம் ஆகிய கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் கலந்து கொள்வ-தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்ட நாளில், இங்குக் குறிப்பிடப்பட்ட அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் வந்து கலந்துகொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குறள்நெறி நாளிதழ், தமிழ்நாடெங்கும் 3500 படிகள் விற்றது. அந்த விற்பனைத் தொகை ஒழுங்காக வந்து சேர்ந்திருந்தால் நல்ல வருவாய் கிட்டியிருக்கும். ஆயின் விற்பனையாளர்கள் தங்களுக்கு விற்பனையில் கிடைத்த வருவாயை அனுப்பாமல் தொடர்ந்து இதழை மட்டும் எதிர்பார்த்தவண்ணம் இருந்தனர். இதழியல் வரலாற்றில் ஒரு சாதனையாக, ஒரு பேராசிரியரால் தொடங்கப்பட்ட இதழ், விற்பனையாளர்களின் ஒத்துழைப்பின்மையால் இழப்பைச் சந்தித்து நிறுத்தப்பட்டது. 1967ல் ஆட்சி மாறியது. பேராசிரியர் மாநிலக் கல்லூரிக்கும் பின்னர் உசுமானியாப் பல்கலைக்கழகத்திற்கும் பணியாற்றச் சென்று அதன்பின்

நாகர்கோயில் இந்துக்கல்லூரியில் முதல்வராகப் பணிபுரிந்து 1970-இல் ஓய்வு பெற்றார். இடையில் 1968-69 ஆண்டுகளில் அவரது புதல்வர் மறைமலை குறள்நெறி இதழைப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருந்தார்.

1970 முதல் பேராசிரியர் இலக்குவனார் குறள்நெறியை மீண்டும் நடத்தினார். எனினும் முன்புபோல் தக்க ஆதரவு கிட்டவில்லை. அரசியலில் ஈடுபட்டுத் "தூய்மை" என்னும் தலைப்பில் அரசியல் இதழ் ஒன்று நடத்த முனைந்தார். ஓயாது உழைத்த அந்தப் பேராசிரியப்பெருமகனைத் தமிழ்நாடு தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளாத சூழலில் உடல்நிலை சீர்குலைந்து புகழுடல் எய்தினார்.

## தலையங்கவுரைகளும் இலக்குவனாரின் பல்துறைப்புலமையும்

பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் அரசியல், பொருளியல், வணிகவியல், எனப் பல துறைகளிலும் கூர்மையான பார்வையும் ஆழ்ந்த ஆய்வுத்திறனும் கொண்டவர் என்பதனை அவரது தலையங்கவுரைகள் எடுத்துக்காட்டுகின்றன.

பாகிசுதானின் வரம்பு மீறல்களால் போர்மேகங்கள் சூழ்ந்த நிலையில் இலக்குவனார் தமது தலையங்கவுரையில் பின்வரும் கருத்தைத் தெரிவிக்கிறார்.

***"காலப்போக்கில் பரதகண்டமும் வல்லரசுகளுள் ஒன்றாகிவிடும் என்று அஞ்சிச் சில வல்லரசுகள் – நம்முடன் நட்புக்கொண்டுள்ளன போன்று நடந்தவைகள் – "சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை" யாய் விட்டன. ஆயினும் நம்நாட்டுப் போர்மறவர்கள், படைத்தலைவர்கள், புரந்தார் கண் நீர் மல்கச் செய்தும் பகைப்படையை வென்று நாட்டுக்குப் புகழ் தேடிக் கொடுத்துள்ளனர். தனித்துநின்றே எவரையும் வெல்லலாம் என்ற துணிவு நமக்குப் பிறந்துள்ளது. "பிறரை நம்பிவாழ்தல் பெரிதும் தீதே" என்ற உண்மையையும் உணர்ந்துள்ளோம்."*** (குறள்நெறி 1-11-1965)

பேராசிரியரின் கருத்துரை, இன்றும் பொருத்தமாக இருப்பதைக் காணலாம்.

***"நாணயமதிப்புக் குறைப்பு" என்னும் தலைப்பில் அமைந்த மற்றொரு தலையங்கம் பேராசிரியரின் பொருளியல் கோட்பாட்டைப் புலப்படுத்துகிறது.***

"*நாணயமதிப்பைக் குறைத்தது நாட்டின் நன்மையைக் கருதியே என்று ஒரு சாராரும், நாணயமதிப்புக் குறைப்பால் நன்மை விளையாதென்று ஒரு சாராரும் பொருளியல் வல்லுநர்களிடையே கூறிக்கொண்டுள்ளனர். பொருளியல் வல்லுநர்தம் கூற்றுகள் ஏட்டளவில் ஆராய்ச்சிக்குத்தான் துணைபுரியுமேயன்றி வாழ்வில் உண்மைநிலக்கு ஒத்துவராது போலும். நாணயமதிப்புக் குறைப்பால் இன்று நாம் காண்பது மக்களுக்குப் பயன்படும் இன்றியமையாத பொருள்களின் விலையேற்றம்தான். நாணயமதிப்புக் குறைப்பை நோய் தீர்ப்பதற்கு அறுவைமுறையைப் பயன்படுத்துவதோடு ஒப்பிடுகின்றனர். அவ்வாறாயின் இன்று நாடு நோய்வாய்ப்பட்டுள்ளதென்பதனை ஒப்புக் கொண்டவர்களாகின்றோம்*" (குறள்நெறி 15-6-1966)

சாதிகளின் பெயரால் கட்சிகள் தோன்றுவது மக்களாட்சிமுறைக்குப் பெருங்கேடாகும் என அன்றே பேராசிரியர் இலக்குவனார் எச்சரித்துள்ளார்.

"*இந்நிலையில் சாதிகளின் பெயரால் கட்சிகளை உருவாக்கித் தேர்தல்களில் போட்டியிட முனைவது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோலாகும். ஒவ்வொரு சாதிக்கும் ஒரு கட்சி என்று அமைத்துக்கொண்டு தேர்தலில் ஈடுபடுவாரேல் தேர்தல் களம் போர்க்களமாக மாறி நாட்டில் அமைதியும், மக்களின் நல்லுறவும் கெட்டுவிடும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. ஆதலின் சாதிகளின் பெயரால் கட்சிகள் அமைக்கவேண்டாமென அன்போடு வேண்டுகிறோம்.*" (குறள்நெறி 1-8-1965)

நம்நாட்டின் அயல்நாட்டுக் கொள்கையை மறு ஆய்வு செய்யவேண்டுமெனப் பேராசிரியர் இந்திய அரசை வேண்டுகிறார். "*நமக்கும் பாகிசுத்தானுக்கும் ஏற்பட்டுள்ள போரில் நடுநிலைக் கொள்கையுடைய நம்மைக் கைவிட்டு-விட்டன. கூட்டுச்சேர்ந்த பாகிசுத்தானுக்கே அனைத்து நாடுகளும் – ஒன்றிரண்டு நீங்கலாக – அன்பு காட்டின. நாம் வெளவால் நிலையை அடைந்துவிட்டோம். பொது-வுடைமைச் சீனரை வெல்வதற்கு உதவியாக அமெரிக்கா, பாகிசுத்தானுக்கு உதவியது. ஆனால் பாக்கிசுத்தான் அதே சீனாவின் நட்பையும் பெற்றுவிட்டது. இருநூறாண்டுகள் நம்மை ஆண்ட இங்கிலாந்தும் நம்மைக் கைவிட்டுவிட்டது. வல்லரசுகளில் உருசியா ஒன்றுதான் நடுநிலைமையாக இருப்பதுபோல் தோன்றுகிறது. ஏதோ சில சிறுநாடுகள்தான் நம்பால் பரிவு காட்டின. ஆகவே*

*பாரதகண்டத்தில் வெளிநாட்டுக் கொள்கைமுறையைச் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றிக்கொண்டு தக்க துணைவர்களைப் பெறுவதற்கு முயலல் மிக மிக இன்றியமையாதது.*" (குறள்நெறி 15-10-1965).

*இன்று பேராசிரியர் கருத்துக்கேற்ற கொள்கையை நாம் பெற்றுள்ளோம் எனலாம்.*

மதுரையில் பாழடைந்த நிலையில் அமைந்த ஒரு கட்டடத்தில் நடந்துவந்த பள்ளி திடீரெனச் சரிந்துவிழுந்து இடிபாடுகளில் சிக்கிப் பல பள்ளிச்சிறுமியர் உயிரிழந்தார்கள். இது குறித்து ஆசிரியர் எழுதியுள்ள தலையங்கத்தைப் பாருங்கள். கும்பகோணத்தில் தீவிபத்தில் சிக்கி உயிரைப் பறிகொடுத்த பள்ளிச் சிறுவருக்கும் பொருந்துவதாக இத்தலையங்கம் அமைந்துள்ளது, காலம் மாறினாலும் நாம் படும் துயரம் மாறவில்லை என்பதையே இது காட்டுகிறது.

"கலைக்கூடம் கொலைக்கூடமாய கொடுவினை

*மாடமலி கூடலம்பதியில் சரசுவதி பள்ளிக்கூடக் கட்டடம் சரிந்து எழிலுறு கலைச்செல்வியர் பலர் உயிரை எளிதே கொள்ளை கொண்ட கொடுவினை நிகழ்ச்சி உள்ளுவார் உள்ளங்களை உருக்கி வருத்துவதாகும். தேர்வுக்கு ஆயத்தம் பெறச் சென்றோர், திரும்பி வந்திலரே என்று தேம்பித் தேம்பி அழுதோர் காட்சி நினைப்பினும் நெஞ்சு பிளக்கும். தலைவாரி பூச்சூடிப் பொட்டிட்டு, அழகுற உடுத்தி அணைத்து முத்தமிட்டு 'அன்பே போய்வா' என்று அன்பு பொதிமொழி கூறச் செலவிடுத்த அன்னையர் உள்ளங்கள் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவும் இயலாது. உண்பதற்கு எடுத்துச் சென்ற உண்கலன்கள் உணவோடு ஒருபால் சிதறிக்கிடக்க உண்ணவிருந்த பச்சிளம்பாவைகள் படுபிணமாய்ப் பாரில் இடிபாடுகளுக்கிடையே பரவிக் கிடந்த துயர்மிகு காட்சியை — அம்மம்ம — நினைக்கவும் உள்ளம் அலமருகின்றது. அந்தோ அருங்கலைச் செல்வியர், அருள்மிகு ஆசிரியர், தெருள்மிகு ஆட்சித்தலைவியர் பலரை நாடு இழந்துவிட்டது. பலவகையாலும் தம்மை இன்புறுத்தும் மக்களைப் பெற்றோர் இழந்துவிட்டனர். இழந்துவருந்தும் பெற்றோர்க்கும் ஏனையோர்க்கும் எம் உளமார்ந்த ஆறுதல்—களை ஆறாத்துயரத்துடன் அறிவித்துக் கொள்கிறோம்.*"
(குறள்நெறி 15-4-1964)

துயரமிக்க நிகழ்ச்சி தம் உள்ளத்தில் ஏற்படுத்திய உணர்வையும், அவல அதிர்வுகளையும் ஒருங்கிணைத்துப் படிப்போர் உள்ளத்தை உருக்கும் வகையில், பேராசிரியர் எடுத்துரைக்கும் பாங்கு நமக்குத் திரு.வி.க.வை நினைவூட்டுகிறது.

இவ்வாறு, பேராசிரியரின் தலையங்கங்கள், காலத்துக்கும் சூழலுக்கும் பொருத்தமான சிந்தனைகளுடன், படிப்போரை மேலும் சிந்திக்கத்தூண்டும் வகையில் அமைந்த கருத்துக் கருவூலங்களாக விளங்குகின்றன. தலையங்கவுரை எழுதுவதோடு அமையாது திருக்குறள் விளக்கங்களையும் அவ்வப்போது எழுதியுள்ளார். தொல்காப்பியத்திற்கு எளிய தமிழில் அரிய ஆய்வுரையுடன் கூடிய விளக்கவுரை எழுதியுள்ளார். “தொல்காப்பிய விளக்கம்” என்னும் பெயரில், தொடர்கட்டுரையாக, குறள்நெறியில் இது வெளிவந்தது. எழுத்ததிகாரம் முழுமைக்கும் வெளிவந்துள்ளது.

தமிழ் இதழியல் வரலாற்றில் பேராசிரியர் இலக்குவனாரின் பணியும் பங்களிப்பும் மிகவும் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தனவாகும் என்பதனை அவர் நடத்திவந்த இதழ்கள் தெளிவுறப் புலப்படுத்துகின்றன.

# 5
# நூலாசிரியர்

"ஆண்டுதோறும் ஒருநூலாவது எழுதி வெளிவர-வேண்டும். நம் வயதை ஆண்டுகளைக் கொண்டு கணக்கிடக் கூடாது. நாம் எழுதிய நூல்களைக்கொண்டுதான் கணக்கிட வேண்டும்" என்று பேராசிரியர் தமிழாசிரியர்களுக்கு அறிவுரை கூறுவது வழக்கம். புலவர் கல்லூரி மாணாக்கராக இருந்த போதே 'எழிலரசி' என்னும் குறுங்காப்பியத்தை அவர் இயற்றி வெளியிட்ட செய்தியும், பல்வேறு இலக்கிய இதழ்களில் கட்டுரைகள் எழுதிய செய்தியும், பேராசிரியரின் எழுத்துத்திறத்திற்குச் சான்று பகர்வனவாகும்.

ஆசிரியப்பணியை ஊதியத்திற்குரிய ஒரு தொழிலாகக் கருதாமல் தமிழுக்குத் தொண்டாற்றக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பு என்றே இலக்குவனார் கருதிவந்தார். தமிழாசிரியர்கள் இலக்கிய இலக்கணங்களைக் கற்பிக்கும் முறைகளை உணர்த்தும் வகையில் 'தமிழ்க் கற்பிக்கும் முறை' என்னும் நூலை எழுதியுள்ளார் இதுவே இவரது முதல் உரைநடை நூலாகும். இந்நூலைப் பற்றிப் பேராசிரியர் கூறுவதைக் காண்போம்.

***"மாணவர்கள் சிறந்தோராக உருவாகுதல் ஆசிரியர்களையே சார்ந்துள்ளது. நல்ல தமிழ்ப்பற்றாளராக மாணவர்கள் வெளிவருதல் தமிழாசிரியர்களையே சார்ந்துள்ளது. தமிழாசிரியர்களில் பலர் மாணவர்கள் உள்ளங்களில். தமிழ்ப்பற்றை விதைக்கவேண்டும் என்னும் கருத்தில்லாதவராகவே காலம் கழித்தனர். மாணவனுக்குத் தமிழார்வம் உண்டாகும் வகையில் தமிழைக் கற்பிக்கும் வழிமுறையை மேற்கொள்ளாது இருந்தனர். தமிழாசிரியரின் பொறுப்பினை வலியுறுத்திக் கூறும் நோக்குடன் "தமிழ்க்கற்பிக்கும் முறை" என்று நூலொன்றினை எழுதி வெளியிட்டேன். கற்பிக்கும் முறை பற்றிய ஆங்கில நூல்களைப் படித்து, ஆங்கில நாட்டில் ஆங்கில மொழியின் நிலையை அறிந்து, தமிழ்நாட்டில் தமிழ் எவ்வாறு***

***கற்பிக்கப்படவேண்டும் என்று எழுதினேன். இந்நூலுக்கு அணிந்துரை தருமாறு தலைமையாசிரியர் சாமிநாத பிள்ளையைக் கேட்டபோது, இதனைப் படித்துவிட்டு "தமிழாசிரியர்களில் பலர் உங்கள் மீது கல்வீசுவார்கள்" என்று கூறி அதன் புரட்சித் தன்மையை வெளிப்படுத்தினார். இந்நூலுக்கு 'இந்து' வில் நல்ல மதிப்புரை வெளிவந்திருந்தது. அதன்பின்னர் நாட்டில் அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. பல கல்விநிலையங்கள் அஞ்சல் வழியாகப் பெற்றன."*** (எ.வா.போ.பக்.127-128)

பேராசிரியரின் முதல் நூலே தமிழாசிரியர்களுக்கு வழிகாட்டும் வகையில் அமைந்தமை அவர் ஆசிரியப் பணியை ஓர் இயக்கமாகவே கருதி உழைத்தார் என்பதற்குச் சான்றாகும். இந்நூலில் "தமிழர் தமிழ் உணர்வு பெறாததற்கு, மொழி கற்பிப்போர், பழங்கால ஆசிரியர்களைப் போல முழுமையும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல் பணிபுரிதலும் புதிய அணுகுமுறைகளை மேற்கொள்ளாமையுமே காரணம் ஆகும்" என இலக்குவனார் சுட்டிக்காட்டியுள்ளார் எனவும் "தமிழில் உரைநடை, செய்யுள், இலக்கணம் ஆகியவைகளைக் கற்பித்தற்குப் புதிய கோட்பாடுகளை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்" (த.வ.இ.ப.பக்.214) எனவும் ஆய்வாளர் கா. மாரிமுத்து தெரிவிக்கிறார்.

விருதுநகரில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது 1949-ஆம் ஆண்டில் திருக்குறளின் அமைச்சியலை (அமைச்சியல்-நூறு குறட்பாக்கள்) ஆய்ந்து "அமைச்சர் யார்" என்னும் தலைப்பில் நூல் இயற்றி வெளியிட்டார். இது பற்றிய பேராசிரியரின் குறிப்பு இங்கு நோக்கத்தக்கது.

"திருக்குறளை மக்களிடையே பரப்புதற்கு விரும்பிக் கவர்ச்சியான தலைப்புக்களுடன் வெளியிடத் திட்டமிட்டு, அமைச்சியலை, 'அமைச்சர் யார்' என்னும் தலைப்பில் விளக்கவுரையுடன் வெளியிட்டேன். இதற்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் அணிந்துரை அளித்திருந்தார்கள். இப்புத்தகம் வெளிவந்ததும் பெயரைக் கண்ட சென்னை மாநில அரசு, அமைச்சர்களைக் குறைகூறி இடித்திருக்கக்கூடும் என்றும் கருதிவிட்டது. புத்தகத்தை அச்சிட்ட அச்சகத்திற்குக் கம்பிச்செய்திவழியாகப் புத்தகத்தின் படி ஒன்று அனுப்ப ஆணை பறந்துவந்தது. புத்தகம் போய்ச் சேர்ந்தபிறகு படித்துப் பார்த்து ஏமாற்றமுற்றனர். அப்பொழுது ஆட்சியிலிருந்த அமைச்சர்களைப்பற்றி ஏதும்

கூறப்படவில்லை என்பதை அறிந்துகொண்டனர். அப்பொழுது முதலமைச்சராயிருந்த குமாரசாமி இராசா அவர்கள் தமக்கென ஒரு படி அனுப்பச்சொல்லி விரும்பிப் பெற்று அதைப்படித்துவிட்டுப் பாராட்டுரையொன்றும் எனக்கு விடுத்திருந்தனர். அவர்கட்கு அனுப்பப்பட்ட புத்தகப்படி அவர்களால் இராசபாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள காந்தி இல்ல நூல்நிலையத்தில் இன்றும் உள்ளது. எவரும் சென்று காணலாம்."

இலக்குவனார் அன்றைய அரசினரால் ஒரு புரட்சியாளராகக் கருதப்பட்டுள்ளார். எனவே அவர் எழுதிய புத்தகம் உடனடியாக அரசினரால் ஆயப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியவரலாற்றில், வெளியானதும் அரசினரால் உடனே ஆராயப்பட்டது இப்புத்தகம் என்பதால், இலக்குவனார் அன்றைய அரசால் மிகவும் கவனத்துக்குரிய ஒருவராகக் கருதப்பட்டிருந்தது தெளிவாகிறது.

இந்நூலுக்குத் திரு.வி.க. அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார். 'முகவுரை' என்னும் தலைப்பில் அவர் வழங்கியுள்ள அணிந்துரை பின்வருமாறு காணப்படுகிறது:

> திருக்குறள் ஒரு சிறந்த வாழ்க்கைநூல்; தமிழில் பிறந்தது; உலகத்துக்குரியது; சாதி, மதம், நிறம், மொழி, நாடு முதலிய வேற்றுமைகளைக் கடந்துநிற்பது. இத்தகைய நூலை மக்கள் வாழ்க்கையில் மருவுமாறு செய்ய வேண்டுவது பொதுமை விரும்புவோர் கடன்.
>
> இந்நாளில் திருக்குறளுக்குப் புதுப்புது உரைகள் காணப்படுகின்றன. அவற்றுள், பொருந்தியன சிலவே. அச்சிலவற்றுள் ஒன்று தமிழ்ப்பேராசிரியர் சி. இலக்குவனார் உரை என்று கருதுகின்றேன். இவ்வுரையில் சில பகுதிகள் என்முன்னே படித்துக் காட்டப்பட்டன. அவை காலத்துக்குரியன என்று கண்டேன்.
>
> உரையாசிரியர் இலக்குவனார்க்கு எனது வாழ்த்து உரியதாக
>
> — திரு.வி.க.

விடுதலை ஆசிரியராகப் பணியாற்றிவந்தவரும் பெரியார் ஈ.வே.ரா. அவர்களின் இயக்கத்தலைவர்களில் ஒருவருமாகிய குத்தூசி சா. குருசாமி அவர்கள் இந்நூலுக்குக் கருத்துரை வழங்கியுள்ளார். அவர் வழங்கியுள்ள கருத்துரையில், "குறள்

இம்மாதிரித் தொகுக்கப்படுவது முற்றிலும் புதிய முறையே-யாகும்." எனப் பாராட்டியுள்ளார். "அமைச்சராயிருப்பவர் சொல்வன்மை, அவையறிதல், அவையஞ்சாமை, குறிப்பறிதல் ஆகிய பல பண்புகளை உடையராய் இருத்தல் அவசியம் என்பது வள்ளுவர் கருத்து. அதை நல்லமுறையில் இக்காலத்து எடுத்துக்காட்டுகளுடன் எளிய நடையில் தந்திருக்கிறார் இலக்குவனார்" என்று இந்நூலின் அமைப்புமுறையையும் இலக்குவனாரின் படைப்புத்திறனையும் விளக்கியுள்ளார்.

1952-ஆம் ஆண்டு, விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டுப் புதுக்-கோட்டை அண்ணலார் பு.அ. சுப்பிரமணியனார் நட்புப் பெற்றபின், அவரோடு இணைந்து, திருக்குறள் கழகம் அமைத்த இலக்குவனார், அவரின் உதவியால் பல நூல்-களையும் வெளியிடும் வாய்ப்பைப் பெற்றார் இலக்குவனாரின் நூல்களை வெளியிடுதற்கென்றே 'வள்ளுவர் பதிப்பகம்' நிறுவப்பெற்றது. (பின்னர் முடியரசன், க.த.திருநாவுக்கரசு ஆகியோரின் நூல்களும் இப்பதிப்பகத்தின் சார்பில் வெளியிடப் பெற்றன.) திருக்குறளை அனைவரும் ஆர்வமுடன் கற்பதற்குத் தூண்டும் வகையில் நூல்கள் வெளியிடக் கருதினார். ஓரளவு படிப்பறிவுடையோரும் புரிந்துகொள்ளும் வகையில் "திருக்குறள்-எளிய பொழிப்புரை" இலக்குவனாரால் எழுதி 1963-ல் வெளியிடப்-பட்டது. (இந்நூல் குறித்து 'திருக்குறள்-உரைநுட்பமும் ஆய்வுத்திறனும்' என்னும் தலைப்பில் அமைந்த இயலில் கூறப்படும்.)

திருக்குறள் அமைச்சியலை 'அமைச்சர் யார்' என்னும் தலைப்பில் இதற்குமுன் (1949) வெளியிட்ட இலக்குவனார், திருக்குறள் அரசியலை ஆய்வு செய்து 'எல்லோரும் இந்நாட்டரசர்' என்னும் தலைப்பில் நூல் இயற்றிப் புதுக்கோட்டை இலக்கியப்பண்ணை மூலம் (1954) வெளி-யிட்டார். பொருட்பால் முதல் நூற்றிருபது குறட்பாக்களுக்கு இந்நூலில் உரை வகுத்துள்ளார்.

'அமைச்சர் யார்?' எல்லோரும் இந்நாட்டரசர்' என்னும் இரு நூல்களையும் ஒருங்கிணைத்து, மேலும் விரிவுபடுத்தி, திருக்குறள் கூறும் அரசியல் நெறியை உலகுக்கு உணர்த்தும் வகையில் "வள்ளுவர் வகுத்த அரசியல்" என்னும் தலைப்பில் 1968-ஆம் ஆண்டு சென்னை மாநிலக்கல்லூரியில் பணிபுரிந்து கொண்டிருந்த போது வெளியிட்டார் இதில் அரசியல்,

அமைச்சியல் குறட்பாக்களுக்கும், அங்க இயல் முதல் ஐம்பது குறட்பாக்களுக்கும், பதவுரையும், விளக்கவுரையும், ஆராச்சிக்குறிப்புகளும் வழங்கியுள்ளார். சாம்பா பதிப்பக வெளியீடாக வந்த இந்நூலுக்குக் கலைஞர் மு.கருணாநிதி, சிலம்புச்செல்வர் ம.பொ.சி. ஆகிய இருவரும் அணிந்துரை வழங்கியுள்ளனர்.

1971-ஆம் ஆண்டில் 'வள்ளுவர் கண்ட இல்லறம்' என்னும் நூலை இயற்றினார். இந்நூல், மீனா பதிப்பக நிலையத்தினரால் வெளியிடப்பட்டது. இந்நூலில் இன்பத்துப்பால் முழுமைக்கும் பதவுரையும் விளக்கவுரையும் தந்துள்ளார். இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணைநலம், மக்கட்பேறு, விருந்தோம்பல் ஆகிய நான்கு அதிகாரங்களையும் சேர்த்து அவற்றிற்கும் பதவுரையும் விளக்கவுரையும் தந்துள்ளார்.

1961-ஆம் ஆண்டு 'தொல்காப்பிய ஆராய்ச்சி' என்னும் நூலை இயற்றி வள்ளுவர் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிட்டார். அப் பதிப்பகம்.1962-ஆம் ஆண்டு 'பழந்தமிழ்' என்னும் இவரது மொழி ஆராய்ச்சி நூலை வெளியிட்டது.

"இலக்கியம் காட்டும் தமிழர் வாழ்வியல்-சங்க காலம்" என்னும் இவரது நூலையும் (1962) வள்ளுவர் பதிப்பகம் வெளியிட்டது.

1957-ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் காமராசரின் வாழ்க்கைவரலாற்றை எழுதிக் "கருமவீரர் காமராசர்" என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டார். இலக்குவனார் எழுதிய வாழ்க்கைவரலாற்றுநூல் இது மட்டுமே. ஓய்வு பெற்றபின் தமது வாழ்க்கைவரலற்றை 'என் வாழ்க்கைப் போர்' என்னும் தலைப்பில் எழுதி அதன் முதல் பகுதியை வெளியிட்டார்.

நாகர்கோயிலில் பணியாற்றிக்கொண்டிருந்போது கேரளப் பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி.பட்டம் பெறுவதற்காக ஆய்வு செய்துகொண்டிருந்தார். அதனை நிறைவு செய்யச் சூழ்நிலைகள் ஒத்துழைக்காததால் தமது ஆய்வை "தமிழ்மொழியில் முதல்நிலைச் சொற்களும் இடைநிலைச் சொற்களும்" ('Semantemes and Morphemes in Tamil language') என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டார்.

இவரது ஆங்கிலமொழி ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பைத் 'தமிழ்மொழி' ('Tamil Language') என்னும்

தலைப்பில் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் [illegible] வெளியிட்டது. 'சங்க இலக்கியம்' வார ஏட்டில், இவர் எழுதி வெளிவந்திருந்த மாமூலனார் பாடல்களுக்கான விளக்கங்களை இவரது மறைவுக்குப்பின், "சங்க இலக்கியச் சொல்லோவியங்கள்" என்னும் தலைப்பில் திருமகள் நிலையம் (1988) வெளியிட்டது. இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்க காலம்) என்னும் நூலை இலக்குவனார் இலக்கிய இணையம் மறுபதிப்புச் செய்தது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நூல்களின் உள்ளடக்கத்தையும் இலக்குவனாரின் எழுத்தாற்றலையும் ஓரளவு சுருக்கமாகவேனும் இங்குக் குறிப்பிடுதல் இன்றியமையாதது.

## வாழ்க்கை வரலாறு

"கருமவீரர் காமராசர்" என்னும் ஒரே ஒரு வாழ்க்கை வரலாறு மட்டுமே இலக்குவனாரால் எழுதப் பட்டுள்ளது. 1956-ஆம் அண்டு நாகர்கோயில் நாஞ்சில் புத்தகசாலையால் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

***"…. திருவாளர் காமராசர் அவர்கள் எளியராய்ப் பிறந்து எளியராய் வளர்ந்து உயர்நிலையை அடைந்துள்ளார். அவர் பிறந்த சூழ்நிலையில் ஒரு நாட்டின் முதலமைச்சராய் வருவதென்பது இந்நாட்டில் நினைக்கமுடியாத ஒன்று; செயற்கரும் செயலேயாகும். ஆகவே திருவாளர் காமராசர் வாழ்க்கை நம் நாட்டு இளைஞர்க்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகும் என்று கருதினோம். இந்நூலை எழுதினோம்."***

என்று இந்நூல் எழுத முனைந்தமைக்கான காரணத்தைக் கூறுகிறார் இலக்குவனார். இலக்குவனாரும் காமராசரும் வெவ்வேறு இயக்கத்தைச் சார்ந்தவர்களாயிற்றே எனப் புருவத்தை உயர்த்துவோர்க்கும் தக்க விடை வழங்குகிறார். "கட்சிவெறி மதவெறிபோல் ஆகிவிட்டது. மதவெறியால் மக்கள் போரிட்டு மாண்டது போல் கட்சிவெறியாலும் போரிட்டு மாள்கின்றனர் இவ்வவலநிலை நீங்கவேண்டும். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை, மாற்றுக்கட்சியாளர் பாராட்டவேண்டிய இடத்தில் பாராட்டத்தான் வேண்டும்." இக்கூற்று இன்றைக்கும் நாம் பின்பற்றவேண்டிய நாகரிகத்துக்கு வழிகாட்டுகிறது அல்லவா?

அப்பொழுது இலக்குவனார் பணியாற்றிவந்த இந்துக்கல்லூரி முதல்வராய்த் திகழ்ந்தவரும் பின்னாளில் இந்திய அரசின் பொருளியல் ஆய்வுரைஞராகப் பணியாற்றச்

சென்றுவிட்டவருமாகிய பொருளியல் அறிஞர் டாக்டர். பா. நடராசன் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார். 'வாழ்க்கை வரலாறு எழுதுவது கடினமான பணி; உயர்ந்த பதவியில் இருப்பவர் வாழ்க்கைவரலாற்றை எழுதுதல் இன்னும் சற்றுக் கடினமான பணி; இலக்குவனார் இப் பணியைத் துணிந்து ஏற்றுச் சிறப்பான முறையில் இந்நூலை எழுதியுள்ளார்' என பா. நடராசன் பாராட்டியுள்ளார்.

முதல் அமைச்சர், நற்பெருந்தொண்டர், தலைவரின் தலைவர், உலகப்பெரியார், பெரியார், மொழிவழி நாடுகள், தமிழ்நாடு, தமிழ் மொழி, ஒன்றேகுலம் என்னும் ஒன்பது இயல்களைக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

காமராசரின் பண்புநலனைக் குறிப்பிடும்போது தாம் எழுதுவது உரைநடைநூல் என்பதை மறந்துவிட்டது போன்று காவியநடையில் அடுக்கித்தள்ளும் சுவைமிக்க பகுதி இங்குக் குறிப்பிடத்தக்கது.

“அமைதியான தோற்றம்; அன்புகனிந்த உள்ளம்; கடமையில் பற்று; கருமம வெற்றியில் கருத்து; உதவியவர்களிடம் நன்றி; உழைப்போர்க்கு உதவி; அடுத்துக் கெடுக்காத ஆண்மை; அண்டியவரை வாழவைக்கும் அருள் உள்ளம்; எவரையும் பகைத்துக் கொள்ளாத இயல்பு; பகைத்தவர்களை வெல்லும் வன்கண்மை; தான் தமிழன் என்ற எண்ணம்; தன்னை விடப் பெரியவர் உள்ளார் என்ற அடக்கம்; ஒடுக்கப்பட்ட மக்கள் குடியில் தோன்றியுள்ள உணர்வு; ஒடுக்கப்படுகின்றவரை உயர்த்த வேண்டும் என்ற ஊக்கம்; தனக்கென வாழாத்தகைமை; பிறர்க்கென வாழும் பெற்றிமை; இயற்கை நுண்ணறிவு; இவையெல்லாம் திரு.காமராசரை உயர்ந்த முதல் அமைச்சராக உருவாக்கியுள்ளன.” (க.கா.பக்.7)

காமராசரின் பண்புநலனை இத்துணைச் சிறப்புமிக்க சொல்லோவியமாக எந்தக் கவிஞரும் கூறியதில்லை. காமராசரின் வாழ்க்கைநிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே இச்சொல்லோவியம் தீட்டப்பட்டுள்ளதால் இதனை உயர்வு நவிற்சி என்று எவரும் ஒதுக்கிவிடமுடியாது. காமராசரின் அனைத்துச் சிறப்புகளையும் ஒருங்கே தொகுத்தளித்துள்ள இச்சொல்லோவியத்தைக் கல்வெட்டிலே செதுக்கிவைத்துவிட்டாலே காலம் உள்ளவரை அவர் புகழை எடுத்துரைக்கும் என்பதில் ஐயமில்லை.

"வேடத்தால் துறவுநிலை மேற்கொள்ளாத திரு காமராசர், உள்ளத்தால் பெருந்துறவியாகிவிட்டார்." (பக்.15) "நீர் வேட்கையுற்றோர் நீரைத்தேடி அலைவதுபோல் நாட்டுத் தொண்டை நாடி அலைந்தார்." (பக்.15) என்னும் தொடர்களின் மூலம் காமராசரின் பற்றற்ற உள்ளத்தையும் நாட்டு விடுதலை வேட்கையையும் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

காந்தியடிகள் அரசியலில் அருள்நெறி பொருந்தப் புதுமையான வழிகாட்டிய திறத்தை இலக்குவனார் அவருக்கே உரியவகையில் எடுத்துரைக்கும் திறம் இங்குக் குறிப்பிடத்தக்கது.

"***அறம், அன்பு. அருள், உண்மை, ஒழுக்கம் முதலிய மக்கட்பண்புகட்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை என்று கருதினர். வாழ்வைச் செம்மைப்படுத்தும் சமயம் வேறு; நாட்டை ஆளும் நிலையை அளிக்கும் அரசியல் வேறு என்றே எண்ணினர். "அரசியல், வாழ்வின் செம்மைக்கு வேண்டப்படுவது" என்று வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகளே, அவர் சமயத்தை அரசியலாகக் கொண்டாரா, அரசியலைச் சமயமாகக் கொண்டாரா என்று பகுத்துணர இயலாத வகையில் செயலாற்றினார்.***" (பக்.27)

*காந்தியடிகளை இருபதாம் நூற்றாண்டு வள்ளுவர் எனக் குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமாகவுள்ளது.* "***தமிழக மெய்யுணர்வாளர் திருவள்ளுவர் அரசியலை வாழ்வின் ஒரு கூறாக வகுத்துரைத்தார். அறன் வழிப்பட்டதே அனைத்தும் என்னும் அறம் புகன்றார். அவர் கூறினவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்த பெரியார் காந்தியடிகள் என்றால் மிகையாகாது. காந்தியடிகளை இருபதாம் நூற்றாண்டு வள்ளுவர் என்று இயம்பலாம்***" (பக்.28)

ஆங்கிலக்கல்வி பெறாத காமராசரின் அரசியல் வெற்றியைத் தமிழின் வெற்றி என்று இலக்குவனார் போற்றுவதும் தமிழைக் கல்விமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் அறிவிக்குமாறு வேண்டுவதும் இந்நூலுக்கு மேலும் சிறப்புச் சேர்க்கின்றன ஒரு பாராட்டுநூலாக அமையாமல் ஒரு தமிழர்தலைவரை ஒரு தமிழறிஞர் தமிழர்க்கு முறையாக அடையாளம் காட்டுவதுடன் தமிழுக்கு நாம் ஆற்றவேண்டிய பணிகள் யாவை என்பதையும் உரிய நேரத்தில் எடுத்துரைக்கும் ஆவணமாக இந்நூல் அமைந்துள்ளது எனல் மிகையன்று.

*"கருமவீரர் காமராசர் முதல் அமைச்சராகப் பணியாற்றி வருவது தமிழின் வெற்றியாகும். ஆங்கிலப் புலமையுடையோரே ஆட்சி செய்யமுடியும் என்பதைச் செயலில் காட்டிய பெருமை கருமவீரர் அவர்கட்கே உரியது. ஆகவே தமிழில் ஆட்சி நடைபெறும்நிலை உடனே உண்டாக வேண்டுமென்று தமிழ்நாடு எதிர்நோக்கியுள்ளது. இனிச் சட்டசபைகளிலும் நீதிமன்றங்களிலும் ஆட்சி அலுவலகங்களிலும் தமிழ்மொழி கொள்ளப்படவேண்டும். அடுத்துள்ள ஆந்திரமும் பிறநாடுகளும் வழிகாட்டுகின்றன." (பக்.69)*

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் பொருத்தமான ஒரு குறளை அமைத்துள்ளமை இலக்குவனாரின் குறள்நெறி போற்றும் கொள்கையை வெளிப்படுத்துகிறது. காந்தியடிகளைப் பற்றிய இயலின் நிறைவாக" உள்ளத்தாற் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்னும் குறளையும் பெரியார். ஈ.வேரா. அவர்களைப் பற்றிய இயலின் இறுதியில்" செயற்கரிய செய்வார் பெரியார்; சிறியர் செயற்கரிய செய்கலாதார்" என்னும் குறளையும் கொண்டு இயலை நிறைவுசெய்துள்ளார்.

# 6
# ஆராய்ச்சியாளர்

## அ.மொழி ஆராய்ச்சி

தமது மாணவப்பருவத்திலிருந்தே இலக்குவனார் தமிழ் இலக்கணத்திலும் மொழி ஆராய்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். திருவையாறு அரசர் கல்லூரியில் அவரது வகுப்புத்தோழராகவும் கல்லூரி விடுதியில் அறைத் தோழராகவும் விளங்கிய பேராசிரியர் அ.கிருட்டிணமூர்த்தி, கால்டுவெல் இயற்றிய "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் நூலை, இலக்குவனார், தமக்குத் தெரிந்த வரையில் முப்பத்தாறுமுறை படித்துள்ளார் என்பார். தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய நூல்களை நாள்தோறும் பயில்வதுபோலவே ஒப்பிலக்கணநூலையும் (ஆங்கில மூலத்தை) நாள்தோறும் பயின்று வந்தார் என்று குறிப்பிடுகிறார். இதன்மூலம் இலக்குவனார்க்கு அக்கால மொழிநூலில் இருந்த ஈடுபாடு புலனாகின்றது. இதன் விளைவாகவே தமது எம்.ஓ.எல்.ஆய்வுநூலுக்கு "The Origin and growth of Tamil lanuguage" (தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்) என்னும் தலைப்பை எடுத்துக்கொண்டு ஆய்வேட்டை வழங்கினார். இத்தலைப்பை அவர் தேர்ந்தமைக்கு வேறொரு காரணமும் உண்டு. அப்போது வெளிவந்திருந்த அறிஞர் சுனிதி குமார் சாட்டர்சியின் "வங்காளமொழியின் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் நூல் இலக்குவனார் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. இருக்கு வேதத்திலேயே பல தமிழ்ச் சொற்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டமையும் இலக்குவனாரைப் பெரிதும் இத்தகைய மொழி ஆய்வில் ஈடுபாடு கொள்ளச் செய்தது. அதன் விளைவாக "A Brief Study of Tamil words" (தமிழ்ச் சொற்கள் பற்றிய ஒரு சிற்றாய்வு) எனும் நூலையும் "The Making of Tamil grammar" (தமிழ் மொழியின் இலக்கண உருவாக்கம்) எனும் நூலையும் இயற்றிச் சைவசித்தாந்தப் பதிப்புக் கழகத்தின் வழி (1946) வெளியிட்டார்.

'தமிழ்மொழியின் இலக்கண உருவாக்கம்' (The Making of Tamil grammar") என்னும் நூலுக்கு அணிந்துரை வழங்கிய மு.சி.பூர்ணலிங்கம் பிள்ளை இலக்குவனாரின் மொழி ஆய்வுத்திறனைச் சிறப்பாகப் பாராட்டியுள்ளார். "இலக்கு வனாரின் பன்மாண்கலையறிவும் நுண்மாண் நுழைபுலமும் வரலாற்றுநோக்கும் கூர்த்த ஆய்வுநோக்கும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. தம் முன்னோர் மொழி பொருளினின்று துணிவோடு மாறுபட்டுள்ளார். அங்ஙனம் தாம் மாறுபடுதற் குரிய காரணங்களைத் தக்க சான்றாதாரங்களுடன் விளக்கி யுள்ளார்" என்று பூரணலிங்கம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

நாகர்கோயிலில் பணியாற்றியபோது "தமிழ்மொழியில் முதல்நிலைச் சொற்களும் இடைநிலைச் சொற்களும்" ('Semantemes and morphemes in Tamil language') என்னும் தலைப்பிலமைந்த நூலை வெளியிட்டார். இந்நூல் இயற்றி யமைக்கான காரணத்தை நூலின் முன்னுரையில் இலக்கு வனார் தெரிவிக்கிறார். வென்றியே என்னும் மொழி நூலறிஞர் எழுதிய "மொழி" (Language) என்னும் தலைப் பிலமைந்த ஆங்கிலநூலே முதுகலை வகுப்பு மாணவர் களுக்குப் பாடமாக வைக்கப்பெற்றுள்ளதாகவும் அதனையே தாம் நடத்திவருவதாகவும் அந்த அறிஞர் கூறும் கோட்பாடு கள் தமிழுக்கு எந்த அளவு பொருந்தும் எனச் சிந்தித்துப் பார்த்ததன் விளைவே இந்நூல் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் இலக்கண நூலார் ஒரு சொல்லைப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனப் பகுப்பர். கருத்தை உணர்த்த அமைந்துள்ள பகுதி அல்லது வேர்ச்சொல் அல்லது அடிச்சொல் வென்றியே குறிப்பிடும் முதல்நிலைச் சொல் (Semantemes) ஆகும் என்று இலக்குவனார் கருதுகிறார். சொற்களுக்கிடையே அமையும் பொருள்வேறுபாடு சொற் களின் வடிவங்களில் மாறுபாடு ஆகியவற்றை ஏற்படுத்தும் இடைச் சொற்கள் (Morphemes) வென்றியே சுட்டிக்காட்டுவது போலவே இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியத்திலும் அமைந்துள்ள திறத்தை வியந்து போற்றும் இலக்குவனார் தமது ஒப்பாய்வின் மூலம் தொல்காப்பியத்தின் சிறப்பை விளக்குகிறார்.

### "தமிழ்மொழி"

**வென்றியே** என்னும் மொழிநூலறிஞரின் கோட்பாடுகள் இன்று மாற்றமடைந்திருக்கலாம். ஆனால் இலக்குவனாரின்

தொல்காப்பியப்புலமையும் தமது கால மொழி நூற்கோட்பாடுகளுடன் தொல்காப்பியம் கூறும் கோட்பாடுகளை ஒப்பாய்வு செய்வதில் முனைந்த அவரது அறிவுத்தேடலும் இன்றைய பேராசிரியர்களுக்கு வழிகாட்டியாக விளங்குவதே இங்குக் குறிப்பிடத்தக்க செய்தியாகும்

'தமிழ்மொழி' (Tamil language) என்னும் தமது ஆங்கிலநூலில் மொழிநூல் வழிநின்று தமிழின் தனித் தன்மைகளை இலக்குவனார் விரிவாக ஆய்ந்துள்ளார் இந் நூலைப் பற்றிக் குறிப்பிடும்போது ஆய்வாளர் முனைவர் கா மாரிமுத்து "சி இலக்குவனார் 'தமிழ்மொழி' என்ற நூலில் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு, சென்ற நூற்றாண்டிலும் இந்த (20-ஆம்) நூற்றாண்டிலும் வாழ்ந்த மொழிநூலறிஞர்களின் கருத்துகளை ஒப்புநோக்கியும் பல மொழிகளின் இலக்கண அமைப்புகளையும் ஒப்புநோக்கியும் நெடிது ஆராய்ந்து" எழுதியுள்ளதாகக் கூறுகிறார்

1. முன்னுரை 2. ஒலியியல் 3 உரிச்சொல்லும் இடைச் சொல்லும் 4. சொற்பொருளியல் 5 சொற்றொடரியல் எனும் ஐந்து இயல்களைக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

கிரேக்கம், ஈபுரூ, சீனம், இலத்தீன் ஆகிய செவ்வியல் மொழிகளுடன் ஒப்ப நோக்கத்தக்கதாகத் தமிழ்மொழி விளங்கும் திறத்தினையும் இந்தியாவில் சமற்கிருத மொழிக்கு எவ்வகையிலும் பின்னிடாவகையில் தொன்மையும் வளமும் தமிழ்மொழிக்கமைந்துள்ள வகையினையும் இந்நூல் விரிவாக ஆய்கிறது. தமிழ்மொழி ஏனைய திராவிடமொழிகளில் செலுத்தியுள்ள தாக்கத்தை ஆய்வதுடன் அமையாது, சமற்கிருதத்திலும் இந்தோ-ஆரிய மொழிகளிலும் தமிழ் வழங்கியுள்ள கொடையினையும் ஆய்வது இந்நூலாசிரியரின் நோக்கமாக உள்ளது தமிழ்மொழியின் வளர்ச்சிநிலையினை இந்நூலாசிரியர் நான்கு கட்டங்களாகப் பகுக்கிறார்.

அவை : 1) ஆரியர் வருகைக்கு முன்னுள்ள காலம் 2) ஆரியர் வருகையை ஒட்டிய காலம் 3) இடைக்காலம் 4) பிற்காலத் தமிழ் வளர்ச்சி என்பனவாகும். ஆரியர் வருகைக்குமுன் இந்தியாவெங்கும் திராவிடர் பரவியிருந்தனர் என்னும் கருத்தை வங்காளமொழியறிஞர் சுனிதிகுமார் சாட்டர்சியின் ஆய்வுமுடிவு காரிகிழார், குறுங்கோழியூர் கிழார் ஆகியோரின் புறநானூற்றுப்பாடல்கள், மொகஞ் சதாரோ, அரப்பா அகழ்வாராய்ச்சி முடிபுகள் ஆகியவற்றைக் கொண்டு நிறுவ முயல்கிறார் ஆசிரியர்.

சாட்டர்சி வழிநின்று இருக்குவேதத்தில் காணப்படும் தமிழ்ச்சொற்களைச் சுட்டிக் காட்டும் இலக்குவனார் இந்திமொழியிலும் தமிழ்ச்சொற்கள் இடம் பெற்றுள்ளமையை எடுத்துக்காட்டுகிறார்.

| தமிழ் | இந்தி |
|---|---|
| ஆம் | ஹாம் |
| இத்தனை | இத்னா |
| உம்பர் | ஊப்பர் |
| ஓரம் | ஓர் |
| கடு | கட்டா |
| கிழான் | கிசான் |
| மாமன் | மாமா |
| மாமி | மாமி |
| கு (வேற்றுமையுருபு) | கோ (வேற்றுமையுருபு) |

வட இந்தியாவின் பெரும்பகுதியில் மிகுதியும் வாழ்ந்த தமிழினத்தினர் ஆரியர்களால் நெருக்கப்பெற்றுத் தென்னிந்தியாவிற்கு வந்துவிட்டனர். எனினும் தமிழ்மொழியின் ஒலியமைப்பு, சொற்றொடரியலமைப்பு, வேத மொழியமைப்பைப் பாதித்தது வட இந்திய மொழிகள் தோன்றவும் வளரவும் உறுதுணைபுரிந்தது என இலக்குவனார் இந்நூலில் விளக்கியுள்ளார். இலக்குவனாரின் ஆய்வு, தமிழ் உயர்தனிச் செம்மொழி என்பதனை நிறுவுவதையும் இதுகாறும் அதன் செவ்வியற்பண்பைப் புறக்கணித்தோர் அதனையும் வடமொழியோடு ஒப்ப நோக்கவேண்டும் என வலியுறுத்துவதையும் நோக்கமாக் கொண்டது.

### "பழந்தமிழ்"

பண்டைய இந்தியாவில் ஆரியர்கள் இங்கு வருவதற்கு முன்னர் துணைக்கண்டம் முழுமையும் பழந்தமிழ் மொழியே வழங்கிவந்தது என்றும் அவர்கள் வந்ததன்பின்னர் அவர்களது மொழிக்கும் பழந்தமிழுக்கும் இடையே ஏற்பட்ட தொடர்பு வட இந்தியாவில் இன்று வழங்கிவரும் மொழிகளின் தோற்றத்திற்குக் காரணமாகியது என்றும் இலக்குவனார் கருதுகிறார். இப்பழந்தமிழ்மொழியே ஏனைய திராவிடமொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம் துளு, குடகு, துதம் (தொதவம்), கோதம், கோண்டு, கூ அல்லது கோந்த், இராச்மகால் அல்லது மாலர், ஓரியன் ஆகியவற்றின்

தோற்றத்திற்குக் காரணமாகியது என்பது இலக்குவனார் கருத்து. மொழியிலறிஞர்கள் மூலத்திராவிடம் என்று அழைக்கும் பழந்திராவிடத்தையே இலக்குவனார் பழந்தமிழ் என்று அழைக்கிறார். தமிழ் இந்நாட்டு மொழியே. ஆரியம் இந்தியாவுக்குள் நுழைவதற்கு முன்னர் இந்தியா முழுவதும் வழங்கிய மொழி பழந்தமிழே என்று நிலைநாட்டும் வகையில் 'பழந்தமிழ்' என்னும் நூலை எழுதியுள்ளார்.

இந்நூலின் முன்னுரையில் ஈராசு, கால்டுவெல், சுனிதிக் குமார் சாட்டர்சி ஆகியோரின் ஆய்வுமுடிவுகளைத் துணைக்கொண்டு மேலும் பல சான்றுகளுடன் இந்நூலை இயற்றியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மொழியின் சிறப்பு, மொழிகளும் மொழிக்குடும்பங்களும், பழந்தமிழ், மொழி மாற்றங்கள், பழந்தமிழ்ப் புதல்விகள், பழந்தமிழ் இலக்கியம், பழந்தமிழ் நிலை, பழந்தமிழ் எழுத்துச்சான்றுகள், பழந்தமிழ்ச் சொல்லமைப்பு, பழந்தமிழும் தமிழரும், தமிழ் மறுமலர்ச்சி என்னும் பதினோரு இயல்களைக் கொண்டு நூல் அமைந்துள்ளது.

உலகில் எழுத்துமுறையை முதன்முதல் அமைத்துக் கொண்டவர் தமிழரே என்றும் தமிழரிடமிருந்து சுமேரியர் கற்றுப் பிற இனத்தவர்க்கு அறிவித்தனர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவதாகக் காட்டும் இலக்குவனார் "தமிழர்கள் கி.மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பே செப்பமுள்ள எழுத்து முறையைக் கொண்டிருந்தனர். ஆதலின், எழுத்துமுறை தமிழர்களிடமிருந்தே பிறமொழியாளர்களுக்குச் சென்றுள்ளது என்னும் கூற்றுப் பொருத்தமும் உண்மையும் உடையதாகவே தோன்றுகிறது." (ப.9-10) என முடிபுரைக்கிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் தமிழ்மொழி மாற்றம் பெறாமல் இருப்பதற்குக் காரணம் உலகவழக்கு, நூல்வழக்கைத் தழுவியிருத்தல் வேண்டுமென்ற மரபை அது பெற்றிருப்பதுதான் எனக் கூறுகிறார்.(பக்.11)

தமிழ்மொழியின் வரலாற்றுக்காலத்தைப் பின்வருமாறு வகுத்துக்கொள்கிறார் இலக்குவனார்

1. ஆரியர் வருகைக்கு முன்னர்த் தமிழின் நிலைமை
2. தொல்காப்பியர் காலத்தில் தமிழின் நிலைமை
3. திருவள்ளுவர் காலத்தில் தமிழின் நிலைமை
4. இளங்கோ அடிகள் காலத்தில் தமிழின் நிலைமை
5 பவணந்தி காலத்தில் தமிழின் நிலைமை

### 6. பவணந்திக்குப் பின்னர் இன்றுவரை தமிழின் நிலைமை

“எம்மொழியினும் விரைவில் மாற்றங்கொள்ளாதன இடப்பெயர்கள், வேற்றுமையுருபுகள், வினைவிகுதிகள், எண்கள் முதலியனவாகும். இவை அமைந்துள்ள இயல்பினை நோக்கினால் தமிழே திராவிடமொழிகளின் தாய் என்பதைத் தெள்ளிதின் அறியலாம்.” (பக். 68)

என்று கூறும் ஆசிரியர் திராவிட மொழிகளில் இவை அமைந்துள்ளவிதத்தைத் திறம்பட நிறுவுகிறார்.

எவ்வித முற்சாய்வும் இன்றித் தமது கருத்தை நடுநிலை-யாகவே சுட்டிச் சொல்கிறார் என்பதற்குச் சமற்கிருதத்தையும் தமிழையும் இந்தியாவின் ஆட்சிமொழிகள் ஆக்கவேண்டும் என்னும் அவரது வேண்டுகோள் புலப்படுத்துகிறது.

“பரந்துபட்ட பெருங்கண்டம் என்ற இந்தியப் பெருநாட்டின் அனைத்துமொழிகட்கும் தேசியமொழிகள் என்னும் நிலையை அளித்துப் போற்றுவதுதான் முறையும் நேர்மையுமாகும். இயலாது என்றால் தமிழுக்கும் ஆரியத்திற்கும் அந்நிலையை அளித்தல் வேண்டும்.” (பக்.156)

தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழி என்று அறிந்துபோற்றும்வகையில் மொழிநூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ‘பழந்தமிழ்’ தமிழில் வெளிவந்த மொழிநூல்களில் சிறப்புவாய்ந்ததாகும். இலக்குவனாரின் மொழி ஆய்வு, ஒப்பியல்நோக்கில் அமைந்து தமிழின் தனிச்சிறப்பை நிலைநாட்டும் வகையில் அமைந்தது.

## ஆ. தொல்காப்பிய ஆராய்ச்சி

தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் ஆகிய மூன்றுமே இலக்குவனாரின் கருத்தில் என்றும் நின்று நிலவியவை, தமிழின் தொன்மையையும் தமிழ் இலக்கண அமைப்பின் தனித்தன்மையையும் எடுத்தியம்புவதுடன் பண்டைத்தமிழரின் பண்பாட்டுச் சிறப்பையும் நாகரிகத்தையும் அறிவிக்கும் கலைக்களஞ்சியமாகவும் தொல்காப்பியம் விளங்குகிறது என இலக்குவனார் கருதினார். இக்கருத்தை நிலைநாட்டும் வகையிலும் புலவர்களுக்கு மட்டுமன்றிப் பொதுமக்களுக்கும் தொல்காப்பியம் உணர்த்தும் அரிய கருத்துகளைத் தெளிவுறுத்தும் வகையிலும் “தொல்காப்பிய ஆராய்ச்சி” என்னும் நூலை இயற்றினார்.

## தொல்காப்பியர் காலம்

தொல்காப்பியர் காலம் கி.மு.ஏழாம் நூற்றாண்டு; தொல்காப்பியம் வடமொழி இலக்கணநூலாகிய பாணினியத்திற்கு முற்பட்டது; ஐந்திரத்திற்குப் பிற்பட்டது என்பவை இலக்குவனார் ஆய்ந்து கண்ட முடிவுகளாகும். பின்வரும் கருத்துகளை அவர் 'தொல்காப்பிய ஆராய்ச்சி' என்னும் நூலில் தொகுத்துவழங்கியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது;

"தமிழ்மொழியில் நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் மிகப் பழமையானது தொல்காப்பியம் என்று கூறப்படுகின்றது." (பக்.9)

"தொல்காப்பியரைச் சிறப்பித்துக் கூறப்புகுந்த பனம்பாரனார் தொல்காப்பியரின் வடமொழிப்புலமையை எடுத்துக் காட்டிச் சிறப்பித்துள்ளார். தொல்காப்பியரின் நூல் இலக்கணமாதலால் தொல்காப்பியரின் வடமொழி இலக்கணப் புலமையைச் சுட்டிக்காட்டுவான் வேண்டி 'ஐந்திரம்' நிறைந்த 'தொல்காப்பியன்' எனக் கூறியுள்ளார் என்று கருதுதல் வேண்டும். ஆதலின் தொல்காப்பியர் காலம் வடமொழி ஐந்திரத்திற்குப் பிற்பட்டதே என்று கொள்ளுதல் மிகவும் ஏற்புடைத்தே". (பக்.24):

"அன்றியும் வடமொழியாளர் தென்னாட்டில் குடிபுகத் தொடங்கிய காலமே தொல்காப்பியர் காலமென்றும் கொள்ளலாம்" (பக்.25)

"புத்தர் தோன்றியபின்னர் புத்தமதத்தைப் பரப்புவான் வேண்டி வடநாட்டிலிருந்து பலர் வந்துள்ளனர். அவர்கள் தொல்காப்பியர் காலத்தில் வந்திருப்பின் புத்தமதத்தைப் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் காணக்கிடைக்கும். அங்ஙனம் ஒன்றும் கிடைக்கப் பெறாமையால் புத்தர் காலமாம் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னரே தொல்காப்பியம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்." (பக்.27)
"ஆரியர் தமிழகத்திற்கு வந்த காலம் கி.மு ஏழாம் நூற்றாண்டு ஆகலாம் எனப் பேராசிரியர் வி. அரங்காச் சாரியார் கருதுகின்றனர். ஆதலின் தொல்காப்பியர் காலமும் கி.மு.ஏழாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று முடிவு காட்டுவதில் தவறின்று. இக்காலம் பாணினிக்கு முற்பட்டதும் ஐந்திரத்திற்குப் பிற்பட்டதும் ஆகிறது" (பக் 27)

## தமிழ் நெடுங்கணக்கு

*"தமிழ் நெடுங்கணக்கைக் கண்ட ஆரிய மொழியினர் தமது மொழிக்குத் தமிழையொட்டியே எழுத்துகளைப் படைத்துக்கொண்டனர். சேர்க்கை ஒலிகட்குத் தமிழில் வடிவங்கள் இல்லை. ஆரிய மொழியினர் சேர்க்கை ஒலிகளுக்கும் வரிவடிவங்களை அமைத்துக்கொண்டனர்." (பக்.32) என்று இலக்குவனார் அறுதியிட்டுரைக்கிறார்.*

*"தமிழ் மொழிநூலார் வரிவடிவம் ஒலி வடிவம் எனும் இரண்டனையுமே எழுத்து என்று அழைப்பதால் மொழி உருவாக்கப்பட்டபோதே வரிவடிவ எழுத்தும் படைத்துக் கொள்ளப்பட்டது என்று அறியலாம்" (பக்.38) எனக் கருதும் இலக்குவனார் தமிழில் வரிவடிவம் காலப்போக்கில் வெவ்வேறு மாற்றங்களை அடைந்துள்ளது என்னும் கருத்தை மறுக்கிறார்.*

*"இந்திய மொழிகளின் வரிவடிவத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முதற்காரணமாய் இருந்தவை தமிழ் வரிவடிவங்களே. ஆகவே இந்தியமொழிகளின் வரிவடிவ எழுத்துக்களின் தாய் தமிழ் நெடுங்கணக்கின் வரிவடிவமே எனில் மிகையாகாது." (பக்.38) என்னும் இலக்குவனார் கூற்று இந்திய மொழிகளின் வரலாற்றை ஒப்புநோக்கிப் பார்க்கும்போது ஏற்புடையதாகவே தோன்றுகிறது.*

## பெருமை

*"நாம் நினைக்கத் தொடங்கும்போதே சொற்றொடர்-களில்தான் நினைக்கிறோம். தொல்காப்பியர் இதனை உணர்ந்தே சொற்படலத்தின் முதலியலாகக் 'கிளவியாக்கம்' என்பதைக் கொண்டு சொற்றொடர் ஆகும் மரபுகளை ஆராய்ந்துள்ளார்." (பக்.70) எனத் தொல்காப்பியம் பகுத்தறிவுக்கு இயைந்தவகையிலான இலக்கண நெறியைப் போற்றியுள்ளமையைப் பெருமித உணர்வுடன் இலக்குவனார் சுட்டிக்காட்டியுள்ளார்.*

## சுப்பிரமணிய சாத்திரியாருக்கு மறுப்பு

*அறிஞர் சுப்பிரமணிய சாத்திரியார், பாணினியையும் அவர்க்கு முன்புள்ளவர்களையும் பின்பற்றித் தொல்காப்பியர், தமிழ் வேற்றுமைகட்கு இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை எனப் பெயரிட்டார் என்று கூறுகின்றார். தமது ஆசிரியரான சாத்திரியாரின் கருத்து உண்மையோடு*

பொருந்தாமல் அமைந்துள்ளது என்பதைத் தயக்கமின்றி எடுத்துரைக்கிறார் இலக்குவனார்.

"தொல்காப்பியர் இரண்டாகுவதே, மூன்றாகுவதே என வரிசைப்படுத்திக் கூறியுள்ளாரேயன்றி இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை எனக் கூறினாரிலர். அன்றியும், ஐ எனப் பெயரிய வேற்றுமை, ஒடுவெனப் பெயரிய வேற்றுமை என்றும் குறிப்பிட்டுள்ளமையை நோக்குதல் வேண்டும். பாணினி தொல்காப்பியர்க்குக் காலத்தால் பிற்பட்டவர் என்பதனையும் அறிதல் வேண்டும். ஆகவே கால்டுவெல் அவர்களும் சாத்திரியார் அவர்களும் கருதுவது போன்று வடமொழியைப் பின்பற்றித் தமிழ் இலக்கண நூலார் தமிழ் வேற்றுமைகளை வரிசைப்படுத்தினர் என்றலோ தொல்காப்பியர் வேற்றுமைகட்குப் பெயரிட்டனர் என்றலோ பொருந்தாது." (பக்.76).

## கால்டுவெல் கருத்துக்கு மறுப்பு

அறிஞர் கால்டுவெல் "திராவிட மொழி வினையானது செயப்பாட்டுப் பொருளை உணர்த்தும் வகையைப் பெற்றிருக்கவில்லை" என்று கூறிய கூற்றை மறுக்கிறார் இலக்குவனார். (பக்.91).

'செயப்படுபொருளைச் செய்தது போலத் தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே' என்னும் தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக்காட்டுகிறார். தொல்காப்பியர் பலவிடங்களில் செயப்பாட்டு வினையைப் பயன்படுத்தி-யுள்ளார் என்று கூறும் இலக்குவனார், தொல்காப்பியத்தின் முதல் நூற்பாவே "எழுத்தெனப்படுப" எனச் செயப்பாட்டு வினையிலேயே தொடங்கப் பெற்றுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, "திராவிட மொழிகளில் செயப்பாட்டுப் பொருளையறிவிக்கும் தனியமைப்பு இல்லை என்று கூறுதல் பொருந்தாது" என அறுதியிட்டுரைக்கிறார். (பக்.91).

'திராவிட வினைச்சொல் நிகழ்காலம் என்றொரு காலத்தைப் பெற்றிருக்கவில்லை' என்னும் கருத்தும் 'தமிழில் ஒரே எச்சவினைதான் உண்டு. அது இறந்தகாலத்தையே குறிக்கும்" என்னும் கருத்தும் (பக் 91-92) உண்மைக்கு மாறானவை என்பதையும், கால்டுவெல் தொல்காப்பியத்தைப் படிக்கும் வாய்ப்புப் பெறாமையே இத்தகைய முடிவுகளை அவர் கொள்ளக் காரணமாயிற்று எனவும் இலக்குவனார் விளக்கியுள்ளார்.

## பொருளிலக்கணத்தின் சிறப்பு

"இலக்கியப் படைப்பும் இலக்கியப் பயிற்சியும் மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாதன என்பதனை நன்கு தெளிந்த தமிழ்ச் சான்றோர் மொழிநூற்புலமையோடு இலக்கியப் புலமையும் யாவர்க்கும் வேண்டும் என்று கருதி மொழி நூலையும் (science of language) இலக்கிய விளக்க நூலையும் (Science of literature) ஒன்றாக இணைத்து நன்றாகப் பயிலும் முறையை நானிலத்திற்குக் காட்டினர்." (பக்.103) எனப் பொருளிலக்கணத்தின் தனிச்சிறப்பை இலக்குவனார் பாராட்டிக் கூறுகிறார்.

"பொருள் என்ற பெயர் மிகவும் பொருட்செறிவுடையது. இலக்கியத்தின் பொருள் வாழ்வு. வாழ்வின் பொருள் இலக்கியம். இவ்விரண்டு பற்றியும் கூறுவதே பொருட்படலம். (பொருளதிகாரம்)" (பக்.104) என்றும் "பொருட்படலத்தால் இலக்கியத்தைப் பற்றியும் தமிழர் வாழ்வைப் பற்றியும் நன்கு அறிய இயலுகின்றது." (பக்.105) என்றும் எளிய தொடர்களால் ஆழ்ந்த கருத்தை வெளிப்படுத்துகிறார்.

"எகிப்தியரும், கிரேக்கரும், சீனரும் தொன்மை வாய்ந்த நாகரிகமும் பண்பாடும் உடையவர் என்று வரலாறுகள் கூறுகின்றன. தமிழரும் மிகமிகத் தொன்மை வாய்ந்த நாகரிகமும் பண்பாடும் உடையவர் என்பதைத் தொல்காப்பியத்தால் அறியலாகும்" (பக்.106) எனவும், "தொல்காப்பியப் பொருட்படலம் இலக்கிய விளக்கம் தரும் இன்பநூலாக மட்டுமின்றி வரலாற்றுக் கருவூலமாகவும் அமைந்துள்ளது" (பக்.106) எனவும் இலக்குவனர் கூறும் கூற்றுகள், அவர் சமூகவியல் நோக்கிலும் தொல்காப்பியத்தை ஆயும் திறத்திற்குச் சான்றாகின்றன.

## தவறான கருத்துகளைத் தவிர்க்கும் விளக்கம்

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"

என்னும் தொல்காப்பிய நூற்பாவைச் சுட்டிக்காட்டி அக்காலத்தில் நிலவிய பெண்ணடிமைநிலைக்கு இதனை எடுத்துக்காட்டாகக் கூறிவருகின்றனர் இக்காலப் பெண்ணிய நோக்கினர். ஆனால் இந்நூற்பா பெண்மையை எவ்வகையிலும் குறைத்துக் கூறுவதாக இல்லை என இலக்குவனார் கருதுகிறார். "காதலில் தலைப்படும்போது ஆண்களைவிடப்

பெண்களே அஞ்சுதற்குரியவர்கள். ஆண்களுக்குக் காதல் முறிவு ஏற்பட்டால் வேறு பெண்களைக் காதலித்துக் கொள்ளலாம். ஆனால் பெண்கள் நிலையோ வேறுபட்டது." (பக்.141) எனக் கூறும் இலக்குவனார், "பின் விளைவை யறியாது என்ன நிகழுமோ என்று அஞ்சி அஞ்சிக் காதல் துறையில் நுழைய வேண்டிய நிலை பெண்களுக்கு அமைந்திருப்பதை எடுத்துக்காட்டி இதனால்தான் அச்சம் பெண்களுக்குரியது எனத் தொல்காப்பியர் கூறினார்" என்கிறார். நாண் என்பது "பெண்களுக்கு இயல்பாக உள்ள இனிய சாயல் பண்பு." என விளக்கமளிக்கிறார். 'மடன்' என்பது அறிந்தும் அறியாதவள் போல் இருக்கும் இயல்பு என்கிறார். ஒரு பெண் எடுத்த எடுப்பிலேயே தன் காதலை வெளிப்படுத்தியுரைத்தலைத் திரைப்படத்தில்தான் காண முடியும். நடைமுறை வாழ்வில் "ஆடவன் ஒருவன் தன்னைக் காதலிக்கின்றான் என்பதை அறிந்தாலும் அறியாதாள் போன்று நடித்து உண்மை நிலையறிய முற்படுவாள்" என இலக்குவனார் கூறுவது ஏற்புடைய ஒன்றே. இவ்விளக்கங்-களால் அச்சம், நாண், மடன் என்பவை எவ்வகையிலும் பெண்ணடிமையைக் கற்பிக்கவில்லை என்பதைத் தெளிவுறுத்துகிறார் இலக்குவனார். தொல்காப்பியத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இச்சொற்கள் பிற்போக்குப் பண்புகளைக் கற்பிப்பனவாகப் பொருள் மாற்றம் பெற்றமை அக்காலச் சமூகச்சூழலில் ஏற்பட்ட மாற்றங்களாலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

கற்பு என்பதற்குத் தொல்காப்பியநெறி நின்று இலக்குவனார் கூறும் விளக்கங்களைக் காணும் பெண்ணியத் திறனாய்வாளர்கள் 'கற்பு' என்னும் கருத்துருவைக் கடிந்-துரைக்கமாட்டார்கள். தொல்காப்பிய நூலின் கற்பியலுக்கு விளக்கமளிக்கும்போது, "எங்கோ பிறந்த ஆடவனும் எங்கோ பிறந்த பெண்ணும் கணவனும் மனைவியுமாக வாழ்வதற்கு உள்ளம் ஒன்றிக் கற்பித்துக் கொள்ளுதலினால் கற்பு எனப்பட்டது. இவ்வாறு கற்பித்துக் கொண்டு ஒழுகு-கின்றவர்கள் வேறொருவரைக் காதலிக்கத் தொடங்கினால் இக்கற்பு நிலைக்கு இழுக்கு எனக் கருதினர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த கொள்கை வழி வாழும் இக்கருத்தில் இக்கற்பு கணவன் மனைவி இருசாராருக்கும் இருக்க வேண்டிய இயல்புப் பண்பாகும்" என்னும் விளக்கம் தமிழ்ப் பண்பாட்டில் ஆணாதிக்கம் அக்காலத்தில் நிலவவில்லை

என்பதை வலியுறுத்துகிறது. இவ்வகையில் "கரணம் தப்பினால் மரணம்" என்னும் பழமொழிக்கு இலக்குவனார் சிறப்புமிக்க விளக்கமளிக்கிறார். கரணம் என்றால் மணச்சடங்கு, காதலர்க்கு நிகழும் களவு வெளிப்பட்டுவிட்டால் கற்புநிலை எய்துதல் வேண்டும். அஃதாவது இருவர்க்கும் திருமணம் நிகழ்தல் வேண்டும். மணச்சடங்கு நிகழும் நிலை இல்லையேல் காதலர் இருவரும் உயிர் வாழார் என்பதையே இப்பழமொழி குறிக்கிறது என்கிறார் இலக்குவனார். தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்பை விளக்கும் இவ்விளக்கங்கள் தனித்தன்மை வாய்ந்தவை என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தொல்காப்பியம் புலவர்களின் தனிச்சொத்தாக விளங்கிய காலத்தில் ஓரளவு தமிழறிவுடைய அனைவரும் எளிதாக அறிந்து கொள்ளும் வகையில் எளிமை வாய்ந்த நடையில் ஆழ்ந்த ஆய்வினைப் புலப்படுத்தும் திறத்தோடு இலக்குவனார் இயற்றிய "தொல்காப்பிய ஆராய்ச்சி" மக்கள் மன்றத்தில் தொல்காப்பியம் பரவுதற்கு வித்திட்டது எனலாம். ஒரு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் போலச் செயற்பட்ட இலக்குவனார் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் ஆகியவற்றைப் பரப்புதற்கே தமது நூல்கள், பொழிவுகள், இதழ்கள் ஆகியவற்றைக் கருவியாகக் கொண்டார்.

தாம் நடத்தி வந்த "குறள்நெறி" இதழில் தொல்காப்பியத்திற்கு விளக்கமளிக்கும் 'தொல்காப்பிய விளக்கம்' என்னும் தொடரை வெளியிட்டார். உரையாசிரியர்கள் போலக் கடுமையான நடையைப் பின்பற்றாமல் எளிய சொற்களால் தொல்காப்பிய நூற்பாக்களுக்கு விளக்கமும் ஆய்வுக்குறிப்புகளும் எழுதி வெளியிட்டார். எழுத்ததிகாரம் முழுமைக்கும் அவர் இவ்வாறு விளக்கவுரை எழுதியுள்ளார்.

## ஆங்கில மொழிபெயர்ப்பும் ஆராய்ச்சியும்

இலக்குவனாரின் பணிகளுள் பெரிதும் போற்றப்படுவது, அவரது தொல்காப்பிய ஆங்கிலமொழியாக்கமும் ஆராய்ச்சியும் ஆகும். உலகளாவிய நிலையில் தொல்காப்பியத்தை அறிமுகம் செய்யும் முயற்சியில் இலக்குவனாரின் தொல்காப்பிய ஆங்கில மொழியாக்கம் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளது எனலாம். சங்க இலக்கியங்களை தமது ஆங்கில மொழியாக்கத்தின் மூலம் உலகறியச் செய்த ஏ.கே.இராமானுசம் இலக்குவனாரின் தொல்காப்பிய மொழி பெயர்ப்பு தமக்குப் பெரிதும் துணை புரிந்ததாகக்

குறிப்பிட்டார் சங்க இலக்கிய மாபுநெறிகளைக் குறித்த ஆங்கில ஆய்வேட்டை வழங்கிய சப்பானியத் தமிழறிஞர் தக்ககாசி இலக்குவனாரின் தொல்காப்பிய ஆங்கில மொழியாக்கம் தமது ஆய்வுக்குப் பெருந்துணை நல்கியதாக நன்றியுணர்வுடன் தமது நூலின் முன்னுரையில் கூறியுள்ளார்

## மொழிபெயர்ப்புகள் - முன்னும் பின்னும்

இலக்குவனார் தொல்காப்பியத்தை மொழிபெயர்ப்பதற்கு முன்னர் சில மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன அவற்றுள் ஆர்.வாசுதேவசர்மா அகத்திணையியல், புறத்திணையியல் ஆகிய இரு இயல்களை மட்டும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள செய்தி கிடைத்துள்ளது அந்நூல் கிடைக்கவில்லை இ எசு வரதராச ஐயர் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய நான்கு இயல்களை மட்டும் மொழிபெயர்த்து, அம்மொழிபெயர்ப்பு, இரு பகுதிகளாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது தொல்காப்பியம் முழுமையும் மொழிபெயர்த்தவர் முனைவர் பி.சா.சுப்பிரமணிய சாத்திரியார் ஆவார் இவர் திருவையாறு அரசர் கல்லூரியில், இலக்குவனார் புலவர் படிப்புக்குப் பயின்று கொண்டிருந்தபோது, அவரின் ஆசிரியராக விளங்கியவர் தமது ஆசிரியரின் மொழிபெயர்ப்பு இருக்கும்போது இலக்குவனார் அருமுயற்சியுடன் இன்னொரு மொழிபெயர்ப்புச் செய்தற்கு ஏன் முனைந்தார்?

“என் பெருமதிப்பிற்குரிய பேராசிரியரும் இலக்கணத் துறையில் சீரிய முறையில் உழைத்தவருமாகிய முனைவர் பி.சா சுப்பிரமணிய சாத்திரியார் தமிழிலும் ஆங்கிலத்திலும் தொல்காப்பியத்திற்கு விளக்கவுரை எழுதியதுடன் தொல்காப்பிய நூற்பாக்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ‘அவரது மொழிபெயர்ப்பு செப்பம் பெற்றமையவில்லை; எடுத்துக்காட்டுகளும் நம்பகத்தன்மை வாய்ந்தவையாக இல்லை’ என்று மொழியியல் அறிஞர் தெ.பொ மீனாட்சிசுந்தரனார், சாத்திரியாரின் தொல்காப்பியச் சொல்லதிகார ஆங்கில விளக்கவுரைக்கு வழங்கிய முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் சாத்திரியார் எப்போதும் தொல்காப்பியத்திற்கு இணையாக வடமொழி நூல்களில் ஒப்புமைகள் நிலவுவதைச் சுட்டிக்காட்டுவதிலும் அத்தகைய ஒப்புமைகளைக் கூறுகையில் வடமொழி

நூல்களிலிருந்தே தொல்காப்பியர் கடன் வாங்கியதாகக் கூறுவதிலும் பெருமுனைப்புக் காட்டுபவர்.'' என்று தமது ஆங்கில நூலின் முன்னுரையில் இலக்குவனார் கூறியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. அரசர் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபொழுது தமது ஆசிரியராக விளங்கிய சாத்திரியாருடன் கருத்து வேறுபாட்டின் காரணமாகத் தாம் அடிக்கடி வகுப்புகளில் விவாதம் புரிய நேரிட்டதையும் சாத்தியார் எப்பொழுதும் தமிழ் வடமொழியிலிருந்து கடன் பெற்று வளர்ந்ததாகக் குறிப்பிடுவதே இதற்குக் காரணம் எனவும், இலக்குவனார் தமது வாழ்க்கை வரலாற்றில் தெரிவித்துள்ளார்.

தமிழறியாத பிறமாநிலத்தவரும் வெளிநாட்டினரும் தொல்காப்பியத்தை முறையாக அறிந்து கொள்ளும் வகையில் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டும் என்னும் எண்ணம் மாணவப் பருவத்திலேயே இலக்குவனார் உள்ளத்தில் வித்தூன்றப்பட்டுவிட்டது. "மாணவனாகவும் ஆசிரியப்பணி ஏற்றதன் பின்னரும் யான் தொல்காப்பியத்தைப் பலமுறை பயின்று அதன் பெருமையை உணரவும் மாணாக்கர்க்கு அதனை விளக்கவும் வாய்ப்பினைப் பெற்றேன். அங்ஙனம் தொல்காப்பியத்தைப் பயிலும்போது இதனைப் பிறநாட்டார் அறிந்து கொள்ளும் வகையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுமெனவும் இதற்கு முழுமையான தகுதியைத் தாம் பெற்றதும் இப்பணியில் ஈடுபட வேண்டுமெனவும் கருதிவந்தேன்'' என்று இலக்குவனார் தொல்காப்பிய ஆங்கில மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். தமிழின் மொழியமைப்பையும் இலக்கணச் சிறப்பையும் விளக்கும் வகையில் ஆங்கிலத்தில் நான்கு நூல்களை இயற்றியதன் பின்னரே இப்பணியில் இலக்குவனார் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 1963ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமது மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் 'கடந்த பத்தாண்டுகளாக' இம்முயற்சியில் ஈடுபட்டு உழைத்ததன் பயனே இந்நூல் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அதன்படி 1952ஆம் ஆண்டு முதல் இப்பணியில் அவர் ஈடுபட்டது தெளிவாகின்றது. விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரியிலிருந்து அவர் பணிநீக்கம் செய்யப்பட்ட காலத்திலிருந்து இம்முயற்சியில் அவர் முனைந்திருந்தமை புலனாகின்றது 1952 முதல் 1954 வரை தகுந்த பணி கிடைக்கப் பெறாமல் அல்லற்-

பட்ட காலத்தில் அக்கவலைகளைப் புறந்தள்ளித் தொல்காப்பிய ஆங்கில மொழியாக்கத்தில் முனைந்துள்ளாரெனின் அப்பெருந்தகையின் நெஞ்சுரமும் அறிவுவேட்கையும் தமிழ்க்காதலும் உவமை கூறத்தக்கனவோ?

அண்மைக்காலங்களில் சில ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளனவெனினும் அந்நூல்களில் இத்தகைய பேருழைப்பைக் காணவியலாது. இலக்குவனாரின் மொழிபெயர்ப்பை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஆங்கில மொழிநடையை மட்டும் மாற்றியமைத்துச் சிலரும் மொழியியற் கலைச் சொற்களை மாற்றியமைத்துச் சிலரும் ஆங்கில மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளனர். நெடுங்காலமாகத் தொல்காப்பியத்தைக் கற்றும் கற்பித்தும் ஆழங்கால்பட்ட இலக்குவனாரின் இலக்கணப் புலமை இவர்களுக்கு வாய்க்கப் பெறவில்லை. தமிழுக்கே சிறப்பாக அமைந்த அக இலக்கண மரபுகளையும் புறத்திணை விளக்கங்களையும் சற்றும் எண்ணிப்பாராமல் தமது ஆங்கிலப் படிப்பை மட்டுமே பெரிதாகக் கருதிக் கொண்டு தவறான மொழிபெயர்ப்புகளை அளித்துள்ளமை வருந்தத்தக்கதே.

## இலக்குவனார் கண்டறிந்த முடிபுகள்

தமது ஆங்கிலமொழிபெயர்ப்புடன் கூடிய ஆராய்ச்சியில் பல சிறப்பு வாய்ந்த ஆய்வு முடிபுகளை இலக்குவனார் நிறுவியுள்ளார். அவை இன்றளவும் தமிழ் ஆராய்ச்சியுலகத்திற்குத் தக்க வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன அவற்றைச் சுட்டிக்காட்டினால் இலக்குவனாரின் ஆய்வுச் சிறப்பும் தொல்காப்பியத்தின் தனிப் பெருமையும் துலங்கும் என்பதால் அவை இங்கு வழங்கப்படுகின்றன.

1) தொல்காப்பியரின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது (பக்.2-11)

2) 'தொல்காப்பியம்' என்னும் நூலை இயற்றியதன் காரணமாகவே தொல்காப்பியர் எனப் பெயர் பெற்றார் தொல்காப்பியர் எனும் பெயர் அவரின் இயற்பெயர் அன்று. (பக் 2)

3) தொல்காப்பியத்தில் சமற்கிருதச் சொற்கள் இடம் பெற்றுள்ளதாகச் சிலர் கூறுவது முற்றிலும் தவறு ஒரு சொல் தமிழ்ச் சொல்லா அல்லது வடசொல்லா என்று அறிதற்குக் கால்டுவெல் பரிந்துரைக்கும் நெறிமுறை-

*களின் வழிநின்று அச்சொற்களை ஆய்வோர் அவை தமிழ்ச் சொற்களே எனத் தெளிவர். (பக்.378-384)*

4) *காலத்தால் தொன்மை வாய்ந்த நூலாக இருப்பினும் தொல்காப்பியத்தின் உள்ளடக்கமும் அணுகுமுறையும் இற்றைப் புதுமை வாய்ந்தவையாகவே உள. எழுத்ததிகாரம் ஒலியியல் (Phonetics) எனும் மொழியியற் பிரிவுடனும், சொல்லதிகாரம் உருபனியல் (Morphology), சொற்றொடரியல் (Syntax) ஆகிய இயல்களுடனும் ஒப்பு நோக்கிக் காணும் வகையில் அமைந்துள்ளன. பொருளதிகாரம் இக்கால மேலைநாட்டார் தம் இலக்கியக் கோட்பாட்டாய்வு, திறனாய்வு ஆகியவை போன்றமைந் துள்ளது. (பக். 269, 311 & 391).*

5. *தமிழ் இருபத்தாறு எழுத்துகள் கொண்ட கட்டுத் திட்டமான வரிவடிவ அமைப்புக் கொண்டது. அ, இ, உ, எ, ஒ, ஐ, ஔ என ஏழு உயிர்கள், பதினெட்டு மெய்கள், ஓர் ஆய்தம் என இருபத்தாறு வரிவடிவங்களைக் கொண்ட மொழி தமிழ் எனலாம். (ஆ, ஈ, ஊ, ஏ, ஓ ஆகியவை குறில் வரிவடிவங்களிலிருந்து சிறிதளவே மாறுபட்டு அமைந்துள்ளன). உயிர்மெய் வரிவடிவங்கள் தொல்காப்பியரால் உருவாக்கப்பட்டனவே. (பக்.278).*

6) *ஆரியர் வருகைக்கு முன்னரே தமிழ் தனக்கெனத் தனியான வரிவடிவம் பெற்றிருந்தது. (பக்.279)*

7) *தொல்காப்பியர் காலத்தில் தெலுங்கு தனக்கென ஒரு தனி வரிவடிவம் பெறாமல் தமிழின் ஒரு கிளைமொழியாக இருந்தது. (366, 368, 369)*

8) *தொல்காப்பியரால் 'அந்தணர் மறை' எனக் கூறப்படுபவை சமற்கிருத வேதங்கள் அல்ல. (பக்.29).*

9) *தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழில் வேற்றுமைகள் பெயரிடப் பெற்றிருந்தன. (பக்.323)*

10) *தமிழில் வேற்றுமைகளின் அமைப்பு சமற்கிருதத்தைப் பின்பற்றி அமைக்கப்படவில்லை. (பக்.325)*

11) *ஒப்புமையாக்கத்தால் தமிழில் சொற்கள் உருவாகுதலைத் தொல்காப்பியர் ஆய்ந்து கூறியுள்ளார். (349).*

12) *நிருக்த என்னும் நூலை இயற்றிய யச்கர் ஒரு சில இடங்களில் தொல்காப்பியரைப் பின்பற்றியுள்ளார். (பக்.364).*

13) ஒலிநிலைப்பாடும் ஒலியழுத்தமும் தொல்காப்பியரால் ஆய்ந்து கூறப்பட்டுள்ளன *(பக் 371)*

14) பெயர்ச் சொற்கள், வினைச்சொற்கள் ஆகியவற்றை வகைப்படுத்தும் பண்பில் பிரெஞ்சு மொழியியல் அறிஞர் வென்றியே தொல்காப்பியருடன் ஒப்பு நோக்கத்தக்கவர் *(பக் 328)*

15) தொல்காப்பியரின் தொகைச்சொற்கள் குறித்த கூற்றுகள் பெர்னார்டு பிளாக் என்னும் அறிஞரின் கூட்டுச் சொற்கள் குறித்த கூற்றுகளுடன் இயைபு உடையனவாய்த் திகழ்கின்றன *(பக் 372)*

16) உரிச்சொல், இடைச்சொல் என்னும் பெயர்களே அச்சொற்களின் செயற்பாட்டை விளக்கவல்லவை இவை வென்றியே கூறும் (Semantemes, Morphemes) வகைப்பாட்டுடன் ஒப்புநோக்கத்தக்கவை. *(பக் 347,353)*

17) இடைச்சொற்கள் புதிதுபுதிதாகத் தோன்றலும் வழக்கழிந்து வீழ்வதும் தமிழ் மொழியில் இயல்பாகக் காணப்படுகிறது *(348)*

18) உம் என்பது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் குறிக்கும் 'ன்' நிகழ்காலத்தைக் குறிக்கும் *(338,339)*

19) தொல்காப்பியத்தில் சொற்கள் குறித்த ஆய்வுக்குமுன் சொற்றொடர் குறித்த ஆய்வே முதன்மை பெற்றது. *(312)*

20) பிற மொழிச் சொற்களைக் கடன் வாங்கும்போது முதலில் அவை தமிழ்மைப்படுத்தப்பட வேண்டும் அங்ஙனம் தமிழ்மைப்படுத்தப்பட்டு ஆளப்பட்டு வரும் சொற்கள் தனிவகையாக வைத்தெண்ணப்பட வேண்டும். *(367)*

21) பொருளதிகாரத்தில் சில நூற்பாக்களுக்கு விளக்க-மளிக்கும்போது நச்சினார்க்கினியர் சில சமற்கிருத நூல்களைச் சுட்டிக் கூறுதல் பிழையானது *(433,442)*

22) அரிசுட்டாட்டில் கிரேக்க இலக்கிய மரபுகளைக் கண்டறிந்து இலக்கியக் கோட்பாடுகளை வகுப்பதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னரே தமிழ்ப் புலவர்கள் தனித்தன்மை வாய்ந்த இலக்கிய மரபுகளைச் சிறப்புற உருவாக்கிச் செழுமைமிக்க இலக்கியங்களைப் படைத்-திருந்தனர். இம்மரபுகள் இன்றளவும் பின்பற்றத்-தக்கனவாய்ப் பொன்றாப் புதுமையுடன் பொலிகின்றன

23) தமிழ்நாட்டின் தொன்மைக்கால வரலாற்றை எழுதுவதற்கு முனைவோர் பயன்படுத்துதற்குரிய செய்தி மூலங்கள் அடங்கிய கருவூலமாகத் தொல்காப்பியம் விளங்குகிறது.

24) தொல்காப்பியம் பல்வேறு மொழியியற் கோட்பாடு களையும் இலக்கியக் கோட்பாடுகளையும் மொழிகின்றது.

25) பண்டைத் தமிழர்கள் எதனையும் உலகளாவிய நிலையிலேயே நோக்கும் - உலகக் கண்ணோட்டத்தில் சிந்திக்கும் - பரந்து விரிந்த மனப்போக்கு உடையவர்-களாகத் திகழ்ந்தனர். இத்தகைய உலகக் கண்ணோட்டம் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரே அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் தோன்றியது என்பது குறிப்பிடத்தக்கது. (397)

26) பண்டைத்தமிழர்கள் தனித்த ஓர் உருவமோ, பெயரோ இல்லாத ஓரிறை விளங்குவதாக நம்பினர். (398)

27) தொல்காப்பியர் கடவுளை உண்ணும் உணவினும் வாழ்க்கைக்கு முதன்மையானது எனக் கருதினார். (400)

28) திருமண ஒப்பந்தம் எழுத்தில் பதிவு செய்யப்பட்டது. (429)

29) தொல்காப்பியர் தமது நூற்பாக்களில் குறிப்பிடும் 'என்ப' 'என்மனார்' ஆகிய சொற்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முன் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களையே குறித்தது. (431)

30. பிறப்பின் அடிப்படையிலான சாதிப் பாகுபாடு பற்றித் தொல்காப்பியத்தில் எவ்விடத்தும் குறிப்பிடப்பட-வில்லை. (427)

31) தொல்காப்பியர் காலக் கல்விமுறை பொது, தொழில்முறை, ஆய்வு என மூன்று பிரிவாக விளங்கியது. (476)

32) கிறித்துவுக்கு முந்தைய நூற்றாண்டுகளில் அமைந்திருந்த தமிழ்ச் சமுதாய அமைப்புமுறை அக்கால ஆரியச் சமுதாய அமைப்போடு முற்றிலும் மாறுபட்டதாக விளங்கியது. (479)

33) அக்காலத் தமிழர் தற்காப்புக்காகவே போர் புரிந்தனர். நாடுகளைக் கவர்வதற்காகப் போர் புரியவில்லை. (485)

34) தொல்காப்பியர் காலம் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது.

35) தொல்காப்பியம் தனித்தன்மையும் தனிச்சிறப்பும் வாய்ந்த ஒரு முதல்நூல்.

தொல்காப்பியத்தைப் பன்னெடுங்காலமாகப் பயின்றும் பயிற்றுவித்தும் ஆழங்கால்பட்ட இலக்குவனார் தமது அரிய உழைப்பின் விளைவால் கண்டறிந்த உண்மைகளே இங்குக் கூறப்பட்டுள்ள முடிபுகள் ஆகும்

இக்கால மொழியியல் ஆய்வுக்கும், இலக்கண ஆய்வுக்கும், இலக்கிய ஆய்வுக்கும், வரலாற்று ஆய்வுக்கும் இம் முடிபுகள் சிறப்பாகப் பயனளிக்கவல்லன. தொல்லியல் வரலாறு, மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், வரலாற்று மொழியியல், இலக்கியக் கோட்பாட்டு ஆய்வு ஆகியவற்றில் ஈடுபடுவோர் இலக்குவனார் தமது ஆய்வின் விளைவால் கண்டறிந்துள்ள இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்தால் இன்னும் பல புதிய உண்மைகளைக் கண்டறியும் வாய்ப்புள்ளது. ஆயின் இந்நூல் ஆய்வு நூலாக வெளியிடப் பெற்று (1963) நாற்பத்து மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னரும், இன்னும் இங்ஙனம் உழைத்தற்கு யாரும் முன்வராதது பெருங்குறையே. இந்திய அரசு தமிழைச் செம்மொழி என அறிவித்துள்ள இன்றைய சூழலில் இனி யாரேனும் இவ்வாறு உழைத்ததற்கு முன்வருவர் என எதிர்பார்க்கலாம்.

"மொழியின் அடிப்படைகளை ஆய்ந்தறிந்து கூறும் தொல்காப்பியத்தை மொழி பெயர்த்ததற்குப் பெருஞ்சிறப்பு வாய்ந்த திறனாய்வு நோக்குத் தேவை; இத்தகைய நோக்கும் ஆழமும் தமக்கு அமைந்துள்ளன என்பதை இலக்குவனார் இம்மொழிபெயர்ப்பின் மூலம் மெய்ப்பித்துள்ளார். அவர் இப்பணியில் ஈடுபடுதற்கு முன்னரே அரும்புலமையும் அஞ்சாமையும் சார்பற்ற நோக்கும் கொண்டவராக நாடறிந்தவர்; இந்நூலுக்குப் பின்புலமாக அமைந்துள்ளவை இலக்குவனாரின் பல்லாண்டு காலக் கல்வியும், திறனாய்வும், ஒப்பியல் ஆய்வும் ஆகும்" என்று இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள அறிஞர் அண்ணா குறிப்பிட்டுள்ளார்.

அவரே இந்நூலை வெளியிட வேண்டும் என இலக்குவனார் கேட்டுக் கொண்டதை மகிழ்வுடன் ஏற்ற அண்ணா அவர்கள் 'காலம் கனியும்போது வெளியீட்டு

விழாவை வைத்துக் கொள்ளலாம்' என்றார். 1963இல் அச்சிட்டு வெளிவந்த இந்நூலை 1968ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் அண்ணா அவர்கள்வெளியிட்டார். தமிழகப்புலவர் குழுவின் சார்பில் இலக்குவனாருக்குப் பாராட்டும் நிகழ்ந்தது.

அமெரிக்காவிற்கு, ஏல் பல்கலைக்கழகத்தின் சிறப்பழைப்பை ஏற்று, அறிஞர் அண்ணா சென்றபொழுது ஜி.யு.போப்பு ஆங்கிலத்தில் ஆக்கிய திருக்குறளின் மொழி பெயர்ப்பையும், இலக்குவனாரின் தொல்காப்பிய ஆங்கில மொழிபெயர்ப்பையும் எடுத்துச் சென்று அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களுக்குத் தமிழ்நாட்டு அரசின் அன்பளிப்பாக வழங்கினார் என்னும் செய்தி இங்குக் குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா செல்லும் வழியில் வாத்திகன் நகருக்குச்சென்று போப்பாண்டவரைக் கண்டபொழுது அறிஞர் அண்ணா அவருக்கு இவ்விரு நூல்களையும் வழங்கியுள்ளர். அப்போது இலக்குவனாரின் தொல்காப்பிய ஆங்கில மொழிபெயர்ப்பு நூலின் முதற்பக்கத்தில் அண்ணா பின்வருமாறு எழுதியுள்ளார்.

"அருள்மிக போப்பாண்டவருக்கு, பெருமதிப்புடன், தமிழ் நாகரிகத்தின் பெட்டகமாகத் திகழும் இந்நூலை அளிக்கிறேன்" (To His Holiness the Pope, With Regards, I present this book which is a capsule of Tamil Civilisation)

## இ. சங்க இலக்கிய ஆராய்ச்சி

### இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் - சங்ககாலம்

எந்த ஓர் இலக்கியமும் முற்ற முழுமையான கற்பனைப் படைப்பாக அமைந்துவிடுவதில்லை; நேரடியாகவோ மறைமுகமாகவோ அவ்விலக்கியத்தைப் படைத்தவரின் சமூகச் சார்பையோ சமூகநிலைப் பாட்டையோ அவரது காலச் சமூகச் சூழலையோ அவ்விலக்கியத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும். எனவே ஒரு சமூகவியல் மாணவனுக்கு இலக்கியம் ஒரு சமூகவியல் ஆவணமாகத் திகழ்கிறது. ஆலன் சுவிங்குவுட், தயானா இலாரன்சன் ஆகிய இரு இலக்கியத் திறனாய்வாளர்களும் இணைந்து எழுதிய 'இலக்கியச் சமூகவியல்' என்னும் நூலில் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளனர். ஓர் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு அவ்விலக்கியம் படைக்கப்பட்ட காலச்

சமூகச்சூழலை ஆய்ந்தறிதற்கான வழிமுறைகளை இவர்கள் வகுத்தளித்துள்ளனர்.

சங்க இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு சங்ககாலச் சமூக அமைப்பையும் சமூகச் சூழலையும் ஆய்ந்தறியும் முனைப்பில் இலக்குவனாரால் இயற்றப்பட்ட நூலே 'இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் - சங்ககாலம்' என்பதாகும். சங்க இலக்கியத்துள் கூறப்பட்டுள்ள நாடும் நகரங்களும், மக்கள், அரசு, கல்வி, இல்லறம், கடவுட் கொள்கை, மெய்யுணர்வுக் கொள்கை, பண்பாடு, நாகரிகம், பொழுதுபோக்கு, பழக்கவழக்கங்கள், வாணிகம், போர்கள், புலவர்கள் ஆகியவை குறித்த செய்திகளைத் தொகுத்து இந்நூலில் வழங்கியுள்ளார். இங்ஙனம் சமூகவியல் நோக்கில் சங்க இலக்கியம் ஆயப்பட்டுள்ள முதல் முயற்சி என இலக்குவனரின் நூலைக் குறிப்பிடலாம். செவ்விலக்கியத்தைப் புதிய கோணத்தில் கண்டுள்ள இலக்குவனாரைப் பின்பற்றி ஆய்வுகள் பெருகியிருக்க வேண்டும். மார்க்சியமல்லாச் சமூகவியல் நோக்கில் முன்னோடியாக இலக்குவனார் திகழ்கிறார். இதன்பின்னர் மார்க்சியச் சமூகவியல் நோக்கில் நா.வானமாமலை, ந.சுப்பிரமணியன் ஆகியோரும் அதற்கடுத்த பத்தாண்டில் கலாநிதி க.கைலாசபதி, கலாநிதி கா.சிவத்தம்பி ஆகியோரும் பின்னர் பல திறனாய்வாளரும் ஈடுபட்டுச் சங்க இலக்கியத்தை ஆய்ந்தனரெனினும் முன்னோடி முயற்சியாகச் சமூகவியல் நோக்கில் முனைந்தவர் இலக்குவனார் என்பது குறிப்பிடப்பட வேண்டிய, தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

அண்மைக்காலத்தில் ஆய்வுலகில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கும் ஒரு முன்னோடி முயற்சியாக இந்நூல் விளங்குகிறது. தெளிந்த நீரோடை போன்ற எளிய உரைநடையின் மூலம் அரிய உண்மைகளை உணர்த்தும் இந்நூலிலிருந்து சில செய்திகளை இங்குக் குறிப்பிடுவதன் மூலம் இந்நூலின் பெருமையை அறியலாம். இன்றைக்கு அடிக்கடி கூறப்பட்டுவரும் சில கருத்துகளை நமக்கு வழங்கியவர் இலக்குவனார்என்பதையும் இவை உணர்த்தும்.

"'இலக்கியம்' என்பது தூய தமிழ்ச் சொல் இதனை 'இலக்கு + இயம்' எனப் பிரிக்கலாம். இது 'குறிக்கோளை இயம்புவது' என்னும் பொருளைத் தருவது" (பக்.14)

"மொழியைப் பேணிப் புரந்து வளர்ப்பதற்கெனப் புலவர்கள் கழகம் அமைத்த சீர்மிகு செயல் உலகத்திலேயே தமிழகத்தில்தான் முதல் முதல் நிகழ்ந்துள்ளது. அந்நிகழ்ச்சியும் கிறித்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்டுள்ளது." (15)

"'தமிழ்கூறு நல்லுலகம்' என்ற பெயரால் பண்டைத் தமிழர்களின் உலகக் கண்ணோட்டத்தை உணரலாகும்." (19)

"அக்காலப் புலவர்கள் மகளிர் அழகை நகரத்தோடு ஒப்பிட்டுக் கூறும் மரபை மேற்கொண்டுள்ளது புதுமைமிகு செயலாகும். . . நகரை அழகுபடுத்துதல் வேண்டும் என்ற கருத்தும் தம் நாட்டு மக்களே அதனைத் துய்த்தல் வேண்டும் என்ற நோக்கும் சங்ககால மக்களுக்குப் புதியன அல்ல என்பது தெளிவாகின்றது." (28)

"தமிழ்நாட்டுத் தலைநகரங்கள் மூன்றும் ஆற்றோரங்களிலேயே அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது." (29)

"பண்டைத் தமிழகத்தில் அரசமரபு என ஒரு மரபு இருந்திலது. அரசாளும் மரபிற் பிறந்தோர்க்குத்தான் அரசு உரியது எனக் கருதினாரிலர்." (42)

"அக்காலக் கல்வித்திட்டம் பொதுக்கல்வி, சிறப்புக் கல்வி, ஆராய்ச்சிக் கல்வி என மூவகை நிலைகளைப் பெற்றுள்ளது. பொதுக்கல்வி ஏழாண்டுகளும் சிறப்புக்கல்வி மூன்றாண்டுகளும் கற்ற பின்னர் ஆராய்ச்சிக் கல்விக்கென வெளியிடங்களுக்குச்சென்றுள்ளனர்." (50)

"சிறப்புக் கல்வியென்பது தாம் விரும்பும் தொழில் அல்லது கலை பற்றிப் பயில்வதாகும்." (50)

"அன்று தொழிற்கல்விக்குரியனவாயிருந்தன மருத்துவம், வாணிபம், கட்டடக்கலை, வானநூல், நெய்தல் கலை, உழவுத்தொழில், படைக்கலம் பயிற்றல், ஆட்சியியல், மனையியல், ஓவியக்கலை, படிமக்கலை (சிற்பம்), ஆசிரியரியல், புலவரியல் முதலியன என்று தமிழிலக்கியக் குறிப்புகளைக் கொண்டு அறிதல் இயலுகிறது." (50)

"தலைவி, மனைவி, இல்லாள் எனும் பெயர்கள் இல்லறத்தில் பெண்ணினம் பெற்றுள்ள உயர்வினையும் மதிப்பினையும் எடுத்துக்காட்டுவனவாகும். கணவனை மனைவன் என்றோ இல்லான் என்றோ அழைக்கும் மரபு இன்மையான் தலைவனிலும் தலைவிக்கே இல்லறப்

பொறுப்பும் கடமையும் தலைமையும் மிகுதியும் உள எனப் புலனாகும்." (54)

"பழந்தமிழர்கள் கடவுள் ஒருவரே என்றும் அவருக்குப் பல்வேறு பெயர்கள் உண்டு என்றும் அறிந்திருந்தனர்." (65)

"சங்க காலத்தில் ... ஒரு குறிப்பிட்ட சமயமும் அதற்குரிய தனி அடையாளங்களும் வழிபாட்டு முறைகளும் இருந்தன என்று கூறுவதற்குரிய சான்றுகள் இல." (65)

"நகர் என்பதும் நாகரிகம் என்பதும் தூய தமிழ்ச் சொற்கள்." (88)

"தாம் ஈடுபடும் செயல்முறைக்கு ஏற்ப ஆடையை மாற்றி மாற்றி அணியும் நாகரிகமும் கொண்டிருந்தனர்." (90)

"அக்காலத்தில் ஆடவர் பல மனைவியரை மணந்து கொள்ளும் பழக்கம் இருந்தது. ஆயினும், ஒரு மனைவியோடு வாழ்தலும் மனைவியிறந்த பின்னர் வேறொரு பெண்ணை மணந்து கொள்ளாமல் அவள் பிரிவாற்றாமையால் வருந்துதலும் அக்கால ஆடவர்களிடையே போற்றப்பட்ட சிறப்பியல்புகளாய் இருந்தன. (புறம். 71,73,245)" (108)

சங்க இலக்கியக் கடலில் ஆழ்ந்து சென்று இலக்குவனார் நமக்குப் பயந்த நன்முத்துகளில் ஒரு சில இங்குக் காட்டப்பட்டுள்ளன. தமிழ்ச் சமுதாயம் சங்க இலக்கியத்தின் பெருமையை அறிந்து கொள்ளவும், அக்காலத் தமிழகத்தின் சிறப்பை அறிந்து கொள்ளவும் துணைபயக்கும் வகையில் இலக்குவனார் இந்நூலை இயற்றியுள்ளார்.

**சங்க இலக்கியச் சொல்லோவியங்கள்**

சங்க இலக்கியம் ஒரு சில புலவர்கள் மட்டுமே அறிந்த இலக்கியமாக இருந்த காலத்தில் (1945-1947) இலக்குவனார் சங்க இலக்கியத்தைப் பரப்பும் வகையில் சங்க இலக்கியம் என்னும் பெயரிலேயே ஒரு வார இதழ் நடத்தி வந்தார் என 'இதழாசிரியர்' எனும் பிரிவில் கண்டோம். அவ்வாரஇதழில் இதழ் தோறும் ஒரு பாடலை விளக்கும் வகையில் இலக்குவனார் எழுதி வெளிவந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு அவர் மறைவுக்குப் பின்னர் 1988இல் "சங்க இலக்கியச் சொல்லோவியங்கள்" என்னும் தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டன.

மாமூலனார் என்னும் சங்கப்புலவர் எழுதிய முப்பது பாடல்களையும் எளிய தமிழில் நாடகப் பாங்கில் அமைத்து

அப்பாடல்களில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களுக்கு விளக்கமும் வழங்கி இக்கட்டுரைகளை இலக்குவனார் படைத்துள்ளார். தலைவிக்கும் தலைவனுக்கும் அல்லது தலைவிக்கும் தோழிக்கும் இடையே நடக்கும் உரையாடலாக இக்கட்டுரைகளை அமைத்துள்ளார்.

உரையாடல் மூலம் பாடலின் பொருளை உணர்த்துவ-தோடு நில்லாமல் பாடலில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்-களுக்குப் பதவுரையும் இலக்குவனார் வழங்கியுள்ளார். இவ்வுரை வெறும் சொற்பொருள் உணர்த்துவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் சங்ககாலத் தமிழர் தம் வாழ்வுநெறியையும் பண்பாட்டையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

“சேரி : பலர் சேர்ந்து வாழுமிடத்திற்குச் சேரி என்று பெயர். சேர்+ இ = சேரி. இப்பொழுது வீதி என்றும் தெரு என்றும் அழைக்கிறோம்” என்று விளக்குபவர் காலப் போக்கில் இன்று இச்சொல் அடைந்துள்ள பொருள் மாற்றத்தையும் விளக்குகிறார்.

“அல்குல் : சங்க இலக்கியப் பாக்களில் இச்சொல் இடுப்பைத்தான் குறித்தது. பிற்காலத்தில் தோன்றிய புலவர்களோ வேறு பொருளில் வழங்கிவிட்டனர். (வேறு பொருள் இன்னது என்பது தமிழ் அகராதியைக் கொண்டேனும் இராமாயணம், திருவிளையாடல் புராணம், திருக்கோவையார் முதலியவற்றை நோக்கியேனும் அறிந்து கொள்வீர்களாக). (78)

“தமிழ் : இத்தமிழ் என்ற சொல் இப்பாடலில் காணப்படுகின்றதால் கி.பி.ஐந்தாம் நூற்றண்டில் தோன்றிய “திராவிட” என்ற சொல்லே “தமிழ்” என மருவிற்று என்ற கூற்றுப் பொருந்தாப் பொய் என்று அறியலாம்.” (24)

மாமூலனார் இயற்றிய முப்பது பாடல்களுக்கும் இலக்குவனாார் வழங்கிய உரை, ஓரளவு தமிழ் அறிந்தவர்-களுக்கும் சங்க இலக்கியச் சிறப்பை உணர்த்தும் நோக்கில் அமைந்தது. தேர்வுக்குச் செல்பவர்களுக்கு எழுதப்படும் உரையைக் காட்டிலும் எளிமையாகவும் தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பை உணர்த்தும் முறையிலும் இது எழுதப்பட்டுள்ளது.

# 7

# திருக்குறள் - உரைநுட்பமும் ஆய்வுத்திறனும்

வள்ளுவம் பரப்புதலையே தம் வாழ்நாள் பணியென ஏற்றவர் பேராசிரியர் இலக்குவனார் புலவர் கல்லூரி மாணாக்கராக விளங்கியபோதிருந்தே திருக்குறளைப் பரப்புதற்குச் சொற்பொழிவாற்றும் பணியையேற்றுக் குறள்நெறி பரவிடத் தம் இறுதி மூச்சுள்ளவரை உழைத்தார் பயன் கருதாது பணிபுரியும் கிறித்துவநெறியாளர் (Missionary) போன்று குறள்நெறியாளர் உழைக்கவேண்டும் எனக் கூறியதுடன் அவ்வாறு இதழைத் தொடர்ந்து திங்களிருமுறை இதழாகவும், (ஆறு திங்கள்) நாளிதழாகவும் நடத்தினார் பேராசிரியப் பணியிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆண்டு தோறும் திருவள்ளுவர் திருநாளைச் சிறப்புற நடத்துதலைத் தமது முதற்கடமையெனக் கொண்டிருந்தார். இவ்வாறு மக்கள் மன்றத்தில் குறள் பரவுதற்கு உழைத்த பேராசிரியர், திருக்குறளுக்குப் பல்வேறு காலங்களில் உரையெழுதி வெளியிட்டுள்ளார்

திருக்குறள், ஆய்வில் முனைந்து உழைத்து இவர் இயற்றிய நூல்கள் பற்றி 'நூலாசிரியர்' என்னும் பிரிவில் கண்டோம் இவை தவிர, 'வள்ளுவர் வகுத்த நட்பியல்', 'வள்ளுவர் வகுத்த குடிமையியல்' என்னும் தலைப்பிலும் நூல்களை வெளியிடத்திட்டமிட்டிருந்தார். திருக்குறள் முழுமைக்கும் ஓர் ஆராய்ச்சியாக இதுவரை வந்த நூல்களை ஒருங்கிணைத்து, மேலும் விவாதிக்கப்பட வேண்டிய செய்திகளைச் சேர்த்து ஒரு நூலாக வெளியிடவும் கருதியிருந்தார். நோய்வாய்ப்பட்டு 1973-ஆம் ஆண்டு மறைந்துவிட்டமையால் அந்நூல்களைப் பெறும் நல்வாய்ப்பைத் தமிழகம் இழந்ததெனலாம் எனினும் 1938 முதல் 1973-இல் அவர் இறக்கும்வரை இதழ்களிலும் திருவள்ளுவராண்டு மலர்களிலும் கட்டுரைத் தொகுப்பு-

களிலும் மேற்குறித்த நூல்களிலும் அவர் எழுதியவற்றைத் தொகுத்து வெளியிட்டால் திருக்குறள் ஆய்வில் பல புதிய சிந்தனைகள் பிறக்கத் தூண்டுகோலாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

"யாப்பமைதியானும், உவமநலத்தானும், பொருட்-சிறப்பாலும் திருக்குறள் சிறந்த இலக்கியமாகவும் கருதத் தகுநிலையை அடைந்துள்ளமையால் திருவள்ளுவரைப் பெரும்புலவருள் ஒருவராகவே கருதி சாக்ரடீசு, போன்ற மெய்யுணர்வாளர் குழுவினுள் ஒருவராக மதிக்கத் தவறிவிட்டனர் உலகோர்.' (இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்" பக்.71) என்பது இலக்குவனார் கருத்து.

அவரது உரைநலன் முழுமையும் காண்பதற்கு இச்சிறுநூல் இடந்தராது என்பதால் ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளை மட்டும் காண்போம்.

**"எண் என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்**
**கண் என்ப வாழும் உயிர்க்கு."** **(குறள் – 392)**

என்னும் குறட்பாவுக்குப் பேராசிரியர் வழங்கிய உரை திருக்குறளின் சிறப்பையும் அக்காலத் தமிழர்தம் கல்விச் சிறப்பையும் எடுத்தியம்பும் சிறப்பு மிக்கது. இவ்வுரையைத் தமிழுலகு வரவேற்றமையால் பலராலும் பலமுறை இவ்வுரை பயன்படுத்தப்பட்டு இதனை முதலில் கூறியவர் இலக்குவனாரே என்பதும் இன்று காலப்போக்கில் மக்கள்மறதிக்கு இலக்காகியது.

இனி, இலக்குவனார் வழங்கிய உரையைக் காண்போம்.

'எண்' என்பதற்கு வெறுங்கணக்கு என்றும், 'எழுத்து' என்பதற்கு வெறும் இலக்கணம் என்றும் பொருள் கூறுதல் பொருந்தாது. அறிவியலுக்கு எண்ணுதலும் கலையியலுக்கு எழுதுதலும் முதன்மையாக உள்ளனவாதலின் தமிழகப் பெரியோர் அறிவியலை எண் என்றும் கலையியலை எழுத்து என்றும் அழைத்துவந்துள்ளனர். 'என்ப' என்று கூறுவதி-லிருந்து இக்குறியீடுகள் திருவள்ளுவர் காலத்துக்கு முன்பே வழக்கில் இருந்துள்ளன என்று தெளியலாகும். 'ஒருவர்க்கு இவை இரண்டும் உயிர்போன்று இன்றியமையாதன' என்று கூறியுள்ளதன் நயம் பாராட்டத்தக்கது.' (இ.த.வா.பக்.49) இவ்வுரை வழங்கியதோடு இக்குறள் காட்டும் அக்காலக் கல்விச் சிறப்பையும் இலக்குவனார் விளக்குகிறார்.

*"அறிவியல் ஆய்வுக்கு உரியது. கலையியல் உள்ளவியல்பாம் பண்புக்குரியது. அறிவு முதிர்ச்சியும் பண்பு முதிர்ச்சியும் ஒருசேர வாய்க்கப்பெற்றால்தான் கற்றோர் என்பவர் மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்படுவர். இன்றேல் கூர்த்த அறிவியலறிவால் அழிவுச் செயல்களும், முதிர்ந்த கலையியல் அறிவால் களி இன்பச்செயல்களும் மிகுந்து உலகம் கேடுறும். ஆகவே, இன்றைய பல்கலைக்கழகப் பாடத்திட்டம் இவ்விரண்டு பகுதிகளிலும் ஒருவர் புலமை பெறுவதற்குரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை நம் முன்னோர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே அறிந்து மேற்கொண்டு ஒழுகினர் என்பது அறிந்து வியத்தற்குரியதன்றோ?'*

*என்னும் இலக்குவனாரின் விளக்கம் திருக்குறளை நடைமுறை வாழ்க்கையோடு பொருந்தக் காணும் அவரது அணுகுமுறைக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாகும்.*

**இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது**
**உணர விரித்துரையா தார்.** குறள் – 650

*என்னும் குறட்பாவுக்கும் இவ்வாறு நடைமுறைவாழ்வை அடிப்படையாகக் கொண்டே பொருள் வகுக்கிறார்.*

*"நம் நாட்டில் கற்றவர்கள் கற்றவற்றை நாட்டுமக்கள் அறியுமாறு விரித்துரைக்கும் ஆற்றல் பெற்றிலர். ஏன்? கலைப்பொருள்களை வேற்றுமொழியில் கற்கின்றனர். வேற்றுமொழி அறியாத தமிழர்கட்கு உணர்த்தும் ஆற்றல் பெறவில்லை. ஆதலின் கல்விமொழி தாய்மொழி, தமிழ்மொழியாக இருப்பின் அறிவும் வளரும்; மற்றவர்க்கும் பயன்படும். இப்பொழுது அறிவும் கருகிச் சொல்வன்மையும் அற்று நாட்டுக்கும் பயனின்றிக் கழிக்கின்றனர் பலர்" (வள்ளுவர் வகுத்த அரசியல் - பக்.273)*

*என்பதே இலக்குவனார் இக்குறளுக்கு வழங்கும் பொருள். தாய்மொழிக் கல்விக்காக வாழ்நாளெலாம் போராடிய பேராசியர் இக்குறளுக்கு இங்ஙனம் உரைவகுத்ததில் வியப்பில்லை. காந்தி அடிகளார், பெருங்கவிஞர் தாகூர், இராசாராம் மோகன்ராய் ஆகியோர் சிறப்பித்துக் கூறிய கல்விமுறை தாய்மொழிவழிக் கல்வி என்று தமது பொழிவுகளில் அடிக்கடிக் குறிப்பிடும் வழக்கமுடையவர் இலக்குவனார் என்பதால் குறள்வழி நின்று அதனை வலியுறுத்துகிறார். இவ்வாறு நடைமுறைவாழ்வை*

அடிப்படையாகக் கொண்டு அவ்வகையிலேயே குறளுக்கு உரை வகுத்த இலக்குவனாரின் திருக்குறள் உரைகளை ஆய்ந்த அவரது மாணவர், பேராசிரியர் வீ.முத்துசாமி நாற்பத்தைந்து சிறப்புப் பண்புகள் இலக்குவனார் உரையில் அமைந்துள்ளதாகக் கூறுகிறார். இலக்குவனாரின் உரைக்கே விளக்கம் வழங்கும் வகையில் பேராசிரியர் வீ. முத்துசாமியின் ஆய்வு அமைந்துள்ளது எனலாம். உலக மெய்யுணர்வாளர்களுள் திருவள்ளுவர் சிறப்பிடம் பெறுபவர் என்னும் உறுதிவாய்ந்த கொள்கையும் வேற்றவர் வரவால் தமிழர் பண்பாடு சிதைந்துவிட்டது என்னும் ஆழ்ந்த வருத்தமும் நடைமுறை வாழ்வோடு நேரடியாகப் பொருத்திப் பார்த்து இக்காலச் சிக்கல்களுக்குத் தீர்வு குறளிலிருந்து பெறவேண்டும் என்னும் அணுகுமுறையுமே இலக்குவனார் வகுத்த உரைவிளக்கத்திற்கு அடித்தளங்களாக விளங்குகின்றன. எனவே கற்போர்தம் சிந்தனைக்கு விருந்தாகவும், செம்மையான வாழ்வுக்கு வழிகாட்டியாகத் திருக்குறளை ஏற்றிடத் தூண்டுகோலாகவும் இலக்குவனாரின் உரை திகழ்கிறது.

# 8

# ஓய்விலா உழைப்பு

“வாரநாட்களில் காலை நான்கரை அல்லது ஐந்துமணிக்கு எழுந்துவிடுவார். அதன்பின் ஒருமணிநேரம் படிப்பு; ஆறு மணிக்கு உடற்பயிற்சி; பின்னர் காலைச் செய்தித்தாளைப் படித்தபின்னர் ஒரு நடைப்பயிற்சி; அதன் பின் காலைக் கடமைகளை முடித்துச் சிற்றுண்டி உண்ட பின்னர்க் கல்லூரி கிளம்பிவிடுவார்; மாலையில் கல்லூரிப் பணி முடிந்ததும் தொல்காப்பிய வகுப்பு அல்லது திருக்குறள் வகுப்பு; அதன்பின் இரவு இல்லம் வருகை; இரவு உணவு கொண்ட பின்னர் குடும்ப உறுப்பினர் அனைவருடனும் உரையாடல்; பின்னர் மீண்டும் படிப்பு; பெரும்பாலும் பத்தரை அல்லது பதினொரு மணிக்கு உறக்கம்; வார இறுதி நாட்களில் வெளியூர்க் கூட்டம்; பெரும்பாலும் திருக்குறள் பொழிவுகள்; வெளியூர்க்கல்லூரி விழாக்கள்; தமிழ்த் திருமணம் நடத்தும் பொறுப்பு; மீண்டும் திங்கட்கிழமை காலை இல்லம் திரும்பல்; இதுதான் பேராசிரியரின் பணிநிரல்” என்கிறார் இலக்குவனாரின் மூத்த புதல்வர், பொறியாளர் இ. திருவேலன்.

பல்வேறு ஊர்களில் பணியாற்றிய இலக்குவனார் எந்த ஊருக்குப் பணிபுரியச் சென்றாலும் அவ்வூரில் ஒரு தமிழ் மன்றத்தை அமைத்துவிடுவார் தொல்காப்பியர் திருநாள், திருவள்ளுவர் திருநாள். இளங்கோஅடிகள் திருநாள் என்று புலவர்களுக்கு விழாக்கள் நடத்துவார். அங்ஙனம் நடத்துதற்கு அவ்வூர்ப் பொதுமக்கள் ஒத்துழைப்பைப் பெற்று மக்கள் மன்றத்தில் தமிழ் பரவத் தம்மாலியன்ற பணிகளை ஆற்றலைத் தமது தலையாய கடனாகக் கொண்டு வாழ்ந்தார் இங்ஙனம் தமிழ்ப்பணி ஆற்றுதற்கு இளைய தலைமுறையை ஆயத்தப்படுத்தும் நோக்குடன் புலவர் படிப்புக்கு இலவச வகுப்புகளை நடத்திப் பலர் புலவர் பட்டம் பெற்று ஆசிரியப் பணியேற்று வாழ்வில் வளம்பெறச் செய்வார். எனவே இவரது வேலைநேரம் இருமடங்காகியது தமது ஊதியத்திற்காகப்

பகலில் கல்லூரிப் பணி; பிறர்க்கு ஊதியம் ஏற்படுதற்கு மாலைநேரக் கல்லூரி; மக்கள் தமிழார்வம் பெறுதற்குப் பொதுக்கூட்டங்கள்; என்று இருபத்துநான்கு மணிநேர ஊழியராக இலக்குவனார் செயற்பட்டதையே அவரது வாழ்க்கை வரலாறு உணர்த்துகிறது. இத்துணைப் பணிகளுக்-கிடையில் இதழ் நடத்தும் பணி; நெல்லையில் 'சங்க இலக்கியம்; விருதுநகரில் இலக்கியம்; தஞ்சையில் 'திராவிடக் கூட்டரசு; மதுரையில் 'குறள்நெறி'. கல்லூரிப் பணியில் கிடைக்கும் ஊதியத்தை வீட்டுக்குச் செலவழித்து எஞ்சியதைச் சேமித்து வாழ்வை மேலும் வளமாக்கிக் கொள்ளும் எண்ணம் சிறிதும் இல்லாத தொண்டுள்ளம்; இருபத்துநான்கு மணிநேரத்தில் கல்லூரிப்பேராசிரியர்; ஊதியம் விழையா மாலைநேரக் கல்லூரி அமைப்பாளர் - ஒருங்கிணைப்பாளர்-பேராசிரியர்; இயக்கம் நடத்தும் தன்னார்வப் பணியாளர்; இதழாசிரியர்; புதிய நூல்களை நாளும் விரும்பிப் படிக்கும் படிப்பாளி; நூல்களை ஆக்கும் படைப்பாளி; குடும்பத்தைப் பொறுப்புடன் வழிநடத்திச் செல்லும் குடும்பத்தலைவர்; இத்துணைப் பொறுப்புகளையும் திறம்பட ஆற்றிய மாட்சியைக் கண்டோர் வியப்பர்; தம்மால் இங்ஙனம் உழைக்கமுடியுமா என மருள்வர்.

தமது மக்கள் யாரேனும் காலையில் விழிப்பதற்குக் காலந்தாழ்த்தினால் பேராசிரியர் என்ன கூறுவார் தெரியுமா? 'தந்தை பெரியார் போல உழைக்கவேண்டும்'; அறிவியல் அறிஞர் கோ.து.நாயுடு போல உழைக்கவேண்டும்''நேருவைப் போலக் குறைவாகத் தூங்கவேண்டும்'' நெப்போலியனைப் போன்று தூக்கத்தைக் கட்டுப்படுத்தத் தெரிய வேண்டும்''; இவைதாம் பேராசிரியர் வழங்கும் அறிவுரைகள்; இந்தப் பட்டியலில் பேராசிரியரும் ஒருவர் என்பதை அவரது மக்களும் அறிவார்கள்; மற்றவர்களும் அறிவார்கள்.

பணிஓய்வு பெற்றபின்னரும் பேராசிரியர் ஓய்வை நாடினாரிலர்; மீண்டும் 'குறள்நெறி' இதழ் தொடங்கினார்; மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் மாலைச் சொற்பொழிவுகளைத் தொடங்கினார்; தமது வெளியூர்ச் சொற்பொழிவின் அடுத்த படிநிலையாக வெளிநாட்டுச் சொற்பொழிவுக்குத் திட்டமிட்டுத் தமிழவேள் கோ.சங்கரபாணி அவர்களின் ஏற்பாட்டில் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் இரண்டுமாதம் தங்கிச் சொற்பொழிவு ஆற்றினார்.

இங்ஙனம் பேராசிரியர் தாமாகவே பல பணிகளை ஏற்படுத்திக் கொண்டு இயங்கிவந்தாலும் அவையனைத்தும் ஊதியமற்ற உயர்தமிழ்ப் பணிகள். முறையாகத் தமக்குச் சேரவேண்டிய ஓய்வூதியமும் கிடைக்கப் பெறாநிலையில் வறுமையிற் செம்மை காத்த பேராசிரியர் உழைப்புக்கு ஏற்ப உடல்நலன் பேண இயலாச் சூழலில் உடல்நலன் சீர்குலைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். காய்ச்சல், நீரிழிவு நோயினால் காலில் கட்டி, கால்வீக்கம், மஞ்சள் காமாலை, ஈரல் சீர்கேடு எனப் படையெடுத்து வந்தன நோய்கள். ஒவ்வொரு நாளும் பதினெட்டு அல்லது பத்தொன்பது மணி நேரம் தமிழ்நலன் காக்கத் தம் வாழ்நாளெல்லாம் உழைத்த பேராசிரியர் தம் நலன் காக்க ஓர் நொடி கூடச் சிந்திக்காமல் விட்டுவிட்டார். அவரால் பயனடைந்தவர்களும் பாரா-முகமாக இருந்துவிட்டனர். ஓய்வு, உறக்கம் ஆகியவற்றை ஒதுக்கித் தள்ளிய செயல்மறவருக்கு ஓய்வு தேவை எனக் காலன் கருதினான்போலும். 1973-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் மூன்றாம் நாள் திங்கட்கிழமை இரவு பேராசிரியர் இவ்வுலக வாழ்விலிருந்து ஓய்வு பெற்றார்.

'ஆறடி வளர்ந்த நல்ல ஆண்மையர் தோற்றம் விஞ்சும்
மாறனோ ஆரன் தானோ மற்றெனின் சேரர் கோனோ
வீறுடன் நீண்மேலாடை வீசுகை முழந்தாள் தோய
ஏறுபோல் நிமிர்ந்து செல்லும் இலக்குவனாரைக் காணோம்'

என்று மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் கையறு-நிலைப்பா பாடினார். 'நெடிதுயர்ந்த உருவும் எழுச்சி மிக்க உள்ளமும் கொண்ட இலக்குவனார்க்கு அறுபத்துமூன்று வயதில் இறப்பா' எனச் சுற்றமும் நட்பும் மீளாத் துயரில் ஆழ்ந்ததில் வியப்பில்லை.

# 9

# பன்முக ஆளுமை

இலக்குவனாரின் ஆளுமை பன்முகப்பாங்கு கொண்டது. அவருடன் பழகிய, பணிபுரிந்த அறிஞர்களின் கூற்றுகளைப் படித்தால் இதனைத் தெளிவுற உணரலாம். இலக்குவனாரின் மாணவரும் கல்லூரிப்பணியிற் சேர்ந்தபின் "இலக்குவனார் ஆய்வுப்பண்பு" என்னும் தலைப்பில் அவரது நூல்களை ஆய்வு செய்தவருமாகிய பேராசிரியர் வீ. முத்துச்சாமி "இத் தமிழ்க்காவலர் இருக்குமிடமெல்லாம் மொழிப்பற்று முகிழ்க்கும்; மொழிக்காப்பு மணக்கும்; தனித்தமிழ் உணர்வு வீறுகொண்டெழும்; எழுச்சிமிகு புரட்சியுணர்வு புலரும்; மலரும்; புத்தொளியூட்டி நிற்கும்; புத்துலகு காட்டி நிற்கும்; இப்பேரொளி ஊடுருவும் எவ்வுள்ளமும் தமிழ் உள்ளமாக உருவெடுக்கும்." என்று கூறுகிறார்.

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை "ஆசிரியர் மறைமலையடிகளாரின் பரந்தாழ்ந்த புலமையுடன், அறிஞர் கா. சு. அவர்களின் நுண்மாண்நுழைபுல ஆய்வுத்திறனும், நாவலர் சோமசுந்தர பாரதியாரின் நிமிர்நடையும் துணிவும் உடையவர்" இலக்குவனார் எனக் குறிப்பிட்டார். "எவ்வளவு பெரியவரையும் எவ்வளவு நண்பரையும் குற்றங்காணின் மழுப்பாது இடித்துரைத்துக் கண்டனக் குரல் எழுப்பும் நக்கீர மரபினர். இதனால் பல தடவை பதவிக்கே ஊறு நேர்ந்ததுண்டு." என்னும் பன்மொழிப்புலவரின் கருத்து இலக்குவனாரின் பண்புநலனைப் படம்பிடித்துக் காட்டும் தன்மையது எனலாம்.

"அடையாத இன்னல்கள் அடைந்திட்டபோதும் உடையாத உள்ளத்தோடு உயர்ந்து நின்றவர் பேராசிரியர் இலக்குவனார்." எனக்கூறும் டாக்டர் மெ. சுந்தரம் "தாய்த் தமிழை அழிக்கவந்த இந்தி எதிர்ப்பு அறப்போரில் முன்நின்று பாசறை அமைத்துப் பரணி பாடிச் சிறைக்கோட்டம் சென்று அச்சிறைக்கோட்டத்தைச் செந்தமிழ்க் கோட்டமாக்கிய செம்மல் அவர். கல்லூரிகளில் தமிழ்க் கற்பிக்கும் மொழித் திட்டம் வெற்றிபெறக் கால்நடைச் செலவு மேற்கொண்ட கன்னித்தமிழ்ச்சான்றோர் அவர்." எனப் பாராட்டுகிறார்.

நாகர்கோவில் தெ.தி. இந்துக்கல்லூரியில் இலக்குவனாருடன் பணிபுரிந்த பேராசிரியர் ச. சுப்பிரமணியன் "பேராசிரியர் இலக்குவனார் அவர்களைப் போல் ஆசிரியர் குலத்தில் அஞ்சாநெஞ்சத் தலைவரை நான் பார்த்ததில்லை" என்கிறார். "அன்புக்கு மிக்க அன்பாவார்; பண்புக்குப் பண்பாவார்; பகைக்குப் பகையாவதற்குத் தயங்கார். பொருளால் அவர்க்குச் செலவு மிகவுண்டு. வரவு அதற்குத் தக்கவாறில்லை. ஆயினும் கொடைக்கும் ஏழைக்கிரங்கிப் பொருளுதவலுக்கும் தயங்கார். தந்நிலை தெரிந்தும் செலவிற்கஞ்சிச் சிறியராகார். ஏழை என்று தெரிந்தால் எவ்வகையிலும் உதவ முயல்வார்." என்று இலக்குவனாரின் ஈரநெஞ்சையும் புலப்படுத்துகிறார் பேராசிரியர் ச. சுப்பிரமணியன்.

அண்ணலார் என்று போற்றப்பட்ட புதுக்கோட்டை பு.அ. சுப்பிரமணியனார் இலக்குவனாரைப் பற்றிக் குறிப்பிடும் போது" தமிழே அவர் மூச்சு; தமிழுக்காக எத்தகைய தியாகமும் அவர் செய்யத் தயங்காதவர். சிறந்த தமிழ்க்காவலர்" என்று பெருமிதத்துடன் கூறுகிறார்.

மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் இலக்குவனாரின் பண்புநலன் குறித்து விளக்கும்போது "அன்பு. அடக்கமுடைமை, செருக்காமை, ஆரவாரமின்மை, அழுக்காறின்மை, உள்ளொன்று புறம்பொன்று பேசாமை, கொள்கையுறைப்பு, அஞ்சாமை, ஊக்கமுடைமை, பணத்தினும் பண்பாட்டைப் பெரிதாகக் கொள்கை, தலைசிறந்த தமிழ்ப்பற்று ஆகியவை அவரிடம் நான் கண்ட பண்புகள்." எனச் சிறப்புறக் கூறுகிறார்.

இலக்குவனாருடன் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பணிபுரிந்த பைந்தமிழ்க்காவலர் அ.கி.பரந்தாமனார் இலக்குவனாரின் பண்புநலன் குறித்துக் கூறும்போது" அவர் பணத்தைப் பற்றிக் கவலைப்பட்டதில்லை கிடைத்த பணமுடிப்புகளைத் தமிழ் வார இதழ்களுக்கும் ஆங்கில இதழுக்கும் செலவு செய்தார்." என்றார்.

முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், இலக்குவனார் "உள்ளத்தில் கபடம் இன்றி எதையும் வெளிப்படையாகவும் துணிவாகவும் கூறும் ஆற்றல் படைத்தவர். இதனால் அவர் சிலரது வெறுப்புக்கும் ஆளானதுண்டு." என்கிறார்.

இலக்குவனாரின் ஆசிரியர் சாமி. சிதம்பரனாரின் துணைவியார் திருமதி. சிவகாமி சிதம்பரனார் இலக்குவனாரின் பண்புநலன் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்

"கொள்கையிலும் மொழிப்பற்றிலும் பிடிவாதமான உறுதி வாய்ந்தவர். அஞ்சாநெஞ்சமுடையவர். கடைசிக்காலம் வரை எதிர்ப்பில் போராடியவர். கொள்கைக்காகத் தம் ஆசிரியப்பணியையும் விட்டவர்."

இலக்குவனார் "தம் கருத்துகளை எதிர்ப்பு எவ்வளவு வந்தபோதும் ஆணித்தரமாக அஞ்சாது எடுத்துரைப்பார். பதவியைப் பெரிய வாழ்வு எனக் கருதும் இவ்வுலகில் மொழியின் வாழ்வே தம்முடைய வாழ்வு எனக்கருதி உழைத்த அறிஞராவார்" என்று உவமைக் கவிஞர் சுரதா கூறியுள்ளார்.

"போர்க்குணமே அவருடைய சிறந்த பண்பாகும். தீமைகளை, அநீதிகளைக் கண்டபோது விளைவுகள் பற்றி எண்ணாமல் எதிர்ப்புச் செய்வார்." என்று கூறும் கவிஞர் நா. காமராசன் "எல்லா மாணவர்களையும் நேசிப்பார். மாணவர்கள் படிப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். மாணவர்களிடம் நேரடியாகப் பேசி அவர்கள் குறைகளைத் தீர்ப்பார்." எனல் குறிப்பிடத்தக்கது.

இம்மேற்கோள்களைக் காணும்போது இலக்குவ-னாரிடம் மென்மையும் வன்மையும் ஒருசேர அமைந்திருந்தன என்னும் உண்மை புலனாகும். மனித உறவுகளைப் பேணுவதில் அவர் மென்மையினும் மென்மையான தமது அன்புள்ளத்-தைப் புலப்படுத்தினார். தமிழின் மேன்மையைக் குறைத்துக் கூறுவோரிடம் சீறியெழுந்து தக்க மறுமொழி பகரும் வேளையில் "தமிழைப் பழித்தவரைத் தாய் தடுத்தாலும் விடேன்" என்னும் எஃகு உள்ளத்தைப் புலப்படுத்தினார்.

மாநிலக்கல்லூரியில் இலக்குவனார் பணியாற்றிய-பொழுது அங்கே முதல்வராகப் பணியாற்றிய செ. இராமச்சந்திரன் "அவரது எழுச்சிமிக்க தோற்றத்தைப் பார்த்து அஞ்சித் தயங்குவோர் அனைவரும் அவரிடம் ஒரு மணித்துளி பேசினாலும் குழந்தையினும் மென்மையானவர் எனத் தெளிவர்" என்று குறிப்பிட்டார். மாநிலக்கல்லூரியில் அதற்கு முன்பாக முதல்வராகப் பணியாற்றிப் பதவி உயர்வு வேண்டாம் என எழுதிக் கொடுத்தவர் பி.சி.எல்.சாமி என்னும் தாவரவியல் துறைத் தலைவர் ஆவார். சாமிக்கும் இலக்குவனாருக்கும் எப்போதும் கருத்துமோதல் நிகழ்ந்துவருகிறது என செ.இராமச்சந்திரன் கேள்விப்-பட்டுள்ளார். இலக்குவனாரின் பழுத்த புலமையையும் நேரிய பண்பையும் பெரிதும் மதிக்கும் முதல்வர் செ.இராமச்சந்திரன் நேரடியாக அவரைத்தேடி அவர் அறைக்கே செல்வது

வழக்கம். முதல்வரைத் தேடித்தான் பேராசிரியர் செல்லவேண்டும் என்னும் முறைமையிலிருந்து இலக்குவனாருக்கு முற்றிலும் விலக்கு அளித்து இவரோடு தொடர்பு தேவைப்படும் போதெல்லாம் அவர் அறைக்குச் செல்லும் பெருந்தன்மைமிக்க முதல்வர் செ. இராமச்சந்திரன் "ஒரு பேராசிரியர் எவ்வாறு விளங்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் இலக்குவனார்" எனக் குறிப்பிட்டார். "எனக்கும் பி.சி.எல். சாமிக்கும் பிணக்கும் பூசலும் நிகழ்ந்துவந்த நேரத்தில் இலக்குவனார் இங்குப் பணியாற்றினார். சாமி தமிழ்மொழி பற்றி ஏதேனும் குறைவாகப் பேசி இலக்குவனாரை வலிய வாதத்திற்கு இழுப்பார் எனவும் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் இலக்குவனார் சாமியைப்பற்றி என்னிடம் எப்போதும் ஒருசொல் கூடக் கூறியதில்லை. என்னை மகிழ்ச்சிப் படுத்துவதாக நினைத்துக்கொண்டு சாமியைப் பற்றிப் பலர் புறங்கூறிய அச்சூழலில் ஒரு பேராசிரியர் எங்ஙனம் பெருமிதப்பண்போடு திகழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இலக்குவனார் திகழ்ந்தார்." என்னும் முதல்வர் இராமச்சந்திரனின் கூற்று, புறங்கூறாமை என்னும் வள்ளுவர் வலியுறுத்திய பண்பை வாழ்வில் கடைப்பிடித்துப் பிறர்க்கு வழிகாட்டியவர் இலக்குவனார் என்பதற்குச் சான்றுபகர்கிறது.

அறுபத்துமூன்று ஆண்டுகளே வாழ்ந்து மறைந்த அப்பெருந்தகையின் பண்புநலனை விளக்க அறுபத்து மூவாயிரம் நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறலாம் என்னும் வகையில் வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் உணர்வுநலன் சிறக்க வாழ்ந்து பிறர்க்கு முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார். புகழ்வாய்ந்த பட்டிமன்றப் பேச்சாளர், பேராசிரியர் பா. நமச்சிவாயம் கூறிய ஒரு நிகழ்ச்சி. அவர் நாகர்கோவில் தெ.தி.இந்துக் கல்லூரியில் இளநிலை விரிவுரையாளராகப் பணியாற்றிவந்த நேரம்; இலக்குவனார் அங்கே பொறுப்பு முதல்வர்; பாவேந்தர் பாரதிதாசன் அக் கல்லூரி நிகழ்ச்சிக்காக அழைக்கப்பட்டு வந்துள்ளார். மாலையில்தான் விழா; முற்பகலில் வந்துள்ளார்; இலக்குவனார் பாவேந்தரை அழைத்துக்கொண்டு எல்லா வகுப்பறைகளையும் காண்பித்துத் தமிழ் முதுகலை வகுப்புகளுக்கு மட்டும் உள்ளே அழைத்துச் சென்று ஆசிரியரையும் மாணவர்களையும் அறிமுகப்படுத்தியுள்ளார்; அப்போது அக்கல்லூரி கேரளப்பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்குட்பட்டிருந்தது இலக்குவனாரின் முயற்சியாலேயே தமிழ் முதுகலை (எம்.ஏ.)

வகுப்பு அங்கே ஏற்படுத்தப்பட்டது. பாவேந்தரின் "குடும்ப விளக்கு" என்னும் படைப்பு அம்மாணவர்களுக்குப் பாடமாக (இலக்குவனார் முயற்சியால்) வைக்கப்பட்டிருந்தது. பாவேந்தர் அவ்வகுப்பில் நுழைந்த பாடவேளை 'குடும்ப விளக்கு' நடத்துதற்குரிய பாடவேளை. அதனை நடத்தும் ஆசிரியர் பா.நமச்சிவாயம்தான். இதனை மகிழ்வோடு பாவேந்தரிடம் கூறினார் இலக்குவனார். மிக இளமைத் தோற்றம் கொண்ட நமச்சிவாயத்தைப் பார்த்துப் பாவேந்தர் கேட்டார். "உமக்குத் திருமணமாகிவிட்டதா?" அப்போது-தான் புதிதாக வேலையில் சேர்ந்திருந்த நமச்சிவாயம் அஞ்சியபடியே விடையளித்தார். "இல்லை, ஐயா."

அங்கே ஆசிரியரைவிட மூப்பாகத் தெரிந்த மாணவர்களை நோக்கிக் கேட்டார் பாவேந்தர்," உங்களில் யாராவது திருமணமானவர்கள் இருக்கிறீர்களா?" மூன்று பேர் கையைத்தூக்கினார்கள். அவர்களைப் பார்த்துப் பாவேந்தர் கூறினார் "உங்களில் யாராவது இப்பாடத்தை நடத்துங்கள்." இந்நிகழ்ச்சிப்போக்கில் சற்றும் காலத்தாழ்வு செய்யாமல் உடனேயே சீற்றமிக்க குரலில் இலக்குவனார் பாவேந்தரைப் பார்த்துக் கூறினார் "என்ன ஐயா கூறுகிறீர். இளங்கோ அடிகளும் திருத்தக்கதேவரும் திருமணம் புரிந்துகொண்டா இல்லற இன்பம் பற்றிப் பாடினார்கள்?" மறுகணமே அமைதியான பாவேந்தர் இலக்குவனாருடன் மீண்டும் முதல்வர் அறைக்கே சென்றுவிட்டார். தமது மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியர் மனங்குன்றிப் போகும்படி செய்துவிடக்கூடாது என்பதில் இலக்குவனார் காட்டிய கவனம் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இலக்குவனார் படைத்த ஆய்வு நூல்கள் தமிழ்வளர்ச்-சிக்குக் காலமெல்லாம் வழிகாட்டிநிற்கும். இலக்குவனாரின் வாழ்க்கைநிகழ்ச்சிகள் முழுமையாகத் தொகுக்கப்பெற்றால் அவரது தலைசிறந்த பண்புநலன் வெளிப்படுவதுடன் வருங்காலத் தலைமுறையினர் வாழ்வியல் விழுமியங்களைப் போற்றிடத் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

தொல்காப்பியமும் திருக்குறளும் தமிழரின் இரு கண்கள் எனக் குறிப்பிட்ட இலக்குவனார் தொல்காப்பியத்தை உலகு அறியும்வகையில் ஆங்கிலமொழியில் மொழிபெயர்த்து வழங்கினார். காலமெல்லாம் குறள்நெறி பரப்பினார்; வாழ்வில் போற்றினார்; நாம் ஒவ்வொருவரும் நாடும் மொழியும் நலம்பெற, வளம் பெற நாளும் உழைத்தலே அப்பெருமகனார்க்கு ஆற்றும் நன்றிக் கடன் ஆகும்.

# பின்னிணைப்பு - 1

## இலக்குவனார் இயற்றிய நூல்கள்

**கவிதை:**

*எழிலரசி (குறுங்காப்பியம்) - கருணாநிதி அச்சகம், திருவாரூர் 1933*

*துரத்தப்பட்டேன், இலக்கியப்பண்ணை, புதுக்கோட்டை - 1954*

*மாணவர் ஆற்றுப்படை, மதுரை - 1959*

*அறிஞர் அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து, மதுரை - 1968*

**ஆய்வுநூல்கள்:**

*தமிழ்க் கற்பிக்கும் முறை, நாட்டாண்மை உயர்தரக் கல்விக்கழகம், நன்னிலம் - 1940*

*நமக்கு வேண்டுவன, இலக்கியப்பண்ணை, விருதுநகர் - 1948*

*அமைச்சர் யார்? - நீலா பதிப்பகம், சென்னை - 1949*

*எல்லோரும் இந்நாட்டரசர் (இரு பகுதிகள்), இலக்கியப்பண்ணை, புதுக்கோட்டை - 1954*

*தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை - 1961*

*பழந்தமிழ், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை - 1962*

*இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்க காலம்), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை - 1962*

*வள்ளுவர் வகுத்த அரசியல், சாம்பா பதிப்பகம், சென்னை - 1968*

*வள்ளுவர் கண்ட இல்லறம் (அல்லது) காதல் வாழ்க்கை, மீனா புத்தக நிலையம், சென்னை - 1971*

**வரலாறு:**

*கருமவீரர் காமராசர், நாஞ்சில் புத்தக மனை, நாகர்கோவில், 1956*

*என் வாழ்க்கைப்போர் (இளமைப் பருவம்), குறள்நெறி வெளியீட்டகம், மதுரை - 1971 (எஞ்சிய பகுதிகள் - அச்சில்)*

**உரை:**

*திருக்குறள் - எளிய பொழிப்புரை, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை - 1963*

*தொல்காப்பிய விளக்கம் - தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் உரை (குறள்நெறி இதழில் தொடர்ந்து வெளிவந்தது)*

*சிவஞானசித்தியார் உரை (கையெழுத்துச் சுவடி)*

*சங்கப்புலவர் மாமூலனாரின் முப்பது பாடல்களுக்கும் உரை (சங்க இலக்கியம் வார இதழில் வெளிவந்தது)*

**ஆங்கில நூல்கள்:**

The Making of Tamil Grammar, The South India Saiva Siddhantha Works Publishing Society, Thirunelveli - 1946.

A Brief Study of Tamil Words, The South India Saiva Siddhantha Works Publishing Society, Thirunelveli - 1946

Semantemes and Morphemes in Tamil Language, Nagercoil - 1957

Tamil Language, Introduction, Nagercoil - 1959

Tamil Language - Phonetics, Nagercoil - 1959

Tamil Language - Semantics, Nagercoil - 1959

Tamil Language - Syntax, Nagercoil - 1959

Tamil Language, The South India Saiva Siddhantha Works Publishing Society, Madras - 1961

Tholkaappiyam in English with critical Studies, KuralNeri Publishing House, Madurai - 1963

**அவர் மறைவுக்குப் பின்னர் வெளிவந்த நூல்கள்:**

*சங்க இலக்கியச் சொல்லோவியங்கள், திருமகள் பதிப்பகம், சென்னை - 1968*

*இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்க காலம்), மறு பதிப்பு, இலக்குவனார் இலக்கிய இணையம், சென்னை - 2002*

## இலக்குவனார் வெளியிட்டு நடத்திய இதழ்கள்

*சங்க இலக்கியம் - வார வெளியீடு - 1945-1947 சூன் - திருநெல்வேலி*

*இலக்கியம் - திங்களிருமுறை இதழ் - 1947 ஆகச்டு முதல் 1952 மார்ச்சு வரை - விருதுநகர்*

*திராவிடக்கூட்டரசு - திங்களிருமுறை இதழ் - 1952 சூன் முதல் 52 திசம்பர் வரை*

*குறள்நெறி - தனிச்சுற்றுக்கு - 1954 முதல் 1955 வரை - புதுக்கோட்டை*

*குறள்நெறி - திங்களிருமுறை இதழ் - 1963 சனவரி முதல் 1966 திசம்பர் வரை - மதுரை*

*குறள்நெறி - நாளிதழ் - 1966 சூன் முதல் 66 திசம்பர் வரை*

**ஆங்கிலம்:**

Dravidian Federation, Thanjaavur, (June 1952 to December 1952)

Kural Neri (The way of Kural) Fortnightly (January 1966 to December 1966)

## ஏற்ற பொறுப்புகள்

*சென்னைப் பல்கலைக் கழகப் பாடத்திட்டக் குழு உறுப்பினர்*

*சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்*

*சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்*

*மதுரைப்பல்கலைக் கழகப் பாடத்திட்டக் குழு உறுப்பினர்*

*மதுரைப் பல்கலைகக்கழகப் பேரவை உறுப்பினர்*

*அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழு உறுப்பினர்*

*ஐதராபாது உசுமானியாப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழு உறுப்பினர்*

ஐதராபாது உசுமானியாப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்

ஐதராபாது உசுமானியாப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்

தமிழ்நாடு பல்கலைக்கழக ஆசிரியர் பேரவைத் துணைத்தலைவர்

தமிழகப் புலவர் குழுச் செயலாளர்

தமிழ்க்காப்புக்கழக நிறுவுநர் - தலைவர்

இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டுச் செயற்குழு உறுப்பினர்

## நினைவாய் நிற்பவை

இலக்குவனார் உயர்நிலைப்பள்ளி, வாய்மேடு. (நல்லாசிரியர் கு. வெற்றியழகனார், இலக்குவனார் பிறந்த ஊரில் அவர் நினைவாக நடத்திவரும் அரசு உதவி பெற்று இயங்கிவரும் பள்ளி)

புலவர்மணி, இரா. இளங்குமரனார், திருச்சிராப்பள்ளி - அல்லூர் எனுமிடத்தில் நடத்திவரும் திருவள்ளுவர் தவச் சாலையில் அமைந்திருக்கும் "இலக்குவனார் நடைமேடை"

மதுரை-திருநகரில் இலக்குவனார் வீட்டுக்கு எதிரில் அமைந்துள்ள தெருவுக்கு 'இலக்குவனார் தெரு' என ஊராட்சியினரால் பெயரிடப்பட்டு வழங்கி வருதல்

அனைத்திற்கும் மேலாக, இலக்குவனாரின் ஆறு புதல்வர்களும் ஐந்து புதல்வியரும் அவர்தம் கொடிவழியினரும்.

**சி. இலக்குவனார் :** தமிழ்க் காப்புக் கழகம் மூலமும் 'சங்க இலக்கியம்' 'குறள் நெறி' முதலான இதழ்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடத்தியும், தமிழ் மறுமலர்ச்சிக்கு ஊக்கம் தந்தவர். இவருடைய 'தமிழ் உரிமைப் பெருநடைப்பயணம்' தமிழர் வரலாற்றில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. ஆங்கில அறிவின் திறத்தால் தமிழ் மேன்மையை உலகுக்குக் காட்டினார். இவரது ஆய்வு நூல்கள் சிறந்த விளக்கங்களையும் கூரிய முடிவுகளையும் தமிழர்க்கு வழங்கின. நுண்மாண் நுழை புலமும் அஞ்சா நெஞ்சமும் இவரின் தனி அடையாளங்கள். "ஆசிரியர் மறைமலையடிகளாரின் பரந்தாழ்ந்த புலமையுடன், அறிஞர் கா.சு.பிள்ளையின் நுண்மாண் நுழைபுல ஆய்வுத்திறனும், நாவலர் சோமசுந்தர பாரதியாரின் நிமிர்நடையும் துணிவும் உடையவர் இலக்குவனார்" எனக் குறிப்பிட்டார். பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை. இலக்குவனாரது தொல்காப்பியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு மிகச் சிறப்பானது. 'அரும்புலமையும் அஞ்சாமையும் சார்பற்ற நோக்கும் கொண்டவர் இவர் என அறிஞர் அண்ணா குறிப்பிட்டுள்ளார். வாழ்நாள் முழுமையும் தமிழ்காத்துத் தமிழ்வளர்க்கும் செந்தமிழ்க் காவலராகவே திகழ்ந்தார். அன்பின் பிணைப்பினால் பண்பு கெழுமிய மிகப்பெரும் நண்பர் குழாம் இவருக்கு உண்டு.

**மறைமலை இலக்குவனார் :** இந்நூலாசிரியர் மறைமலை இலக்குவனார் தமிழ்நாடு அரசினர் கல்லூரிகளில் 35 ஆண்டுக் காலம் பணிபுரிந்தவர். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் ஓராண்டு காலம் சிறப்புவருகைப் பேராசிரியராகப் பணிபுரிந்த இவர் பல்துறைசார் அணுகுமுறைகள் வழி இலக்கியத்தை ஆய்வதில் பெரும் நாட்டமுடையவர். திறனாய்வுத் துறையில் இவர் எழுதியுள்ள பன்னிரண்டு நூல்களும் இலக்கிய ஆய்வுப்புலத்தில் புதிய திசைகளைப் புலரவைக்க வேண்டும் என்னும் இவரது பேராவலைப் புலப்படுத்துவன எனலாம்.

Si. Ilakkuvanar *(Tamil)* **Rs. 25**
ISBN - 81-260-2371-6

சாகித்திய
அகாதெமி